# மன்னெழில்



வெளியீடு
மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை,
மாவட்டச் செயலகம்,
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னெழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | 'மன்னெழில்' |
| மலராசிரியர் | : | சிவஸ்ரீ மஹா தர்மகுமாரக் குருக்கள் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வரலாறு |
| ஆண்டு | : | 2018 டிசம்பர் |
| அச்சு எழுத்து | : | 12 |
| பக்கங்கள் | : | 170 |
| வெளியீடு | : | மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை, மாவட்டச் செயலகம், மன்னார் |
| வடிவமைப்பு | : | செல்வி. ச. மிதினா |
| அட்டைப்படம் | : | திரு. ஜெரோமி மார்க் |
| அச்சகம் | : | 'சைபர் சிற்றி' அச்சுக்கலையகம், மன்னார். 023 2251668, 0715 797 597 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னெழில்

## 2018 / 2019

நூலுருவாக்கத்திற்கு

அனுசரணை வழங்கிய

வடமாகாண

பண்பாட்டலுவல்கள்

திணைக்களத்திற்கும்,

கலாசார அலுவல்கள்

திணைக்களத்திற்கும்

எமது மனமார்ந்த

நன்றி !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

வழிகாட்டலும் அனுமதியும்

**திரு. சி. ஏ. மோகன்றாஸ்**

அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,

மன்னார்.

ஆலோசகர்

**திரு. சி. குணபாலன்,**

மேலதிக அரசாங்க அதிபர், மன்னார்.

மலராசிரியர்

**சிவஸ்ரீ. மஹா தர்மகுமாரக் குருக்கள்**

துணை ஆசிரியர்

**தேசிய கலைஞர் எஸ். ஏ. உதயன்**

உறுப்பினர்கள்

**அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார்**

**அருட்பணி. அன்புராசா அடிகளார்**

**திரு. இ. நித்தியானந்தன்**

**திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்**

**திரு. மு. சிவானந்தன்**

**திரு. ச. றமேஸ்**

**திரு. எஸ். சதீஸ்**

**திரு. எஸ். ரூபகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


01. முகப்பு i

02. நூன்முகம் ii

03. அனுசரணையாளர் பக்கம் iii

04. மலர்க்குழு iv

05. உள்ளே... v

06. நுழைவாயிலில்... vii

07. மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச்செய்தி ix

08. மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் ஆசிச்செய்தி x

09. மன்னார் ஜம்இய்யத்துல் உலமாசபை செயலாளரின் ஆசிச்செய்தி xi

10. மன்னார் சாந்திபுரம் விகாராதிபதியின் ஆசிச்செய்தி xii

11. வடக்கு மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி xiii

12. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி xiv

13. வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி xv

14. மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி xvi

15. கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி xvii

16. வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி xviii

17. ***மன்னார் தொடர்பான சில குறிப்புகள்***
பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் 1

18. **வன்னிநாட்டில் பிற்காலத் தமிழர் வருகையும் இருப்பும்**
மு. சுந்தரம் பாண்டியன் 5

19. **கட்டுக்கரை - வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய புராதன குடியிருப்பு மையம்**
பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் 9




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. மா-தோட்டம் மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட, மகா - தோட்டம் – ஒரு வரலாற்றுத் தேடல் – அருணா செல்லத்துரை 19

21. மன்னார் மாவட்டத்தின் குடித்தொகையும் பண்பாட்டுக் கோலங்களும் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை 38

22. இயற்கையோடு இணைந்து வாழ்வோம்... Dr. Mrs. Himalatha Rajeswaran 47

23. மன்னார் மாவட்டத்தின் வாழ்வியல் அம்சங்களில் வழங்கிலிருந்துவரும் வட்டார வழக்குச் சொற்கள் திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட் 55

24. நாவாந்துறையைச் சேர்ந்தவரும் முத்தரிப்புத்துறையில் வாழ்ந்தவருமான கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவரின் வாழ்வும் படைப்புக்களும் - ஓர் ஆய்வு நோக்கு - அருட்திரு. தமிழ்நேசன் 72

25. மன்னார் சைவசமய வரலாறும் அதன் வளர்ச்சியும் திரு. சந்திரலிங்கம் றமேஸ் (J.P) 80

26. முசலி மண் ஈன்ற முஸ்லிம் புலவர்கள் எம். கே. எப். ஹினாயா 97

27. மன்னார் பிரதேசமும் நாட்டார் வழக்காறுகளும் செல்வி. கோதை பரத லோசினி 107

28. மன்னார் மாவட்டத்தின் காணிப்பயன்பாட்டுக் கோலங்களில் கருவேலை மரங்கள் வினோதினி (சர்மிலா திருநாவுக்கரசு) 113

29. நன்றாய்த் தமிழ் செய்வோம்! அருட்திரு. செ. அன்புராசா அடிகள் 117

30. முத்தரிப்புத்துறை பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வை வீ. எம். றெஜீஸ் பெர்னாண்டோ 121

31. மன்னார் மறைசாட்சிகள் மட்டில் இறை மக்கள் கொண்டுள்ள பற்றும் வணக்க வரலாறும் அருட்பணி. ம.க. அருள்பிரகாசம் 127

32. 'உடக்குப்பாஸ்' என்ற பேசாலையின் தொன்மைக் கலை தேசியக் கலைஞர் எஸ். ஏ. உதயன் 131

33. நவில்கின்றோம் நன்றி 152



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுழைவாயிலில்...

இலங்கைத் திருநாட்டின் பல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் சிறந்த பல கலைகளையும், கலைஞர்களையும் இலக்கியப் படைப்பாளிகளையும் தனித்துவமான கலாசாரத்தினையும் வந்தோரை எல்லாம் வாழ வைக்கும் பண்பும் கலை இலக்கிய செழுமையும் கொண்ட மாவட்டமாக மன்னார் பொலிவுற்று விளங்குகின்றது.

மொழியின் திறவு கோல் தான் இலக்கியம் என்பர். இலக்கியங்கள், இலக்கிய வரலாறு ஒவ்வொரு காலகட்டத்திற்கும் வேறுபட்ட குணாம்சங்களை கொண்டது. இலக்கியங்கள் காலத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி என இதனால் கூறுவர்.

ஒரு இனத்தின் வரலாறும் கலாசாரப் பண்பாடுகளும் பாரம்பரியங்களும் இலக்கியங்களினூடாகவே வெளிப்படுத்தப்படுகின்றன. கலை இலக்கியம் மற்றும் படைப்புக்கள் உயிரோட்டமுடையவனவாகவும் நிதர்சனத்தன்மை உடையனவாகவும் மனித சமூகத்தினை உரிய இலக்கினை நோக்கி இட்டுச் செல்வனவாகவும் அமையும் போது அவை நின்று நிலைக்கின்றன. அதேவேளை மாரி காலத்தில் தோன்றி மறையும் காளான் போல ஏனைய படைப்புகள் அழிந்து விடுகின்றன.

மரபு ரீதியான பல கலைகள் காப்பாற்ற எவரும் இன்றி உயிர்பிரியும் நிலையில் உள்ளது என பலர் ஆதங்கப்படுவதும் உண்டு. சில குறித்த படைப்பாளிகளை மட்டும் இனங்கண்டு கலைக்குழுமத்தின் விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளித்து வெளிவரும் மலர்கள் பயனுடையதாக அமைய மாட்டாது. இந்நூல் பல்வேறு கலைஞர்களையும் தமிழ் அறிஞர்களையும் பேராசிரியர்களின் ஆய்வுக் கட்டுரைகளையும் சுமந்து வரும் ஆய்வு நூலாகவும் மன்னார் மாவட்டத்தின் பெருமைகளையும் வரலாற்றுச் சிறப்புக்களையும் இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியாகவும் வெளிக்கொணர்ந்து சகல நூலகங்கள், பல்கலைக்கழகங்கள், தேவையுடைய சகல தரப்பினருக்கும் இம்மலர் பயனுள்ள ஆவணமாக அமைய வேண்டும் என்னும் நோக்கில் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையினால் முதன் முதலாக மாவட்ட கலாசாரப் பெருவிழாவில் வெளியிடப்படும் முதல் நூல் 'மன்னெழில்' என்னும் நாமம் கொண்டு பிரசவித்துள்ளது.

இம்மலரில் ஆசியுரை, வாழ்த்துரை தவிர மன்னாரைச் சேர்ந்த கலைஞர்களுடைய கட்டுரைகளும், இலங்கை பேராசிரியர்களுடைய ஆய்வுக்கட்டுரைகளும் இடம்பிடித்து அலங்கரிக்கின்றது.

**மன்னார் மாவட்ட செயலகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுவதும் அழிவதும் தானே இந்த பிரபஞ்சத்தின் இயல்பு? அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் கூத்து நாடகம், கவி, இலக்கிய படைப்புகள் என பல்வேறு பரிணாமங்களில் கலைஞர்கள் பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக அண்மைக்காலங்களில் மிளிர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இம்மலரின் முயற்சிக்கு ஊக்கம் தந்து ஆலோசனைகள் வழங்கி வரும் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சி. ஏ. மோகன்றாஸ் அவர்களுடைய ஒத்துழைப்பும், மேலதிக அரசாங்க அதிபர் திரு. சி. குணபாலன் அவர்களுடைய ஒத்துழைப்பும் அவர்களுடைய எண்ணக்கருவிற்கு ஏற்றவாறு செயலாற்றும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு. இ. நித்தியானந்தன் அவர்களுடைய அயராத உழைப்பும் அளப்பரியன. இந்த மலருக்கான ஆக்கங்கள், கட்டுரைகளை தந்துதவிய படைப்பாளிகளுக்கும் வாழ்த்துச் செய்திகள், ஆசிச் செய்திகள் வழங்கிய பெரியோர்களுக்கும் மலர்க்குழு சார்பாக மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இம்மலர் ஆக்கத்தில் ஆர்வத்துடன் செயற்பட்ட மலர்க்குழு துணை ஆசிரியர், மலர்க்குழு உறுப்பினர்கள் விசேடமாக நூலை செவ்வை பார்த்து உதவிய திரு. மு. சிவானந்தன் உள்ளிட்ட அனைவருக்கும் சிறப்பான நன்றிகள். இம்மலர் சிறப்பான முறையில் அமைய மலரை அச்சிட்டு வடிவமைத்த சைபர் சிற்றி அச்சுக்கலையக உரிமையாளர் திரு. எஸ். சதீஸ் அவர்களுக்கும், அட்டைப்படத்தினை வரைந்து தந்த ஆசிரியர் திரு. ஜெரோமி மார்க் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

மன்னார் மாவட்ட கலைப் பண்பாட்டுப் பேரவையின் கன்னி முயற்சியாக இம் மலர் வெளிவருகின்றது. தொடர்ந்து வரும் காலங்களில் மிகச் சிறப்பான ஆவணமாக மன்னெழில் உங்கள் கைகளில் தவழும் என்பதை உறுதிபடத் தெரிவிக்கின்றோம்.

தொடர்ந்தும் இதுபோன்ற மாவட்டச் சிறப்பு மலர் வெளிவர வேண்டும். இம்மண்ணின் வாசனை பரவ வேண்டும்.

**என்றும் அன்புடன்**
**செந்தமிழருவி. மஹா தர்மகுமார குருக்கள்**
**(மலராசிரியர்)**

**பொறுப்பு அளிப்பு**

**இந்த மலரில் இடம்பெற்றுள்ள**
**அனைத்து ஆக்கங்களின் கருத்துகளுக்கும்**
**தார்மீகப் பொறுப்புடையவர்கள் ஆக்கியவர்களே..!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச்செய்தி

மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவையும், மன்னார் மாவட்ட செயலகமும் இணைந்து வெளியிடும் "மன்னெழில்" எனும் இம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். சிறப்பாக எம் மன்னார் மண்ணின் பெருமைகளையும் சிறப்பம்சங்களையும் எழுத்துருவில் வடித்து, பாதுகாத்து பலரும் அறிய ஆவண செய்யும் எல்லோரையும் நன்றியோடு நினைக்கின்றேன். குறிப்பாக எம் மண்ணின் கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவைக்கு சிறப்பான நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கலைகள் காலத்தின் தேவைகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பார்கள். அந்தவகையிலே எம் மன்னார் மண்ணின் கலைஞர்கள் காலத்தின் தேவைகளை உணர்ந்து கலைப்படைப்புக்களை உருவாக்கிவருகின்றார்கள். எம் மன்னார் மண்ணின் பெருமைகளை கலை வடிவிலே வடித்து பலரும் அறியச் செய்கிறார்கள். ஆகவே தனித்துவமான கலை, கலாசார, இலக்கிய பின்னணியைக் கொண்ட எம் மன்னார் பிரதேசத்தின் கலை வளம் அழிந்துபோகாமல் இருக்க கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இளங்கலைஞர்கள் தமது ஆற்றல்கள், திறமைகளை வெளிக்கொணர களம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். இம்மகத்தான பணியை "மன்னெழில்" எனும் இச்சஞ்சிகை வழியாக மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவை முன்னெடுப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். இம்மலருக்கு தரமான ஆக்கங்களை வழங்கியவர்களையும் பாராட்டுகின்றேன்.

இதுபோன்ற கலை கலாசார ஊக்குவிப்புப் பணிகளே என்றும் கலை கலாசாரங்களை அழியவிடாது பாதுகாக்கும். ஆகவே கலை கலாசார மேம்பாட்டின் வளர்ச்சியினை மையமாகக்கொண்டு உருவான இம் "மன்னெழில்" நூலினைப் பாராட்டி ஆசி வழங்குவதோடு எதிர்வரும் காலங்களிலும் இம்மலரானது எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றேன். இம்மலர் வெளிவர உழைத்த அனைவரையும் வாழ்த்தி இறையாசீரை வேண்டி நிற்கின்றேன்.

**மேதகு ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ**
**மன்னார் ஆயர்**
**மன்னார் மறைமாவட்டம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் ஆசிச்செய்தி

மன்னார் மாவட்டச் செயலரின் வழிகாட்டலில் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையின் இடைவிடாத முயற்சியாலும் அர்ப்பணிப்பாலும் நடாத்தப்படும் மன்னார் மாவட்ட இலக்கியப் பெருவிழாவில் மன்னார் மாவட்ட கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் சிறப்புகளையும் பதிவாக்கும் ஒரு வரலாற்று ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு ஆவணமாக வெளியீடு செய்யப்படுகின்ற மன்னெழில் மலரிற்கு ஆசிச்செய்தி வழங்குவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

வரலாற்றில் முதன் முறையாக 2018ஆம் ஆண்டு, பிரமிக்கத்தக்கவகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் மாவட்ட கலாசார விழா முன்னெடுப்புகளுக்கும் அம்முயற்சிக்கு செயல் வடிவம் கொடுத்தாற் போல் செயற்படும் மன்னார் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மலராசிரியர், மலர்க்குழு இன்னுமாக இம்முயற்சியில் ஈடுபாட்டுடன் இணைகின்ற அத்தனை பேருக்கும் எமது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்வதுடன்...

சிறப்பு மிக்க பல ஆய்வுக் கட்டுரைகளையும், பெறுமதி மிக்க பொக்கிசங்களையும் தன்னகத்தே சுமந்து வரும் மன்னெழில் - 2018 அழகாக மலர்ந்து நறுமணம் பரப்பி, மிகப்பயனுள்ள வகையில் வெளிவர வேண்டுமெனவும், வருடாவருடம் இலக்கியவிழாவினை நடாத்தி மாவட்டக் கலைஞர்களை ஊக்குவித்து கௌரவிக்கின்ற தங்கள் பணிதொடர எல்லாம் வல்ல எம்பெருமானின் ஆசிவேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"**

**சிவஸ்ரீ மஹா தர்மகுமாரக் குருக்கள்**
**தலைவர்,**
**இந்துக்குருமார் பேரவை,**
**மன்னார் மாவட்டம்.**

**பிரம்மஸ்ரீ மனோ. ஐங்கர சர்மா**
**செயலாளர்,**
**இந்துக்குருமார் பேரவை,**
**மன்னார் மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்இய்யத்துல் உலமாசபை
# மன்னார் கிளை செயலாளரின்
# ஆசிச்செய்தி

மன்னார் மாவட்டம் வரலாற்று அடிப்படையில் தொன்மை மிகு மாவட்டமாகும். உலக வாணிபத்துடன் தொடர்புடைய மாந்தை துறைமுகம் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதேபோன்று கோட்டை மினாறா போன்ற கடந்த கால வரலாற்றை பறைசாற்றும் தொல்பொருள் நிறைந்த மாவட்டத்தில் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்கள் பின்னிப் பிணைந்து ஒற்றுமையுடன் தங்களது சமய சமூகப்பற்றுறுதியுடனும் சகோதரத்துடனும் சமயகலாசார விழுமியங்களை மதித்து சிறப்புற வாழும் மாவட்டத்தின் தொன்மையையும் வரலாற்றையும் தாங்கி நிற்கும் "மன்னெழில்" எனும் பெயரில் வெளிவரும் மலரிதனைக் கண்டு அகமகிழ்ந்து ஆசித்து நிற்கின்றேன்.

மன்னார் மாவட்ட செயலகத்தின் இம்முயற்சி வெற்றி பெற வல்ல இறைவன் ஒருவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**மௌலவி. அஷ்ஷெய்க் எஸ். ஏ. அஸீம்**
**செயலாளர்,**
**ஜம்இய்யதுல் உலமா - மன்னார் கிளை,**
**பேஷ் இமாம் - மூர்வீதி ஜும்மாப் பள்ளிவாசல்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் சாந்திபுரம் விகாராதிபதியின் ஆசிச்செய்தி

மன்னார் மாவட்ட செயலகத்தினால் வெளியிடப்படும் "மன்னெழில்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நமது மூதாதையர் தமது நாளாந்த உணவுப் பாவனை முதல் வாழ்க்கையின் சகல படிநிலைகளிலும் ஆரோக்கியம் மிக்கவர்களாகவும், ஏனையவர்களுக்கு முன்னுதாரணம் மிக்கவர்களாகவும் வாழ்ந்து காட்டினர். அத்தகையதோர் வாழ்வு முறைபற்றி வளர்ந்துவரும் இளைய தலைமுறையினருக்கு எடுத்துக்கூற வேண்டிய கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதனை அனைவரும் ஏற்றுக்கொள்வீர்கள் என நான் எண்ணுகின்றேன்.

எனவே, மேற்படி பழக்க வழக்கங்கள் மட்டுமன்றி மொழி, வரலாறு, சமயம், தொல்லியம் இன்னும் பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் விளக்கவுரைகளும், ஆய்வு முயற்சிகளும், நூல் வெளியீடுகளும் இன்று மிகவும் அவசியமானவையாக உணரப்பட்டுள்ளன. இத்தகைய பின்னணியில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் அவருடன் இணைந்து பணியாற்றும் அலுவலர்களும் மாவட்டத்தின் வரலாற்றுத் தகவல்களைத் திரட்டி நூல் வடிவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

இனநல்லிணக்கத்துடனும், மத நல்லிணக்கத்துடனும் வாழும் மன்னார் மாவட்ட மக்களுக்கு மன்னார் மாவட்ட செயலகம் ஆற்றிவரும் பணிகள் மனங்கொள்ளத்தக்கவை. அத்தகைய பணியின் தொடர்ச்சியாக இந்த "மன்னெழில்" மலர் வெளியீட்டை நான் பார்க்கின்றேன். "மன்னெழில்" மலர் வெளியீடு சிறக்க வாழ்த்துவதுடன், அந்த மலர் தொடர்ந்து வெளிவரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**விமலரட்ண தேரர்**
**விகாராதிபதி**
**சாந்திபுரம் விகாரை**
**மன்னார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி

"மன்னெழில்" மலர், பாரம்பரியமாகப் பேணப்பட்டு வருகின்ற கலை பண்பாட்டு விழுமியங்களை என்றென்றும் பேணிப்பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு அவற்றின் தனித்துவத்தை எடுத்துக்கூறும் விடயங்களை கொண்டிருக்க வேண்டும். பல பண்பாட்டுக் கோலங்கள் சிதைவுற்றும் மருவியும் போய்க் கொண்டிருக்கின்ற இக் கால வேளையில், மன்னார் மாவட்டமானது அதற்கே உரிய பல கலைப்பண்பாட்டு மரபுவழி கலைகளை அவற்றின் தன்மை மாறாதபடி பேணிக் காத்து மேம்படுத்தி வருவதில் மிகவும் அர்ப்பணிப்போடும் வினைத்திறனோடும் செயலாற்றி வருகின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

மன்னார் மாவட்ட செயலகமானது அம்மாவட்டத்திற்கே உரித்தான கலை ஆக்கங்கள், நாட்டுக்கூத்துகள், நாடகங்கள் மற்றும் கலைத்திறன் மிகுந்த படைப்புகளையும் அவற்றின் தனித்துவத்தையும், கலை பண்பாட்டு விழாவினூடாக எடுத்துக்காட்டி வருகின்றது.

அந்த வகையில், இந்த வருடமும் மன்னார் மாவட்ட செயலகத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற கலை பண்பாட்டு விழாவின் ஊடாக பலதரப்பட்ட கலைஞர்களின் கனதியான கலை ஆக்கங்கள், இலைமறைகாயாக மறைந்திருந்த இளம் படைப்பாளிகளின் முத்தமிழ் படைப்புகள் அவை தொடர்பான ஆய்வுகள் உள்ளடங்கிய "மன்னெழில்" மலர் ஊடாக வெளிக்கொணர்கின்றது.

இம் மலர் உருவாக்கத்தில் அர்ப்பணிப்போடு இணைந்து செயலாற்றிய மன்னார் மாவட்டச் செயலர் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் யாவரையும் மனதார வாழ்த்துவதோடு, மன்னார் மாவட்டத்தின் அழியாத கலை பண்பாட்டு கோலங்களை வெளிக்கொணருகின்ற பன்னிற மலர்கள் தொடர்ந்தும் வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ. பத்திநாதன்**
**பிரதம செயலாளர்**
**வடக்கு மாகாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவையின் வெளியீடாக வெளிவரும் "மன்னெழில்"மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

வடக்கு மாகாணத்தின் தனித்துவம் பேணும் மாவட்டங்களில் மன்னாரும் ஒன்று. கடல்வளம், நிலவளம், நீர்வளம், மற்றும் வனவளம் ஆகியன ஒன்று சேர்ந்து காணப்படுகின்றமை இந்த மாவட்டத்திற்கு மேலும் அழகு சேர்ப்பனவே. தமிழ்பேசும் மக்களின் புராதன வாழ்விடங்களில் மன்னாரும் ஒன்று. வரலாற்று ஆய்வுகள் இதனை நிரூபித்து நிற்கின்றன. இலங்கையின் ஆதிக்குடிகள் யாவர்? அவர்களது வாழ்விடங்கள் யாவை? என்று ஆய்வு நிகழ்த்திய ஆய்வாளர்கள் பலரும் இதனை நிரூபித்துள்ளனர். இவ்வாறான வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களின் பூர்வீகத்தன்மை எழுத்து வடிவில் ஆவணப்படுத்தப்படல் வேண்டும். இதுவே எமது எதிர்கால சந்ததியினர் மாவட்டத்தின் தனித்துவத்தினை அறிந்து கொள்ள வழிகாட்டியாகவும் அமையும்.

பிரதேசம் மற்றும் மாவட்ட மட்டங்களில் இயங்கும் பண்பாட்டுப்பேரவைகள் தமது பிரதேச, மாவட்ட பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். சுற்றறிக்கைகளுக்காகவே அன்றி விடுவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை முடிவுறுத்துவதற்காகவோ பண்பாட்டு விழாக்களை நடாத்தாமல் அவற்றினை அர்த்தம் மிக்கதாக மாற்ற ஆவன செய்ய வேண்டும். இதேபோன்றே நூல் வெளியீடுகளும் அமைந்து விடக்கூடாது என்பது எனது அபிப்பிராயமாகும்.

இந்தநிலையில், மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவையினர், மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வரலாற்று ரீதியிலான தேடல் மற்றும் இதனூடான ஆய்வுகளின் அடிப்படையில் கட்டுரைகளைத் தேடிப்பெற்று "மன்னெழில்" என்ற பெயரில் நூல் ஒன்றை வெளியிட முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும். யாழ் பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர்கள் பலரும் இது விடயம் தொடர்பில் கவனம் செலுத்தியதுடன் மட்டுமன்றி மன்னாரின் தனித்துவம் அறிந்து ஆய்வுகளை மேற்கொண்டு தரமான கட்டுரைகளை வழங்கியுள்ளமை இந்த மலருக்கு அழகு சேர்க்கின்றது.

இவ்வாறான மலரை உருவாக்கவேண்டும் என்பதில் கூடிய அக்கறையுடன் செயற்பட்ட மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மன்னார் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் உள்ளிட்ட ஏனைய அலுவலர்கள், மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவையினரை மனதார வாழ்த்துவதுடன், மற்றும் இதற்கு நிதியுதவி வழங்கிய வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றிற்கும் எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி. ஏ. மோகன்ராஸ்**
**அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்**
**மன்னார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி

மன்னார் மாவட்ட செயலகத்தினால் வெளியிடப்படும் "**மன்னெழில்**" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மன்னார் மாவட்டத்தின் கலை, இலக்கியம், பண்பாடு, தொல்லியல், புவியியல் மற்றும் மக்களின் வாழ்க்கைமுறை ஆகியவற்றை ஆவணப்படுத்தும் விதமாக இம் மலரானது அமைந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

தொன்மை சார் அம்சங்களையும் பல சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு மன்னார் மாவட்டமானது சிறந்து விளங்குகின்றது. அம் மாவட்டத்தின் சிறப்புக்களையும் முக்கியத்துவத்தினையும் இம் மலர் தாங்கிவருவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். "மனிதன் ஒரு சமூகவிலங்கு" சமூகம் எனும் சங்கிலியால் இறுக்கமாக கட்டப்பட்டுள்ளான். அச்சமூகத்தின் ஒட்டுமொத்த விடயங்களிலும் மனிதன் உள்ளீர்க்கப்பட்டுள்ளான். எனவே, ஒரு சமூகத்தின் நிலைப்பானது அதன் வாழ்க்கைமுறைகளை அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவதில் நிலைகொண்டுள்ளது. நல்ல சமூகமயமாக்கத்தின் மூலமாக சிறந்த மனிதர்களை உருவாக்கவேண்டிய பொறுப்பும் கடப்பாடும் எம் அனைவருக்கும் உரியதாகும். எமது எதிர்காலத்தின் சொத்துக்களான பிள்ளைகளை சரியான வழியில் வழிநடத்தி சிறப்புற்று வாழ்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுக்கும் பொறுப்பும் எமக்குரியதாகும். ஒரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்கள் மற்றும் வரலாறு போன்றன காத்திரமானவை. மாவட்டத்தின் சிறப்புக்களையும் அதன் விசேட அம்சங்களையும் மறைந்திருக்கும் பெருமைகளையும் வெளிப்படுத்தி அதனை பலரும் அறியச்செய்யும் முயற்சியாக இம் மலர் அமையும் என நம்புகின்றேன். இன்றைய காலத்தின் தேவையாக எமது பண்பாடும் எங்களின் தொன்மங்களும் நமது அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச்செல்ல வேண்டிய கடப்பாடு எம் அனைவருக்கும் உரியது மன்னார் மாவட்டமானது சிறந்த வளங்களைக் கொண்டு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் மாவட்டச் செயலாளர், மலர்க்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்டச் செயலகத்தின் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.**
**வடமாகாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

பழம் பெருமை மாறாத வரலாற்றுச் சிறப்பு மிகு பிரதேசம் மன்னார். வரலாற்று நூல்களில் மாந்தை என சிறப்புற அழைக்கப்பட்ட இம்மாவட்டம் வரலாற்றுச்சிறப்பு மிக்க திருக்கேதீச்சரம், மருதமடு மாதா திருத்தலம் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டது. அதுமட்டுமன்று "மாதோட்டம்" எனும் துறைமுகமாகவும் விளங்கியது. ஒல்லாந்த காலத்து கோட்டைகள் மன்னார் நகரிலும், முசலியில் அல்லி ராணிக்கோட்டையையும் கொண்டுள்ளது. அதுமட்டுமன்று மிக அழகிய கடற்கரையையும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான இராமர் அணை என்னும் வரலாற்றுப் பாலத்தையும் கொண்டுள்ளது. இவ்வாறு இருந்தும் இவை எல்லாம் வரலாற்று ஆவணமாக ஆக்கப்படாமை ஒரு குறையாக இருந்தது.

மன்னார் மாவட்டச் செயலகமும், மன்னார் மாவட்ட கலாசாரப் பேரவையும் இணைந்து "மன்னெழில்" எனும் இந்நூலை வெளியிடுவதன் ஊடாக எமக்கிருந்த மனக்குறை களையப்பட்டுள்ளது. இந்த நூல் வரலாற்று இடங்களை மட்டுமன்றி எமது பண்பாட்டு விழுமியங்களையும் எடுத்தியம்பியுள்ளது. பாட்டும், கூத்தும் பண்பாட்டு மரபுகளையும் ஒருங்கிணைத்து ஒரு சிறந்த ஆவணமாக உள்ளது என்பதில் ஐயமில்லை.

மேலும் இந்நூல் ஒரு நீண்ட பெரும் முயற்சியின் பின்பே உருப்பெற்றது. இம்முயற்சி இடையறாது தொடர்ந்து வருடாவருடம் வெளியிடப்படல் வேண்டும் என்பது எனது ஆவாவாகும். இம்மண்ணில் முதிர்ந்த எழுத்தாளர் பலர் வாழ்கின்றனர். அவர்களின் இலக்கியப்பசிக்கு தீனிதருவதாய் வருடாவருடம் புதிய கருத்துக்களுடன் இம் மலர் வெளிவர வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். இந்நூல் ஆக்கத்திற்கு முயற்சித்து உழைத்த அனைத்து கலைஞர்கள், பேரவை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். "இவ் இலக்கியப் பணி தொடர என்றும் எம் சேவையை வழங்குவோம்"

**திரு. சி. குணபாலன்**
**மேலதிக அரசாங்க அதிபர்,**
**கச்சேரி, மன்னார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின்
# வாழ்த்துச் செய்தி

கலாசார பண்பாடுகளை இன்னமும் நேர்த்தியாக பின்பற்றும் ஆற்றல்கள் மிக்க கலைஞர்களையும் கலைகளையும் பின்பற்றுகின்ற கலை பண்பாட்டு விழாக்கள் மற்றும் ஏற்பாடுகள் போற்றுதற்குரியதோடு, பல்துறை கலாசாரங்களின் நிர்ணய சமத்துவத்தை விரல் சுட்டும் அளவிற்கு பின்பற்றும் நம் நாட்டவர்கள் இவ்வாறான விழாக்களின் மூலம் சர்வதேசத்திற்கும் பன்முக சமூகத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றமை பெருமைக்குரியதே.

அந்த வகையில், மன்னார் மாவட்ட கலை இலக்கிய சிறப்புக்களை நான் அறிவேன் வெறுமனே பட்டியல்படுத்தப்பட்ட இலக்கிய ஆக்கங்களை முன்வைப்பதற்கு மாறாக இது கட்டுரையாளர்களுக்கும் இரசனையாளருக்கும் ஒரு புதிய அனுபவமாக அமைவது நிச்சயம். அது மாத்திரமன்றி, காலத்தின் போக்கில் மறைந்து போய்க்கொண்டிருக்கும் கலைகள், நாட்டார் கதை விமர்சனம் என்பவை மறுமலர்ச்சி பெறுவதாயின் எமது முயற்சிகள் எதிர்காலத்தில் பலனுடையதாக அமையும்.

அந்த வகையில் **மன்னார் மாவட்ட** கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக "மன்னெழில்" என்ற மலரை வெளியிட **மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பேரவை** எடுத்த முயற்சியானது வரவேற்கத்தக்கது. இதன்மூலம் கலை, கலாசார, ஆராய்ச்சி கட்டுரைகள் வழங்கிய மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துகின்ற அனைத்து படைப்பாளர்கள் மற்றும் கலைஞர்களின் கலை வாழ்க்கை வழிகளை மேலும் பிரகாசப்படுத்துவதால் தேசிய தரத்தில் கலைஞர்கள் உருவமெடுக்க இறைவன் அருள் அவர்கட்கு கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**அனுஷா கோகுல பர்னாந்து**
**பணிப்பாளர்**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண பண்பாட்டலுவல்கள்
திணைக்களப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப்பேரவை ஆகிவற்றின் ஒருங்கிணைவில் வெளியிடப்படும் "மன்னெழில்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வடக்கு மாகாண கலை பண்பாட்டை வளர்த்தெடுக்கும் நோக்கில் எமது திணைக்களம் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. கலாசார அபிவிருத்தி செயற்றிட்டம் பிரமாண அடிப்படையிலான ஆவணமாக்கல் திட்டம், முக்கிய பண்டிகைகளை கொண்டாடுதல், பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் வருடாந்த பண்பாட்டு விழாக்களை நடாத்துதல், சிறப்பு மலர்களை வெளியிடுதல், வயது முதிர்ந்த மற்றும் வளர்ந்து வரும் இளைய தலைமுறைக்கலைஞர்களை கௌரவித்தலும் பாராட்டுதலும், எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் சிறந்த நூல் பரிசு வழங்கல், நூல் கொள்வனவு செய்தல் உட்பட பல்துறைப்பணிகள் இவற்றுள் அடங்கும்.

இவ்வாறானதொரு பின்னணியில் மன்னார் மாவட்ட செயலகமும், மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து மாவட்ட கலை பண்பாட்டு விழாவின் ஓர் அங்கமாக "மன்னெழில்" என்ற பெயரில் சிறப்பு நூல் ஒன்றை வெளியிடுவதும், மன்னார் மாவட்டத்தின் வரலாற்றுத் தகவல்களைத் தாங்கிய தொகுப்பாக "மன்னெழில்" வெளிவருவதும் வரவேற்கத்தக்கவிடயமாகும்.

இது எதிர்கால சந்ததியினருக்கான வழிகாட்டியாகவும், ஆவணமாகவும் அமையும். இந்த மலரின் வருகைக்காக அயராது உழைத்த மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் உள்ளிட்ட அலுவலர்கள், மலர்க்குழுவினர், கலை பண்பாட்டுப்பேரவையினர் அனைவரையும் மனதாரப்பாராட்டுவதுடன் அவர்களது கலைப்பணியும் கலை ஊக்குவிப்புப்பணியும் தொடர்ந்தும் பிரகாசிக்க வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி. அபிராமி பாலமுரளி**
**உதவிப் பணிப்பாளர்**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### வடமாகாண பண்பாட்டலுவல்கள்
### திணைக்களப் பணிப்பாளரின்
# வாழ்த்துச் செய்தி

மன்னார் மாவட்ட செயலகம், மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவை ஆகியவை இணைந்து நடாத்தும் 2019 ஆம் ஆண்டுக்குரிய மாவட்ட கலை, பண்பாட்டுப் பெருவிழா மற்றும் "மன்னெழில்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கிராமங்களை மையமாக வைத்து சந்ததி சந்ததியாக வளர்க்கப்பட்டுவந்த கலைகளை எதிர்கால சந்ததியினருக்கு உரியவாறு கையளிக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. இதனை நிறைவேற்றும் பொருட்டு எமது பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆக்கபூர்வமான பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதன் ஒரு வெளிப்பாடே இன்றைய தினம் நடைபெறும் மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப் பெருவிழாவும், "மன்னெழில்" சிறப்பு மலர் வெளியீடும் ஆகும்.

விசேடமாக, மன்னார் மாவட்டத்திற்கே உரித்தான மன்னார் பாங்கு நாட்டுக்கூத்துக்களை இளைய தலைமுறையினர் மத்தியில் பரவச் செய்யும் வகையில் இவ்வாண்டு (2019) மன்னார் மாவட்டத்தின் நானாட்டான், மடு, அடம்பன் ஆகிய பிரதேசங்களில் திணைக்களத்தின் முழுமையான நிதிப் பங்களிப்புடன் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி வருகின்றோம். பல மாணவர்கள் இந்தப் பயிற்சிகளில் மிகவும் ஆர்வத்துடன் பங்கு பற்றி வருவது பாராட்டத்தக்கது.

எனவே, எமது திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு உயிரூட்டம் அளிக்கும் வகையில் மன்னார் மாவட்டச் செயலகம் ஆற்றிவரும் பணிகளை மனதாரப் பாராட்டுவதுடன், இதற்கு துணையாகவிருக்கும் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர், சக அலுவலர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அவர்களின் பணி மென்மேலும் பிரகாசிக்க வேண்டும் என்றும் வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

**திருமதி. சி. சுஜீவா**
**உதவிப்பணிப்பாளர் (பதில்)**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் தொடர்பான சில குறிப்புகள்

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வையகத் துறைமுகங்கள் பற்றிய ஒரு பட்டியலைப் பார்த்த ஒரு சீன அறிஞர் மன்னாரிலுள்ள 'மாதோட்ட' துறைமுகத்தை இதிலே காணவில்லை எனக் கூறியதாக எங்கோ படித்ததாக நினைவு வருகிறது. அத்துறைமுகம் மிகவும் அறியப்பட்ட சிறப்பு வாய்ந்ததாக இருந்திருக்கவேண்டும். திருஞான சம்பந்தர்,

*"மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி*
*மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்*
*பாவம்வினை அறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்*
*தேவனெனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே"*

எனப் பாடிய தேவாரத்திலே கி.பி. ஆறாம் நூற்றாண்டில் மன்னாரில் அமைந்திருந்த மாதோட்ட நகரம் பற்றிக் கூறப்படுகிறது. அதே பதிகத்தில்,

*"அங்கம்மொழி யன்னார் அவரமரர் தொழுதேத்த*
*வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்*
*பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்*
*செங்கண்ணர வசைத்தான் திருக்கேதீச் சரத்தானே"*

என்னும் 3ஆம் பாடலில் கப்பல்கள் பல மிகுந்து காணப்படும் மாதோட்ட நகரம் பற்றிக் கூறுகிறார். அக்காலத்தில் புகழ்மிக்க துறைமுகமாக மாதோட்டம் அமைந்திருந்ததை "வங்கம் மலிகின்ற கடல்" என்னும் பாடல் தொடர் நமக்கு உணர்த்துகிறது.

மாதோட்டத் துறைமுகப் பட்டினம் தமிழ்நாட்டுக்கு அருகே இருந்தபடியால் தென்னிந்தியாவுடனான வணிகத் தொடர்பு பெருமளவில் அமைந்திருந்தது. பாளி மொழியில் மகாதித்த என்று மாதோட்டம் அழைக்கப்பட்டது. பண்டைய காலந் தொடக்கம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையும் மாதோட்டத் துறைமுகம் சிறப்புற்றிருந்தது. பின்னரும் ஓரளவு சிறப்புறறதாயிருந்து, 13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் முற்றாக அதன் நிலைப்பாட்டை இழந்துவிட்டது. ஆனால் இன்றும் மாதோட்டம் என்னும் பொறுப்பாள்கைப் பிரிவு மன்னார் மாவட்டத்திலே இருக்கிறது.

மன்னார் என்றால் திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலும் மன்னாரில் ஆடப்பட்டு வரும் கத்தோலிக்க கூத்துகளுமே என் மனத்திரையில் உடனடியாக இடம்பெறுவன. திருக்கேதீஸ்வரத் திருக்கோயில் பற்றி முன்னர் குறிப்பிட்டுள்ளேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு வந்த கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனரிமார் தமிழ்ப் பிரதேசங்களில் ஆடப்பட்டு வந்த கூத்துகள் தம்முடைய சமயப் பணிக்கு நன்கு உதவக்கூடியன என்பதை உணர்ந்து கொண்டனர். இதன் விளைவாக இலங்கைத் தமிழ் நாட்டுக்கூத்துகளுள் தமிழ்க் கத்தோலிக்க நாட்டுக் கூத்துகள் என்றொரு பிரிவு உண்டாயிற்று. யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் கத்தோலிக்க நாட்டுக் கூத்துகள் மேடையேறின. 17ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு செழுமையான நாடக மரபினை மன்னார் வாழ் கத்தோலிக்க மக்கள் பேணிவருகின்றனர். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பேராசிரியர் சி. மௌனகுரு (**மரபுவழி நாடகங்கள்**, முருங்கன் முத்தமிழ் கலாமன்றம், 1998: முன்னுரை): "17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாதோட்டத்தின் முதல் நாடக ஆசிரியர் எனக் கூறப்படும் லோறஞ்சுப்பிள்ளை அவர் மரபில் வந்த சந்தியோகுப் புலவர், வெள்ளைப் புலவர், குருகுல நாட்டுத்தேவர், கீத்தான்பிள்ளை தொடக்கம் 60களில் வாழ்ந்த நானாட்டான் பெஞ்சமின் செல்வத்தை ஊடறுத்து அதன்பின்னர் வந்த மக்சிமஸ் லம்பட், சகோதரர் லம்பட், குழந்தை செபமாலை ஊடாக இன்றைய தலைமுறையினரான கு. ஜோர்ஜ், டெல்வின் குரூஸ், சி.ஜே. முரளீதரன் வரை இம்மரபு தொடர்ந்து செல்வது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்." என்று அந்த வரலாற்றைச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

ஈழத்துக் கூத்து மரபில் கத்தோலிக் கருடைய வரவு ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. கூத்து என்பது ஆடலும் பாடலுமுடையது. யாழ்ப்பாணக் கத்தோலிக் கக் கூத்துக்களிலே ஆடல் இல்லாமற் போய்விட்டது. மன்னார்க் கூத்துக்களிலும் சில ஆடற்பண்பில்லாதனவாய் ஆயின. ஆடற்பண்பு இல்லாமற்போனமைக்கு இரண்டு காரணங்கள் கூறலாம்:

1. இலங்கைத் தமிழரிடையே ஆடப்பட்டுவந்த கூத்துக்களிலே மன்னர், தெய்வம், மக்கள் எனப் பாத்திரமேற்ற எல்லோருமே மேடையிலே ஆடினர். சமய, சமூக அடிப்படையிலே ஆடற்கலை ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிவன் ஆடவல்லான் எனப்பட்டான். சிவனும் சிவகாமியும் நடனம் ஆடுபவர்கள். அருணகிரிநாதர் தன்னுடைய "அதல சேதனாராட....." என்னும் திருப்புகழில் எல்லாத் தெய்வங் களுமே நடனம் ஆடுவதாகக் குறிப்பிடுகிறார். இதனால் தெய்வ வடிவேற்கும் பாத்திரங்கள் மேடையிலே ஆடுவது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால், கத்தோலிக்க கடவுளர், புனிதர்கள் மேடையில் ஆடினால் அது விசித்திரமாக அமைந்துவிடும். இதனால் கூத்துக்களிலே ஆடற் பண்பினைத் தவிர்த்துக் கொள்ளும் படி கத்தோலிக்க குருமார் ஆலோ சனை கூறினர். கத்தோலிக்க நாடகங்கள் படிப்படியாக ஆடற் பண்பினை இழக்கத் தொடங்கின.

2. இந்தியாவிலிருந்து 'ஸ்பெஷல் நாடகங்கள்' எனப்பட்ட இசை நாடகங்கள் யாழ்ப்பாணத்துக்கு வரத்தொடங்கின. இவற்றின் வருகையால் இசை முக்கியத்துவம் பெற்றது. இதனால் ஆடல் முக்கிய -த்துவம் இழக்கத் தொடங்கியது.

யாழ்ப்பாணக் கூத்துக்களே பெருமளவு ஆட்டப்பண்பினை இழந்தன. இதற்குக் காரணம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்று கூறப்படுகின்றது. (இதற்குத் தகுந்த எழுத்து மூலமான ஆதாரம் எதுவுமில்லை. தகவல் மட்டுமே ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது). கத்தோலிக்கக் கூத்துக்கள் தொடக்கத்தில் ஆடற் பண்புடையனவாகவே திகழ்ந்தன. பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் கூத்துக்கள் சுவாமி ஞானப்பிரகாசருடைய செல்வாக்கினால் ஆடற்பண்பை இழக்க, மன்னார் நாட்டுக் கூத்துக்கள் தொடர்ந்தும் ஆடற்பண்பினைப் பேணின. இதுபற்றி காரை செ. சுந்தரம்பிள்ளை (**வட இலங்கை நாட்டார் அரங்கு**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2000: 152-153) பின்வருமாறு கூறுகிறார்:

"யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்கக் கூத்துக்கள் ஆரம்பத்தில் ஆட்டக் கூத்துக்களாகவிருந்தன என்பதற்கு அகச்சான்றுகளுள்ளன. முதலாவதாகப் பதிப்பிக்கப்பட்ட எஸ்தாக்கியார் நாடகத்தில் ஆடல் தருக்கள் காணப்படுகின்றன எடுத்துக்காட்டாக, கட்டியன் தருவைக் கூறலாம்.

"கட்டியகாரன் வந்தான் இட்டமதாகவே
காவலன் வருகை கூறி ஆவலாயேக
- கட்டியகாரன் வந்தான்.
சட்டை யொட்டி யாணம்
நெற்றிப் பட்டந் துலங்க - உயர்தங்கமணி
மாலைகளு மிலங்க
- கட்டியகாரன் வந்தான்.
சித்திரப் பாதச் சிலம்பு
உத்திசை பாட – நல்ல செங்கையிற்
கோலொடு பாகை சென்னியிலாட
- கட்டியகாரன் வந்தான்."

இதே நூல் (எஸ்தாக்கியார்) 1910ஆம் ஆண்டு அச்சுவேலி ஞானப்பிரகாச அச்சியந்திரசாலையில் இரண்டாவது தடவையாகப் பதிக்கப்பட்டபோது ஆடல் தருக்கள் அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. இவ்வாறு கத்தோலிக்கக் கூத்துக்களிலிருந்து ஆடற்பண்பை நீக்கிய காரணத்தால் சுவாமி ஞானப்பிரகாசர் நாட்டார் கூத்துக்களின் அமைப்புத் தொடர்ச்சிக்கு ஊறுவிளைவித்துவிட்டார் என்றே சொல்லல் வேண்டும். மன்னார் நாட்டுக்கூத்துக் கலைஞர்களோ சுவாமி ஞானப்பிரகாசருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் அங்கே இதே கூத்துக்களில் ஆடற்பண்பு இன்றும் நிலைத்துள்ளது."

மன்னார்ப் புலவர்கள், அண்ணாவிமார், மக்கள் ஆகியோர் கூத்துக் கலையில் எவ்வளவு ஈடுபாடுடையவர்களாக இருந்தனர் என்பதை நான் நேரடியாகக் கண்டுணரும் வாய்ப்புக் கிடைத்தது. பேராதனைப் பல்கலைக் கழகத்திலே 1959 முதல் 1963 வரை மாணவனாகவும், பின்னர் 1965 வரை உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றினேன். இக்கால கட்டத்திலே தான் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மட்டக்களப்பு நாட்டுக் கூத்துக்களை நவீனப்படுத்தி மேடையேற்றிக் கொண்டிருந்தார். அவர் முதலில் தயாரித்த நாடகம் வடமோடிக் கூத்தான 'கர்ணன் போர்' ஆகும். இதில் ஸ்ரீகிருஷ்ணராக நான் நடித்தேன். பின்னர் தென்மோடிக் கூத்தாகிய 'நொண்டி நாடகம்', வடமோடிக் கூத்துக்களாகிய 'இராவணேசன்', 'வாலி வதம்' என்பன தயாரிக்கப்பட்டபோது பிற்பாட்டுப் பாடுவதிலும் ஏனைய தயாரிப்பு விடயங்களிலும் உதவியாக இருந்தேன். ஒவ்வொரு நாடகமும் கண்டியிலே மேடையேறியபின் கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலே மேடையேற்றப்படுவது வழக்கம். மன்னாரிலே நானாட்டான், வங்காலை, முருங்கன் பகுதிகளிலே இக்கூத்துக்களை மேடையேற்றும்பொழுது, அப்பகுதி மக்களுக்கு கூத்துக்கலையிலிருந்த விருப்பினையும் ஆர்வத்தினையும் நன்கு காணமுடிந்தது. மன்னாருக்குக் கூத்துக்களைக் கொண்டுவந்து மேடையேற்றுவதிலே பேராசிரியர் வித்தியானந்தனும் மாணவர்களும் மிகுந்த ஆர்வம் காட்டினர். இது தொடர்பாக ஒரு சுவையான நிகழ்ச்சி நடைபெற்றது. மன்னாரில் ஒரு ஞாயிற்றுக்கிழமை 'இராவணேசன்' நாடகம் மேடையேற்றுதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரிடம் பேராசிரியர் வித்தியானந்தனும் நாமும் விடுப்புத் தரும்படி கேட்டோம். அவர் சனிக்கிழமை மன்னாருக்குப் போய், ஞாயிற்றுக்கிழமை கூத்தினை முடித்துக் கொண்டு, திங்கட்கிழமை காலை எட்டு மணி விரிவுரைக்கு நிற்கவேண்டுமென நிறுதிட்டமாகக் கூறிவிட்டார். வித்தி - யானந்தன் இதற்கு அஞ்சவில்லை. அப்பொழுது மன்னார் அரச அதிபராயிருந்த திரு. தேவநேசன் நேசையாவுடன் தொடர்புகொண்டு விடயத்தைக் கூறினார். கூத்து முடிந்தவுடன் "மேக்கப்" கழற்றாமலே எல்லோரையும் தங்களுடைய கச்சேரி வாகனங்களிலே அனுப்பி வைக்கலாம். எதற்கும் யோசிக்காமல் வரும்படி அவர் கூறினார். ஒழுங்கு செய்தபடி நாடகம் நன்றாக மேடை யேறியது. முடிந்த உடனேயே ஐந்து ஜீப் வண்டிகளிலே பேராதனை நோக்கிப் பயணமானோம். அடுத்த நாள் திங்கட் கிழமை விரிவுரைகளைப் பேராசிரியரும் நானும் எடுத்தோம். மாணவர்களும் தங்கள் தங்கள் விரிவுரைகளுக்குச் சென்றனர்.

மன்னாரில் நானாட்டான் என்னுடைய மனத்திலே என்றும் நிலைபெற்ற இடமாகும். திரு. சொக்கலிங்கம் அவர்கள் அங்கு உதவி அரசாங்க அதிபராகப் பணிசெய்யும்போது அங்கு எண்ணற்ற தமிழ் விழாக்கள் நடைபெற்றன. பல விழாக் களிலே பங்குபற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒரு நிகழ்ச்சி இன்னும் என் நினைவிலே உள்ளது. முத்தமிழ் விழா நடைபெற்றது. திரு. சொக்கலிங்கம் அழகாகப் பேசுவார். அவருடைய பேச்சு முடிந்தது. அவருடைய தலைமையிலேயே விழா நடந்தது. அடுத்து நான் பேச எழுந்தேன். தலைவர் அவர்களே! என்று விளித்தவுடனே, எங்கிருந்து வந்ததோ தெரியாது, மழை "சோ" என்று கொட்டத் தொடங்கியது. விழா முடிந்தது என நான் எண்ணினேன். ஆனால் சில மணித் துளிகளில் மழை நின்றுவிட்டது. முன்னர் கூடியிருந்த மக்கள் திரும்ப வந்துவிட்டார்கள். என்னுடைய பேச்சுக்குப் பின்னர் கூத்து நடைபெற இருந்தது. மன்னார் மக்களுக்குக் கூத்திலே இருந்த ஈடுபாட்டினை அன்று நன்கு கண்டு கொண்டேன்.

மன்னாரிலே காலத்துக்குக் காலம் துடிப்புள்ள இளங் கலைஞர்கள் தோன்றி வருகின்றனர். இவர்களுடைய முயற்சி யினாலே மன்னார் கலைபயில் ஊராக விளங்கிவருகின்றது. மன்னார் மாவட்டத்தில் இயங்கும் கலை இலக்கிய மன்றங்களின் பணி மனங்கொள்ளத்தக்கது இம் மன்றங்களின் அங்கத்தவர்கள் கலைகளுக்கும், சமய வாழ்வியலுக்கும் அரும்பணி ஆற்றிவருகிறார்கள்.

கோவையிலே தமிழ்ச் செம்மொழி மாநாடு மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. அது நடந்து சில மாதங்களிலே மன்னார் தமிழ்ச் சங்கம் ஈழத்திலே முதன்முறையாக தமிழ்ச் செம்மொழி விழா ஒன்றினை நடத்தினர். மிகக் கவினுடைய விழாவாக அது அமைந்தது. நிகழ்ச்சிகளை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அதிவண. பேராயர் இராயப்பு அடிகளார் "நான் இப்பொழுது சொர்க்கத்திலே இருப்பது போல உணர்கிறேன்" என்று அவர் அருகிலே இருந்த என்னிடம் கூறினார். எனக்குப் பெரு மகிழ்ச்சியாக இருந்தது. அவர் எல்லா நிகழ்ச்சிகளையும் வியந்து பார்த்துக்கொண்டிருந்தார்.

---

**"அதிகம் பேசாதவனை
உலகம் அதிகம்
விரும்புகிறது.
அளந்து பேசுபவனை
அதிகம் மதிக்கிறது.
அதிகம் செயல்படுபவனையே
கைகூப்பித் தொழுகிறது."**

**- அப்துல் கலாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிநாட்டில் பிற்காலத் தமிழர் வருகையும் இருப்பும்

மு. சுந்தரம் பாண்டியன்
B.A. Hons Dip.in.Ed.M.phil

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தரிடம் இருந்து 1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் கைப்பற்றினர். கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியரினதும் பிரித்தானிய ஆளுநரினதும் ஆட்சி நடைபெற்ற சில ஆண்டுகள் இரட்டை ஆட்சிக்காலம் என்றழைக்கப்படுகின்றது. பிரித்தானிய அரசின் பிரிதிநிதியாக சேர் பிரட்டறிக் நோத் முதல் ஆளுநராக நியமிக்கப்பட்டார். கி.பி. 1800 ஆம் ஆண்டு ஆளுநர் கொக்கிளாயில்[1] இருந்து புறப்பட்டு வன்னியை ஊடறுத்து கோட்டைக்கேணி, வண்ணான்குளம், தண்டுவான், அன்னதேவன்மடு, கனகராயன்குளம், பழைய விளான்குளம், புதுக்குளம் வழியாக அரிப்புத்துறைக் கோட்டையைச் சென்றடைந்தார்.

ஆளுநரின் பயணத்தின்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த மலபார் (தமிழ்) கூலிகள் ஆயிரம் பேர் அளவினர் பயணப் பாதையினைத் துப்பரவு செய்தல், குதிரை, யானைகளைப் பராமரித்தல் சுமைதூக்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டார்கள். இத்தொழிலாளர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் முதன் முதலாக அழைத்துவரப்பட்டவர்களாவர். பிரட்றிக்நோத் ஆளுநரால் அழைத்து வரப்பட்ட மொத்தக் கூலியாட்களின் எண்ணிக்கை ஐயாயிரம் என அறியப்படுகின்றது. முதலாம் கண்டிப்படையெடுப்புக்கும் இவர்களை சுமைதூக்குபவர்களாக பயன்படுத்தியமை புலனாகின்றது. கூலிகள் என்னும் சொல்லானது எந்த மொழிக்கானது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை என்கிறது 'ஒக்ஸ்பேட்' அகராதி.

1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் ஆங்கிலேயர் வசப்பட்டது. கண்டி உடன்படிக்கையில் இனிவரும் காலங்களில் நாயக்க மன்னர்களுக்கு (மலபார் இனம்) இலங்கையில் அரசுரிமை கிடையாது என்ற அம்சமும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் இலங்கைத் தீவு முழுவதற்கும் ஆட்சியாளர் ஆனதன் பின்னர் சமூக, பொருளாதாரத் துறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இந்நிலையில்தான் கென்றி பேட் (Hendry Nird and George Bird) சகோதரர்கள் தற்போது சின்ஹபிட்டி என்று அழைக்கப்படும் இடத்தில் முதலாவது கோப்பித் தோட்டத்தை உருவாக்கி வெற்றி பெற்றனர். 1802 ஆம் ஆண்டு வில்லியம் ஓர்[2] (Willion Oor) என்பவர் மன்னார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில் பருத்திப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டிருந்தார். ஐம்பது ஆண்டுகள் அளவில் இச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டு கைவிடப்பட்டதாக அறியமுடிகின்றது. 1823 ஆம் ஆண்டு கோப்பித் தோட்டச் செய்கைக்கான கூலியாட்கள் 14 பேரை தென்னிந்தியாவி லிருந்து அரிப்புத்துறையூடாக முதற்தொகுதித் தொழிலாளர்களாக அழைத்துவரப்பட்டமை இலங்கைத் துரைமார் சங்கத்தின் (Planters Assosiation) வரலாற்றுபதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலாவி ஆற்றின் கழிமுகத்தில் பல்லாண்டுகளாக சிறந்து விளங்கிய மாந்தைத்துறை இயற்கைக்காரணிகளால் கைவிடப்பட்டதன் பின்னர் 16 ஆம் நூற்றாண்டிலிருந்து அருவியாற்றின் கழிமுகத்திலமைந்துள்ள அரிப்புத் துறைமுகம் செழிப்புற்றோங்கியது. கண்டி, மதுரை அரசு பிரதானிகள் மற்றும் ஐரோப்பியர்கள், வர்த்தகர்கள் இத்துறைமுகத்தையே பயன்படுத்தி வந்தனர். வரலாற்றில் கோப்பித்தோட்டக் கூலிகளையும் இத்துறைமுகம் ஊடாகவே அழைத்துவந்தனர். பின்னர் கால்நடையாக 131 மைல்கள் நடந்து மாத்தளையைச் சென்றடைந்தனர். தொழிலாளர்கள் வந்து இறங்கிய இடத்தில் மாரியம்மன் சிலை வைத்து வழிபட்ட சிறுகோயில் இன்றளவும் அரிப்புத்துறைக் கிராமத்தில் காணப்படுகின்றது.

மண்டபம் முகாமிலிருந்து அரிப்புத் துறையில் கொண்டு வந்து இறக்கப்பட்ட தொழிலாளர்கள் ஓய்வெடுத்து பின்னர் நடந்து செல்ல வேண்டியுள்ளதால் ஆங்கிலேயர் வழிநெடுகிலும் தண்ணீருக் கான கிணறுகளையும் மண்டபங்களையும் அமைத்துள்ளனர். அரிப்புத்துறை முருங்கன், பறையனாலங்குளம், செட்டிகுளம், மதவாச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. இத்தொடர் வழிநெடுகிலும் மாத்தளை வரை அமைந்துள்ள எச்சங்களைக் கண்டு கொள்ளலாம். இரவு வேளைகளில் தங்கிச் சென்ற இடங்களில் தங்களுடன் தமிழகத்திலிருந்து எடுத்துவந்திருந்த தெய்வங்களையும் வைத்து வழிபட்டுச் சென்றனர். இச்சிறு கோயில் முன்னர் கூறிய இடங்களில் இன்றுவரையும் காணக் கூடியதாயுள்ளது.

அரிப்புத்துறையில்[3] இறக்கப்பட்ட தொழிலாளரின் குடிநீர்த் தேவைக்காக அமைக்கப்பட்ட கிணறுகளை இன்றளவும் ஊர் மக்கள் பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது. காலம் செல்லச் செல்ல கோப்பித் தோட்டங்களுக்கும் பின்னர் உருவான தேயிலைத் தோட்டங்களுக்கும் அதிக தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டனர். மேலும் வீதி அமைப்பு, பாலங்கள் அமைத்தல் சுரங்கப் பாதைகள் அமைத்தல் என்பவற்றுக்கும் பெருந் தொகைத் தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டனர். நடை பயணத்தின்போது சுகவீனமுற்றவர்கள், வயதானவர்கள், பெண்கள் முதலியோர் வழியில் அவ்வவ்விடங்களில் கைவிடப்பட்டுச் சென்றனர். பல நூற்றூக்கணக்கானர் இறந்துள்ளனர். சிலர் அண்மித்த பூர்வீக கிராம மக்களால் காப்பாற்றப்பட்டனர். அம்மக்களின் ஆறாம், ஏழாம் தலைமுறையினர் வன்னிப்பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடியதொன்றாகும்.

தமிழ்நாட்டின் கிராமங்களிலிருந்து ஆங்கிலேயத் துரைமார்களின் உள்ளூர் கங்காணிகள் தம்மக்களையே கண்டிச் சீமையைப்பற்றிய பல பொய்யான தகவல்களைக் கூறி அழைத்து வந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகுகள், தோணிகள், வள்ளங்களில் ஏற்றிய பின்னர் மக்களாகவே தொழிலாளர் களை அவர்கள் நோக்கவில்லை. மந்தைக்கூட்டங்களைப் போலவே நடாத்திச் சென்றனர். 1864 ஆம் ஆண்டு ஆதிலெட்சுமி என்னும் கப்பலில் திரும்பிச் சென்ற தொழிலாளர்களில் 120 பேரில் ஏழுபேர் தவிர வங்காலைக்கு அண்மையில் புயலில சிக்கி கடலில் மூழ்கி உயிரிழந்தனர். 'ரைம்ஸ் ஒப் சிலொன்' பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இவ்வுடல்கள் அனைத்தும் பெருக்கடிப்பிட்டி என்னும் இடத்தில் ஒரே குழியில் புதைக்கப் பட்டமைக்கான சான்றுகளும் உண்டு. 1823 - 1873 சுமார் ஐம்பது ஆண்டுகள் அரிப்புத்துறை இறங்கு துறைமுகமாக செயல்பட்டது. இப்புதைகுழிக்கு அண்மையில் ஆறு குழிப்பாலம் கப்பித்தான் ஓடைக்கு குறுக்காக அமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடக் கூடியதாகும்.

அரிப்புத்துறை - மண்டபம் இடையிலான கடற் பயணம் காலப் போக்கில் இடைத்தூரத்தினையும் ஏனைய சில சாதகமான காரணிகளையும் கருத்திற்கொண்டு இறங்குதுறை வங்காலைக்கு இடம் மாற்றப்பட்டது. கி.பி. 1874 - 1913 இடைப்பட்ட சுமார் நாற்பது ஆண்டுகாலப்பகுதியில் பல்லாயிரம் பிரயாணிகள், தொழிலாளர்கள் ஏறி இறங்கும் துறையாக வங்காலைத் துறைமுகம் செயற்பட்டது. தென் இந்திய மக்களின் வருகையால் வாந்தி பேதி என்ற 'காலரா' நோய் வங்காலைக் கிராமத்தையும் உருக்குலையச் செய்துவிட்டமை மிகவும் கவலைக்குரியதாகும். இந்நோயின் தாக்கம் நறுவிலிக்குளத்திற்கு அணித்தாயுள்ள பெத்தான்தோட்டம் சிறுகிராமத்தை முற்று முழுதாக விழுங்கி விட்டது. துவரங்கேணிக் கிராமத்தின் எஞ்சிய மக்கள் முதலைக்குத்தி கிராமத்திற்கு இடம்பெயர்ந்து விட்டனர்.

ஆங்கிலேய ஆட்சியாளர்களால் தமிழக கூலித்தொழிலாளர்களை, அந்நாட்டில் ஏற்பட்ட வரட்சி உணவுப் பஞ்சம் சமூக ஏற்றத்தாழ்வுகள், சாதியக் கொடுமைகள் போன்ற இன்னோரன்ன மனித மாண்புக்கு சற்றும் பொருந்தாத கொடுமைகள் ஆங்கிலேயரின் சுரண்டல் நடவடிக்கைகளுக்கு பெரும் சாதகமாக அமைந்தது. எனவே நூற்றைம்பது ஆண்டுகாலம் மன்னாரின் அரிப்புத்துறை, வங்காலைத் துறை, தலைமன்னார் துறையூடான பல இலட்சம் மக்கள் வந்து செல்லும் இடங்களாக வரலாற்றில் பதிவாகி விட்டது.

இலங்கைத்தீவின் வடகால் மேற்கே குதிரைமலைக்கு கிழக்கே கோகர்ணத்துக்கு இடைப்பட்டதும், யாழ்ப்பாணக் கடனீரேரிக்கு தென்புறத்தே அமைந்த பரந்த இயற்கைக்காடுகள் நிறைந்த தொன்மையான தமிழ் மக்களின் வாழிடம் வன்னி என்னும் பெருநிலப்பரப்பாகும். சுமார் ஒன்பதினாயிரம் சதுரகிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட இப்பிரதேசத்தில் அண்ணளவாக இன்றைய காலத்தில் எட்டு இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். எனினும் சமகாலத்தைய நிர்வாக முறைமையில் வன்னி பெருநிலப்பரப்பானது ஒன்றுக்கும் கூடுதலான அரச நிர்வாக அலகுகளாக பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

முழுமையான வன்னிப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் முன்கூறிய கால இடை வெளிக்குள் பல்வேறு காரணிகளால் குடியேறிய தமிழக மக்களின் வழித்தோன்றல்களாவர். அக்குழும மக்களில் பெருந்தொகையானோர் இலங்கைத் தமிழர்களாக தம்மை பூர்வீக வன்னியின் மண்ணின் மைந்தர்களாகி விட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சனத்தொகைக் கணக்கெடுப்பு முதன் முதலாக 1871 ஆண்டு மேற்கொள்ளப்பட்டபோது சிங்களவர், தமிழர், சோனகர், மலாயர், பறங்கியர் ஏனையோர் என ஆறு இனக்குழுமக்கங்களாக அடையாளப் படுத்தப்பட்டனர். ஆனால் 1911 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டபோது இந்திய தமிழர், இந்திய சோனகர் எனவும் பிரித்து அடையாளப் படுத்தப்பட்டனர். இச்செயற்பாட்டுக்கு அடியெடுத்துக்காட்டி உதவிய அப்போதைய ஆங்கில அரசில் உயர்நிலையில் செல்வாக்குச் செலுத்திய மேட்டுக்குடித் தமிழ் மேதாவிகளே காரணமாவர். அதன் தொடர்ச்சியாகவே 1921 ஆம் ஆண்டிலிருந்து பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுச் சான்றுகளில் இந்திய தமிழரும், இந்தியச் சோனகரும் சேர்க்கப்பட்டு இந்தியர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டனர். ஏனெனில் மேட்டுக்குடி தமிழ் மேதாவிகள் தமிழர்கள் என்னும் சொல்லால் தமிழகக் கூலித் தமிழர்களை சேர்த்துக் கொள்வதால் தங்கள் தரம் ஆளும் தரப்பினராலும் பெரும்பான்மைச் சுதேசிகளாலும் தமிழ் என்ற பொதுச் சொல்லால் தரம் தாழ்ந்து விடும் என்ற காரணத்துக்காகவே இந்திய தமிழர் என்று இன்றளவும் சுமந்து கொண்டிருக்கும் பாரச்சிலுவையைத் தோளில் சுமத்தியுள்ளனர். இவ்வரிய உபகாரத்தை செய்துதவியவர்கள் ஒரு சில மேட்டுக்குடித் தமிழராவர்.

1800 - 1950 இடைப்பட்ட நூற்றைம்பது ஆண்டு காலப்பகுதிகளைக் கொண்ட காலப்பகுதியில் வன்னி நாட்டில் குடியேறிய தமிழக மரபு வழியினர் வன்னி மண்ணின் மைந்தர்கள் என்ற போதிலும் 1921ஆம் ஆண்டின் பின்னரான வழித்தோன்றல்களே இந்தியத் தமிழர்கள் என்னும் வகுதிக்குள் அடக்கப்படுகின்றனர். இலங்கை நாட்டின் சுதந்திரத்திற்கு பின்னர் தமிழக மக்களின் வருகை தடை செய்யப்பட்டது. 1950 ஆம் ஆண்டிலிருந்து அம்மக்களின் வருகை முழுமையாகத் தடுக்கப்பட்டுவிட்டது.

அடங்காப்பற்று என்னும் வன்னி நாட்டின் பெருநிலத்தில் குடியேறி இரண்டறக் கலந்து வாழ்ந்து வரும் இம்மக்களை தேசியத் தலைவர் உரிய கௌரவமளித்து 'பிற்காலத் தமிழர்' என்று மரியாதையாக அடையாளப்படுத்தியுள்ளார். எனினும் இம்மக்களுக்கு இன்று வரை நிலவுரிமை மறுக்கப்பட்டு வருவதும் ஆங்காங்கே நடைபெற்று வருவது கவலைக்குரியதாகும். அன்றைய மேட்டுக்குடித்துரைத்தனம் தொடர்ந்து கொண்டிருப்பதும் மனிதத்துவத்தை மதிக்கும் தமிழ்ப்பண்பாட்டு மரபிலுதித்தவர் களால் பெரிதும் கண்டிக்கப்பட்டு வருவதை காண்பதும் சற்று ஆறுதலை ஏற்படுத்துகின்றது.

பிற்காலத் தமிழர்கள் பெருந்தொகை யினராக வாழும் வன்னித் தாயகம் அங்கு வாழும் அனைத்து மக்களுக்கும் பிறப்புரிமை அடிப்படையில் முழு உரித்துடைய முதுசம் என்றாகிவிட்டது. இதனை ஊடறுத்து சின்னாபின்னமாக்கச் சிதைக்க எந்தக் கொம்பனுக்கும் துளியளவேனும் உரித்தில்லை என்பது அனைவராலும் மனங்கொள்ளத்தக்கது. சமகாலத்தைய மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி பிற்காலத் தமிழர்களினதும் தாயகமாகும்.

அடிக்குறிப்பு:

1. A mannal of the Vanni District By J. P. Loucis - pg - 318
2. கண்டிச் சீமையிலே கொப்பிக்கால வரலாறு 1823 - 1893 பக் - 35 இரா. சடகோபன்
3. வீரகேசரி 13.05.2012 வார மஞ்சரி பெ. முத்துலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுக்கரை - வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய புராதன குடியிருப்பு மையம்

பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்
தொல்லியல் இணைப்பாளர்
யாழப்பாணப் பல்கலைக்கழகம்

கட்டுக்கரைத் தொல்லியல் மையம் வடஇலங்கையில் மன்னார் மாவட்டத்தில் இருந்து வடகிழக்கே 26 கி.மீ. தொலைவில் வட்டக்கண்டல் பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சிறிய கிராமமாகும். குளத்தை மையப்படுத்தி தோன்றிய இக்கிராமத்தின் பெயர் சிங்களத்தில் யோதவெவ எனவும், தமிழில் கட்டுக்கரைக்குளம் எனவும் அழைக்கப் படுகின்றது. ஆயினும் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இக்குளம் உட்பட அதைச் சுற்றியமைந்த சில கிராமங்கள் பாலப்பெருமாள் கட்டு என்றே அழைக்கப் பட்டது. இலங்கையில் வரலாற்றுப் பழமை வாய்ந்த பெருங்குளங்களில் ஒன்றான இக்குளத்திற்குத் தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு. 2016 2017 காலப்பகுதியில் எமது பல்கலைக் கழகத் தொல்லியல் பிரிவு ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள மற்றும் மத்திய கலாசார நிதியம் என்பவற்றின் தொல்லியல் ஆய்வு உத்தியோகத்தர்களின் துணையோடு இரண்டு இடங்களில் அகழ்வாய்வும், ஏறத்தாழ நான்கு மைல் சுற்றுவட்டத்தில் தொல்லியல் மேலாய்வுகளும் நடாத்தப் பட்டன. இந்த ஆய்வு நடவடிக்கைகளின் போது தென்னிலங்கைத் தொல்லியல் அறிஞர்களின் ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் அவ்வப்போது பெறப்பட்டன. இந்த ஆய்வுக்கட்டுரையின் பிரதான நோக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் நாக மரபிற்கும் இடையிலான தொடர்பை எடுத்துக்காட்டு வதாகும். ஆயினும் கட்டுக்கரை ஆய்வுகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து கி.பி.13ஆம் நூற்றாண்டு வரையான வடஇலங்கை வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்குப் புதுச் செய்திகளைச் சொல்வதால் அவற்றை இவ்விடத்தில் சுருக்கமாகக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.



வடஇலங்கையில் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட மிகப்பெரிய பெருங்கற்காலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்பு மையமாக கட்டுக்கரை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இக்குடியிருப்பை அநுராதபுரத்திற்கு அடுத்த நிலையில் உள்ள மிகப்பெரிய பெருங்கற்கால ஊரிருக்கைப் பகுதியாக

தாழியில் அடக்கம் செய்யப்பட்ட பெருங்கற்கால மனித உடல் (கட்டுக்கரை)



எடுத்துக் கொள்ளலாம். பெருங்கற்காலப் பண்பாட்டில் குடியிருப்பு, ஈமக்காடு, குளம் என்பன ஒருங்கே அமைந்திருப்பது அப்பண்பாட்டின் முக்கிய அம்சமாகும். இலங்கையில் இந்த நான்கு அம்சங்களும் ஓரேயிடத்தில் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. ஆனால் கட்டுக்கரை அகழ்வாய்வில் இந்த நான்கு அம்சங்களும் முதல் முறையாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. பெருங்கற்கால ஈமச் சின்னங்களுள் ஈமப்பேழையும் ஒன்றாகும். இலங்கையில் முதன்முறையாகக் கட்டுக்கரை அகழ்வாய்வில் தாழியடக்க முறையுடன், ஈமப்பேழையும் ஈமச் சின்னமும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. வரலாற்று மூலங்கள் பலவும் இலங்கையின் வரலாற்றுப் பழமைவாய்ந்த துறைமுகமாக மாதோட்டத்தைக் கூறுகின்றன. அங்கு 1825இல் இருந்து அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அங்கு கண்டுபிடிக்கப்படாத தொன்மைச் சான்றுகள் கட்டுக்கரையில் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. கட்டுக்கரையில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களிடையே இரும்பு, கல்மணி, சங்கு, மட்பாண்டம் என்பவற்றை உற்பத்தி செய்யும் சிறுதொழிற் சாலைகள் இருந்தமைக்கான உபகரணங்களும், உற்பத்திப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு வேண்டிய கார்ணீலியன் கல்வகைகளும், விலையுயர்ந்த மட்பாண்டங்களும் தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதற்கான ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இங்கு கிடைத்துவரும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்குரிய தொன்மைச் சான்றுகள் பண்டைய காலத்தில் அநுராதபுரத்திற்கும் மாதோட்டத்திற்கும் இடைப்பட்ட தரைவழிப் பாதையில் கட்டுக்கரை ஒரு நகரமாக வளரச்சி அடைந்ததை உறுதிப்படுத்துகின்றன.

தென்னாசியாவில் பிராமி எழுத்து தோன்றுவதற்கு முன்னர் மக்களிடையே குறியீடுகள் ஒரு தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகத்தில் தோன்றிய இக்குறியீடுகள் மேற்கிந்திய ஊடாக பெருங்கற்காலப் பண்பாடு வரை தொடர்ந்ததற்கு ஆதாரங் கள் காணப்படுகின்றன. இக்குறியீடுகள் பற்றி ஆராய்ந்த பி.பி.லால், யஸ்தானி போன்ற அறிஞர்கள் பெருங்கற்காலப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட 80 வீதமான குறியீடுகள் சிந்துவெளி நாகரிகத்தில் பயன்படுத்தப் பட்ட குறியீடுகளை ஒத்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். இக்குறியீடுகளில் இருந்தே பிராமி எழுத்து தோன்றியதை அண்மைக்கால ஆய்வுகள் உறுதிப்படுத்தி யுள்ளன. கட்டுக்கரை அகழ்வாய்வில் ஈமச்சின்னங்களுடன் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் சிலவகையான குறியீடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இக்குறியீடுகளை ஆய்வு செய்த தென்னிந்தியாவின் முதன்மைத் தொல்லியலாளர்களில் ஒருவரான பேராசிரியர் இராஜன் கட்டுக்கரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கற்காலக் குடியிருப்புகளின் தோற்றம் தமிழகத்தின் மிகப்பெரிய குடியிருப்பு மையமான கொடுமணலின் சமகாலமாக அல்லது அதற்கு முற்பட்டகாலமாக இருக்கலாம் எனக் கூறுகிறார். அண்மையில் கட்டுக்கரைப் பிரதேசத்தில் அகழ்வாய்வை மேற்கொண்ட இராஜ ரட்டைப் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுக்குழுவினரும் நாம் முன்வைத் திருக்கும் கருத்துக்கள் பலவற்றை தமது ஆய்வு அறிக்கையில் அழுத்தமாகச் சுட்டிக்காட்டியுள்ளதை இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

பல்லினப் பண்பாடு கொண்ட இலங்கை வரலாற்றில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிட்ட ஒரு இனம் அல்லது குறிப்பிட்ட ஒரு மொழி பேசிய மக்கள் மட்டும் பண்டைய காலத்தில் வாழ்ந்ததற்கு ஆதாரங்கள் இல்லை என்ற கருத்து அண்மைக்காலத்தில் தொல்லியலாளர் மத்தியில் மேலோங்கி வருவதைக் காணமுடிகிறது. இதற்கு காலத்திற்குக் காலம் பிற நாடுகளில் இருந்து பரவிய பண்பாடுகளும், புலம்பெயர்ந்து வந்த மக்களும் இலங்கையின் பல பாகங்களிலும் ஒன்று பட்டு வாழ்ந்ததும், வளர்ந்ததுமே காரணம் எனக் கூறப்படுகிறது. ஆனால் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வடஇலங்கையின் பெருநிலப்பகுதி வன்னி என்ற பெயரையும், பதினைந்தாம் நூற்றாண்டில் குடாநாடு யாழ்ப்பாணம் என்ற பெயரையும் பெறுவதற்கு முன்னர் இலங்கையின் இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றாய்வில் செல்வாக்கு செலுத்தி வரும் பாளி இலக்கியங்கள் இப் பிராந்தியத்தை நாகதீபம் (தமிழில் நாகநாடு), உத்திதேசம் (வடபகுதி) என்ற பெயர்களால் தனித்து அடையாளப்படுத்தி கூறும் வரலாற்று மரபைக் காண முடிகின்றன. இவ்வாறு வடஇலங்கை பண்டுதொட்டு தனித்துவமான பெயர்கள் கொண்டு அடையாளப்படுத்தி வந்தமைக்கு அதன் தனித்துவமான பௌதிகவளங்கள் காரணமா? அல்லது அப்பிராந்தியத்தில் தனித்துவமான பண்பாடுகள் தோன்றி வளர்ந்தமை காரணமா? என்பதற்கு அப்பாளி இலக்கியங்களில் நேரடியான ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை. ஆயினும் 1970 களில் இருந்து வடஇலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகள் பாளி இலக்கியங்களில் வரும் தனித்துவமான பெயர் அடையாளங்களுக்கு இப்பிராந்தி யத்தில் தோன்றி வளர்ந்த தனித்துவமான பண்பாடே காரணமாக இருக்கலாம் எனச் சிந்திக்க வைக்கிறது. இதற்கு கட்டுகரைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்ட நம்பகரமான ஆதாரங்கள் சிறந்த சான்றுகளாக உள்ளன.

## தொல்லியல் மேலாய்வு

முன்பொரு காலத்தில் செறிவான குடியிருப்புக்களைக் கொண்டிருந்த கட்டுக்கரைக் குளத்தின் வடக்கு எல்லைப் பிரதேசம் தற்காலத்தில் அடர்ந்த காடுகளாகவும், கொடிய விலங்குகள் வாழும் இடமாகவும் காணப்படுகிறது. ஆயினும் இப்பகுதியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வில் இருந்து ஏறத்தாழ இரண்டு கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் பல்வேறு காலகட்டத்திற்குரிய பலதரப்பட்ட சான்றாதாரங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. இவ்வாதாரங்களை எமது குழுவினர் இலகுவாகக் கண்டு பிடித்தவைக்கு காலத்திற்குகாலம் கட்டுக்கரைக் குளத்திலும், அதன் சுற்றாடலிலும் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களே சாதகமாக இருந்துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வடஇலங்கையில் உள்ள மிகப்பெரிய குளங்களில் ஒன்றாகக் கருதப்படும் கட்டுக்கரைக்குளத்தின் ஆரம்ப தோற்றம் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய ஒன்றாகக் காணப்படுகிறது. தென்னிந்தியா அதிலும் குறிபாக தமிழகத்திலும், இலங்கையிலும் நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் காலப்போக்கில் நிலையாக ஓரிடத்தில் குடியேறிய போது தமது பொருளாதார உற்பத்திக்காக சிறிய குளங்களை மையப்படுத்திய கிராமக் குடியிருப்புக்களை ஏற்படுத்தினர். இதற்கு தென்னிந்தியாவிற்கும், இலங்கைக்கும் பொதுவானதாக இருந்த பெருங்கற்காலப் பண்பாட்டின் தோற்றமே காரணமாகும். வன்னிப் பிராந்தியத்தில் ஏறத்தாழ 2000க்கும் மேற்பட்ட குளங்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அவற்றுள் பல கைவிடப்பட்டு அந்த இடங்கள் மக்கள் வாழாத காடுகளாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பலவற்றிற்கு தொன்மையான வரலாறு உண்டு. இற்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுக் களையும், அவற்றின் சமகாலத்திற்குரிய பாளி இலக்கியங்களையும் ஆராய்ந்தால் அவற்றின் குறிப்பிடப்படும் இலங்கையின் இடப்பெயர்கள் பெரும்பாலும் குளத்தை மையப்படுத்தியதாகவே தோன்றியுள்ளதைக் காணமுடிகிறது. 19ஆம் நூற்றாண்டில் வன்னி பற்றி ஆராய்ந்த லுயிஸ் என்ற அறிஞர் தமிழகத்தைக் காட்டிலும் வன்னியில் தூய தமிழ் இடப்பெயர்கள் இருப்பதாகக் கூறியிருப்பதற்கு இங்கிருக்கும் இடப்பெயர்கள் குளத்தை பின்னொட்டுச் சொல்லாகக் கொண்டிருப்பதே காரணமாகும். கட்டுக்கரைக்குளத்தைப் பொறுத்தவரை இங்கு பெருங்கற்காலப் பண்பாடு நிலவியதற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பதனால் இதன் தோற்ற காலத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கு இடமுண்டு.

ஆனால் கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து பிரித்தானியர் காலம் வரை குளம், கால்வாய், அணைக்கட்டு என்பவற்றை அமைப்பதில் ஏற்பட்ட தொழிநுட்ப வளர்ச்சியால் கட்டுக்கரைக் குளம் தற்போதைய நிலைக்கு விஸ்தரிக்கப் பட்டது. இதனால் தொடக்க காலத்தில் இக்குளத்தை மையப்படுத்தி குடியிருப்புக் களை ஏற்படுத்திய மக்கள் அவற்றைக் கைவிட்டு புதிய இடங்களுக்குச் சென்றனர். இதனால்தான் எமது தொல்லியல் மேலாய்வில் குளத்திற்கு வெளியே கிடைத்த சான்றுகளைவிட குளத்திற்கு உள்ளே தொன்மையான அதிக சான்றுகள் கிடைக்க காரணமாகும். அதிலும் குளம் பெருக்கெடுக்கும் காலங்களில் குளத்தின் ஆழமான பகுதியில் இருந்து அதிக தொல்பொருட்ச் சின்னங்கள் கரையை ஒதுங்கியிருப்பதைக் காணமுடிகிறது. மேலும் இக்குளக்கட்டின் வடக்குப்பக்கமாக அமைந்த நீர் வெளியேறும் வாய்காலின் இரு மருங்கிலும் நீர்வற்றிய காலங்களில் அதிக தொல்லியற் சின்னங்களை சேகரிக்க முடிந்தது. இவை குளம் பெருக்கெடுத்த காலத்தில் வெளியேறிய நீருடன் கொண்டுவரப்பட்டதாக இருக் கலாம் அல்லது குளத்திற்கு வெளியே குடியிருந்த புராதன குடியிருப்புக்களின் சான்றுகளாக இருக்கலாம். ஏனெனில் குளத்திற்கு வெளியே காணப்படும் மண்மேடுகள் பல அண்மைக்காலங்களில் பிறதேவை களுக்காக இயற்கை மண்வரை (ஏறத்தாழ 15 அடி வரை) அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. அவ்வாறு மண் அகழப்பட்ட குழிகளின் கரையோரங்களின் வேறுபட்ட கலாசார மண் அடுக்குகளில் செறிவான தொல்பொருட்ச் சின்னங்கள் காணப் படுகின்றன. இவ்வாதாரங்கள் குளத்திற்கு வெளியே பரந்த அளவில் புராதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிப் படுத்துவதாக உள்ளன.

நாம் தொல்லியல் ஆய்வை மேற்கொண்ட காலப்பகுதில் கட்டுக்கரைக் குளப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த பௌதீக மாற்றங்களும், மக்கள் ஏற்படுத்தியிருந்த செயற்கை மாற்றங்களும் தொல்லியல் மேலாய்வில் விலைமதிக்க முடியாத அரிய பல தொல்பொருட்களை கண்டுபிடிக்கச் சாதகமாக இருந்தன. அத்தொல்பொருட்கள் கட்டுக்கரைப் பிரதேசத்திற்கு மட்டுமன்றி புகைபடர்ந்திருக்கும் வடஇலங்கையின் பூர்வீக வரலாற்றிற்கும் புதுவெளிச்சம் பாய்ச்சுவதாக உள்ளன.

**கட்டுக்கரையின் பூர்வீக மக்கள்**

கட்டுக்கரைப் பகுதியில் கிடைத்த தொன்மைச் சான்றுகள் யாழ்ப்பாணத்திற்கு முன்னோடியான தொன்மைக் குடியிருப்புக்கள் இங்கிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் அந்த மக்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? என்பதைத் தொடர்ந்து மேற்கொள்ளும் ஆய்வுகளால் தான் உறுதிபடுத்தலாம். 1970 களில் இரணைமடுப் பகுதியில் இற்றைக்கு 125000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்த கலாநிதி செரான் திரணியகல இம்மக்கள் தென்மேற்கே மன்னார் வரை பரந்திருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார். எமது தொல்லியல் மேலாய்வில் பங்கெடுத்த தொல்லியற் திணைக்களத்தில் தொல்லியல் அகழ்வாய்வுக்குப் பொறுப்பாக உள்ள திரு.மணிமாறன் கட்டுக்கரையில் மண் அகழப்பட்ட குழியில் இருந்து கற்கருவியொன்றைக் கண்டுபிடித்துள்ளார். இது கண்டெடுக்கப்பட்ட குழியின் கலாசார மண் அடுக்குகள் குழம்பிய நிலையில் காணப்படுவதால் இக்கருவி பயன்படுத்தப்பட்ட பண்பாட்டையும், அதன் காலத்தையும் நிச்சயப்படுத்திக் கூறமுடியாதிருக்கிறது. இக்கற்கருவிகளைத் தொடர்ந்து தமிழகத்திலும், இலங்கையிலும் முற்பட்ட கற்கால மக்களைக் காட்டிலும் ஓரளவு நாகரிக முன்னேற்றமுடைய இடைக்கற் கால மக்கள் வாழ்ந்துள்ளனர் எனக் கருதக் கூடிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இம்மக்கள் குவாட்ஸ், சேட் முதலான கற்களில் நுண்ணிய தொழில் நுட்பத்துடன் கூடிய சிறிய கற்கருவிகளையும் பயன்படுத்தி உள்ளனர். இதனால் இம்மக்களது பண்பாடு இடைக்கற்கால அல்லது நுண்கற்காலப் பண்பாடு என அழைக்கப்படுகிறது. கட்டுக்கரையில் தொல்லியல் மேலாய்விலும், அரிதாக அகழ்வாய்விலும் குவாட்ஸ், சேட்கற்கள், கற்கருவிகள், கற்கருவிகளை ஆக்கும் போது உடைந்த பாகற்கள் என்பன அதிக அளவில் கிடைத்துள்ளன. இக்கற் கருவிகளை இரும்பின் பயன்பாட்டை முதலில் அறிமுப்படுத்திய பெருங்கற்காலப் பண்பாட்டிலும் அரிதாகத் பயன்படுத்தி யமைக்கு ஆதாரங்கள் உண்டு. இருப்பினும் கட்டுக்கரையில் இக்கருவிகள் தொடர்பான ஆதாரங்கள் அதிக அளவில் கிடைத்திருப்பது இப்பிரதேசத்தின் தொன்மைக் குடியிருப்புக்கள் பற்றிய ஆய்வில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை.

கட்டுக்கரைத் தொல்லியல் மேலாய்வில் கிடைத்த ஆதாரங்களுள் தென்னிந்தியா சிறப்பாகத் தென் தமிழகத்திலும், ஈழத்திலும் நாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்ட பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய தொல்லியற் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகும். இப்பண்பாட்டில் குறிப்பிட்ட தொல்லியல் மையத்திற்குள் குளம், வயற்பரப்பு, குடியிருப்பு, இடுகாடு என்பன ஒன்றிணைந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பது முக்கிய அம்சமாகக் கூறப்படுகிறது. மேலும் இப்பண்பாட்டிற்கே சிறப்பாக உள்ள கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்ட உபயோகம், இரும்பின் பயன்பாடும் என்பன இலங்கையை தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டு வட்டத்திற்குள் ஒன்றிணைய வைத்துள்ளன. கட்டுக்கரைக் குளத்தின் ஆரம்ப தோற்றம் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஏற்பட்ட ஒன்றாகும். இதை அப்பண்பாட்டுக்குரிய கறுப்புச்- சிவப்பு நிற மட்பாண்டங்கள், இரும்புக்கருவிகள், களிமண்ணுடன் நெல்லுமி, வைக்கோல் ஆகியவற்றைக் கலந்து செய்யப்பட்ட சுடுமண் உருவங்கள், மட்பாண்டங்கள் என்பன கட்டுக்கரைக் குளத்திற்கு உள்ளேயும், குளக்கட்டு அணைக்கட்டுக்கு வெளியே குடியிருப்பு பகுதிகளில் இருந்தும் கிடைத்த சான்றுகள் உறுதிசெய்கின்றன. இங்கு கண்டு பிடிக்கப்பட்ட தாழியின் உடைந்த பாகங்களை தொல்லியற்திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு.பாலித்த விரசிங்கா இங்கு கிடைத்த தாழிகளின் பாகங்களை கட்டுக்கரைப் பிரதேசத்தின் பெருங்கற்கால இடுகாடாக தாழியடக் முறை இருந்தகைக் காட்டுவதாகக் இருக்கலாம் எனக் கூறுகிறார். மேலும் இப்பண்பாட்டு மக்களால் பயன்படுத்தப் பட்டவை எனக் கருதக்கூடிய கல்மணிகள், கல்லினால் வடிவமைக்கப்பட்ட காப்புகள், சங்கு வளையல்கள், என்பனவும் அதிக அளவில் கிடைத்துள்ளன. இப்பொருட் களுடன் இவற்றை உற்பத்தி செய்யப் பயன்படுத்திய பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கற்கள், கண்ணாடிகள், சங்குகள், மட்பாண்ட அச்சுக்கள், இரும்புருக்கு சூலைகள் என்பனவும் கிடைத்துள்ளன. இவற்றைப் பேராசிரியர இரகுபதி, தமிழகத் தொல்லியல் அறிஞர்களான இராசன், செல்வக்குமார், இராசவேலு முதலானோர் பண்டைய காலத்திலேயே கட்டுக்கரைப் பிரதேசத்தில் இரும்புருக்கு, கல்மணி, கண்ணாடிப் பொருட்கள், மட்பாண்டங்கள் என்பவற்றை உற்பத்தி செய்யும் சிறுதொழில் கூடங்கள் இருந்ததற்கு முக்கிய ஆதாரங்கள் எனக் குறிப்பிடுகின்றனர். கட்டுக்கரைத் தொல்லியல் மையத்தின் சிறப்பம்சம் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடையதெனக் கூறக்கூடிய குளம், வயற்பரப்பு, குடியிருப்பு,ஈடுகாடு என்பன குறிப்பிட்ட வட்டத்திற்குள் இருந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகும். இந்த நான்கு அம்சங்களையும் இலங்கையின் ஏனைய பெருங்கற்காலத் தொல்லியல் மையங்களில் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

### பண்டைய காலத்தில் கட்டுக்கரையும் அயல்நாடுகளும்

கட்டுக்கரையில் வாழ்ந்த மக்கள் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே அயல் நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்கு நம்பகரமான தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் இருந்து கட்டுக்கரை மக்களின் தொழில்நுட்பத்திறனும், நாகரிக முன்னேற்றமும் கொண்ட மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது. இந்த உண்மையை கட்டுக்கரைத் தொல்லியல் மேலாய்வில் கிடைத்த பிறநாட்டு நாணயங்கள், இறக்குமதி செய்யப்பட்ட மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் என்பன உறுதிசெய்யப்படுகின்றன. அவற்றுள் இங்கு கிடைத்த பெரும்பாலான நாணயங்கள் குளத்தின் கரையோரப் பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டமை சிறப்பாக நோக்கத்தக்கது. அவற்றுள் தென்னாசியாவில் முதன் முதலாக வெளியிடப்பட்ட முத்திரை நாணயங்களும், இலங்கையில் வெளியிடப்பட்ட திஸ நாணயங்களும் இங்கு கண்டுபிக்கப் பட்டமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை இற்றைக்கு 2300 ஆண்டிலிருந்து 1900 ஆண்டு வரை பயன்பாட்டிலிந்தவையாகும். ஆனால் இந்நாணயங்கள் கட்டுக்கரையில் புழக்கத்திற்கு முன்னரே தமிழகத்திரிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த கற்களும், சிலவகை மட்பாண்டங்களும் இங்கு புழக்கத்தில் இருந்ததற்கும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக புராதன இஸ்லாமிய மட்பாண்டங்கள், பல்லவ நாணயங்கள் (கி.பி. 6-8), அரேபிய மட்பாண்டங்கள், சீன நாட்டுப் பீங்கான் வகைகள் (கி.பி. 9-13), மேற்காசிய மட்பாண்டங்கள் என்பனவும் கட்டுக்கரையில் புழக்கத்தில் இருந்துள்ளன. இவ்வாதாரங்கள் இன்று காடாகக் காட்சிதரும் கட்டுக்கரைப் பிரதேசம் பண்டைய காலத்தில் ஒரு நகரமாக இருந்ததைக் காட்டுகிறது என யாழ்ப்பாண மத்திய கலாசாரத் திட்ட முகாமையாளர் திரு. லட்சுமன் சந்தன மைத்திரிபாலா கூறுகிறார்.

## இந்து மதச் சின்னங்களும்

எமது தொல்லியல் அகழ்வாய்வின் போது பெருங்கற்காலக் குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளிவந்த சமயச் சின்னங்கள் பொது மக்கள் பலரின் கவனத்தைக் கட்டுக்கரையின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. நன்கு திட்டமிடப்பட்ட முறையில் கட்டுக்கரைக் குளத்தின் கரையோரமாக உள்ள காட்டுப்பகுதியில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வில் ஆறு மீற்றர் நீளமும், மூன்று மீற்றர் அகலமும் கொண்ட ஆறு குழிகளில் அதன் இயற்கை மண் அடையாளம் காணப்படும் வரை அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மூன்று வேறுபட்ட கலாசாரமண் அடுக்குகளைக் கொண்ட இவ்வாய்வுக் குழிகளின் மூன்றாவது கலாசாரமண் அடுக்கில் செங்கட்டிகள் கொண்டு கட்டப்பட்ட அத்திவாரத்தின் ஒரு பகுதி கண்டுபிடிக்கபபட்டுள்ளது. ஏனைய பகுதி குளத்திற்குள் புதையுண்டு இருப்பதை நீரலையினால் கரையோரத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் செங்கற்களும், பிற தொல்பொருட்ச் சான்றுகளும் உறுதி



செய்கின்றன. இக்கட்ட ஆதாரங்கள் இவ்விடத்தில் பழமையான ஆலயம் அல்லது சமயச் சடங்கு நடந்த மண்டபம் இருந்திருக்கலாம் என்பதை உறுதிப் படுத்துகின்றன. மேலும் இக்கட்டிப் பகுதியில் இருந்தே பெருமளவு சுடுமண் சிற்பங்கள், சிலைகள், மணிகள், யானை, குதிரை, நந்தி, முதலான தெய்வ வாகனங்களின் பாகங்கள், அகல் விளக்குகள், தீபங்கள், சமயச் சின்னங்கள், இலட்சனைகள், குறியீடுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பண்டைய ஐயனார் ஆலயத்தின் அத்திவாரம் அழிவடைந்த நிலையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கலைவடிவங்கள் பெரும் பாலானவை களிமண் அல்லது களி மண்ணுடன் குருமணல், நெல் உமி அல்லது வைக்கோல் என்பன கலந்து உருவாக்கப்பட்டு பின்னர் அவை சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவை தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்களைப் பெருமளவு ஒத்ததாகக் காணப்படுகின்றன. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை இந்து ஆலயங்களும், அவை சார்ந்த கலைவடிங்களும் அழியக்கூடிய மண், மரம், சுதை என்பன கொண்டு அமைக்கப்பட்டவையாகும். இதைச் சமகாலப் பழந்தமிழ் இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதிசெய்கின்றன. இம்மரபே சமகால இலங்கையிலும் பின்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு கட்டுக்கரை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்கள் மேலும் சிறந்த சான்றுகளாகும்.

கட்டுக்கரை அகழ்வாய்வில் சிவன், முருகன், விநாயகர், அகத்தியர், நாகபாம்புகள் முதலான வழிபாடுகளுக் குரிய சின்னங்கள், சிற்பங்கள், சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள் ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளே அதிக அளவில் கிடைத்துள்ளன. இவற்றின் அடிப்படையில் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஆலயத்தை ஐயனாருக்குரிய ஆலயமாக அல்லது ஐயனார் வழிபாட்டுச் சடங்கு நடந்த இடமாக எடுத்துக் கொள்வதே பொருத்தமாகும். தென்தமிழகத்திலும், இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய குளக் குடியிருப்பில் ஐயனாரை முக்கிய தெய்வமாக வழிபடும் மரபு இருந்துள்ளது. இது பொருளாதாரச் செழிப்பிற்காகவும், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் கொடிய



மிருகங்கள் என்பவற்றிலிருந்து பாது காக்கவும் மக்களால் வழிபடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதற்கு தமிழகத்தில் மதுரை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகத் தொன்மையான ஐயனார் வழிபாட்டுக்குரிய சின்னங்கள் சிறந்த சான்றாகும். வன்னியிலும் பண்டு தொட்டு



நாக, நாகினி தெய்வச் சிலைகள்?

ஐயனார் ஒரு முக்கிய தெய்வமாக வழிபடப்பட்டு வருவதற்குப் பல ஆதாரங் கள் காணப்படுகின்றன. கட்டுக்கரை அகழ்வாய்வுகளில் ஐயனார் தெய்வத்தை அடையாளப்படுத்தும் நூற்றுக்கணக்கான யானை, குதிரை என்பவற்றின் உடற் பாகங்கள், தலைப்பகுதிகள், 75 இற்கும் மேற்பட்ட யானைத் தந்தங்கள், 50இற்கும் மேற்பட்ட யானை, குதிரை, நந்தி முதலான வாகனங்களின் கழுத்தில் அணியப் பட்டிருந்த மணிகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வாதாரங்களிடையே யானை அல்லது குதிரையின் மேலமைந்திருந்த பீடத்தில் தெய்வீக கோலத்தில் இரு கால்களையும் கீழே தொங்கவிடப்பட்ட நிலையில் இருக்கும் இரு பெண் தெய்வங்களின் அரிய சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனாரின் இரு தேவியர்களைக் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர். இவற்றைத் தவிர ஆண், பெண் தெய்வங்களின் தலை உருவங்கள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஐயனார், ஐயனாரின் தேவியர்களின் சிலைகளின் உடைந்த பாகங்களாக இருக்கலாம்.

இங்கு ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளுடன் சிவன், முருகன், விநாயகர், அகத்தியர் முதலான வழிபாட்டுக்குரிய சான்றுகளும் கிடைத்துள்ளன. இவ்வாதாரங்கள் பிற்கால ஐயனார் ஆலயங்களில் பிறதெய்வங்களையும் வைத்து வழிபடப்படும் மரபு பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்திலிருந்தே தோன்றியதைக் காட்டுகின்றது எனக்கூறலாம் அல்லது பொருளாதாரச் செழிப்பு, பாதுகாப்பு என்பவற்றை வேண்டி ஐயனாரை வழிபாடு செய்த மக்கள் தமது குலத் தெய்வங்களின் உருவங்களை, சின்னங்களை மண்ணிலே செய்து ஐயனாருக்கு காணிக்கையாக வழங்கியிருக்கலாம் அல்லது அவ்விடத்தில் வைத்து வழிபட்டிருக்கலாம் எனக் கருதலாம். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நந்தி, ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம், திரிசூலம் என்பன சிவ வழிபாடு இங்கிருந்ததை உறுதி செய்கின்றன. நந்தி, ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் முதலான சுடுமண் சிற்பங்கள் முதன் முறையாக கட்டுக்கரை பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்தே கண்டுபிடிக்கப் பட்டுள்ளமை முக்கியமாக நோக்கத்தக்கது. தமிழக ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலப் பண்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட முருக வழிபாட்டிற்குரிய வேலும், சேவல் சின்னமும் இரும்பால் செய்யப்பட்டிருந்தன. ஆனால் கட்டுக்கரையில் முருகவழிபாட்டை நினைவுபடுத்தும் மயில் சின்னங்களும், அதன் இறகும் சுடுமண் உருவங்களாகக் கிடைத்திருப்பது அவ்வழிபாட்டின்

ஆலய அழிபாடுகள் இடையே கண்டுபிடிக்கப்பட்ட மண்ணால் செய்யப்பட்ட யானை, குதிரைகளின் உடற் பாகங்கள்



தொன்மையைக் காட்டுவதாக உள்ளது. கட்டுக்கரை அகழ்வாய்வின் போது மிகச் சிறிய கலசங்கள் பல கண்டுபிடிக்கப் பட்டன. இவற்றின் வாய்ப்பகுதியில் இருந்து ஏதோவொரு தெய்வ உருவம் வெளிவருவது போன்ற தோற்றப்பாடு காணப்படுகின்றது. வரலாற்றுக் கதைகளில் அகத்தியரை குடமுனி என அழைக்கும் மரபு காணப்படுவதுடன், அகத்தியர் வழிபாடு இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்குப் பரவியதாகவும் கூறப்படுகிறது. இதனால் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட சிறிய கலசங்கள் அகத்தியர் வழிபாடு இங்கிருந்ததை நினைவுபடுத்துவதாக இருக்கலாம். ஆயினும் தமிழக இலங்கைப் பெருங்கற்கால மையங்களில் இதுபோன்ற கலசங்கள் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை.

பண்டு தொட்டு ஐயனார் வழிபாட்டு ஆலயங்களுடன் இணைந்த ஒன்றாக நாகவழிபாடு காணப்படுகிறது. இன்றும் கிராமப்புறங்களில் மரங்களின் கீழ் அமைந்துள்ள ஐயனார் ஆலயங்களில் நாகபாம்புகளை வைத்து வழிபடும் மரபைக் காணமுடிகின்றது. இம்மரபு பெருங்கற்காலப் பண்பாட்டிலேயே தோன்றிவிட்டதை கட்டுக்கரை அகழ்வாய்வுகள் உறுதி செய்கின்றன. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது இலகுவாக சிற்பங்களைச் செதுக்கக் கூடிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெண்மையான கற்கள் சில கண்டு பிடிக்கப்பட்டன. அக்கற்களில் காணப்படும் உருவத்தை ஆய்வு செய்த தமிழக ஆய்வாளர்கள் அவற்றில் உள்ள உருவம் நாக பாம்பைப் பிரதிபலிப்பதாகக் கூறுகின்றனர். மேலும் இங்கு கண்டு பிடிக்கப்பட்ட நாக உருவங்கள் வேறுபட்ட தோற்ற அமைப்பில் காணப்படுகின்றன.

நீண்ட பெரிய நாக உருவங்களில் சில சாதாரணமாகப் படுத்த நிலையில் காணப்படுகின்றன. ஏனைய நாக உருவங்கள் வளைந்து படமெடுப்பது போன்ற தோற்றத்தில் வாயைப் பிளந்த நிலையில் காணப்படுகின்றன. சிறிய சில நாக உருவங்கள் படமெடுப்பது போன்ற தோற்றத்தில் காணப்படுகின்றன. இவை மண் சட்டியில் வைத்து வழிபடப் பட்டவையாக இருக்கலாம். சில சிறிய நாக உருவங்கள் பீடத்துடன் காணப் படுகின்றன. இச் சிறிய பீடத்தின் மத்தியில் காணப்படும் அரைவட்ட வளைவு நாகச் சிற்பம் இன்னொரு உருவத்தில் வைக்கப்பட்டிருந்ததைக் காட்டுகிறது. இது பிற்கால நாக வழிபாட்டு மரபை நினைவுபடுத்துவதாக உள்ளது. சமகாலத் தொல்லியல் ஆய்வில் இனத் தொல்லியல் (Ethno Archaeplpgy) முக்கிய இடத்தைப் பெற்று வருகிறது. இது குறிப்பிட்ட இனத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான நீண்டகால வரலாற்றுத் தொடர்பை ஆராய்கின்றது. இன்று கட்டுக்கரையிலும், பொதுவாக வன்னியிலும் முக்கியத்துவம் பெற்றிருக்கும் நாக வழிபாட்டு ஆலயங்களின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் அவற்றுள் சிலவற்றின் தொடக்கம் பெருங்கற்காலப் பண்பாடாக இருக்கலாம் என்பதற்கு கட்டுக்கரை அகழ்வாய்வு சிறந்த உதாரணமாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா-தோட்டம்
# மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட, மகா - தோட்டம்

– ஒரு வரலாற்றுத் தேடல் –

அருணா செல்லத்துரை
வைரவர் புளியங்குளம்
வவுனியா.

### மாதோட்டம் புராதனத்திற்கான காலக்கணிப்புகள்:

இலங்கையின் வரலாறு தொன்மையானது. சில வரலாறுகள் புராணங்கள் இதிகாசங்கள் போன்றவற்றில் எழுதப் பட்டுள்ளமையால் அவற்றிற்கான காலத்தை வரையறையிட்டுக் கூறமுடியாமல் இருக்கிறது. இலங்கையின் வடபுல மேற்குக்கரை வரலாற்றில், இதிகாசங்களிலும் திருமுறைகளிலும் குறிப்பிடப்படும் மாதோட்டம், மாந்தை, இராவண மகாராசா, திருக்கேதீச்சரம், கட்டுக்கரைக் குளம், ஆகியன முக்கிய புராதன அடையாளங்களாக இருக்கின்றன. இதனால் மாதோட்டம் பற்றிய தேடலுக்கு மாதோட்டம் வரலாறுகளில் குறிப்பிடப்படும் காலக்கணிப்புகளையும் வரலாறுகளையும் ஆய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழ் கலியுகக் காலக்கணிப்பின்படி 3100 ஆண்டுகளுக்குப் பின்னர், கி.பி. என்ற ஆங்கில வரலாற்றுக் காலம் கணிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழ் காலக்கணிப்புகளின் அடையாளமாக இருந்தவர் இராவண மகாராசாவாகும். அவர் வாழ்ந்த காலம் கி.மு. 3084ம் ஆண்டு என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனை கி.மு.31ம் நூற்றாண்டு என்றும் குறிப்பிடலாம். இலங்கையின் வரலாறுகளில் இலங்கையில் கி.மு. 3084 ஆண்டுகளில் (கலியுகம்) இராவண மகாராசா வாழ்ந்தார் எனக் குறிப்பிடப்பட்டு, அதிலிருந்து வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. அதனால் எமது வரலாற்றுக் குறிப்புகளை இராவண மகாராசாவின் காலத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டியது அவசியம். “கி.மு.2387 களில் அதாவது கி.மு. 24ம் நூற்றாண்டுகளில் இராவண மகாராசா காலமானார்”[I] என்று சிங்கள வரலாற்று நூலில் குறிப்பிடப்படுகிறது.

ஆனால் “கி.மு.1810ம் ஆண்டுகளில் (அதாவது கி.மு. 19ம் நூற்றாண்டில்) தசரத ராமன் இலங்கை மீது படையெடுத்துச் சென்று “Silan” என்றழைக்கப்பட்ட தீவைக் கைப்பற்றினார். இது கடல் கோள் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சில நூற்றாண்டுகளின் பின்னராகும் என்று Sir.W.Jones தெரிவித்துள்ளார்”[II] என்று யாழ்ப்பாண வைபவமாலை மேற்கோள் காட்டியுள்ளது.

[I]“The Singalese annals fix the date of Ravana’s death at 2387 B.C.” [II](The Yalpana Vaipava- Malai “ Britto “Iradchathar. p.111. Sir.W. Jones.)……whilst Sir W.Jones informs us that Rama about 1810 B.C conqured Silan, a few centuries after the flood . (Vaipava- Malai “Iradchathar” Britto. p.111. Sir.W. Jones).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கி.மு.31ம் நூற்றாண்டு** இராவண மகாராசாவின் காலம் அதாவது கி.மு. 3084ஆம் ஆண்டு என்று தமிழ்க் காலக்கணிப்பு கூறுகிறது.

**கி.மு.24ம் நூற்றாண்டுகளில்** அதாவது கி.மு. 2387களில் இராவண மகாராசா உயிரிழந்தார் என்று சிங்கள வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

**கி.மு. 19ம் நூற்றாண்டு** ஆங்கில பூகோள ஆய்வுகளின்படி அதாவது கி.மு.1810ம் ஆண்டுகளில் Silan" மீது இராமருடைய படையெடுப்பு இடம்பெற்று தீவைக் கைப்பற்றியதாக ஆங்கிலக் குறிப்புகள் கூறுகின்றன. அதாவது இராவணனை இராமர் தோற்கடித்த காலம் கி.மு.1810 ம் ஆண்டு என்று கூறலாம்.

இராவண மகாராசா வாழ்ந்த காலம் பற்றிய குறிப்புகளில், தமிழ்க் காலக்கணிப்பிற்கும் சிங்களக் காலக்கணிப்பிற்கும் இடையில் 697 ஆண்டுகளும், தமிழ் காலக் கணிப்பிற்கும் ஆங்கிலக் காலக் கணிப்பிற்கும் இடையில் 1174 வருடங்களும் வித்தியாசங்கள் உள்ளன.

கி.மு.3084 ஆம் ஆண்டுகளில் கலியுகத்தில் ராவண மகாராசா மா-தோட்டம் "லங்கா நகரி" இராஜதானியில் இருந்து லங்கா முழுவதையும் ஆட்சி செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. "இந்துமத இதிகாசங்களின்படி "லங்கா" என்பது ராவண மகாராசாவுடைய தலைநகரம் கோட்டை ஆகியன இருந்த இடமாகும். பின்னர் "லங்கா" என்ற பெயர் தீவு முழுவதற்கும் பொதுவான பெயராக மாறியது"[2] என்று Sir James Emerson Tennent தொவித்துள்ளார். ("CEYLON" by Sir James Emerson Tennent-1859.Vol. 1 .p.567.)

இங்கு குறிப்பிட்டுள்ள வரலாற்றுக் காலங்களுக்கும் பிற்பட்ட காலத்தில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி குறிப்பிடப்படும் வரலாற்றுக் காலங்களுக்கும் இடையில் சில வித்தியாசங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

புராதன காலத்தில் திருமுறைகளிலும், புராணங்களிலும், இதிகாசங்களிலும் லங்கா, லங்கா நகரி, ராவணன், ராமன், மகா-தோட்டம், மா-லங்கை, லங்காபுரம், பாணன்கமம், அடங்காப்பற்று போன்ற பல பெயர்கள் பாவனையில் இருந்துள்ளன. மேற்காட்டப்பட்டுள்ள சொற்கள் தமிழ் இலக்கண மரபின்படி இலங்கை, இராவணன், இராமன், இலங்கா நகரி, இலங்கா நகரம், இலங்காபுரம் என மாற்றப்பட்டு யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலில் எழுதப்பட்டுள்ளமை தமிழ்மொழி இலக்கண வளர்ச்சியின் அடையாளங்களாகும். இதனால், புராதன வரலாற்றுக் காலத்தில் இருந்தது போன்று பெயர்கள் கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது. வாசகர்களின் குழப்பத்தை தவிர்ப்பதற்காக இந்தக் குறிப்பு தரப்பட்டுள்ளது.

### லங்கா நகரி (Langka-nakari):

"புராதன காலத்தில் இயக்கர்களும் நாகர்களும் வாழ்ந்த பரந்த நிலப்பரப்பாக மா-தோட்டம் பிரிவு இருந்துள்ளது. கி.பி.1879 களில் யாழ்ப்பாண வைபவமாலையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த சி.பிறிற்றோ அவர்கள், "ரட்சதர்" (Iradchathar) என்ற தலைப்பில் எழுதியுள்ள பகுதியிலும், கி.பி.1926 களில் இராசநாயகம் முதலியார் எழுதிய Ancient Jaffna என்ற ஆங்கில நூலிலும் இயக்கர் மற்றும் நாகர்கள்பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

[2] "Thus Lanka, which in the epic of Hindus was originally the capital and castle of Ravana, was afterwards applied to the island in general. ("CEYLON" by Sir James Emerson Tennent-1859.Vol. 1. p.567.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபுலத்தின் தென் பகுதியில் பூநகரிப் பிரதேசத்தின் கீழ் ஏராளமான நாகர்கள் வாழ்ந்ததாக ஒப்பீட்டு அடிப்படையில் மிகவும் சுருக்கமாக இராசநாயகம் முதலியார் குறிப்பிட்டுள்ளார்.

ராவண மகாராசாவுடைய ஆள்புலம் பற்றிய தகவல்கள் மூலம், மாதோட்டத்தில் இருந்த "லங்கா நகரி" என்பதே அவருடைய தலைநகரம் என்பது ருசுவாகின்றது. மாதோட்டம் பகுதியில் "நகரி" என்ற சொல் பாவனையிலிருந்தமைக்கு 'பூ-நகரி' என்ற இடத்தின் பெயர் தற்போதும் இருக்கின்றது. கி.பி.16ம் நூற்றாண்டுகளில் இடம்பெற்ற சம்பவங்களை வைத்து வையாபுரி ஐயர் இயற்றிய வையாபாடலில், பல இடங்களில் "நகரி" என்ற பதம் பாவிக்கப்பட்டுள்ளது.

**பெருந்தோட்டம் = மகா-தோட்டம் :** வடபுலத்தின் மேற்குக்கரை நிலப்பரப்பில் இருந்த திடலான பகுதிக்கு அடுத்திருந்த கடற்பகுதி மிகவும் ஆழம் கூடியது. படகுகளில் கடல் வழியாக வரும் பயணிகளுக்கான பெரிய இறங்கு துறையாக இருந்த காரணத்தினால் இந்த இடம் "மகா திடல்" எனவும், "பெரிய இறங்கு துறை" அல்லது "கப்பல் கரைதட்டும் திடல்" என்றும் அழைக்கப் பட்டுள்ளது.

கடற்கரையோர திடலில் இருந்த சமநிலப்பரப்பில் லிங்க வழிபாட்டு தலம் இருந்தது. இந்தத் தலத்தைச் சுற்றி ராவண மகாராசாவின் ராஜதானிக்கான கோட்டை அமைந்திருந்தது. இராஜதானியைச் சுற்றி கடலிலிருந்து நீர் நிறையக் கூடிய வகையில் பாதுகாப்பு அகழிகள் அமைக்கப்பட்டிருந்தன. சில அகழிகளில் நன்னீர் நிறைந்திருந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

"லங்கா நகரி" இராஜதானியைச் சுற்றியிருந்த பரந்த நிலப்பரப்பிற்குள் புன்னை மரங்களும், அகில் போன்ற வாசனைத் திரவியங்களும் நிறைந்த சோலைகள் இருந்துள்ளன. இந்த பெருநிலப் பிரதேசமும், மகா-திடல் அமைந்திருந்த பகுதியும் "பெரிய தோட்டம்" அல்லது "பெருந்தோட்டம்" என அழைக்கப்பட்டது. "பெருந்தோட்டம்" என்ற பெயர் "மகா-தோட்டம்" என மாற்றப்பட்டது. "மகா-தோட்டம்" என்றிருந்தது சுருக்கப்பட்டு "மா-தோட்டம்" என்று வைக்கப்பட்டுள்ளது. "மா" என்றால் செழிப்பு, கனி தரும் மரம், பெரியது, போன்ற அர்த்தங்களைக் கொண்டது. இதில் மா-தோட்டம் சொல்லுக்கான அர்த்தம் பெரியது என்பதைக் குறிக்கும் குறுந்தொகைப் பாடல் ஒன்றை 1926ம் ஆண்டுகளில் இராசநாயகம் முதலியார் ஆதாரம் காட்டியுள்ளார். குறுந்தொகையில் 5.34 வதாக வரும் பாடலிலே மாந்தை மற்றும் மாதோட்டம் பற்றிய வேறுபாடுகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

"முனாஅதியானை யிண்குருகின் கானலம் **பெருந்தோட்ட** மள்ளரார் ப்பிசைவருஉங் குட்டுவன் **மாந்தை** யன்ன...."
"(சேரன்) குட்டுவனுக்குச் சொந்தமான மாந்தை நகரின் கடற்கரையோரத்தில் யானைகள் இலைகுழைகளை சாப்பிடும் பொழுது, பெருந்தோட்டத்தில் **((Ma-tota)** விவசாயிகள் எழுப்பும் ஒலி அவைகளைப் பயமுறுத்தின"[1] என்று முதலியார் இராசநாயகம் அவர்கள் குறுந்தொகைப்

[1] "Like unto the city of **Mantai** belonging to Kuttuvan, where the elephants feeding in the groves on the sea-coast are frightened by the noise made by the cultivators of **Peruntotam (Ma-tota)**". ("Ancient Jaffna" by C.Rasanayagam Mudaliyar 1926. p.21)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலுக்கு எழுதிய பொழிப்புரையில் தெரிவித்துள்ளார்.

"பெருந்தோட்டத்தில் விவசாயம் செய்வோர் எழுப்பும் ஒலி, மாந்தைக் கடற்கரை யோரத்தில் இருந்த யானைகளைப் பயமுறுத்தின. (**இங்கே மா-தோட்டம் என்று குறிப்பிடப்படுவது பெருந்தோட்டம் என்ற சொல்லின் மருவலாகும்**). இதனால் குறுந்தொகையில் குறிக்கப்படும் மாந்தை என்ற சொல் அந்தப்பிரிவை தெளிவாக அடையாளப்படுத்துகிறது" என்று ஆசிரியர் மாந்தையின் அடையாளத்தைக் குறிப்பிடுகையில் தெரிவித்துள்ளார். ("Ancient Jaffna" by C.Rasanayagam Mudaliyar 1926. p.23)[2]

கடற்கரையோரமாக அமைந்துள்ள **"மாந்தை நகரம்"** மற்றும் **"மா-தோட்ட நகரம்"** என்று அழைக்கப்பட்டுள்ள பெரியதோட்டம் ஆகிய இரண்டும் வெவ்வேறான பிரிவுகள் என்று குறிப்பிடப் பட்டுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**மாந்தை** : ஐந்து தலை நாகத்தை வழிபடும் நாகர்கள் மாந்தைப் பிரிவில் வாழ்ந்துள்ளனர். இவர்களுக்கென தனியான இயற்கைத் துறைமுகம் இருந்துள்ளது. நாகர்கள் குளங்கள் கட்டுவதிலும், ஆலயங்கள் கட்டுவதிலும், மற்றும் கோயில் சிற்பங்களை வடிவமைப்பதிலும் கைதேர்ந்தவர்கள். மாந்தை, தனியான இராஜதானியாக இருந்துள்ளது. மாந்தையில் வாழ்ந்த நாகர்களுக்கும் சமகாலத்தில் மா-தோட்டத்தில் வாழ்ந்த இயக்கர் குலத்தவருக்கும் இடையில் பலவித தொடர்புகள் இருந்துள்ளன.

**மாதோட்டம்** : மாதோட்டம் இராஜதானியில் இருந்த இயக்கர்குல ராவணன், மாந்தை இராஜதானியில் இருந்த நாகர் குலத் தலைவன் மயனுடைய மகள் மண்டோதரியை திருமணம் செய்தார். ராவண மகாராசாவிற்காக அவருடைய மாமனாரான நாகர்குலத் தலைவன் மயன், முக்கியமாக மாந்தை துறைமுகத்தை அபிவிருத்தி செய்தும் திருக்கேதீச்சர ஆலயத்தை திருத்தியும் கொடுத்துள்ளார். ஏற்கனவே இருந்த மா-தோட்டம் இறங்குதுறையுடன், திருமணத்தின் காரணமாக மாந்தை துறைமுகமும், இராஜதானியும் இராவண மகாராசாவின் ஆட்சியின் கீழ் வந்ததினால் மா-தோட்டமும் மாந்தையும் ஒரே இராஜதானியாக இருந்தமை தெளிவாகிறது.

**துவட்டா புரம்** : மா-தோட்டம் பிரிவில் இருந்த லிங்க வழிபாட்டுத் தலத்தை மயன் திருத்திக் கொடுத்துள்ளார். திருத்த வேலைகளை நாகர் குலத்தை சேர்ந்த துவட்டா என்ற சிற்பாசாரி செய்ததாகவும், ஆலயம் இருந்த பகுதி "துவட்டா புரம்" என்ற பெயரால் அழைக்கப்பட்டதாகவும் புராண வரலாறுகள் கூறுகின்றன. இராவண மகாராசாவை திருமணம் செய்த நாகர்குலப் பெண்ணான மண்டோதரியும் இலிங்கத்தை வணங்கிய காரணத்தால் இந்தத் தலம் "கேதீச்சரம்" என்ற பெயரைப் பெற்றது என்று கூறும் கருத்து ஏற்றுக் கொள்ளப்படக்கூடியது. இயக்கர்குல அரசன் நாகர்குலப் பெண்ணை திருமணம் செய்ததிலிருந்து நாகர்களுடைய குலப்பெருமையை விளங்கிக்கொள்ள முடியும் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

---

[2]"The fact the noise made by the cultivators of Peruntotam (which appears to be the translation of Matota) frightened the elephnats on the sea coast of Mantai, as stated in the Kuruntogai vers referred to in notes, clearly proved the identity of Mantai". ("Ancient Jaffna" by C.Rasanayagam Mudaliyar 1926. p.23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராவணனும் லங்கா நகரியும்** : ராவணனுடைய ஆட்சிக்காலம் லங்கா வரலாற்றில் முக்கியமானதாகவும் வரலாற்றின் ஆரம்பமாகவும் இடம் பிடிக்கின்றது என்ற குறிப்புகள் உள்ளன. "ராவணா" என்ற சொல்லுக்கு "சூரியக் கதிர்" என்று விளக்கம் கூறப்படுகிறது. "ரா" என்றால் "சூரியன்" "வணா" என்றால் "கதிர்" என்றும் பொருள்படும். இதனால் ராவணன் சூரியப்புதல்வன் என்றும், பிரமாவின் வழித்தோன்றல் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராமாயண காவியத்தின் உத்தரகாண்டத்தில் ராவண மகாராசாவுடைய தலை நகரம் பற்றிக் குறிப்பிடப்படுவதை, யாழ்ப்பாண வைபவ மாலையின் ஆங்கில மொழிபெயர்ப்பில் "இரட்சர்" என்ற பிரிவில் பிறிற்றோ அவர்கள் பின்வருமாறு குறித்துள்ளார்.

"ரட்சதர்கள் (யக்கர்கள்) தமது தலைவனாக ராவணனை ஏற்றுக் கொண்டு, புராதன தலைநகரான "லங்கா நகரி" மீது போர் தொடுத்து மீண்டும் கைப்பற்றினர். குவேரன் விட்டுச் சென்ற நிலையில் வெற்று நகரமாக இருந்த "லங்கா நகரி" யில் இயக்கர்கள் மீளக் குடியேறினர்: ராவணனும் வெற்று நகரத்தில் இருந்து தனது ஆட்சியை நிலைப்படுத்தினான். இந்த வரலாறு, ராமாயணத்தின் 17வது நூலான உத்தரகாண்டத்தின் 1ம் 2ம் படலங்களில் குறிப்பிடப்படுகிறது."[2] (Yalpana Vaipavamalai, Translated by C.Britto -1879 "Iradchathar"- Page iii.).

ஒட்டக்கூத்தர் என்ற புலவரால் எழுதப்பட்டுள்ள ராமகாதையில் "உத்தர காண்டம்" மட்டும் உள்ளது. ஆனால் ராமாயணத்தின் 7வது காண்டமாக இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த விபரங்களில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பும் பின்பும் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் இதிகாச தகவல்கள் தேவை கருதி தவிர்க்கப்பட்டுள்ளன.

**ராவணன்** : மாதோட்டம்-மாந்தை ஆகிய இரண்டு இராஜதானிகளையும், மாதோட்டத்திலிருந்த பெரிய இறங்கு துறை, மாந்தையில் இருந்த துறைமுகம், மற்றும் திருகோணமலை இயற்கைத் துறைமுகம் ஆகியன இராவண மகாராசா வுடைய ஆட்சியின் கீழ் வந்ததினால் லங்காவின் மேற்கு மற்றும் கிழக்கு கடற்பிராந்தியத்தில் பலம் பொருந்திய திராவிட குல மகாராசாவாக திகழ்ந்தார். லிங்க வழிபாட்டில் சிறந்த சைவராகவும், லங்காவைச் சுற்றியுள்ள கடற்பிராந்திய வாணிபத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பவராகவும் இருந்த இராவண மகாராசா, வட இந்திய அயோத்தியில் இருந்த ஆரியச் சக்கரவர்த்தி தசரதருக்கு பெரும் சவாலாக இருந்தார். விஷ்ணுவை முழுமுதல் கடவுளாக வழிபடும் தசரதன், இராவண மகாராசாவை அடக்கி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரத் தீர்மானித்தார்.

அயோத்தி ஆரிய தசரத சக்கரவர்த்தியின் அரசவையில் லங்கா மீது படையெடுத்துச் செல்ல தீர்மானிக்கப்பட்டது.

---

"Now all the Iradchathar returned to the earth…..and having made Iravanan their king; they meditated an attack on "Lanka-nakari" their ancient capital. Kuveran evacuated city: and Iravavnan took possession of the vacant city". The above account has been condensed from the first and second Padalams of the seventeenth book of Iramayanam entitled the "Uththara kandam". (Yalpana Vaipava Malai by C.Britto-1879. "Iradchathar"- Page iii.).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ராவணனுடைய படைபலத்தை அறிந்தவர்கள் தசரத சக்கரவர்த்தியின் மகன் ராமரை மரவுரி தரித்து தென் திசைக்கு அனுப்பி வைத்தார்கள். வட இந்திய ஆரியரான ராமருடைய நட மாட்டத்தையும், அவருடன் தென்னிந்தியா வில் வாழும் ஒரு பிரிவினர் சேர்ந்திருப்ப தையும் அறிந்த ராவணன், எந்த நேரமும் லங்கா மீது படையெடுப்பு நடத்தப்படலாம் என்று புரிந்து கொண்டான். முன்கூட்டியே எதிரிக்கு யுத்தத்திற்கான அறைகூவலை விடுக்கும் திராவிட பாரம்பரியத்தின்படி, அதற்காக பணயப் பொருளாக இராமனு டைய மனைவி சீதையை, பஞ்சவடியுடன் சேர்த்து சிறைப்பிடித்து வந்து அசோக வனத்தில் சிறைவைத்தான்.

முடிந்தால் தன்னுடன் போர் செய்து தோற்கடித்து, பணயப் பொருளான சீதையை, மீட்டுச் செல்லலாம் என்று எதிரிக்கு நேரடியாக சவால் விடுக்கும் திராவிட பாரம்பரியத்தை வெளிப்படுத்திய வீரசம்பவம் இதுவாகும். ராமன் இலங்கை மீது படையெடுத்து வந்தார். ராவணனின் தம்பி விபீஷணன், ராவணனின் பலத்தை யும் பலவீனத்தையும் ராமருக்கு காட்டிக் கொடுத்தான். லங்கா நகரியில் நடந்த யுத்தத்தில் திராவிட வீரரான இயக்கர் குல ராவண மகாராசா உயிரிழக்கிறார். நாகர் குலத்தைச் சேர்ந்த அவருடைய மனைவி மண்டோதரியும் தன்னைத்தானே மாய்த்துக் கொள்கிறாள்.

வட இந்திய ஆரிய குலத்து ராமர், 14 நாட்கள் லங்கா நகரியில் (மாதோட்டம்) இருந்து ஆட்சி செய்தார். ராவணனுடைய தம்பி விபீடணன் ராமருடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் மாதோட்டம் பிரிவில் இருந்தவர்கள் விஷ்ணுவை வழிபடும் வைணவ சமயத்தை கடைப்பிடிப்பதற்கும், வட இந்திய அயோத்தியின் ஆரிய ராஜதானிக்கு கீழுள்ள நாடாக லங்கா இருப்பதற்கும் உடன்பாடு காணப்பட்டிருந்தது. **இதன்மூலம் அயோத்தி ராமன் பணயப் பொருளான மனைவியை மீட்பதை விட, லங்காவை தமது ஆட்சியின் கீழ்க் கொண்டு வருவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது.** ஆரிய குல்தைச் சேர்ந்த ராமனுடைய கட்டளைப்படி இயக்கர் குலத்தைச் சேர்ந்த விபீஷணன் மாதோட்டம் லங்கா நகரி இராஜதானியில் இருந்து ஆட்சியை ஆரம்பித்தார். மீண்டும் மாதோட்டம் தனியான இராஜதானியாகவும் மாந்தை வேறொரு இராஜதானியாகவும் இயங்கத் தொடங்கியமைக்கு பல ஆதாரங்கள் உள்ளன. விபீஷணனுடைய பரம்ரையினர் நீண்டகாலம் மாதோட்டம் லங்கா நகரியிலிருந்து ஆட்சி செய்துள்ளனர். அக்காலத்தில் சேரசோழ பாண்டிய மன்னர்களின் படையெடுப்புகள் பல இடம்பெற்றுள்ளதற்கும் வரலாறுகள் உள்ளன.

**மாந்தை இராஜதானி** : விபீஷணனுடைய ஆட்சியின் கீழ் இருக்க விரும்பாத நாகர்கள் மாந்தை இராஜதானியை திரும்பவும் வேறாகப் பிரித்துக் கொண்டனர். இதனால் மாந்தைத் துறைமுகமும் நாகர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது. இக்காலத்தில் மேற்குக் கடற் பிராந்தியத் தில் இடம் பெற்ற கடற்கொள்ளைகள் மற்றும் பல சம்பவங்களை நாகர்கள் முன்னின்று நடத்தியமை வரலாற்றில் குறிக்கப் பட்டுள்ளது.

**மாதோட்டமும் அடங்காப்பற்றும்** : மா-தோட்டம் பிரிவில் விபீஷணன் ஆட்சி இடம்பெற்ற காலத்தில் லங்கா நகரியில் ஏற்பட்ட மாற்றங்களே அடங்காப்பற்று பிரதேசத்தின் வரலாறாக அமைந் துள்ளமை முக்கிய அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபீஷணன் ஆட்சியில் மாதோட்டத்தில் இருக்க விரும்பாத ராவண மகாராசாவின் ஆதரவாளர்களான இயக்கர்களும், நாகர்களும் அங்கிருந்து அண்டைப் பெருநிலப்பரப்பிற்கு இடம்பெயர்ந்துள்ளனர். அப்பகுதிகள் மேற்குமூலை, கிழக்குமூலை என அழைக்கப்பட்டுள்ளன. அவர்கள் மாதோட்டம் ராஜதானியுடன் இடைவிடாது போராட்டங்களை நடத்தி வந்தனர். இந்தப் போராட்டங்களில் மாதோட்டம் ராஜதானி தோல்வி அடைந்த வண்ணம் இருந்தது. இதனால் இயக்கர் நாகர்கள் ஒன்றாக வாழ்ந்த பிரதேசம் "அடங்காப்பற்று" என்ற பெயரைப் பெற்றது. மா-தோட்டம் மற்றும், ராவண மகாராசாவின் "லங்கா-நகரி இராஜதானி" ஆகியவற்றின் வரலாறு களுக்கு, அடங்காப்பற்றுப் பிரதேசத்தின் வரலாறுகள் மேலும் வலுச் சேர்ப்பதாக உள்ளன.

**கி.மு. 6ம் நூற்றாண்டு** இலங்கை வரலாற்றின் மற்றுமொரு அடையாளமாக கூறப்படும் விஜயனின் வருகை மாந்தை துறைமுகம் ஊடாக இடம்பெறுகிறது. விஜயனுடன் வந்திருந்த பிராமணர் ஒருவர் மாதோட்டத்திலிருந்த திருக்கேதீச்சர ஆலயத்தை வழிபட்டதாகவும் பின்னர் ஆலயத்தை திருத்தியதாகவும் வரலாறுகள் தெரிவிக்கின்றன.

**கி.மு. 5 நூற்றாண்டு** : கிறிஸ்துவிற்கு முன்னர் 5ம் நூற்றாண்டு காலப்பகுதியில் மாதோட்டம் பிரிவின் நில்பரப்பளவு 1200 ஏக்கர் என்று தமிழ் வரலாற்றாசிரியர்களால் மட்டும் குறிப்பிடப்படுகிறது.

"மாவட்டங்களுக்கு பெயர் வைக்கும்போது அங்கிருக்கும் முக்கிய இடத்தின் பெயரை மாவட்டங்களுக்கு வைப்பது சிங்கள பாரம்பரியமாக இருந்துள்ளது"[1] என்று வரலாற்றாசிரியர் சேர் ஜேம்ஸ் எமர்சன் ரெனற் தெரிவித்துள்ளார். ("CEYLON" by Sir James Emerson Tennent-1859.Vol. 1 .p.567.)

**கி.மு. 3ம்** நூற்றாண்டிலிருந்து **கி.பி.** 4 ம் நூற்றாண்டுவரை 700 வருட காலத்திற்கான குறிப்புகள் எதுவும் தெளிவாக ஆய்வு செய்யப்படவில்லை. மேற்குக் கரையோரப் பகுதிகளான மாந்தை மற்றும் மாதோட்டம் ஆகிய பகுதிகளில் தென்னிந்திய சேர சோழர் பாண்டியர் ஆகியோருடைய படை யெடுப்புகள் தொடர்ச்சியாக இடம் பெற்றதாகவும் அவர்களுடைய கடல் வாணிபம் மாந்தைத் துறை முகத்தினூடாக இடம்பெற்றதாகவும் குறிப்புகள் காணப் படுகின்றன. இவற்றில் அநேகமானவை பாடல்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

**கி.பி 7ம் நூற்றாண்டு** : கி.பி.700ம் ஆண்டுக் காலத்தில் இந்தியாவில் இருக்கும் 1008 சிவலிங்கத் தலங்களுக்குச் சென்று திருஞான சம்பந்தர் தேவார பதிகங்களைப் பாடியுள்ளார். ராமேச்சரத்திலிருந்து, இலங்கையின் மா-தோட்டம் பகுதியில் இருந்த கேதீச்சர தலம்பற்றி பாடிய தேவாரங்களிலே கடலை அண்டியுள்ள மாதோட்டம் பகுதியில் ஈஸ்வர தலம் அமைந்திருக்கிறது என்றும், அங்கு திருக்கேதீஸ்வரர் அமர்ந்து இருக்கிறார் என்றும், அவரை வணங்கி அவர் அருளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தெளிவாகக் கூறியுள்ளார். இதிலிருந்து மாதோட்டம் நன்னகரில் கேதீச்சர ஆலயம் இருந்தமை தெளிவாகிறது. ராமர் வணங்கியதாகக் குறிப்பிடப்படும் இடத்தின் புராதன பெயர் ராவணேஸ்வரம் என்பதா

[1]It was the habbit of Sinhalese to apply to a district the name of the principal place with in it; ("CEYLON" by Sir James Emerson Tennent-1859.Vol. 1 .p.567.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் பின்னர் ராமர் வழிபட்ட காரணத்தினால் ராமேச்சரம் என்று பெயர் வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ராமேச்சரத்திலிருந்து ஞான சம்பந்தர் கேதீச்சரம் பற்றி பாடிய 10 தேவாரங்களிலும் **மாதோட்டம் நன்னகரில் இருக்கும் திருக்கேதீச்சரம்** பற்றிக் குறிப்பிடப்படும் பகுதிகள் தரப்படுகின்றன.

**கேதீச்சரப் பதிகம்** : பத்துத் தேவாரங்களை உள்ளடக்கியது பதிகம். இந்த பத்துத் தேவாரங்களிலும் மாதோட்டம் என்பது ஒரு நகர் என்று விளித்துப் பாடப்பட்டுள்ளது. சிவபெருமான் லிங்க வடிவில் வீற்றிருந்த பிரதேசம் நன்-நகர் என்று குறிப்பிடப்படுகின்றது.

தலம் : திருக்கேதீச்சரம் பண் : நட்டராகம்

(1158) கருது கின்றவூர் கனைகடல் கடிகமழ்
**பொழிலணி மாதோட்டம் ....**

(1159) ஈடமாவது இருங்கடற் கரையினில்
**எழில்திகழ் மாதோட்டம்**

(1160) **உயர்தரு மாதோட்டத்து**
அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு

(1161)) **மலிகடல் மாதோட்டத்து** அடிகள்
ஆதரித்து இருந்தகே சீச்சரம்
பரிந்தசிந் தையராகி

(1162) **மலிகடல் மாதோட்டத்து**
எல்லையில் புகழ் எந்தைகே தீச்சரம்

(1163) வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற
**மருவிய மாதோட்டங்**
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே

(1164) **வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை**
**நடமிடு மாதோட்டம்**

(1165) தென்னிலங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன், முடிதிண்டோள்
தன்னலங்கெட வடர்த்தவர்க் கருள் செய்த
தலைவனார் கடல்வாயப்
**பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்**
**பொருந்திய மாதோட்டத்துத்**
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே
தீச்சரத்துள்ளாரே

**தெளிவுரை:** கைலாசமென்னும் மலையை வருத்தி எடுத்த, தெற்கின் கணுள்ள இலங்கையிலுள்ளார்க்கு அரசனாகியிருந்தவருடைய (இராவணனுடைய) தலைகளும் வலிய புயங்களும் தத்தம் நிலைகெட நெரித்து, பின் அவன் வேண்டுதல் செய்ய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் புரிந்த முதல்வர், கடலின்கணுள்ள பொன்னும், பிரகாசிக்கின்ற முத்துக்களும், மாணிக்கங்களும் செறிந்த **மாதோட்டத்திலுள்ள**, சிந்தித்து அன்போடு அடியார்கள் வணங்குகின்ற திருக்கேதீச்சரமென்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே.

(1166) மாவும் பூகமும் கதலியும் நெருங்கு**மா**
**தோட்டநன் னகர்மன்னித்**

(1167) புத்த ராய்ச்சில புனைதுகில் உடையவர்
புறனுரைச் சமண்ஆதர்
எத்தர் ஆகிநின்று உண்பவர் இயம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
**போர்த்தவர் மாதோட்டத்து**
அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே

**தெளிவுரை:** உலகத்தீரே, புத்தசமயிகளாகிய சில தைத்த வஸ்திரங்களை அணிபவரும், புறங்கூறிப் பலரை வஞ்சித்து நின்று புசிக்கும் சமணர்களும், போதிக்கின்ற அறியாமையாகிய போதனையை கேளாதொழியுங்கள். மதயானையை அஞ்சும்படி உரித்து, அதன் தோலை போர்த்த சகத் பிதாவாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற **மாதோட்டத்திலுள்ள** பாலாவியென்னும் தீர்த்தக் கரையிலிருக்கின்ற கேதீச்சரமென்னும் தலத்தை அடையுங்கள்.

(1168) மாடெ லாமண முரசெனக் கடலினது
ஒலிகவர் **மாதோட்டத்து**

என்று திருக்கேதீச்சர பதிகத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியுள்ளார். இவை அனைத்திலும் **மாதோட்ட நன்னக**ர் குறிப்பிடப்படுகிறது. திருக்கேதீச்சர பதிகத்தில் இராவணனைப்பற்றி ஒரு தேவாரம் மட்டும் பாடப்பட்டுள்ளது. அதே நேரம் புத்தபகவானைப்பற்றியும் சமண சமயத்தைப்பற்றியும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. அதே போல ஏனைய தலங்களைப்பற்றிப் பதிகம் பாடும்போது ஒரு தேவாரத்திலாவது இராவணனைப்பற்றிப் பாட திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தவறவில்லை என்பதை இரண்டாம் திருமுறையில் உள்ள தேவாரங்கள் மூலமும் தெரிந்து கொள்ளலாம்.

**கி.பி. 07ம் நூற்றாண்டுகளில்** வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கேதீச்சரம்பற்றிப் பாடிய தேவாரங்களில், வங்கம் மலிகின்றகடன் **மாதோட்ட நன்னகரில்** என்றும், வையம் மலிகின்ற கடல் **மாதோட்ட நன்னகரில்**, வானத்துறு மலியுங்கடன் **மாதோட்ட நன்னகரில்**, மட்டுண்டு வண்டாடும்பொழின் **மாதோட்ட நன்னகரில்**, மாவின் கனி தூங்கும்பொழின் **மாதோட்ட நன்னகரில்**, என்றும் பாடியுள்ளார். மற்றுமொரு தேவாரத்தில், **"ஈழநாட்டு மாதோட்ட நன்னகருள்"** என்றும் பாடப்பட்டுள்ளது. கி.பி. 7ம் 8ம் நூற்றாண்டுகளில் பாடப்பட்டுள்ள தேவாரங்களில் இருந்து மாதோட்ட நன்னகரும், அங்கிருந்த திருக்கேதீச்சர ஆலயமும் சிறப்புற்று இருந்துள்ளமை தெளிவாகிறது.

**கி.பி.08ம், 9ம், 10ம் நூற்றாண்டு** காலம் மாதோட்டம் சம்பந்தமான குறிப்புகளை ஆங்கில நூல்களில் தேடிப் பிடிக்க முடியவில்லை. இந்தப் பிரதேசத்தில் சேர, சோழ பாண்டிய மன்னர்களின் ஆட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதில் திருகேதீச்சரத்தில் சோழ மன்னன் திருத்த வேலைகளைச் செய்ததாக வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கி.பி. 16ம் நூற்றாண்டு** கி.பி.1545ம் ஆண்டு மாதோட்டத்தின் சில பகுதிகள் கடலில் மூழ்கின. ஆலயம் இருந்த பகுதிக்கு எதுவித சேதங்களும் ஏற்படவில்லை என்று ஆலய வரலாறுகள் தெரிவிக்கின்றன. ஆனால் புராதன ஆலயம் மண்ணினால் மூடப்பட்டுள்ளது என்று, அந்த இடத்தில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. இதன் மூலம் **மாதோட்ட நகர் கடலில் ஆழ்ந்து விட்டமையும், திருக்கேதீச்சரம் ஆலயம் இருந்த பகுதி மட்டும்** எஞ்சியிருந்தமையும் தெளிவாகிறது.

**போர்த்துக்கேயர் ஆட்சியில் மாதோட்டம்:**

**கி.பி.16ம் நூற்றாண்டுகளில்** கி.பி.1558 களில் அந்நியர்களான போர்த்துக்கேயர் மன்னார் பகுதியில் கிறிஸ்தவ மதத்தை பரப்பத் தொடங்கினர். சுமார் 100 ஆண்டுகள் வரை போர்த்துக்கேயரின் நிர்வாகம் இடம்பெற்றது.

**கி.பி.1558 ஆண்டு** திருக்கேதீச்சரம் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டு செங்கற்கள் எடுத்துச் செல்லப்பட்டன. திருக்கேதீச்சரத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட செங்கற்கள் கோட்டையின் மேல் பகுதியைக் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. மன்னார்க் கோட்டையின் கீழ்பகுதி கபுக் கற்களினால் கட்டப்பட்டிருந்து. கோட்டையின் ஒருபக்கத்தில் உள்ள கடலில் இருந்து சுற்றி வர அகழிகள் தோண்டப்பட்டுள்ளன. கோட்டைக்குச் செல்வதற்கு ஒரு வழிப்பாதை மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. மன்னாரில் அந்நியரால் கட்டப்பட்டுள்ள கோட்டையைப் பார்க்கும்போது, இராவண மகாராசா காலத்தில் திராவிட பாரம் பரியப்படி மாதோட்டத்தில் கட்டப்பட்டிருந்த கோட்டையைச்சுற்றி அகழிகள் அமைக்கப் பட்டிருந்த விடயம் ஞாபகத்திற்கு வருகிறது.

அத்தோடு இந்தப் பிரதேசத்தில் கபுக் கற்கள் பாவனையில் இருந்தமையும் பிற்காலத்தில் செங்கல் பாவனை வந்துள்ளமையும் தெரிகிறது. போர்த்துக்கேயர் ஆலயத்தை இடித்தபோது திருக்கேதீச்சரத்திலிருந்த மகா-லிங்கத்திற்கு என்ன நடந்தது என்பது தெளிவில்லை.

**கி.பி.1645ம் ஆண்டுகளில்** எழுதப்பட்டுள்ள போர்த்துக்கேயருடைய அறிக்கைகளில் இந்தப் பிரிவிற்கு **Man-tota (மாந்-தோட்டம்)** என்ற புதிய சொல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மாந்தையும் மாதோட்டமும் ஒரு பிரிவாக ஆக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகிறது. மாந்தை + மாதோட்டம் என்பது சுருக்கப்பட்டு Mantai+Ma-totta = Man-totta மாந்-தொட்ட, **(மாந்-தோட்டம்)** என்று வரலாறுகளிலும் வரைபடங்களிலும் குறிக்கப்பட்டுள்ளதிலிருந்து தெளிவாகிறது. இந்தப் பதிவுகள் போர்த்துக்கேய குறிப்புகளில் காணப்படுகிறது. ஆனால் "தொட்ட" என்பது டச்சு மொழிச்சொல் என்று அறிஞர்கள் பலர் தெரிவிப்பதும் குறிப்பிடத்தக்கது

போர்த்துக்கேயருடைய ஆட்சியில் வரையப்பட்ட ஆரம்பகால வரைபடங்களில் Mantai (மாந்தை) Ma-tota என்றும் மா-தோட்டம் Ma totta என்றும் தெளிவாக பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதிலிருந்து மாந்தை மற்றும் மாதோட்டம் என்னும் இரண்டு பிரிவுகளும் வேறு வேறாக இருந்தமையும் பிற்காலத்தில் இரண்டும் "மாந்-தோட்டம்" Man-tottam (Man-totte) என்ற பெயரில் ஒன்றாக்கப்பட்டமையும் வரைபடங்களில் தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒல்லாந்தர் ஆட்சி :

**கி.பி.17ம் நூற்றாண்டு கி.பி.1658ம்** ஆண்டுகளில் இலங்கையில் ஒல்லாந்தரு டைய ஆட்சி ஆரம்பித்தது.



"1658 களின் ஆரம்பத்தில் மன்னார் கோட்டையை போர்த்துக்யேரிடமிருந்து ஒல்லாந்தர் தம் வசமாக்கினர். 1658ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ந் திகதி ஒல்லாந்தர் பரவைக் கடலைத் தாண்டி **மாந்-தோட்டம் (Man-tota)** நிலப்பரப்பு ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி படையெடுப்பை முன்னெடுத்தனர்"[1] என்று "Ceylon and the Portuguese" என்ற நூலில் எழுதப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர், கட்டுக்கரைக்குளம் பற்றி எழுதிய குறிப்புகளில் "முற்காலத்தில் **கட்டக்கரைக்** குளத்திலிருந்து **மாந்-தோட்டம் மாகாணம்** முழுவதற்கும் நீர்ப்பாசனம் வழங்கப்பட்டதால் செழிப்புள்ள பிரதேசமாக இருந்தது"[2] என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒல்லாந்தருடைய ஆட்சியிலும் **மாந்-தோட்டம்** என்ற பதம் பாவனையில் இருந்துள்ளமைக்கு வரைபடங்களும் சான்று பகருகின்றன.

## ஆங்கிலேயருடைய ஆட்சி

**கி.பி.18ம் நூற்றாண்டு** : கி.பி.1795 களில் இலங்கையில் ஆங்கிலேயருடைய ஆட்சி ஆரம்பித்துள்ளது. மாந்தோட்டம் பிரிவு பற்றிய ஆய்வுகளில் முக்கிய இடம் பிடிக்கும் தொல்லியல் அடையாளங்களில், மாந்தை மாதோட்டம் என்ற பெயர்களும், அவற்றின் விபரங்களும், மற்றும் கட்டுக்கரைக்குளமும், திருக்கேதீச்சர ஆலயமும் முக்கிய இடங்களைப் பிடிக்கின்றன.

## மாந்-தோட்டம்பற்றி எழுதப்பட்ட ஆங்கில நூல்களும் ஆய்வுகளும் :

**கி.பி. 19ம் நூற்றாண்டு** காலப்பகுதியில் மா-தோட்டம் திருக்கேதீச்சரம்பற்றிய பல தகவல்கள் வெளிவந்துள்ளன. 1859 களில் Sir James Emerson Tennent என்பவர் Ceylon (**இலங்கை**) பற்றி எழுதிய ஆய்வுக் குறிப்புகள் இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. அதில் மாந்தை, மாதோட்டம் பற்றிய குறிப்புகளை தெளிவாக எழுதியுள்ளார். **கி.பி. 1879 களில்** சி.பிறிற்றோ அவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட "யாழ்ப்பாண வைபவமாலை" என்ற நூலில் மாந்தை, மாதோட்டம் பற்றிய பல தகவல்கள் தரப்பட்டுள்ளன.

**கி.பி. 1909 களில்** எச்.பார்க்கர் (H.Parker) அவர்களால் வெளியிடப்பட்ட **புராதன இலங்கை** (Ancient Ceylon) என்ற நூலில் "மறைந்து போன நகரங்கள்" என்ற தலைப்பில் எழுதியுள்ள பகுதியில் " மன்னார் தீவகத்திற்கு அடுத்திருந்த மா-தோட்டம் நிலப்பிரிவில் இருந்தே முழு லங்காவும் புராதன காலத்தில் ஆட்சி செய்யப்பட்டுள்ளது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

[1]"The 22nd of February (1658) the fort of Manar surrendered. The Hollanders thereupon crossed to **Man-tota** and began their advance on Jaffna……" ( Ceylon and the Portuguese 1505-1658 by P.E.Pieris 1920 .p.289)

[2]"Kattakarai, the tank which once fed the **wealthy province of Man-tota,** (Ceylon and the Hollanders 1658- 1796 .p. 02. by P.E. PIERIS. 1918).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கி.பி.1926ம்** ஆண்டுகளில் சி. ராசநாயகம் முதலியார் அவர்கள் எழுதிய **புராதன யாழ்ப்பாணம்** (Ancient Jaffna) என்ற ஆங்கில நூலில், மா-தோட்டம், மாந்தை ஆகிய பிரிவுகளில் வாழ்ந்த இயக்கர், நாகர் குலத்தவர்கள் பற்றியும் பிரதேசத்தின் தொன்மைகள் மற்றும் சிறப்புகள்பற்றியும் விரிவான தரவுகள் தரப்பட்டுள்ளன.

**கி.பி. 1950-04-18ம் திகதி இடம்பெற்ற தொல்லியல் ஆய்வு** : தொல்லியல் திணைக்கள உதவித் தலைவர் எஸ். சண்முகநாதன் திருக்கேதீச்சரத்தில் ஆய்வுகளை நடத்தியுள்ளார். அவருடைய முழுமையான அறிக்கை அகழ்வாராய்ச்சி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படாமை துரதிருஷ்டமாகும். ஆய்வுகளில் கண்டு எடுக்கப்பட்ட புராதன சின்னங்கள், தொல்லியல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் எழுதிய குறிப்புகளே கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கி.பி.4ம் நூற்றாண்டுக்கான** வரலாறு சம்பந்தப்பட்ட விடயங்களை சேர். ஜேம்ஸ் எமர்சன் ரெனற் குறிப்பிடுகையில் "இந்த இடத்தில் சீனப்பயணி பற்றிய ஆய்வின் குறிப்புகளை முன்வைக்கிறேன். பாஹியன் என்ற சீனப்பயணி நாலாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் இலங்கையிலிருந்து சீனாவரை, வர்த்தகக் கப்பலில் பயணம் செய்துள்ளார். அந்தப் படகில் இருநூறுபேர் வரை பயணம் செய்யமுடியும். அந்தப் படகை இரண்டு சிறிய படகுகள் தொடர்ந்து கொண்டிருந்தன. எதிர்பாராதவிதமாகப் பெரிய படகிற்கு அபாயம் ஏற்படும் நேரங்களில் உதவுவதே அவற்றின் நோக்கமாக இருந்தது"[1] என்று தெரிவித்துள்ளார். ("CEYLON" by Sir James Emerson Tennent-1859.Vol. 1 .p.567.)

**கி.பி.14ம் நூற்றாண்டுகளில்** இபின்பட்டுட்டா என்ற பயணி கல்கத்தாவில் கண்ட விபரங்களையும் 1859 களில் Sir James Emerson Tennent வெளியிட்ட நூலில் குறித்துள்ளார். "1000 பேர் பயணம் செய்யக்கூடிய சீனப்படகு ஒன்று தனது பயணத்தை கல்கத்தாவிலிருந்து ஆரம்பித்தது. அதிலிருந்தவர்களில் 400 பேர் படைவீரர்கள். பெரிய கப்பலைத் தொடர்ந்து மூன்று சிறிய படகுகள் சென்றன". "இந்தப் படகுகளில் ஆழம் குறைந்த மன்னார் கடல் வழியாக செல்வதற்கான வழிகாட்டிகள் தொழில் நுட்பங்கள் இருந்துள்ளன". "இதனைவிட **மாந்-தோட்டவில் (Man-totte)** பெரிய படகுகள் தரிப்பதற்கான வசதிகளுடன் கூடிய துறை ஒன்று இருந்துள்ளது. மாந்தோட்ட **(Man-totte)** என்பது புராதன காலத்தில் **"மகா-தித்த அல்லது மகா-தோட்டம் (Maha-totte) என்று அழைக்கப்பட்ட பெரிய படகுகள் தரிக்கும் துறையாகும்.** கிறிஸ்தவ யுகத்திற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த இந்தத் துறையில் வாணிப நடவடிக்கைகள் எப்போது தொடக்கம் இடம்பெற்று வருகின்றன என்பதற்கான குறிப்பு களில்லை"[2] என்று இபின் பட்டுட்டா பற்றிய

---

[1]"On this point we have the personal testimony of the Chinese traveler Fa-Hian , who at he end of the Fourth centuary sailed direct from Ceylon for China in a Merchant Vessal so large at to accommodate two hundred persons, an having in two a smaller one, as precaution against dangeres by sea". ("CEYLON" by Sir James Emerson Tennent-1859.Vol. 1 .p.567.)

[2]Ibn Batuta saw, at Calicut, in the fourteenth century, junks from China capapable of accommodating a thousand men, of whom Four hundred were soldiers, each of these large ships was followed by three smaller. With the vessels of such magnitude, it would be neither expedient nor practicable to navigate the shallows in the vicinity of Manaar: and besides, **Mantotte** or as it **was anciently called, Maha - titta or Maha-totta "the great ferry" although it existed as a port upwards of four hundred years before the Christian era**, was at no period an emporium of commerce". ("CEYLON" by Sir James Emerson Tennent-1859.Vol. 1 .p.564.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளை தனது நூலில் Sir James Emerson Tennent தெரிவித்துள்ளார். ("CEYLON" by Sir James Emerson Tennent-1859.Vol. 1 .p.564.)

**கி.பி 1888 தொடக்கம்** குளங்களைப்பற்றி ஆய்வு செய்த எச். பார்க்கர் அவர்கள் அதனை 1909 களில் நூலாக வெளியிட்டுள்ளார். "பல புராதன சின்னங்களின் எச்சங்கள் **மாந்-தோட்டத்திலும்** உள்ளன, **(தமிழில் மகா-தோட்டல் என்றும் மகா-தோட்டம் என்றும் இந்தப் பிரிவு அழைக்கப்பட்டுள்ளது.)** மன்னார் தீவகத்திற்கு எதிர்ப்பக்கத்தில் இருக்கும் தென் முனையில் உள்ள நிலப் பிரிவில் இருந்த தமிழ் ஆலயம் "திருக்கேஸ்வரம்" ஆகும். இது விஷ்ணு வழிபாட்டுத்தல மாகும். ஆனால் பொதுவாக இந்த இடம் 'மகா-தித்த" என்று வரலாற்றாசிரியர்களால் நம்பப்பட்ட இடமாகும். அதாவது தென்னிந்தியா விலிருந்து பயணிகள் வந்திறங்கும் "பெரிய இறங்கு துறை" இதுவாகும். தமிழ்ப் பெயரைத் தவிர இதனை அடையாளப்படுத்துவதற்கு வேறு எதனையும் என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை."[1] (Ancient Ceylon -1909 by H.Parker 'THE LOST CITIES'. p. no.251)

திரு. எச். பார்க்கர் அவர்கள் ஆய்வுக்காக எடுத்துக் கொண்ட புராதன காலப்பகுதியில், 'திருக்கேஸ்வரம்' விஷ்ணு வழிபாட்டுத்தலம் என்று குறிப்பிட்டிருப்பது புராதனகால ஒரு வரலாற்று அடையாளமாகும். ஆசிரியருக்குக் கிடைத்த நூல்களில் இருந்த தகவல்களில், லிங்க ஆலயத்தில், விஷ்ணு வழிபாடு இருந்தது என்பதற்கான விபரங்கள் கிடைக்கவில்லை என்பதையே "மறைந்துபோன நகரங்கள்" என்ற தலைப்பில் எழுதிய வரலாற்றில் ஆய்வாளர் எச். பார்க்கர் குறிப்பிட்டுள்ளார்.

**கட்டுக்கரைக் குளம் :** மாந்தோட்டம் (Mantotte) பிரிவின் வரலாறும் பெயரும் பற்றிய ஆய்வுகளில் கட்டுக்கரைக்குளமும் முக்கிய இடம் பிடிக்கின்றது.

**கி.பி.1658** - 1795 வரை ஒல்லாந்தருடைய காலத்தில் டச்சு மொழியில் எழுதப்பட்ட அறிக்கைகளை பி.ஈ.பீரிஸ் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1918 ஆண்டு நூலாக வெளியிட்டுள்ளர். "கட்டக்கரைக் குளத்தை திருத்தும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் குளத்திலிருந்து **மாந்-தோட்டம் மாகாணம்** முழுவதற்கும் நீர்ப்பாசனம் வழங்கப்பட்ட தால் செழிப்புள்ள பிரதேசமாக இருந்தது. தற்போது ஏனைய நூற்றுக்கணக்கான குளங்களைப் போன்று இதுவும் அழிவுற்ற நிலையில் காணப்படுகிறது. அளவில் பெரியதாக குளம் இருந்த காரணத்தால், இதற்கு Giant Tank என்று ஒல்லாந்தர் பெயர் வைத்துள்ளார்கள்"[2] என்று எழுதியுள்ளார். (Ceylon and the Hollanders 1658 - 1796 by P.E PIERIS.-1918.p. no.02.)

[1]"There are some ancient remains also a **Man-tota** (called in **Tamil Maka-tottal, and Maka-totam**) opposite the southern end of the island of Mannar, includuing those of a celebrated Tamil temple dedicated to "Tirukesvaram", that is, Vishnu: but this place is generally believed to be the "Maha-tittha" of the historians, "the great landing place"of travellers from southern India, although I am not aware that the there is anything but the Tamil name to confirm the identification." (Ancient Ceylon -1909 by H.Parker 'THE LOST CITIES'. p. no.251)

[2]"Giant Tank: Instructions were given to repair Kattakarai, the tank which once fed the **wealthy province of Man-tota,** and like many hundreds of others was now lying in a ruined condition; its extent was so large that it was named the Giants' Tanks by the Hollanders". (Ceylon and the Hollanders 1658- 1796 by P.E PIERIS. 1918.Page No: 02.).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கி.பி.1888 களில்** குளங்களைப் பற்றி ஆய்வு செய்த ஆங்கிலேயரான எச். பார்க்கர் அவர்கள் மாந்-தோட்டம் கட்டுக்கரைக்குளம் பற்றி எழுதியுள்ள பகுதியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "மற்றுமொரு நீர்த்தேக்கம் அதன் அமைப்புகள் காரணமாக Giant Tank என்று அழைக்கப்படுகிறது. இதன புராதன பெயர் தொலைக்கப்பட்டுள்ளது. "சோத(ட)யன் கட்டு கரை" என்பதின் மொழிபெயர்ப்பாக, அதாவது மிகப்பெரிய பலமுள்ளவர்களால் கட்டப்பட்ட கரை" என்ற அர்த்தத்தில் தற்போதைய பெயர் Giant Tank என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதன் திருத்த வேலைகள் முடிவுறாமல் இருந்து, அண்மைக்காலம் (1888) வரை இடம்பெற்றுள்ளது. ஆனால் இந்தக் குளத்தின் கீழ்க்கரை புராதன காலத்திலிருந்து இருந்துள்ளது என்று கூறலாம்.[1]

*"சோதையன்" என்ற பெயர் வையா பாடலில் மக்கட்பெயராக குறிப்பிடப்படு கிறது. குளத்தின் கீழ்கரை புராதன காலத்திலிருந்து இருந்துள்ளது என்ற குறிப்பிலிருந்து கட்டுக்கரைக்குளம் சிறிய அளவிலிருந்து பின்னர் பெரிதாக்கப்பட்டது என்பதும் தெளிவாகிறது".

*கட்டுக்கரைக் குளத்தின் ஒரு பகுதி "கொல்லர் சிறுக்குளம்" என அழைக்கப்படு கிறது. கொல்லர் குலத்தவர்கள் பஞ்சகர்மாக்களில் ஒரு பிரிவினர் என்று எஸ். இராசநாயகம் முதலியார் தெரிவித்துள்ளார். இவர்கள், திருக்கேதீச்சர ஆலயத்தின் பூசை வழிபாட்டுக்கான பங்குதாரர்களும் உரித்துடையவர்களு மாவர். கிராமிய வழிபாட்டுத்தலமாக இருந்த திருக்கேதீச்சர ஆலயம், ஆகம வழிபாட்டுத் தலமாக்கப்பட்டபோது, பஞ்சகர்மாக்களில் அநேகமானோர் இடம்பெயர்ந்ததாகவும், மதம் மாறியதாகவும் பலர் தெரிவித்துள்ளனர்.

*ஆங்கில ஆய்வாளர் எச்.பார்க்கர் அவர்கள் சிங்களமொழி வரலாறுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு விபரங்களை எழுதியுள்ளார் என்றே கூறவேண்டும். மகா-தித்த என்ற சொல் சிங்கள மொழி வரலாற்று நூல்களில் பாவனையில் இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மகா-தீர்த்தம் என்ற தமிழ்ச் சொல்லை, மகா-தித்த என்று எழுதியிருக்கலாம் என்ற வாதமும் முன் வைக்கப்படுகிறது.

## மா-தோட்டம் என்ற இடத்தின் பெயரில் உள்ள குழப்பங்கள் :

**மாதோட்டம்** : திருமுறைகளிலும் ஏனைய தமிழ் வரலாற்று நூல்களிலும் மகாதீர்த்தம், பெரிய தோட்டம், மகாதோட்டம், மா-தோட்டம் மற்றும் மாந்தை என்று தமிழ் வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளதை, ஆங்கில வரலாற்றாசிரியர்களும் உறுதி செய்துள்ளனர். மாதோட்டம், மாந்தை போன்ற பெயர்கள், அந்நிய மொழிகளில் எழுதப்பட்டபோது பல மாற்றங்களுக்கு உள்ளாகியிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

கி.பி. 1558 தொடக்கம் போர்த்துக்கேயர் ஆட்சிக் குறிப்புகளிலும், 1658 களுக்குப் பின்னர் எழுதப்பட்ட ஒல்லாந்த

---

[1]( Ancient Ceylon -1909 by H.Parker "THE LOST CITIES" Page No.247)
"The other reservoir is the work now known as the Giant's Tank. Its original name has been lost. (A translation of its Tamil name, 'Sodayan kattu karei' = Giant built embankment).This also was an unfinished work until its recent restoration, but a lower embankment may have existed from ancient times. (Ancient Ceylon -1909 by H.Parker 'THE LOST CITIES' Page No.247)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கைளிலும் மாந்தை, மாதோட்டப் பிரதேசங்களின் பெயர் மாந்-தோட்ட என்று எழுதப்பட்டுள்ளது. கி.பி.1859களில் ஆங்கிலேயர் ஆட்சியில் Sir James Emerson Tennent எழுதிய CEYLON என்ற நூலிலும், கி.பி. 1909ம் ஆண்டு எச்.பார்க்கர் அவர்களின் Ancient Ceylon என்ற நூலிலும் **(Man-totta)** மாந்-தோட்ட என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது. **Man-totta** மாந்-தோட்ட என்ற பெயர் தமிழில் புராதன காலத்தில் மகாதோட்டம், மாதோட்டம் என்று அழைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். இதிலிருந்து **Man-totta மாந்-தோட்டம் என்ற பெயர் அந்நியர் ஆட்சியில் புதிதாக உருவாக்கப்பட்ட ஒன்று என்பது தெளிவாகிறது.**




**கி.பி. 2018 ஆண்டு** : 2013ம் ஆண்டு மன்னாரில் வெளிவந்த பத்திரிகைக்காக "இலங்காபுரம்" என்ற தலைப்பில் 11 ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருந்தேன். பத்திரிகையில் கட்டுரை தொடர்ந்து வெளிவரவில்லை. சிறுவயதில் இருந்தே திருக்கேதீச்சரம் ஆலயத்திற்கு வந்து போயுள்ளேன். இந்த இடத்தில் "மாதோட்டம் நன்னகர்" எங்கிருந்தது? இப்போது எங்கே" அடையாளங்கள் இருக்கின்றனவா? என்ற கேள்விகள் எழுந்து கொண்டே இருந்தன. கடந்த 25 ஆண்டுகளாக ஆய்வுகளைச் செய்து அடங்காப்பற்று-வன்னி சம்பந்தமான நூல்களை வெளியிட்டுள்ளேன்.

அண்மையில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் அவர்கள் கேட்டுக் கொண்டதிற்கிணங்க, பிரதம கணக்காளர் எம்.செல்வரத்தினம் அவர்களின் வாகனத்தில் மாதோட்டம் பற்றிய ஆய்வுகளையும் விபரங்களையும் நேரடியாகத் திரட்டுவதற்காக, மன்னார் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் அவர்களின் ஒழுங்கமைப்பில் கலாசார அலுவல்கள் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.ரூபன் மற்றும் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் த. பிரதீஸ்வரன் ஆகியோருடன் சென்றிருந் தேன்.

**மாதோட்ட நன்னகர்** என்று தேவாரங்களில் குறிப்பிடப்பட்ட பகுதியில் எஞ்சியிருக்கும் திருக்கேதீச்சரம் ஆலயப் பகுதியைப் பார்த்தபோது அங்கு **"கிராம உத்தியோகத்தர் திருக்கேதீச்சரம்"** என்ற பெயரில் அலுவலகம் இருந்தது.

மா-தோட்டம் நன்னகரின் ஒருபகுதி கடலிற்குள் ஆழ்ந்து விட்டது. திடல் பகுதியின் சமநிலப்பரப்பில் மிஞ்சியிருந்த திருக்கேதீச்சர ஆலயத்தின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஆலயம் அமைக்கப் பட்டது. பின்னர் பல முறை ஆலயம் திருத்தப்பட்டுள்ளது. தற்போது இந்திய மத்திய அரசின் அனுசரணையுடன் பெரிய அளவில் ஆலயம் திருத்திக்கட்டப்படுவது மகிழ்ச்சியைத்தந்தது.

புதிதாகக் கட்டப்படும் ஆலயத்திற்கு மேற்கே சுமார் 600 மீற்றர் தூரத்தில் கடலால் மூடப்பட்ட **மாதோட்டம்** பகுதி இருக்கிறது. மழை இல்லாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரணத்தினால் கடல் வற்றியுள்ளது. கடல் இருந்த பகுதியில் அண்மைக்காலத்தில் வளர்க்கப்பட்டதாக கூறப்படும் கருவேல மரங்கள் நிறைந்துள்ளதை காணக் கூடியதாக இருக்கின்றது. சமநிலப் பரப்பிலிருந்து சுமார் 8 மீற்றர் ஆழத்தில் கடல் இருப்பதும் தெரிகிறது.



அரிக்கப்பட்ட கடல் பகுதியில் இருந்து சுமார் 30 மீற்றர் தூரத்தில், 1950களில் (சுமார் 68ஆண்டுகளுக்கு முன்) புராதன திருக்கேதீச்சரம் ஆலயம் இருந்த இடத்தில் அகழ்வாராய்ச்சி இடம்பெற்ற பள்ளம் இருக்கின்றது. இதில் பொழியப்பட்ட கருங்கல் துண்டங்களும் சேதமாக்கப்பட்ட பொருட்களும் போடப்பட்டு நிரப்பப்பட்டுள்ளமையும் தெரிகிறது.



ஆலயத்தின் மூலஸ்தானத்தில் மகா-லிங்கம் இருந்த இடத்தை அடையாளம் காண்பதற்காக பெரிய கருங்கல் தூண் ஒன்று நடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.



பின்னர் திருக்கேதீச்சரத்திலிருந்து சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மா-தோட்டம் கிராம உத்தியோகத்தர் பிரிவு அலுவலகத்திற்குச் சென்றோம். அங்கு **“கிராம உத்தியோகத்தர், மாதோட்டம், மன்.இல.93”** என்ற அறிவிப்பு பலகை தொங்கிக் கொண்டிருந்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம உத்தியோகத்தரிடம் விசாரித்த போது, மாதோட்டம் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள் நான்கு கிராமங்கள் இருப்பதாகத் தெரிவித்தார். புதுக்குடியிருப்பு, மணல்குளம்புலவு, தண்ணீர்தாங்கி, இலந்தைத் தோட்டம் ஆகிய நான்கு கிராமங்களை உள்ளடக்கிய பிரிவிற்கு "மாதோட்டம் கிராம உத்தியோகத்தர் பிரிவு" என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது என்றும், மாதோட்டம் என்றொரு கிராமத்தின் பெயர் பதிவுகளில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டதை, அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டிருந்த முதியவர்களும் உறுதி செய்தனர். கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் மாதோட்டம் புகையிரத நிலையம் இருப்பதாக எம்முடன் வந்திருந்த எஸ். செபராசா தெரிவித்தார். அங்கு சென்று பார்த்தபோது, அண்மையில் திருத்தப்பட்டு நல்ல நிலையில் இருந்த புகையிரத நிலைய அறிவிப்புப் பலகையில் **மாதோட்டம்** என எழுதப்பட்டிருந்தது. அதனைச் சுற்றியிருக்கும் பகுதிகளுக்கும் **மாதோட்டம்** என்ற பெயர் இல்லை என மூத்த கிராமவாசிகள் தெரிவித்தனர்.




பின்னர் மாந்தைப் பிரிவிற்கு சென்று திருக்கேதீச்சரம் செல்லும் வீதிவழியாக திரும்பி வரும்போது ஆலயத்திற்குச் செல்லும் சந்தியில் வீதிக்கு மேல் குறுக்காக திருக்கேதீச்சர நாதர் திருக்கேதீச்சரம் என்று பெரிதாக எழுதப்பட்ட அறிவிப்புப் பதாகை தொங்க விடப்பட்டு இருந்ததை காணக்கூடியதாக இருந்தது.




அதே சந்தியில் திருக்கேதீச்சரம் கோவிலுக்குச் செல்லும் வீதி என்ற அறிவிப்பும் காணப்படுகிறது. அதில் **திருக்கேதீச்சரம்** என்று தமிழிலும், திருக்கேதீஸ்**வரம்** என்று சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் எழுதப்பட்டிருக்கிறது.




அந்த நாற்சந்தியின் வலதுபக்க மூலையில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று கட்டப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ தேவாலயத்திற்கு எதிர்ப்புறத்தே உள்ள வீதியின் பக்கத்தில் சீமெந்தினால் கட்டப்பட்டுள்ள அறிவிப்பில் "ஸ்ரீ மாதோட்டம் ரஜ மகா விகாரை" என்று போடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதுபற்றி பல விபரங்கள் தெரிவிக்கப் பட்டன. ஆனால் சிறு வயதில் இருந்தே திருக்கேதீச்சரம் ஆலயம் இருந்த பகுதியான மாதோட்டம் பிரிவு எங்கிருக்கிறது என்ற கேள்விக்கு பதில் கிடைத்தது போல ஒரு திருப்தி.




**புகையிரத நிலையங்கள்** : 1864ம் ஆண்டுகளில் ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையில் புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. மதவாச்சியிலிருந்து மன்னார் செல்லும் புகையிரத வீதியில், மன்னார் மடு தேவாலயத்திற்குச் செல்லும் வீதியை குறுக்குறுத்து செல்லும் வீதியில் உள்ள புகையிரத நிலையம் **"மடு றோட்"** (Madu Road) அல்லது **"மடுச் சந்தி"** (Madu Junction) என்றும் பெயரிடப்பட்டுள்ளது. அதற்கடுத்ததாக சுமார் 12 கி.மீ.தொலைவில் முருங்கன் புகையிரத நிலையம் இருக்கின்றது.

**மாதோட்டம் புகையிரத நிலையம்** : முருங்கனில் இருந்து 9 கிலோமீற்றர் தொலைவில் **மாதோட்டம்** என்ற பெயரில் புகையிரத நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புகையிரத நிலையத்தில் இறங்கி சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மாதோட்டம் பகுதிக்கும், திருக்கேதீச்சர ஆலயத்திற்கும் செல்ல முடியும்.

**திருக்கேதீச்சரம் புகையிரத நிலையம்** : மாதோட்டம் புகையிரத நிலையத்திலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் **திருக்கேதீச்சரம்** புகையிரத நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் இறங்கி மாதோட்டம் பிரிவிலுள்ள ஆலயத்திற்கு சுமார் 6 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும். திருக்கேதீச்சரம் என்று அழைக்கப்படும் புகையிரத நிலையம், முன்னர் **"திருக்கேதீச்சர தரிப்பு"** என்று அழைக்கப்பட்டது என்று குறிப்புகள் தெரிவிக்கின்றன.

கி.பி. 1893ம் ஆண்டுகளில் ஆங்கில ஆட்சியாளரிடமிருந்து திருக்கேதீச்சர ஆலயத்திற்கென 43 ஏக்கர் காணி பெறப்பட்டுள்ளது. நாட்டுக்கோட்டை செட்டிமார் ஆலயத்தை திருத்தி, நிர்வாகத்தை பொறுப்பெடுத்துள்ளனர். ஆலயம் இருந்த பகுதி மாதோட்டமாகும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் தற்போது மாதோட்டம் பிரிவை "திருக்கேதீச்சரம், கிராம உத்தியோகத்தர் பிரிவு" சுட்டுகிறது.

அண்மைக்காலத்தில் "திருக்கேதீச்சரம் மனிதப் புதைகுழியில் எலும்புக் கூடுகளின் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன" என்று தலைப்புச் செய்திகள் வரும்போது, தமிழர்களின் தொன்மையையும் புராதன அடையாளத்தையும் கொண்ட ஆலயத்தின் பெயர், அர்த்தமில்லாமல் வைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளமையினால் கொச்சைப் படுத்தப்படுவது மிகவும் கவலையைத் தந்தது.

இலங்கையின் வடபுல மேற்குக்கரையில் சைவசமயத் தமிழர்களின் புராதனத்தையும் தொன்மையையும் வெளிப்படுத்தும் அடையாளங்களில் மாதோட்டமும், திருக்கேதீச்சர ஆலயமும், கட்டுக்கரைக் குளமும் முக்கியமானவை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் இலங்கை நில அளவையாளர் திணைக்களம் 2012ல் வெளியிட்ட வரைபடத்தில், புகையிரத நிலையத்தையும், ஆலயத்தையும் அடையாளப் படுத்துவதற்காக **திருக்கேதீச்சரம்** என்ற பெயர் இரண்டு இடங்களில் எழுதப்பட டுள்ளன. மாதோட்டம் என்ற இடமே இல்லாமல் கிராம உத்தியோகத்தர் பிரிவும், புகையிரத நிலையமும், திருக்கேதீச்சர ஆலயத்தின் பெயரில் புகையிரத நிலையமும், கிராம உத்தியோகத்தர் பிரிவும் இருப்பது, எதிர் கால ஆய்வாளர்களுக்கு குழப்பங் களை ஏற்படுத்தும்.

வடபுலத் தமிழர்களின் புராதனத்தை நிலைப்படுத்த 7ம் நூற்றாண்டுகளில் சைவ சமயக் குரவர்களான திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடிய தேவாரங்களிலும், புராதன வரலாறுகளிலும் குறிப்பிடப் பட்டுள்ள மாதோட்டம், திருக்கேதீச்சரம் ஆகியவற்றின் சரியான வரலாற்றுத் தகவல்களையும், அதற்கு ஆதாரமாக உள்ள இடங்களையும், தொல்லியல் சின்ன விபரங்களையும், எதிர்காலச் சந்ததி யினருக்கு முறையாகக் கையளிக்க வேண்டியது எமது தலையாய கடமை யாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தின் குடித்தொகையும் பண்பாட்டுக் கோலங்களும்



பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணை வேந்தர்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

இன்றைய மன்னார் பிரதேசம், இலங்கையின் ஆரம்ப கால வரலாற்றில் பலநிலைகளில் சிறப்புற்று இருந்துள்ளது. இப்பிரதேசம் அன்று சமுக பொருளாதார மற்றும் பண்பாட்டு நிலைகளில் வளர்ச்சி பெற்று இருந்ததற்கான தொல்லியல், வரலாறு, இலக்கியச் சான்றுகள் பலவுண்டு. விவசாயத்திலும், மீன்பிடியிலும் குறிப்பாக முத்துக் குளித்தலும், சர்வதேச வர்த்தகத்திலும் சிறப்புப் பெற்று இருந்தது. இப்பகுதியில் அமைந்திருந்த மகாதோட்டம் பெரிய துறைமுக நகராக இருந்ததற்கு பல சான்றுகள் உண்டு. இத்துறை முகத்தில் இடம்பெற்ற சர்வதேச வரத்தகம் பற்றி வரலாற்று நூல்கள் சிறப்பாக எடுத்துக்கூறுகின்றன. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் சைவ நாயன்மார்களால் பாடல் பாடப் பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயமும் இங்கு அமையப்பெற்றுள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் உரோமன் கத்தோலிக்க மதமும் மன்னார் ஊடாக வரலாற்று இந்தியாவுக்கும் குறிப்பாக தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையான உறவு வரலாற்றுக் காலத்தில் இருந்து மன்னார் வழியாகவே இடம்பெற்றுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட ஆதாரங்களை கருத்தில் எடுக்கும் போது மன்னார் பிரதேசம் இன்று கொண்டுள்ள மக்கள் தொகையிலும் பார்க்க கூடிய மக்கள் தொகையையும், பெரிய பொருளாதார நடவடிக்கைகளையும் கொண்டு இருந்திருக்க வேண்டும். நீர்வளம் பேணப்படாமை, மண்வள இழப்பு, தொற்று நோய்கள், சாதகமற்ற அரசியல் காரணிகள் போன்றவற்றால் மன்னார் பிரதேசம் கீழ் நிலைக்கும் சென்றது எனலாம்.

மன்னார் மாவட்டத்தின் குடித் தொகையில் தமிழ் மக்கள் முக்கியத்துவம் பெற்று இருந்தனர் எனினும் இப்பகுதிக்கு 9ம், 10ம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் மக்களின் வருகை குடித்தொகைப்பண்பில் மாற்றத்தை ஏற்படுத்தியது. மன்னார் முஸ்லீம்களுக்கும் தமிழ்நாட்டின் இராமேஸ்வரம், கீழக்கரை, ஏர்வாடி, காயல்பட்டணம் ஆகிய இடங்களில் வாழும் முஸ்லீம்களுக்கும் இடையே நெருங்கிய உறவு இருந்து வந்துள்ளது. இதனால் தமிழ் நாட்டிற்கும், மன்னாருக்கும் இடையே மக்கள் ஊடாட்டம் மிக உயர்வாக இருந்தது. 1948இல் நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னர், ஏற்பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாடுகள், பிரஜாவுரிமை போன்றவற்றால் இரு பகுதிகளுக்கு இடையே பிரயாணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையலாயிற்று. மேலும் தலைமன்னார்-தனுஸ்கோடி கப்பல் சேவை நிறுத்தப்பட்டதால் இருபகுதிகளுக்கு இடையான போக்குவரத்து இல்லாது போயிற்று.

மன்னார் பிரதேசம் 11 ஆம், 12 ஆம் நூற்றாண்டுகளுக்கு பிறகு குறிப்பாக மன்னார் தீவும், மன்னார் பெரு நிலப்பரப்பின் கரையோரப் பகுதிகளும் யாழ்ப்பாண இராச்சியத்துக்கு கீழ் இருந்தன. எனினும் மாந்தையின் உட்பகுதிகள் குறிப்பாக பனங்காமம், பெருங்காலிப்பற்று மேற்கு மூலை ஆகியன வன்னிச் சிற்றரசர்களால் ஆளப்பட்டன. 16 ஆம் நூற்றாண்டில் போத்துக்கீசர் இலங்கைக்கு வந்ததும் அவர்கள் மன்னாரில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர். பிரான்சிஸ் சேவியர் அடிகளாரால் உரோமன் கத்தோலிக்க மதம் பரப்பப்பட்டு இப்பிரதேச மக்களில் ஒரு பகுதியினர் இம் மத்தைத் தழுவினர். இன்று மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்க மதம் முதன்மை மதமாக இருப்பதைக் காண முடிகின்றது.

போத்துக்கீசரின் கீழ் இருந்த மன்னாரை 1658 இல் ஒல்லாந்தர் கைப்பற்றியனர். இவர்களது ஆட்சியில் மன்னார் பெரிய மாற்றங்களைக் காணவில்லை. மன்னார் நகரம் சிறிய வளர்ச்சி கண்டதுடன் மன்னார் கோட்டையும் பலப்படுத்தப்பட்டது. ஒல்லாந்தர் அரிப்பிலும் ஒரு கோட்டையைக் கட்டினர். கண்டி இராச்சியத்தில் கைதியாக வாழ்ந்த றொபோட் நொக்ஸ் (Tobert Knox) என்பவர் அரிப்பு வழியாகவே ஒல்லாந்தரின் உதவியுடன் இங்கிலாந்துக்கு திரும்பினார். இவர் அன்று இலங்கை பற்றி எழுத்திய இவரது நூலில் குறிப்பாக கண்டி இராச்சியத்தின் வாழ்வு முறைகள் பற்றி மிக நுணுக்கமாக எழுதப்பட்டுள்ளது. மடுத்திருத்தலம் பற்றிய குறிப்பும் இவரது நூலில் காணப்படுகின்றது.

1796 இல் பிரித்தானியர் வருகையுடன் இலங்கையில் பல மாற்றங்கள் நிகழலாயின. 1833 இல் கோப்புறூக்கின் சிபார்சுக்கமைய நாடு ஒன்பது மாகாணமாகப் பிரிக்கப்பட்டது. மன்னார் பிரதேசம் ஒரு மாவட்டமாக, வடமாகாணத்துக்குள் வந்தது. மன்னார் நகரம் மன்னார் மாவட்டத்தின் நிர்வாக மையமாக மாறியது. 19ம் நூற்றாண்டில் கட்டுக்கரைக்குளம் புனரமைக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் தலைமன்னார் - மதவாச்சி புகையிரதப் பாதை அமைக்கப்பட்டதால் இந்தியப் பயணிகள் மன்னார் வழியாக பிரயாணத்தை மேற்கொண்டனர். தலைமன்னார் தனஸ்கோடிக்கு இடைப்பட்ட கப்பல் சேவையால் இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையிலான மக்கள் போக்குவரத்து அதிகரிக்கலாயின. மேலும் மன்னார், தலைமன்னார், பேசாலை, வங்காலை, விடத்தல்தீவு துறைமுகங்கள் சிறு வளர்ச்சி கண்டன.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும் மன்னார் மாவட்டம் சிறிதளவான அபிவிருத்தியையே கண்டுள்ளது. இன்றும் மன்னார் மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாகவே கருதப்படுகின்றது. மேலும் 30 ஆண்டு யுத்தத்தால் இம்மாவட்டம் பல்வேறு வழிகளால் பாதிக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் யுத்தத்தாலும், வாழ்வியல் நெருக்கடிகளாலும் இந்தியாவின் தமிழ் நாட்டுக்கு சென்றனர். 1991 இல் இம் மாவட்டத்தில் வாழ்ந்த முஸ்லீம் மக்கள் கட்டாய இடப்பெயர்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். மேலும் 2008 ஆம் ஆண்டு தொடங்கிய இறுதி யுத்தத்தில் குறிப்பாக மாந்தை பகுதி மக்கள் இடம்பெயர்வுக்குட்பட்டார்கள். தொகுத்து நோக்குகையில் மன்னார் மாவட்டம் முழுதும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 இல் இருந்து மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டு இருந்தாலும் இச்செயற்பாடுகள் இன்றும் முற்றுப் பெறவில்லை.

மன்னார் மாவட்டத்தின் குடித்தொகை இன்று 150,000 எட்டியுள்ளதென மாவட்டத் தரவுகள் குறிப்பிடுகின்றன. எனினும் நாடு தழுவிய நிலையில் எடுத்த 2012 குடிக்கணிப்புப்படியே இக்கட்டுரை எழுதப்படுகின்றது. இடம்பெயர்ந்த மக்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் திரும்பிக் கொண்டு இருப்பதால் மாவட்டக் குடித்தொகை புள்ளி விபரங்கள் தொடர்ச்சியாக மாற்றம் அடைந்து கொண்டு இருக்கின்றது என்பது உண்மை. மன்னார் மாவட்டத்தின் சரியான குடித்தரவுகளைப் பெற 2021 குடிக்கணிப்பு வரை காத்திருக்க வேண்டும். அட்டவணை I இல் மன்னார் மாவட்டத்தின் குடித்தொகையும், குடிக்கணிப்பு இடைய வேறுபாடுகள் எண்ணிக்கையிலும், விகிதத்திலும் 1871 - 2012க்கு இடைப்பட்ட காலத்திற்குக் காட்டப்பட்டுள்ளன.

## அட்டவணை I

| குடிக்கணிப்பு ஆண்டு | குடித்தொகை | குடிக்கணிப்பு இடைவேறுபாடு எண்ணில் | குடிக்கணிப்பு இடைவேறுபாடு விகிதத்தில் |
|---|---|---|---|
| 1871 | 20258 | - | - |
| 1881 | 21348 | + 1090 | + 5.38 |
| 1891 | 24511 | + 3163 | + 14.82 |
| 1901 | 24926 | + 415 | + 1.69 |
| 1911 | 25603 | + 677 | + 2.72 |
| 1921 | 25583 | - 20 | - 0.07 |
| 1931 | 25137 | + 446 | - 1.74 |
| 1946 | 31538 | + 6401 | + 25.46 |
| 1953 | 43689 | + 12151 | + 38.53 |
| 1963 | 60124 | + 16435 | + 37.62 |
| 1971 | 77882 | + 17758 | + 29.54 |
| 1981 | 106940 | + 29058 | + 37.31 |
| 2012 | 99570 | - 7370 | - 6.89 |

(மூலம்:- இலங்கைக் குடிக் கணிப்புக்கள் - 1871 - 2012)

1871 - 2012 க்கும் இடைப்பட்ட காலத்தில் 13 குடிக்கணப்புகள் இடம்பெற்றுள்ளன. இக்கணிப்புக்களுள் மூன்று குடிக் கணிப்புக்களுக்கு இடைப்பட்ட காலங்களில் குடித்தொகை குறைந்துள்ளது. 1946 க்கு முன்னர் குடித்தொகை அதிகரிப்பு மிகவும் குறைவாக இருந்துள்ளது. 1871 இல் 20258 இருந்த குடித்தொகை 1931 இல் 25137 ஆக மாத்திரமே அதிகரித்து இருந்தது. இந்த 60 வருடக்காலத்தில் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. இக் காலப்பகுதியில் உயர்வான பிறப்பு விகிதமும் உயர்வான இறப்பு விகிதமும் காணப்பட்டதுடன், குடியுள்வரவும் இங்கு இடம்பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1940 களுக்கு பிறகு மலேரியா கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாலும் உணவுப்பொருட்கள் பொது விநியோக முறையில் மக்களுக்கு கொடுக்கும் முறை நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டதால், மக்களின் பேசாக்கு நிலை மகிவும் உயர்ந்தது. மலேரியாக் கூட்டுப்பட்டாலும் பொது வைத்திய வசதிகள் மேம்மட்டதாலும் இறப்பு விகிதம் குறைடைந்ததுடன், பிறப்பு விகிதம் அதிகரித்தது. 1946 - 1981 இடைப்பட்ட காலத்தில் மாவட்டத்தின் குடித்தொகை 75, 402 பேரால் அல்லது 239% த் தால் அதிகரித்துள்ளது. 1981 இல் 106, 940 பேராக இருந்த மாவட்டக் குடித் தொகை 2012 இல் 99570 ஆக குறைந்திருந்தது. இதற்கு முக்கிய காரணங்கள் தமிழ் மக்களின் இடப்பெயர்வும், 1991 இல் முஸ்லிம்களின் கட்டாய இடப்பெயர்வு களாகும். தற்பொழுது மீள்குயேற்றம் ஏற்பட்டு கொண்டு இருப்பதால் குடித்தொகையில் துரித மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து குறிப்பாக புத்தளம் மாவட்டத்தில் தற்காலமாக குடியேறிய பொழுதும் மன்னார் மாவட்டத்திலேயே தங்கள் வாக்குரிமையை வைத்திருந்தனர். வட பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தங்கள் தங்கள் சொந்த இடத்தில் வாக்குரிமையை வைத்திருக்கும் வசதியை அரசாங்கம் செய்து கொடுத்ததுடன், இடம்பெயர்ந்து வாழ்ந்த இடங்களில் இவர்கள் தாங்கள் முன்னர் நிரந்தரமாக வாழ்ந்த மாவட்ட தேர்தல்களுக்கு இடம்பெயர்ந்த நிலையிலும் வாக்களிக்கும் வசதியைப் பெற்று இருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 2002 சதுர கிலோ மீற்றராகும். மாவட்டத்தில் குடியிடர்த்தி 2012 இல் சதுர கிலோ மீற்றருக்கு 50 பேராக இருந்தது. பிரதேச செயலக பிரிவு அடிப்படையில் மாவட்ட குடியடர்த்தி வேறுபடுவதை காண முடியும்.

## அட்டவணை II

| பிரதேச பிரிவு | செயலகப் பிரிவு பரப்பு ச.கி.மீ. | அடிப்படையில் குடித்தொகை | குடியடர்த்தி 2012 குடியடர்த்தி ச.கி.மீ. |
|---|---|---|---|
| மன்னார் தீவு | 226.88 | 5107.8 | 225 |
| நானாட்டான் | 129.25 | 17891 | 138 |
| முசலி | 474.22 | 8119 | 17 |
| மாந்தை மேற்கு | 658.90 | 14711 | 22 |
| மடு | 512.82 | 7711 | 15 |

(மூலம்:- இலங்கைக் குடிக்கணிப்பு 2012)

மாவட்டத்தில் மன்னார் பிரதேச செயலகப் பிரிவு குடியடர்த்தியையும், முசலி, மாந்தை மேற்கு, மடுப்பிரிவுகள் மிகக் குறைவான குடியடர்த்தியைக் கொண்டுள்ளன.

மன்னார் மாவட்டம் பல இனங்கள், மதப் பிரிவினர்கள் வாழும் இடமாகவுள்ளது. மாவட்டத்தின் இன விகிதாசாரம் 1963, 1971, 1981, 2012 ஆண்டுகள் பின்வருமாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை III

| இனம் | 1963 | | 1971 | | 1981 | | 2012 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 2620 | 4.35 | 3568 | 4.58 | 8710 | 8.14 | 2300 | 2.31 |
| தமிழர் | 40140 | 60.76 | 53353 | 68.50 | 68178 | 63.75 | 80791 | 81.14 |
| முஸ்லீம்கள் | 17260 | 28.68 | 20878 | 26.80 | 28464 | 26.81 | 16439 | 16.51 |
| ஏனையவர்கள் | 160 | .27 | 83 | .11 | 1524 | 1.43 | 30 | 0.03 |

1963, 1971, 1981, ஆண்டுகளில் தமிழர், முஸ்லீம்களின் இன விகிதாசாரங்களில் சிறு ஏற்ற இறக்கல்கள் காணப்படுகின்றன. 2012 இல் தமிழர் விகிதாசாரம் 81.14% மாக இருக்கின்ற பொழுதும் தற்பொழுது இடம்பெற்று வரும் மீள் குடியேற்றம் முற்றுப்பெறும் பொழுது தமிழர் விகிதாசாரம் குறைவடையும், முஸ்லீம் விகிதாசாரம் பழைய நிலைக்கு அல்லது சற்று அதற்கு மேல் செல்லலாம்.

சமய அடிப்படையில் மன்னார் மாவட்டத்தின் குடித்தொகை 1971, 1981, 2012 ஆம் ஆண்டுகளின் பின்வருமாறு

## அட்டவணை IV

| சமயப்பிரிவுகள் | 1971 | | 1981 | | 2012 | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணில் | விகித்தில் | எண்ணில் | விகிதத்தில் | எண்ணில் | விகி. |
| பௌத்தர்கள் | 2629 | 3.37 | 3224 | 3.01 | 1812 | 1.82 |
| இந்துக்கள் | 23278 | 29.89 | 28500 | 26.65 | 24026 | 24.12 |
| இஸ்லாம் | 21910 | 28.10 | 30079 | 28.13 | 16.509 | 16.58 |
| கத்தோலிக்கர் | 29476 | 37.85 | 44003 | 41.15 | 52414 | 52.61 |
| கிறிஸ்தவர்கள் | 524 | .67 | 995 | 0.93 | 4789 | 4.81 |
| ஏனையோர் | 64 | .08 | 139 | 0.13 | 20 | .02 |

(மூலம்:- இலங்கை குடித் தொகை கணிப்புகள் - 1971,1981,2012)

இந்த மாவட்டத்தில் பல மதத்தவர்களும் வாழ்ந்த பொழுதும் எந்த ஒரு மதப்பிரிவினரும் பெரும்பான்மையாக இருக்கவில்லை. 2012 இல் கத்தோலிக்கர் கள் 52.64% மாக இருப்பினும் இந்நிலை தற்காலிகமானதேயாகும். கத்தோலிக்க மதத்திற்கு அடுத்து இஸ்லாமும், இந்துமதமும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. 1981 இல் இஸ்லாம் மதத்தவர் 28.31% மாக இருந்துள்ள பொழுது 2012 இவர்களின் விகிதம் 16.58% மாகக் குறைந்துள்ளது. மீள் குடியேற்றம் முற்றுப் பெறும் பொழுது இஸ்லாம் மதத்தவர் விகிதம் பழைய நிலைக்கு மேல் செல்லும் என எதிர்பார்க்கலாம். 2012 இல் இந்துக்களின் விகிதம் 1981 இல் இருந்த விகிதத்திலும் சற்று குறைவடைந்ததற்குக் காரணம் மீள் குடியேற்றம் முற்று பெறாதேயாகும். மன்னார் மாவட்டத்தில் இருந்து இந்தியாவுக்கு இடம் பெயர்ந்தவர்களில் அதி கூடிய எண்ணிக்கையினர் இந்துக்களாகும். மேலும் இந்துக்களில் சிறு தொகையினர் கிறிஸ்தவத்திற்கும் மாறியுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 1981 இல் மாவட்டம் குடித்தொகை 0.93% இருந்த கிறிஸ்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் விகிதாசாரம் 4.81% மாக அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்புக்கு முக்கிய காரணம் உரோமன் கத்தோலிக்க மத்தில் இருந்தும், இந்து மதத்தில் இருந்தும் ஒரு பிரிவினர் கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாறியதாலேயே இவ்வதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கிறிஸ்தவ சமயத்துக்குள் பல பிரிவுகள் இருக்கின்றன. பிரிவுகள் அடிப்படையில் மதத்தரவுகள் பெறுவது கடினம். எனினும் பழைய கிறிஸ்தவ பிரிவுகளிலும் பார்க்க புதிய பிரிவுகள் கூடுதலான மக்களை கவர்ந்துள்ளதெனக் காணமுடிகிறது.

மன்னார் மாவட்டத்தில் பல சமயங்கள் காணப்படினும் சிறு சிறு சமயப் பூசல்களைத் தவிர சமய ரீதியில் பெரிய முரண்பாடுகள் காணப்படுவதில்லை. மன்னார் கத்தோலிக்க மறைமாவட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் மாவட்டக் கத்தோலிக்கர்கள் வலுப்பெற்றுள்ளனர். மடு மாதா தேவாலயம் இம் மாவட்டத்திற்குள் இருப்பது கத்தோலிக்க மக்களுக்கு பெரிய சக்தியைக் கொடுக்கின்றது. திருகேதீஸ்வர ஆலயப்புனரமைப்பு இந்துக்களுக்கு மன நிறைவை கொடுக்கின்ற பொழுதும் மாவட்ட அரசியல் ஏனைய மதத்தவர் களுக்கு இருக்கும் அரசியல் பாதுகாப்பு இந்து மக்களுக்கு இல்லை என்பது இவர்கள் கவலை. மேலும் இந்து சமய கூட்டமைப்பில் நிறுவனப் பாதுகாப்பு இன்மையால் இவர்களது நலன் சரியான முறையில் கவனிக்கப்படுவதில்லை என்பது இந்துக்களின் கவலையாகும். கத்தோலிக்க, இஸ்லாமிய, பௌத்த மக்களுக்கு கிடைக்கும் வசதி வாய்ப்புக்கள் தங்களுக்கு கிடைப்பதில்லை என்பது மன்னார் இந்துக்களின் ஆதங்கமாகும்.

மன்னார் மாவட்டம் குறைந்த குடித்தொகையைக் கொண்டு இருக்கின்ற பொழுதும், மன்னார் நகர், மாவட்டக் குடித்தொகையிலும், வர்த்தகம், சேவைத் துறைகளிலும் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இந்நகரின் குடித்தொகையும், குடிக் கணிப்பு இடை வேறுபாடுகள் எண்ணிலும், விகிதத்திலும் பின்வருமாறு

**அட்டவணை V**

| ஆண்டு | குடித்தொகை | குடிகணிப்பு இடை வேறுபாடு எண்ணில் | குடிக்கணிப்பு இடை வேறுபாடு விகிதத்தில் |
|---|---|---|---|
| 1901 | 5332 | - | - |
| 1911 | 3777 | - 1555 | - 41.07 |
| 1921 | 3705 | - 72 | - 1.9 |
| 1931 | 4084 | + 379 | + 10.23 |
| 1946 | 5190 | + 1106 | + 27.08 |
| 1953 | 7062 | + 1872 | + 36.06 |
| 1963 | 8988 | + 1926 | + 27.27 |
| 1971 | 11157 | + 2169 | + 24.13 |
| 1981 | 14469 | + 3312 | + 29.68 |
| 2012 | 25829 | + 11360 | + 78.71 |

(மூலம்:- இலங்கை குடிக் கணிப்புகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1901 இல் இலங்கையில் 28 நகரங்களாக இருந்த நகரங்களில் மன்னாரும் ஒன்றாகும். அன்று இந்நகர் Sanitany Board அந்தஸ்தைப் பெற்று இருந்தது. மன்னார் நகரம் மாவட்ட நிர்வாகமையமாகவும், நீதிமன்றத்தைக் கொண்டு இருந்ததும், மற்றும் வர்த்தக சேவைகள் இடம்பெற்றதால் சிறு நகரமாகக் கணிக்கப்பட்டது. 1947 - 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இது ஒரு பட்டணசபையாக இருந்தது. இதன் பின்னர் பிரதேச சபையாகத் தரம் குறைக்கப்பட்டு, நீண்ட போராட்டத்தின் மூலம் தற்பொழுது நகர சபையாகச் செயல்படுகின்றது. இன்று துடிப்பான சிறு நகரமாகச் செயற்படுகின்றது.

இம்மாவட்டத்தின் பண்பாட்டுக் கோலங்களை நோக்கின் இது நீண்ட காலமாக வளர்ச்சி குறைந்த மாற்றங்களுக்கு உட்படாத பிரதேசமாக இருந்து வந்துள்ளது. இந்தியாவுக்கு அண்மையில் இடவமைவு பெற்று இருப்பதால் தமிழகத்தின் செல்வாக்கு கூடுதலாக இருந்து வருகின்றது. மேலும் போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிகளால் ஏற்பட்ட தாக்கங்களை இங்கு காணலாம். மேலும் 30 வருட யுத்தம், பலவகைப்பட்ட இடப்பெயர்வுகள் ஏற்படுத்திய தாக்கங்கள் மன்னார் மாவட்டத்தைப் பெரிதும் பாதித்துள்ளன. இம்மாற்றங்களை பொருள் சார் பண்பாடு, பொருள் சாரா பண்பாடு என வேறு படுத்தியும் பார்க்கலாம்.

மன்னார் மாவட்டத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு வளர்ச்சி குறைந்ததொரு நிலையில் காணப்படு வதுடன் ஒரு சிறு பிரிவினரைவிட ஏனையோர் மீன்பிடியிலும், விவசாயத்திலும் ஈடுபட்டுள்ளனர். விவசாயத்தில் நெற்செய்கையே முக்கியத்தும் பெற்றுள்ளது. மன்னார் நகரிலும் கூட மீன்பிடியே முக்கிய தொழிலாகவுள்ளது. யுத்தத்தாலும், இடப்பெயர்வாலும் மன்னார் கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. முஸ்லீம் சிலமைல்களும், பெருநிலப்பரப்பு தமிழ் கிராமங்கள் சிலவும் பெரும் பாதிப்புக் குள்ளாயின. இன்று மீளக் குடியேறும் மக்களுக்கு அரசு சிறிய கல்வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்றது. முஸ்லீம் நாடுகளில் உதவியுடன் பெருமளவு கல்வீடுகள் முஸ்லீம் மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்று எல்லா வீடுகளும் மின்சார வசதியைப் பெற்றுள்ளதால் தொலைகாட்சி பெட்டிகள் மற்றும் பல மின்சார உபகரணங்களை பெரும்பாலான குடும்பங்கள் கொண்டு ள்ளன. கையடக்க தொலைபேசி இன்று யாவரிடமும் உண்டு. மோட்டார் சைக்கிள் பாவனை இன்று மிகப் பரவலாகப் பாவனையில் உண்டு. மன்னார் மாவட்டக் கிராமங்கள் மன்னார் நகருடனும் மற்றும் பெரிய நகரங்களுடன் இன்று நன்கு இணைக்கப்பட்டுள்ளன. விவசாயத்திலும், மீன்பிடியிலும் இயந்திரப் பாவனை பல நிலைகளில் பயன்படுத்தப்படுகின்றது. பொருளாதார நடவடிக்கைகளில் பழைய முறைகள் பல கைவிடப்பட்டு புதிய முறைகள் புகுத்தப்பட்டு வருவதைக் காணலாம். மக்கள், ஆண், பெண், இளைஞர்கள், சிறுபிள்ளைகள் முன்னரிலும் பார்க்க நல்ல உடை அணிகின்றனர். கணணிப் பாவனை மிகமிக உயர்வாகும். உணவு முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளன. முன்னர் மதியம், இரவு என இரண்டு நேரமும் சோறும் கறியும் உண்ட மக்கள் இன்று இரவு சாப்பாடு பல காரங்களான இடியப்பம், புட்டு, தோசை போன்றன முக்கியம் பெற்று வருவதைக் காணலாம். சகல நிலைகளில் நகரமயமாக்கல் இடம்பெற்றுவருவதைக் காணலாம். மன்னார் மக்களின் வாழ்க்கைத்தரம், உணவு, உடை, வீடு, மற்றும் வாழ்கைப் பொருட்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள தையும் காணமுடிகின்றது.

மன்னார் மாவட்டம் பொதுவாகக் கிராம மக்களைக் கொண்டது. மன்னார் நகரில் வாழும் மக்களும் கூடுதலாகக் கிராமிய பண்பாட்டை உடையவர்கள். இதனால் இவர்கள் குடும்பம், உறவினர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுகத்துடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டுள்ளனர். யுத்தத்தாலும், இடப்பெயர்வுகளாலும் குடும்பம் மற்றும் உறவினர்களுடையே இருந்த உறவுகள் பெரும் பாதிப்புக்குள்ளான போதும் தொலைத்தொடர்பில் ஏற்பட்ட முன்னேற்றம் பரவலாக இடம்பெயர்ந்து வாழும் மக்களிடையேயும் உறவைத் தக்க வைக்க முடிந்துள்ளது. எனினும் யுத்தத்தாலும், இடம்பெயர்வாலும் முன்னர் இருந்த சமுக கட்டமைவு பெருமளவு குறைந்துள்ளது.

மன்னார் மாவட்டம் பல இன, மத, மக்களைக் கொண்டது. இதனால் இம் மாவட்டம் பண்பாட்டு பல தன்மை கொண்டது. இவற்றுள் இன, மத குழுக்கள் தமக்கேயுரிய பண்பாட்டு விழுமியங்கள், நியமங்கள், நம்பிக்கைகள், குறியீடுகள் தவிர்ப்புக்களைக் கொண்டுள்ளன. தமிழரும் முஸ்லீம்களும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். ஆனால் பண்பாட்டு நிலையில் வேறுபாடுகளைக் கொண்டவர்கள். இது போல கத்தோலிக்கர் களும் இந்துக்களும் தமிழ் பண்பாட்டுக்கு உட்பட்டவர்களாக இருந்தாலும் சமயம் சார்ந்த நிலைப்பாடுகளில் வெவ்வேறு நிலைப்பாடுகள் கொண்டவர்கள். சிங்களவர்கள் மொழியால் வேறுபட்டவர் களாக இருப்பினும், இவர்களில் பெரும்பான்மையினர் கத்தோலிக்கர்களாக இருப்பதால் தமிழ் கத்தோலிக்கருடன் மதத்தால் ஒன்றுபட்டவர்களாக இருக்கின்றார்கள்.

ஒவ்வொரு இன, சமய பிரிவினரின் விழாக்கள், கொண்டாட்டங்கள், சடங்குகள், பழக்க வழக்கங்கள் வேறுபட்டனவாக இருக்கின்றன. பலவகை விழாக்கள்', சடங்குகள் மாவட்ட கலாசார பண்பாட்டு கோலங்களை அழகு செய்கின்றன.

விவசாயம், மீன்பிடி, சமுகங்களினதும், கிராம - நகர பண்பாட்டு கோலங்கள் வேறுபடுவதைக் காணலாம். பேசாலை, வங்காலை, பள்ளிமுனை போன்ற மீன்பிடி கத்தோலிக்க கிராமங்கள், தனிச்சிறப்பான பண்பாடுகளைக் கொண்டுள்ளன. இங்கு போர்த்துக்கேசரின் பண்பாட்டு எச்சங்கள் சிலவற்றை இன்று இங்கு காணமுடிகின்றது. நாட்டுகூத்து, கலை, இலக்கிய ரசனை இங்கு அதிகமாக காணப்படுகின்றது. இக்கிராமங்களில் மிகவும் ஒழுங்மைந்த நாட்டுக்கூத்துப் பாரம்பரியம் காணப்படுகின்றது. நாட்டுக் கூத்து மன்னார் பண்பாட்டில் முக்கிய இடத்தை பெற்றுள்ளதுடன், தனித்துவமான பண்புகளையும் கொண்டுள்ளது.

இம்மாவட்டத்தின் பண்பாட்டுக் கோலத்தில் முஸ்லீம்களின் பங்களிப்பும் முக்கியமானதாகும். இலங்கையில் 1980க்குப் பின்னர் முஸ்லீம்கள் தங்கள் சமய விழுமியங்களை இறுகக் கடைப்பிடிப்பதைக் காணலாம். குறிப்பாக முஸ்லீம் பெண்கள் தங்கள் மார்க்க விழுமியங்களுக்கு ஏற்ப பர்தா அணிவது பொதுநியதியாக வந்துள்ளது.

மன்னார் மாவட்ட பாடசாலைகளில் தமிழ் மொழி மூலமே கற்றல், கற்பித்தல் இடம்பெறுகின்றது. இப்பாடசாலைகள் கத்தோலிக்க, முஸ்லிம், இந்து, சமயப்பிள்ளைகளை கொண்டுள்ளன. அநேகமான பாடசாலைகள் சமயம் சார்ந்த பாடசாலைகளாக இருக்கின்றன. பாடசாலைகள் சமயக் கல்வியையும், சமயம் சார் விழுமியங்களையும் பாடசாலை மாணவர்களுக்கு கொடுக்கின்றன. இம்மாவட்டத்தின் கல்வி நிலையை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கு பரவலாகக் காணப்படுகின்றது. மேலும் இம்மாவட்டத்தில் மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனம் ஒன்று இல்லை என்பது மாவட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு பெரும் கவலைதரும் விடயமாக இருக்கின்றது.

பொருள் சார் பண்பாடு, பொருள் சார் பண்பாட்டு நிலைகளில் மன்னார் மாவட்டம் குறுகிய காலத்தில் நல்ல மாற்றங்களைக் கண்டு வருகின்றது. குடும்பம் சமயம், மொழி, கல்வி, பொருளாதாரம், அரசியல் என்று நோக்கும் பொழுது மன்னாரில் பல்லினத் தன்மையைக் காணமுடிகின்றது. இது மிக அழகாக இருக்கின்றது. இவ்வழகின் நிலை போற்றத்தன்மை மக்களின் ஒற்றுமையிலும், ஒவ்வொருவரும் தன் பண்பாட்டை பேணுவதுடன் பிறர் பண்பாட்டை மதிப்பதிலுமே தங்கியுள்ளது. மன்னார் மாவட்ட சகல மக்களும் ஒற்றுமையாக வாழ்வார்களாயின் மன்னாரின் பல்லினப் பண்பாட்டு அழகு நிலைத்து நிற்கும்.

---






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையோடு இணைந்து வாழ்வோம்...

Dr. Mrs. Himalatha Rajeswaran
B.A (Hons), M.Phil(Geo), Ph.D
District Office - Mannar

இயற்கை அன்னையின் பார்வையில் உயிர்களிடத்தில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. மனிதர்களைப் போன்றே புற்களும் புழுக்களும் அவள் பிள்ளைகள் தாம். உயிரிகளின் வலைப்பின்னலில் சக உயிரினங்களைப் போன்றே மனித இனமும் ஓர் இழை. அதற்கு அப்பால் மனிதனுக்கு இந்தப் பூவுலகில் வேறு எந்த தனியான சிறப்புரிமையும் இல்லை. ஆனால் நாங்கள் இயற்கை எமக்கு அடிமை கொள்ளத் தக்கது. அதன் வளங்கள் யாவும் எமக்கானவையே என்ற சிந்தனையை எம்மில் வளர்த்துக்கொண்டுள்ளோம். இதனால் இயற்கை வளங்களைச் சக உயிரினங்களுக்குப் பங்கு வைக்கமால் முழுமையாகத் தின்று தீர்க்கத்தலைப்பட்டிருக்கின்றோம். பூமியை எமக்கான ஒரு கிரகமாகத் துப்பரவு செய்ய முயன்று வருகின்றோம்.

இயற்கை வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டு வாயுவுக்கென்று விதித்து வைத்திருக்கும் அளவு எல்லை 0.03 சதவீதம். நாம் இந்த எல்லையையும் கடந்து வளிமண்டலத்துள் காபனீரொட்சைட்டு வாயுவைக் குவித்துக் கொண்டிருக்கின்றோம். பெற்றோலிய எரிபொருட்களில் இயங்கும் மோட்டார் வாயுவைக் குவித்துக் கொண்டிருக்கின்றோம். பெற்றோலிய எரிபொருட்களில் இயங்கும் மோட்டார் வாகனங்களினதும், தொழிற்சாலைகளினதும் புகைபோக்கிகள் வளிக்குள் தள்ளிக்கொண்டிருக்கும் கரிக்காபனீரொக்சைட்டு வாயுவின் அளவு நாளும் நாள் அதிகரித்தவாறு உள்ளது. வளி மண்டலத்தினுள் படைபோலத் திரளும் காபனீரொட்சைட்டு பூமியில் மிகப்பெரும் சூழற் பேரனர்த்தத்திற்கு வித்திட்டு வருகிறது.

இயற்கையால் மீளவும் புதுப்பிக்க இயலாத சக்தி மூலகங்ளான பெற்றோலிய எரிபொருட்களின் பயன்பாடு அதிகரிக்க அதிகரிக்கக் காற்று மாசுபடும் அதிகரித்து வருகின்றது. உலகின் எந்தப் பெருநகரங்களிலும் சுவாசிக்கச் சுத்தமான காற்று இல்லை. ஆண்டுதோறும் வாகன விபத்துக்களினால் உலகில் இறப்பவர்களின் எண்ணிக்கையை விட வாகனப்புகை வளியை மாசு தொடர்பான சுவாச நோய்களால் ஆண்டு தோறும் 7 ஆயிரத்துக்கும் அதிகமானதோர் பலியாகி வருகிறார்கள். இயற்கை தன் உயிரினங்களுக்கு வழங்கிய மிகப்பெரும் கொடை தண்ணீர் தவிர்த்துவிட்டு, பணம் கொடுத்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புட்டி நீரை பருகுமளவுக்கு நாம் நீரை மாசுறுத்தி வருகிறோம். உயிரினங்களாயினும் தொழில் ஆலைகளாயினும் கழிவுகளை எச்சமிடுவது இயற்கையின் தவிர்க்க இயலாத நியதி. ஆனால் உயிரினக் கழிவுகளை எருக்களாகவும் உயிர்வாயு மூலங்களாகவும் பயன்படுத்தத் தெரிந்த நாம், ஆலைக் கழிவுகளை மட்டும் பயன்படுத்தும் வழிமுறை தெரியாமல் நீர் மூலங்களுக்கு அனுப்பி வருகிறோம். உரிய பரிகரிப்புகள் செய்யப்படாது வெளியேறும் கழிவுகள் ஏற்படுத்தும் நீர் மாசல் உலகில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தூய குடிநீரைப் பெற இயலாது குழந்தைகள் தினமும் இறந்து வருகிறார்கள்.

இயற்கைப் பசளைகளான மாட்டெருவும் பசுந்தழையும் நமது வயல் நிலங்களில் இன்று அதிகம் வரவேற்கப் படுவதில்லை. துரித வளர்ச்சியும் அதிக விளைச்சலும் வேண்டிச் செயற்கை உரங்களால் மண்ணைச் சாகடித்து வருகின்றோம். பாரம்பரிய பயிர் விதைகள் கையிருப்பில் இல்லை. இயற்கைக்கு முரணாக இனக்கலப்புச் செய்த மரபணு மாற்றிய பயிர்களின் ஆதிக்கம் ஆரம்பமாகியுள்ளது. உடன் சமைத்த இயற்கை உணவும் வாய்க்கு எட்டுவதாக இல்லை. செயற்கை சுவையூட்டிகளும் நிறமூட்டிகளும், பதனச்சரங்குகளும் சேர்க்கப்பட்ட உறை உணவுகளுக்கு நாளைப் பழக்கப்படுத்திக்கொண்டோம். அன்றாட வாழ்வின் நகர்வுகளிற்கூட இயற்கையை விட்டு நாம் வெகுவாக விலகிச் சென்று விட்டோம் என்பதற்கு இவை சில உதாரணங்கள்தான். இந்தப் பட்டியல் முடிவில்லாதது.

தேசிய சுற்றாடல் சட்டத்தின் மூலமாக இந்நாட்டின் சுற்றாடலைப் பேணுவதற்காக செய்யப்பட்டுள்ள சட்டபூர்வ ஏற்பாடுகளுக்கிணங்க எவ்விதத்திலேனும் சுற்றாடலுக்கு சேதம் விளைவிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சட்டக்கூறு நடவடிக்கை எடுத்து வருகின்றனது. பல்வேறு கைத்தொழில் செயற்பாடுகளினால் இயற்கைச் சூழலுக்கு மாத்திரமின்றி மானிடச் சூழலுக்கும் ஏற்படுகின்ற பலவிதமான சேத நிலைமைகளின் காரணமாக ஏற்கனவே பல்வேறு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நாட்டின் சுற்றாடல் பேணலுக்கான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கமுடைய தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் இவ்விதமாக தொடர்ச்சியான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுற்றாடல் பாதுகாப்பு வேலைத் திட்டத்தில் பல்வேறு அளவிலான கைத்தொழில்களுக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அவை பேணிவரப்பட வேண்டிய சுற்றாடல் நேயமுள்ள வழிமுறைகள் அறிமுகஞ் செய்யப் பட்டுள்ளன. உரிய செல்லுபடியாகும் கால இறுதியில் உரிமங்களை விநோகிக்கும் போது இத்தகைய கைத்தொழில் செயற்பாடொன்று பேணிவர வேண்டிய வழிமுறைகள் அறிமுகஞ் செய்யப்பட்டு ஏதெனுமொரு சட்டபூர்வ ஆவணம் வழங்கப்படும் அது சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (Environmental Protection Licence) எனப்படும். நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடு பல்வேறு துறைகளினூடாக அமுலாக்கப்படுகின்ற வேளையில் அந்தந்த துறைகளைச் சார்ந்த கைத்தொழில் செயற்பாடுகளும் பரவலாகின்றமை எதிர்ப்பார்க்கப்பட்டதாகும். பாரிய அளவிலான கைத்தொழில்களைப் போன்றே சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்தமையை இலங்கையில் அண்மைக்கால வரலாற்றில் நாம் அனுபவவாயிலாகக் கண்டுள்ளோம். அத்துடன் மனைசார் மட்டத்தில் சுயதொழில் ரீதியாக அல்லது மரபுரீதியாகப் பேணிவருகின்ற ஒருசில சிறிய அளவிலான கைத்தொழில் செயற்பாடுகளினால் இயற்கை மற்றும் மானிடச் சூழலுக்கு ஓரளவு பாதகமான நிலைமைகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. மனைசார் மட்டத்தில் பேணி வரப்படுகின்ற கோழிப்பண்ணை முதல் மிகப்பெரிய அளவிலான விலங்குப் பண்ணை வரையிலோ அல்லது சிறிய அளவிலான வெட்டுமரம் அரியும் கருவி முதல் பாரிய அளவிலான மின்பிறப்பாக்கி கருவி வரை சுற்றாடலுக்கு ஏதேனும் பாதகமான தாக்கங்கள் ஏற்படுகின்றன. எனவே கைத்தொழில் நிலையங்களின் செயற்பாட்டினால் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காதவகையில் பேணிவர வேண்டிய விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் வழங்கப்படும். அவையாவன

**நிபந்தனைகளின் ஒழுங்குகள்:**

1. இரைச்சல் கட்டுப்பாடு தோடர்பான நிபந்தனைகள்.
2. திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான நிபந்தனைகள்.
3. கழிவு நீர் முககாமைத்துவம் தொடர்பான நிபந்தனைகள்.
4. பொலித்தீன் பாவனைக் கட்டுப்பாடு தொடர்பான நிபந்தனைகள்.
5. வாயுக்களின் வெளிறேற்றம் தொடர்பான நிபந்தனைகள்.
6. உற்பத்தி நடவடிக்கைகளின் போது உருவாகும் பூமி அதிர்வு கட்டுப்பாடு தொடர்பான நிபந்தனைகள்.
7. தொழிற்சாலை நடவடிக்கைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பான நிபந்தனைகள்.
8. தொழிற்சாலை நடவடிக்கைகள் தொடர்பான நிபந்தனைகள்.

**1. இரைச்சல் கட்டுப்பாடு தொடர்பான நிபந்தனைகள்:**

தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளபடும் போது தொழிற்சாலையின் எல்லையில் சத்தமட்டமானது பகல் நேரத்தில் (6.00 மணிக்கும் 18.00 மணிக்கும் இடையில்) 55 DB (A) இல் அல்லது அதற்கு குறைவாகப் பேணப்பட வேண்டும். இரவு வேளையில் (18.00 மணியிலிருந்து 6.00 மணி வரை) 45 BD (A) இல் அல்லது அதற்கு குறைவாக பேணப்படல் வேண்டும். இயன்றவரை இரவு வேளைகளில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளா திருப்பது சிறந்ததாகும்.

மேற்படி நிபந்தனைகளில் தொடர்புடைய சத்த மட்டங்கள் தொழிற்சாலை அமைந்திருக்கும் வலயம் அல்லது பிரதேசத்திற்கேற்ப மாறுபடும். அதன்படி சத்தமட்டங்களுக்கு எதிரே உள்ள இடைவேளியில் பொருத்தமான சத்தமட்ட அளவினை இடவேண்டும் பொருத்தமான சத்தமட்ட அளவு 924/12 இல. 1996.05.23 ஆம் இலக்க திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள 1966 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சூழல் சத்தக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கேற்ப குறிப்பிடப்பட வேண்டும்.

ஏதாவது தொழிற்சாலைக்கு அல்லது நடவடிக்கைகளுக்கு காணியின் எல்லைகளில் அனுமதிக்க ஆகக்கூடிய சத்தமட்டங்கள் பின்வரும் அட்டவனை தரப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கத்தக்க சத்தமட்டங்கள்

| இடப்புரப்பு | பகல் வேளை | இரவு வேளை |
|---|---|---|
| குறைந்த சப்தம் (பிரதேச சபை எல்லைகள்) | 55 | 45 |
| நடுத்தர சப்தம் (மாநகர சபை எல்லைகள்) | 63* | 50 |
| உயர் சப்தம் (நகர கைத்தொழில் இடப்பரப்பு) | 70 | 60 |
| அமைதி வலயம் (நீதிமன்றம், வைத்தியசாலை, பொது நூலகம், பாடசாலை, புனித இடப்பரப்புகள், பொழுதுபோக்கு அல்லது சூழல் நோக்கங்களுக்கான எல்லையிருந்து 100 மீட்டர் பிரதேசம் | 50 | 45 |

**2. திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான நிபந்தனைகள்**

தொழிற்சாலை உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது வெளியேற்றப்படும் திண்மக்கழிவுகள்

- தொழிற்சாலை செயற்பாட்டினால் உருவாக்கப்படும் எல்லா திண்மக் கழிவுளும் நீர் நிலைகளிலோ அல்லது நீர் நிலைகளுக்கு இட்டுச் செல்லும் இடங்களிலோ கொட்டக் கூடாது.

- திண்மக்கழிவுகள் திறந்த வெளிகள் தொழிற்சாலை எல்லைக்குள் குவித்து வைக்கக்கூடாது.

- திண்மக்கழிவுகள் எச்சூழ்நிலையிலும் திறந்தவெளியில் எரிக்கப்படக் கூடாது.

- திண்மக்கழிவுகள் எரித்தல் கேடானதாக இருந்தால் இது நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட எரியூட்டியில் எரிக்கப்பட வேண்டும். புகைக்கூட்டின் உயரமானது நிலமட்டத்திலிருந்து குறைந்தது 30 அடியாக இருக்க வேண்டும். அங்கு குடிமனைசார் கட்டிடம் இருந்தால் புகை கூட்டின் உயரம் அக் கட்டிடத்தின் கூரைக்கு மேலானதாக இருக்க வேண்டும்.

- தூசு அல்லது துகள்கள் பறப்பதினால் பொதுமக்களுக்கு இடையூறு ஏதாவது இருந்தால் அல்லது இதற்கு எதிராக பொதுமக்களின் முறைப்பாடுகள் இருந்தால் வாயுமாசுக்களை கட்டுப்படுத்தும் பொறியை அமைக்குமாறு மற்றும் அங்கீகரிக்கப் பட்ட ஆலோசகரை, நிபுணரை கலந்தாலோசித்து வாயுவின் தரத்தை அளக்குமாறு உரிமையாளருக்கு ஆலோசனை வழங்கப்படலாம்.

- திண்மக்கழிவுகள் உருவாக்கப்படும் இடத்திலே பிரித்தெடுக்கப்படும் மீளுற்பத்திகோ, மீள்சுழற்சிகோ பயன்படுத்தப்படவேண்டும்.

- திண்மக்கழிவுகள் தொழிற்சாலையை விட்டு வெளியகற்றுவதாயின் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முன் அனுமதியுடன் சுற்றாடலுக்கு நேயமான முறையில் அகற்றப்பட வேண்டும்.

முறையான திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு மேலான நடைமுறைச் சாத்தியமான நிபந்தனைகளும் சேர்த்துக் கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரணம்:**
உணவு தயாரிப்பு தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் திண்மக் கழிவுகள் பொருத்தமான முறையில் விலங்கு பண்ணைகளுக்கு உணவாக அனுப்பட வேண்டும்.

சேதனத் திண்மக்கழிவுகள் (விலங்குக் கழிவுகள், தாவரக்கழிவுகள்) ஒழுங்காக வடிவமைக்கப்பட்டு கூட்டுரம் தயாரிப்பதற்கு அனுப்பப்பட வேண்டும்.

விலங்குத் திரவக்கழிவுகள் ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட உயிர்வாயு தொகுதிக்கு அனுப்பப்பட வேண்டும்.

சேதனக் கழிவுகள் விவசாயப்பண்ணைக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

உயிர்வாயுத் தொகுதியிலிருந்து வெளியேற்றப்படும் திரவக்கழிவுகள் சுத்திகரிக்கப்பட்டு தேசிய சுற்றாடல் சட்டத்தின் தர நிர்ணயங்களுக்கமைவாக வெளிவிடப்பட வேண்டும்.

எல்லா சாத்தியமான சந்தர்ப்பங்களிலும் திண்மக்கழிவுகளை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இவை தொடர்பான திட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

### 3. கழிவு நீர் முகாமைத்துவம் தொடர்பான நிபந்தனைகள்

தொழிற்சாலை நடவடிக்கை மூலம் வெளியேற்றப்படும் கழிவுநீர் அதன் அளவு மற்றும் இறுதிக் கழிவகற்றும் இடம் என்பவை வெளியேற்றப்படும் கழிவுக்கான இசைவு எல்லைகளை தீர்மானிக்கப் பயன்படும். தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுத்தீகரிக்கப் பட்டு மத்தய சுற்றடல் அதிகாரசபையின் தொழில்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுவதற்கான நியமங்களுக்கமைவாக வெளியேற்றப்பட வேண்டும். வீட்டுமனைசார் நடவடிக்கை தொடர்பான கழிவுநீர் ஒழுங்காக வடிவமைக்கப்பட கழீவுநீர் தொட்டிக்கு அனுப்பப்பட வேண்டும். 2008.02.01 திகதி இலக்கம் 1534/18 வர்த்தமானி அறிவித்தலின்படி தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்று வதற்கான நான்கு வகையான பொதுவான நிபந்தனைகள்.

1. உள்நாட்டு மேற்பரப்பு நீர் நிலைகளுக்குள் தொழிற்சாலை கழிவுநீரை வெளியேற்றுவதற்கான பொதுவான நிபந்தனை.

2. நீர்ப்பாசன நோக்கத்திற்காக காணி மீது தொழிற்சாலை கழீவுநீரை வெளியேற்று வதற்கான பொதுவான நிபந்தனை.

3. கரையோர இடப்பரப்புக்களுக்கு வெளியேற்றப்படும் கைத்தொழில்சார் மற்றும் வீட்டுமனை சார் கழிவுகளுக்காக இசையமைவு எல்லை.

4. மத்திய பரிகரிப்பு தொகுதியில் இருந்து பொது கால்வாய்களுக்குள் தொழிற் சாலைக் கழிவுநீரை வெளியேற்றுவதற்கான பொதுவான நிபந்தனை.

- தொழிற்சாலை செயற்பாட்டினாலிருந்து உருவாக்கப்படும் எல்லா கழிவு நீர் (போத்தல் கழுவும் நீர் அடங்கலாக) வெளியேற்றப் படுவதற்கு முன் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விதந் துரைக்கப்பட்டுள்ள இசைவமைவு எல்லைக்குட்பட்டதா என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

- வீட்டு மனைசார் நடவடிக்கை மூலம் உருவாக்கப்படும் கழிவு நீரானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட ஒரு வடிகட்டும் தொட்டி, அகத்துறிஞ்சும் குழியினுள் விடப்பட வேண்டும்.

- உணவகங்கள் மற்றும் உணவருந்துமிடங்களுக்கு அருகில் வாழும் மக்களின் அசௌகரியங் களை குறைக்கும் வகையில் மேற்படி நிலையங்களினால் உருவாக்கப்படும் கழிவு நீரை அகத்துறிஞ்சும் குழிகளுக்கு வெளியேற்றப்பட வேண்டும்.

- உணவகங்கள் மற்றும் உணவருந்திடங்களில் இருந்து உருவாகும் கழிவு நீரை அகத்துறிஞ்சும் குழிக்குள் வெளியேற்றப்படுவதற்கு முன் கழிவு நீரிலுள்ள துணிக்கைகளை அகற்ற ஒரு திரை வடிகட்டி பயன்படுத்த வேண்டும்.

- சமையல் அறை மற்றும் நல்ல முறையில் உணவருந்துமிடங்களில் உருவாகும் கழிவு நீரிலுள்ள எண்ணெயை அகற்ற நல்ல முறையில் வடிவமைக்கப்பட்ட எண்ணெய் வேறாக்கி அமைக்கப்பட வேண்டும். இவ் எண்ணெய் வேறாக்கி எல்லா நேரத்திலும் நன்றாக தொழிற்படக் கூடியவாறு பராமரிக்கப்பட வேண்டும்.

- அவசரமான வேலைகள் மற்றும் அகத்துறிஞ்சும் குழியை புதுப்பிக்கும் வேளைகளில் பயன்படுத்த மேலதிகமாக ஒரு அகத்துறிஞ்சும் குழி அமைக்கப்பட வேண்டும். மேலதிக அகத்துறிஞ்சும் குழிக்கு எல்லா கழிவுவாய்க்கால்களும் இணைக்கக் கூடியவாறான ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளின் தன்மைக்கமைவாக மூன்று வகையான இசையமைவு எல்லை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

1. இறப்பர் தொழிற்சாலைகளிலிந்து உள்நாட்டு மேற்பரப்பு நீருக்குள் வெளியேற்றப்படும் கழிவுகளுக்கான இசையமைவு எல்லை.
2. ஆடைக் கைத்தொழிற்சாலைகளிலிருந்து உள்நாட்டு மேற்பரப்பு நீருக்குள் வெளியேற்றப்படும் கழிவுகளுக்கான இசையமைவு எல்லை.
3. தோல் பதனிடும் கைத்தொழிற்சாலைகளிலிருந்து உள்நாட்டு மேற்பரப்பு நீருக்குள் வெளியேற்றப்படும் கழிவுகளுக்கான இசையமைவு எல்லை.

**4. குறைந்த தடிப்புடைய பொலித்தீன் பாவனையை குறைத்தல்**

இந்நிபந்தனை அனைத்து தொழிற்சாலை மற்றும் தொழிற்சாலை நடவடிக்கைகளிலும் உள்ளடக்கப்படவேண்டும்.

**5. வாயுக்கள் வெளியேற்றத்தினை கட்டுப்படுத்துவது தொடர்பான நிபந்தகைள்**

வாயுங்களின் வெளியேற்றத்துடன் தொடர்புடைய தொழிற்சாலைகளில் மாத்திரம் இந்நிபந்தனைகளை வழங்க வேண்டும். அவ்வாறு ஒவ்வொரு தொழிற்சாலைகளினாலும் வெளியேற்றப்படுகின்ற வாயுக்களின் அளவைப் பொறுத்தும் சூழவுள்ள நிலைமையைப் பொறுத்தும் வாயு வெளியேற்றத்தினை கட்டுப்படுத்துவதற்கான நிபந்தனைகள் வழங்கப்பட வேண்டும்.

1. பறக்கக்கூடிய தூசுக்கள் சுற்றாடலுக்கு பரவுவதை தவிர்க்கும் வகையில் மூலப்பொருட்களை இறக்குதல் ஏற்றுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் வைத்திருத்தல் என்பன ஒரு மூடிய இடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. கொங்கிறீற் கலவை இயந்திரத்தில் மூலப்பொருட்களை இடும்போது கலக்கும்போதும் வெளியேறக் கூடிய தூசுகளை தவிர்க்கும் வகையில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. தூசு, துகள்கள் சுற்றாடலுக்கு பரவுவதை தவிர்க்கும் வகையில் தொழிற்சாலை எல்லையோரமாக விரைவாக வளரக்கூடிய மரங்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

4. தொழிற்சாலை செயற்பாட்டினாலிருந்து உருவாகும் வாயுக்கள், தூசுகள் மற்றும் மணம் என்பன சுத்திகரிக்கப்பு பொறியை அமைப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இவ் நடவடிக்கை மூடிய பகுதியினுள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**6. உற்பத்தி நடவடிக்கைகளின் போது இடம்பெறுகின்ற பூமி அதிர்வு மற்றும் வெடித்தலின் போது காற்றின் அதிக அழுத்தத்தை கட்டுப்படுத்துவது தொடர்பான நிபந்தனைகள்**

**உதாரணம் :** கற்குவாரியில் வெடி வைத்து உடைக்கப்படும் போது உருவாகும் நல அதிர்வு ஆகக்கூடிய துகள் வேகம் ஒரு செக்கனுக்கு 4 மில்லி மீற்றர் ஆகவும் வாயு வெடித்தலின் உயரமுத்தம் 115 (நேரான/ உச்ச) (115 db L liner Peak) இனை விஞ்சக்கூடாது. இதற்காக பரிசீலனை வெடிவைப்பு நடத்தப்படுமானால் அதனுடைய பரிந்துரைக்கு அமைய நிபந்தனைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

7. உற்பத்தி நடவடிக்கைகளின் போது வெளியேற்றப்படும் ஏனைய வெளியீடுகளை கட்டுப்படுத்துவதற்காகவும் விசேட சூழல் மாசுக்கட்டுப்பாட்டு தொடர்பாகவும் வழங்கப்படுகின்ற நிபந்தனைகள் உள்ளடக்கப்படவேண்டும்.

8. தொழிற்சாலை நடவடிக்கைகள் தொடர்பான பொது நிபந்தனைகள்

- சுத்தமும் நல்ல சூழல்ப்பராமரிப்பும் முறையும் பின்பற்றப்பட வேண்டும்.
- தொழிலாளர்களின் சுகாதாரமும் பாதுகாப்பும் தொழிற்சாலை கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் உறுதிப்பட வேண்டும்.
- தொழிற்சாலையில் குறிப்பிட்ட இயந்திரங்கள்தவிர வேறு ஏதாவது இயந்திரத்தைப் பொருத்துவது அல்லது இயக்குவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
- தொழிற்சாலை நடவடிக்கை அல்லது செயன் முறையில் ஏதாவது விரிவாக்கம் செய்வதாயின் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
- தேவையேற்படும்போது இத் தொழிற்சாலையால் உருவாக்கப் படும் ஏதாவது மாசைக் கட்டுப் படுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் மேலதிகமாக முன்வைக்கப்டும் நிபந்தனைகள் கண்டிப்பாக தொழிற்சாலை நடவடிக்கையுடன் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.
- இதற்கு வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இத் தொழிற் சாலை இவ்விடத்திற்கு வழங்கப்பட உத்தரவு பத்திரமாக கருதப்படக் கூடாது. இது கழிவு நீர், திண்மக் கழிவுகள், புகை, சத்தம் ஆகிய மாசுக்களை நிர்ணயிக்கப் பட்ட நியமத்திற்கு ஏற்ப சுற்றாடலுக்கு வெளியேற்றுவதற்கு வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிபந்தனைகள் 2008 ஜனவரி 25 ஆம் திகதி 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் "அ" "ஆ" மற்றும் "இ" அட்டவணைகளுக்கு பொதுவானதாக பாவிக்கப்படும்.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு நாம் ஒவ்வொருவரும் சூழல் பற்றிய அக்கறையுடனும், விழிப்புணர்வுடனும் செயற்படுவோமாயின் பாரியளவிலான சூழல் மாசாக்கத்தினை கட்டுப்படுத்தி இயற்கையோடு இணைந்து வாழ்வோம்.

**உசாத்துணை நூல்கள்:**

1. Plummer, C, Megeary, D, Carlson, H, (1999), "Physical Geology" Toronto PP - 250 - 270.

2. Mallawatantri. A, Marambe. B, Skehan. C, (2014), "Integrated Strategic Enbrironment Assessment of the Northern Province of Sri Lanka", Central Environmental Authority, & Disaster Management Center of Sri Lanka, PP - 160 - 176.

3. "Technical Guidelines on Solid Waste Management in Sri Lanka" (2005) Central Evironmental Authority, Battaramulla PP - 9 - 29

4."Training for Environmental Protection", (2003) Central Environmental Authority, Battaramulla, PP - 23-32

5. "Corporate Plan" (2014) Ministry of Enviroment and Eenewable Energy, Central Environmental Authority, PP 13-32.

6. "திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் பொது மக்கள் பங்களிப்பை ஊக்குவித்தல்" (2008) JICA, PP - 3 - 32

7. அருட்பிரகாசம் கே.டீ. (1998) "மனிதனும் சூழலும், பாகம் 1 லேஸர் கிரபிக்ஸ் லிமிரட் பக் - 43






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தின் வாழ்வியல் அம்சங்களில் வழங்கிலிருந்துவரும் வட்டார வழக்குச் சொற்கள்

திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்
ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்)
மன்னார் வலயம்

வட்டார வழக்குச் சொற்கள், மன்னார் மாவட்டத்தில் எவ்வாறு தமிழ்மொழிக்கு வளம் சேர்த்துள்ளன என்று ஆராயும்போது, தமிழ் மொழியைப் பேசுகின்ற தமிழ், முஸ்லீம் மக்கள் எவ்வாறு தத்தம் சூழலில் வழக்குச் சொற்களை கையாண்டுள்ளனர் என்பது அறிய வேண்டியதொன்றாகும். இந்த மொழி இனிமையான மொழி. பண்பான மொழி. அழகான மொழி. அமிர்தமான மொழி. தேன்போன்ற மொழி. கடல்கடந்த தமிழ்மொழி. எம் ஆன்றோரால் தொன்று தொட்டு இன்றுவரை, தமிழ்மொழியின் சொல்நெறிபற்றி கூறப்பட்டு வருகின்றது. இம்மொழி தனித்துவமான மொழி, திராவிட குடும்பத்தைச் சேர்ந்தது என்று மொழியியலாளர் பேராசிரியர் கால்ட்வெல் ஐயர் கூறுகின்றார்.

இந்த தமிழ்மொழி, கடல்கடந்த மொழி உலகில் எங்கெங்கெலாம் தமிழர் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் பேசப்படுகின்ற. வாழ்கின்ற உயிருள்ள மொழியாக திகழ்கின்றது. கம்பன் கண்ட தமிழ், சேரசோழ பாண்டியராம், மூவேந்தர் போற்றிய தமிழ், சேரன் தம்பி இளங்கோ இசைத்த தமிழ், பாரதி பாடிய தமிழ், அகத்தியன் பொதிகையிலே வளர்த்த தமிழ் என்றெல்லாம் கூறுவார்கள்.

தமிழ்மொழி பண்பாட்டுக்காவி, தொடர்பாடல், ஊடகம், கலாசார பரிவர்த்தனை மொழி தமிழ்மொழியைப் படிக்க படிக்க அதன்சுவையை நயந்து உணர்ந்து இன்புற முடியும்.

**மன்னார் பிரதேசத்தின் சிறப்பு:**

ஈழத்திருநாட்டிலே மன்னார் பிரதேசம் வரலாற்று ரீதியாக பழங்காலந்தொட்டு பெரும் பெயர் பெற்று விளங்கிய வருவதை நாம் அறிவோம். மகாதித்த மாதோட்ட மாந்தை என்று பல பெயர்களால் வரலாற்றுப்புகழ் மன்னார் பிரதேசம் முத்துக்குளிக்கும் முத்துச்சிலாபத்தையும் கேது மன்னனின் புகழ் விளங்கச் செய்கின்ற திருக்கேதீச்சர ஆலயத்தையும் பாலாவியின் நீராடல் சிறப்பையும், வங்கம் தங்கிச் செல்கின்ற துறைமுகப்பட்டினங் களையும் வரலாற்று புகழ்மிக்க மாண்புறு மருதமடு மாதா, மாந்தைமாதா ஆலயங்களையும், அழகான பள்ளிவாசல் களையும் தன்னகத்தே கொண்டு செழிப்பு மிக்க பிரதேசமாக விளங்கியது.

முத்தமிழும், முக்கனிகள் போன்று செழித்து வளர்ந்திட்ட காலம். கடலும் கடல் சார்ந்த நெய்தல் நில மக்களும், வயலும் வயல்சார்ந்த மருதநில மக்களும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வாக வாழ்வியல் நடத்திய மன்னார் பிரதேசத்தில் மக்கள் குழுமம் குழுமமாக வட்டாரங்களாக வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய பேச்சு வழக்கில் உள்ள மொழி வட்டார வழக்குச் சொல் எனப்படுகிறது.

**மூவகை மொழிகள்:**

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்ட்வெல் ஐயர் பின்வருமாறு கூறுகின்றார் தமிழ் மொழி பல மொழி சேர்ந்தது. செந்தமிழ், தரப்பட்ட மொழி, பேச்சு மொழி ஆகிய மூன்று மொழிகளையும் உள்ளடக்கியது.

புலவர்கள் பயன்படுத்துவது செந்தமிழ் எனப்படும். செய்தி ஊடகங்கள் ஊடாகப் பயன்படுத்தும் மொழி தரப்படுத்தப்பட்ட மொழி எனப்படும். சாதாரண மக்கள் பயன்படுத்துவது பேச்சுமொழி எனப்படும். தமிழ்மொழியில் செந்தமிழ் என்று கூறப்படுவது புலவர்கள் பயன்படுத்திய மொழியாகும். செந்தமிழ் பழைமையை விடாது இழந்துபோன சொற்களை விடாது.

உதாரணம்: குட்டி என்ற சொல்
குட்டி - யானைக்குட்டி, குருளை - சிங்கக்குட்டி, பறள் - பன்றிக்குட்டி எனப்படும். ஆனால் தரப்பட்ட தமிழ் என்பது பழமையும் புதுமையும் பேணுவதாகும்.

**பேச்சுவழங்கு:**

இந்தப் பேச்சு வழக்கானது இடத்திற்கிடம் ஒத்த தன்மையாகவும், அதே வேளை சில சொற்களில் வேறுபட்ட தன்மையாகவும் காணப்படுகின்றன. செய்கின்ற தொழில்களின் அடிப்படையிலும் வட்டார வழக்குச் சொற்கள் இடம்பெறுகின்றன. வயலும் வயல் சார்ந்த மருத நிலங்களில் தொழில் புரிவோர் அத்தொழிலின் அடியாகப் பிறந்த வட்டார வழக்குகளைப் பேசுகின்றனர். கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமக்கள் தங்களின் ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடியை மேற்கொள்கின்றனர். மீன்பிடித் தொழில் சார்ந்து பேசப்படுகின்ற வட்டார வழக்குச் சொற்களை பேசுகின்றனர். அவை நயக்கக்கூடியன. பேச்சுத் தமிழில் பிறமொழிச் சொற்கள் வந்து சேரும் அதேவேளை புதிய சொற்கள் வரும் பேச்சுத் தமிழ் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுகின்றது.

ஒரு மொழி அதன் அமைப்பை வைத்துக்கொண்டு இடம் காலத்திற்கேற்ப மாறுபடுகின்றது. உதாரணம்: மண் - மண்ணு, காற்று - காத்து. இது பேச்சு மொழியின் இயல்பு. பேச்சு மொழியில் சொற்சிதைவு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. உதாரணம் : அடித்தான் - அடிச்சான், பார்த்து - பாத்து, ஒருவன் - ஒருத்தி, ஒருவன் - ஒருவன். சிதைந்த வழங்குகளை மக்களின் பேச்சு வழக்கில் காணலாம். உதாரணம்: செங்கற்பட்டு - செங்கழுநீர்ப்பட்டு, பேச்சுத்தமிழ் உயிர் உள்ள தமிழ். முன்னோர் பேச்சில் கையாண்டது. பல சிதைவுகளை உடையது. மாமா - வந்தது. அப்பா சொல்லிச்சு, அப்பா சொன்னார்கள், மாமா - வந்தார்கள். மயிலாப்பூர் என்பதை, மயிலை என்று பேச்சு வழக்கில் குறிப்பிடுவார்கள். நாற்பக்கம் என்பதை நலாபக்கம் என பேச்சு வழக்கில் கூறுவார்கள்.

பேச்சு மொழியில் வட்டார வழக்கு என்பது மிகவும் முக்கியமானது. இடத்துக்கிடம் பேசப்படுகின்ற மொழிகளின் தொன்மை, உச்சரிப்பு, வடிவம், ஒலியன் என்பவற்றில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. இடத்துக்கிடம் பேசுகின்ற விதங்களும் வேறுபடுகின்றன. உதாரணம்: மன்னாரில் - நிற்பாட்டு என்ற சொல்லுக்கு, மட்டக்களப்பில் நித்தாட்டு என்று கூறுவார்கள் இது ஒரு வட்டார வழக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் 'சொல்லுறது' என்று - தமிழ்பேசும் மக்கள் உச்சரிக்கும்போது மட்டக்களப்பு மக்கள் 'செல்லுறது' என்று கூறுவார்கள். இதுவும் நயத்துக்குரியது. 'செபமாலை மாதாவே' என்று மடு அன்னையை வாழ்த்துகின்ற வேளையில் சில முதியவர் 'சோமாலை மாதாவே' என்று கூறுவதும் உண்டு.

வட்டார வழக்கு என்ற சொல் 1978 இல் நான் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழிப்பாடம் கற்கின்ற வேளையிலே, முதன்முதலாக எனது குரு பேராசிரியர் க. சிவத்தம்பி அவர்களிட மிருந்தே பெறக்கூடியதாக இருந்தது.

இந்த பேச்சு வழக்கானது இலக்கண வரம்பு மீறியது என்ற வகையில் இந்த வட்டார வழக்குச் சொற்களை அழியாமல் பாதுகாப்பதற்காகவும் அவற்றை எடுத்து மாணவமணிகளுக்கு விளங்கவைக்கலாம் என்ற உணர்வுடன் இக்கட்டுரையினை எழுதவிழைகின்றேன்.

**பெயர் சொற்கள்:**

| **பிரதேச வழக்கு** | -பொதுவழக்கு |
|---|---|
| **வில** | - விலை |
| **கடல** | - கடலை |
| **புணம்** | - பிணம் |
| **சந்த** | - சந்தை |
| **ரத்தம்** | - இரத்தம் |
| **பயல்** | - பையன் |
| **உருள** | - உருளை |
| **பலக** | - பலகை |
| **பழசு** | - பழையது |
| **பூச** | - பூசை |
| **பாவட** | - பாவாடை |
| **காஸ்** | - காசு |
| **பொண்டுகள்** | - பெண்கள் |
| **சாமத்தியம்** | - பூப்பெய்தல் |
| **பெத்தவள்** | - பெற்றவள் |
| **வஸ்சு** | - பேருந்து |
| **வாட்டா** | - செருப்பு |
| **கடக்கரை** | - கடற்கரை |
| **ஆத்து** | - ஆறு |
| **தேத்தண்ணி** | - தேநீர் |
| **சக்கிள்** | - சைக்கிள் |
| **தண்ணி** | - தண்ணீர் |
| **பண்டி** | - பன்றி |
| **மத்தவள்** | - மற்றவள் |
| **பிரேதம்** | - பிணம் |
| **பிறடி** | - பிடரி |
| **வெத்தில** | - வெற்றிலை |
| **எண்ண** | - எண்ணெய் |
| **குத்தம்** | - குற்றம் |
| **முத்தம்** | - முற்றம் |
| **காத்து** | - காற்று |
| **உலக்க** | - உலக்கை |
| **நட** | - நடை |
| **கர** | - கரை |
| **கத** | - கதை |
| **கண்டு** | - கன்று |
| **ஊத்து** | - ஊற்று |
| **மேளம்** | - மோளம் |
| **நம்ம** | - நாங்கள் |
| **காளமாடு** | - காளைமாடு |
| **மனுஷி** | - மனைவி |
| **மதிர்** | - மதில் |
| **செவர்** | - சுவர் |
| **பின்னால** | - பின்பக்கம் |
| **உசிரு** | - உயிர் |
| **வவுறு** | - வயிறு |
| **மசிர்** | - மயிர் |
| **வகிறு** | - வயிறு |
| **தல** | - தலை |
| **மோற** | - முகம் |
| **ஒன்டு** | - ஒன்று |
| **ரெண்னு** | - இரண்டு |
| **மூணு** | - மூன்று |
| **அஞ்சு** | - ஐந்து |
| **கெணறு** | - கிணறு |
| **கழடு** | - கிழவி |
| **குத்தம்** | - குற்றம் |
| **பெட்ட** | - பிள்ளை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புள** - பிள்ளை
**எளணி** - இளநீர்
**மணுசன்** - மனிதன்
**பொஞ்சாதி** - பெண்சாதி
**வயித்துவலி** - வயிற்றுவலி
**வெக்கம்** - வெட்கம்
**தலவாணி** - தலையணை
**ஆம்புளப்பிள்ளை** - ஆண்பிள்ளை
பொம்பிளப்பிள்ளை - பெண்பிள்ளை
**வெத்திலாக்கு** - வெற்றிலைபாக்கு
**தட்டுக்கை** - பற்றாக்குறை
**பவுடர்** - புசல்மா
**பொம்பிள** - பெண்
**அப்பளம்** - பப்படம்
**அரியதரம்** - பணியாரம்
**கிறுக்கு** - பைத்தியம்
**அபேஸ்** - விலக்கிவிடுதல்/நக்கல்
**பகிடி** - நையாண்டி
**மறா** - பிறகென்ன
**கொள்ளி** - விறகு
**மறுக்கா** - பிறகு
**கொறவான்** - பலிக்கடா
**ஆணம்** - குழம்பு
**வில்லங்கம்** - கஸ்ரம், கடினம்
**ஏனம்** - ஏத்து, பாத்திரம்
**சிரட்டக்காச்சி** - தேங்காய் சிரட்டை
**குந்தாணி** - உரல்
**கச்சான் காத்து** - வாடைக்காற்று
**பையப்பைய** - மெதுவாக
**ஒண்டா** - ஓம்அடா
**இணல்** - நிழல்
**சீர்வரிசை** - சீதனம்
**சவக்காலை** - சேமக்காலை
**சவம்** - பொடி, பிரேதம்
**பரிசாரி** - பரிகாரி, நாட்டுவைத்தியர்
**கணக்குப்பிள்ளை** - கணக்காளர்
**சூதானம்** - கவனமாக என்பதை குறிக்கும்
**பத்திரம்** - கவனம்
**வெட்டிப்பேச்சு** - வீண்பேச்சு
**வகுமோசம்** - விடயம் தெரியாமல் விடுதல்
**பொல்லாப்பு**- பொல்லாங்கு

**சுத்துமாத்து** - பொய்பேசுதல்
**அம்மலக்க** - அதிகமாக உண்ணுதல்
**மருவாதை** - மரியாதை
**மூதேசி** - மூதேவி
**அடைமழை** - மழை தொடர்ந்து பெய்யும் நிலை
**கன்னிப்பார்** - சுபகாரியங்களுக்கு நடும் முதல்கப்பு
**பிச்சைச்சோறு** - இறந்தவர் வீட்டில் வீட்டில் சமைத்துக் கொடுப்பது
**துறையாறு** - மழைவந்தால் மட்டும் ஓடுவது
**தூவானம்** - மழை விட்ட பின்னர் தொடர்ந்த சிறு தூறர்
**வங்குறோத்** - தட்டுப்பாடான அல்லது வெறுமையான நிலை
**மடிச்சீலை** - கொண்டாட்ட விழாவில் வழங்கும் அன்பளிப்பு
**பணச்சடங்கு** - கொண்டாட்ட விழாவில் வழங்கும் அன்பளிப்பு
**குப்பை விறாண்டி** - குப்பை வாரி
**பாரை** - உலு - தேங்காய் உரிக்கும் கத்தி
**விளக்கு** - கைவிளக்கு
**தண்ணிப்போச்சி** - தண்ணிப்போத்தல்
கட்டுத்துவக்கு - உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி
**மணிக்கூடு** - கடிகாரம்
**தும்புக்கட்டை** - தும்புத்தடி
இசத்து - பாத்திரம்
பசுக்குபெட்டி - பக்குஸ்பெட்டி
**பொட்டகம்** - நாலுகால் உள்ளது பெரியது
**தைலாப் பெட்டி** - சிறியது சதுரம்
**கொப்புறபெட்டி** - உடுப்பு மடித்துவைத்தல்
**சேர்வக்கால்** - சோறுவைத்துச் சாப்பிடுவது
**மடிசஞ்சி** - பணம் வைக்கும் பை
**சத்தகக்கத்தி** - பெட்டி இழைக்கும் கத்தி
**களக்கத்தி** - தேங்காய் பறிக்கும் கத்தி
**தாக்கத்தி** - அரிவி வெட்டும் கத்தி
**கொப்புறப்பெட்டி** - மரத்தால் ஆக்கப்பட்ட பெட்டி
**தைலாப் பெட்டி** - பணத்தை வைக்கும் பெட்டி
**பட்டை** - கள்ளுகுடிக்கும் ஓலைப்பட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படிக்கன்** - வெற்றிலை எச்சிலைத்துப்பும் பாத்திரம்
**தட்டம்** - வெற்றிலை பாக்கு வைக்கும் பாத்திரம்
**கடுக்கன்** - ஆண்கள் காதில் அணியும் தோடு
**உமல்** - ஓலையால் பின்னப்பட்ட ஒருவகைக் கூடையாகும்.
**தெரு உலா** - மாப்பிள்ளை வலம் வருதல்
**தெருலாத்து** - மாப்பிள்ளை வலம் வருதல்
**அணத்துண்டு** - குழந்தைகளை அணைக்கும் துண்டு
**இணுக்கு** - தண்டுடன் சேர்ந்த சிறிய இலைத்தொகுதி
**கும்பா** - ஞானப்பெற்றோர் கும்பாத்திரீஸ், கும்பா ஆனது
**தாம்பூலம்** - தட்டத்தின்மேல் வெள்ளைத் துண்டால் மறைத்து வழங்கப்படும் அன்பளிப்பு
**ஊத்தக்கப்பித்தான்** - அசுத்தம்
**வாய்க்கொழுப்பு** - ஆணவத்தோடு அதிகம் பேசுதல்
**கடவல்** - வீட்டுவளவின் வாசல்
**படல்** - வீட்டுவளவின் வாசலை அடைக்கும் கதவு
**பட்சவடம்** - கலியாணம் முடித்த தம்பதிகளுக்கு கல்யாண வாழ்த்து பாடுதல்
**பனைமட்டை** - கங்கு, காமட்டை
கொல்லைக்குபோறது - மலங்கழித்தல், இதை போடி, வெளிக்காட்டுக்கு செல்லுதல், வெளியால இருத்தல் எனவும் கூறுவர்.

## பொருட்கள் - கருவிகள்

| **பிரதேச வழக்கு** | **பொதுவழக்கு** |
|---|---|
| **அரிக்கஞ்சட்டி** | அரிசி அரிக்கின்ற சட்டி |
| **அலுப்பினத்தி** | ஊக்கு, ஊசி |
| **மம்பட்டி** | மண்வெட்டி |
| **கோடாலி** | கோடரி |
| **பொட்டி** | பெட்டி |
| **வேக்கு** | பேக், பை |
| **பொத்தகம்** | புத்தகம் |
| **யொக்கு** | யக்கு |

## பெயரெச்சம்

| **பிரதேச வழக்கு** | **பொதுவழக்கு** |
|---|---|
| **கனக்க** | நிறைய |
| **சாடையா** | சிறிய |
| **அக்காட** | அக்காவினுடைய |
| **அவுகட** | அவர்களுடைய |
| **எங்கட** | எங்களுடைய |
| **உங்கட** | உங்களுடைய |
| **நம்மட** | நம்முடைய |
| **என்ர** | என்னுடைய |
| **அங்கால** | அங்கேதான், அந்தப்பக்கம் |
| **இஞ்சால** | இங்கேதான், இந்தப்பக்கம் |
| **மறுவா** | பிறகு, பின்னர் |
| **கேக்காட்டி** | கேட்காவிட்டால் |
| **உசக்க** | உயரத்தில் |
| **அவங்கட** | அவர்களுடைய |
| **நஞ்ச** | நசுங்குண்ட |
| **புரண்டு** | பிரண்டு |

## எதிர்மறைச் சொற்கள்

| **பிரதேச வழக்கு** | **பொதுவழக்கு** |
|---|---|
| **படிக்கல** | படிக்கவில்லை |
| **பிடிக்கல** | பிடிக்கவில்லை |
| **வரல** | வரவில்லை |
| **படையில** | படவில்லை |
| **காணோம்** | காணவில்லை |
| **பசிக்கேல** | பசிக்கவில்லை |
| **கேக்கல** | கேட்கவில்லை |
| **மாத்து** | மாற்று |
| **சப்பு** | மெல்லு |
| **புடுங்கு** | பிடுங்கு |
| **சொல்லு** | கூறு |
| **மட்டுக்கட்டு** | இனம் கண்டுகொள் |
| **உன்னட்ட** | உன்னிடம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இகழ்ந்து பேசும் சொற்கள்

**பிரதேச வழக்கு -** பொதுவழக்கு

**சாக்கு** - சோம்பேறித்தனம்
**சண்ணை** - சோம்பேறித்தனம்
**செக்குமாடு** - சிந்திக்காமல் செயற்படுபவர்
**சோத்துமாடு**- சோம்பேறி
**தத்துவாரி** - நாணயமற்ற தன்மை
**வெட்டிப்பேச்சு** - வீண்பேச்சு
**களிசறை** - நெறிபிறழ்வாக நடத்தல்
**காடை** - நெறிபிறழ்வாக நடத்தல்
**போக்கிலி** - சொன்னதைச் செய்யாதவன்
**கஞ்சல்** - உலோபி
**கசவாரம்** - உலோபி
**தொம்மாடி** - சோம்பறி
**தின்னிமாடு** - அதிகம் உண்பவன்
**வடுவா** - ஆண்களை ஏசுதல்
**வேசமகன்** - முறைதப்பிப் பிறந்தவன்
**தேவடியாள்** - முறைதவறி நடப்பவள்
**பொறுக்கிபையல்** - ஏமாற்றுக்காரன்
**சுத்துமாத்துக்காரன்** - ஏமாற்றுபவன்

## வினைச்சொற்கள்

**பிரதேச வழக்கு -** பொதுவழக்கு

**பறை** - கதை
**கூப்பிடு** - அழை
**தள்ளு** - விலகிநில்
**சொல்லு** - சொல்
**ஏத்து** - ஏற்று
**நூரு** - அணை
**மினுக்கு** - பளபளபாக்கு
**அப்பு** - அதிகமாக பூசு
**உரப்பு** - சத்தம் செய்
**சோறுகாய்ச்சு** - சோறு ஆக்கு
**வைச்சுக்கோ** - வைத்திரு
**வைச்சுக்கோள்** - வைத்துக்கொள்
**முகறையைப்பார்** - முகத்தைப்பார்
**உசத்திப்பிடி** - உயரத்தில்பிடி
**இஞ்சாலவா** - இங்கேவா
**முளியப்பாரு** - கண்ணைப்பார்
**தண்ணியை வாரு** - தண்ணீரை ஊற்று
**கொள்ளி கொத்து** - விறகு வெட்டு
**சோத்தப்போடு** - சாப்பாட்டைப் பரிமாறு
**பாடையிலபோ** - இறந்துபோ
**போக்காறப்போ** - இறந்துபோ
**புறம்பாவை** - வேறாக வை
**பறையாம இரு** - பேசாம இரு
**பறையாமல் போ** - பேசாமல் போ
**ஓடியா** - ஓடிவா
**போனா** - போனாய்

## கேள்விகள்

**பிரதேச வழக்கு -** பொதுவழக்கு

**எங்க** - எங்கே
**எத** - எதை
**எப்ப** - எப்பொழுது
**காணுமா** - போதுமா
**வேணுமா** - வேண்டுமா
**வாறீயா** - வருகின்றாயா
**போறியா** - போகின்றாயா
**வாறியா** - வருகின்றாயா
**வருவியா** - வருவாயா
**இருக்கா** - இருக்கின்றதா
**யார்ல** - யார்பிள்ளை
**படிக்கலயா** - படிக்கவில்லையா
**எடுத்தியா** - எடுத்தாயா
**இருக்கிறீயா**- இருக்கின்றாயா
**தந்தீயா** - தந்தாயா
**கட்டீற்றியா** - கண்டாயா
**பாத்திற்றீயா**- பார்த்தாயா
**திண்டிட்டியா** - தின்றுவிட்டாயா
**படிச்சிற்றியா** - படித்துவிட்டாயா
**என்ன செய்றா** - என்ன செய்கின்றாய்
**மழைபெயுது** - மழைபெய்கின்றது
**குமர் பெருசாகிற்று** - பூப்புனிதநீராட்டு, வயதுக்கு வருதல்
**சாமத்தியப்பட்டுட்டு** - பூப்புனிதநீராட்டு, வயதுக்கு வருதல்

## வினையெச்சம்

**பிரதேச வழக்கு -** பொதுவழக்கு

**சாஞ்சு** - சாய்ந்து
**சுத்தி** - சுற்றி
**சொல்லி** - கூறி
**இஞ்ச** - இங்கே
**இத** - இதை
**மறுவா** - பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத** - அதை
**புறவு** - பிறகு
**அவுக** - அவர்கள்
**அவங்க** - அவர்கள்
**அவுகட்ட** - அவளிடம்
**மெல்லவா** - மெதுவாக
**நீங்க** - நீங்கள்
**தாங்க** - தாருங்கள்
**இஞ்சால** - இந்தபக்கம்
**அம்மலக்க** - நிறைய
**ஓரத்தால** - ஓரமாக
**வரேக்க** - வரும்போது
**வீட்ட** - வீட்டில்
**கெதியாக** - விரைவாக
**யாராச்சும்** - யாராவது
**சும்மா** - எந்தநோக்கமும் இல்லாமல்
**பச்சத்தண்ணியாக இருக்கு** - ருசி இல்லாமல் இருக்கிறது
**அறளை பேய்ந்து போச்சு** - அறிவு இழந்து போதல்
**தின்னுங்க** - சாப்பிடுங்க
**போங்களன்** - போங்கள்
**போடுங்களன்** - போடுங்கள்
**போறம்** - போகின்றோம்
**வாறம்** - வருகின்றோம்
**நிக்கிறம்** - நிற்கின்றோம்
**சொல்றம்** - சொல்கின்றோம்
**வந்திற்றன்** - வந்துவிட்டேன்
**நிக்கிறன்** - நிற்கின்றேன்
**போயிற்றன்** - போய்விட்டேன்
**ஆடுறன்** - ஆடுகிறேன்
**பாடுறன்** - பாடுகிறேன்
**அவுத்திற்றன்** - அவிழ்த்துவிட்டேன்
**நிக்கிறான்** - நிற்கிறான்
**பாடுறான்** - பாடுகிறான்
**கத்துறான்** - கத்துகிறான்
**திண்டிற்றான்** - தின்றுவிட்டான்
**மலை பெய்யுது** - மழை பெய்கின்றது
**புடைச்சிற்று** - புடைத்துவிட்டது
**மினுக்குதல்** - அம்மியில் அரைத்தல்
**குணங்குதல்** - குழப்படைதல், மறுத்தல்
**கண்ணிவைத்தல்** - பொறி வைத்தல்
**வீடு மொழுகுதல்** - வீடுமெழுகுதல்
**சுணங்குதல்** - காலம் தாழ்த்தல்
**குறுக்க கட்டுதல்** - மார்பை மறைத்துக் கட்டுதல்
**அலம்புதல்** - அலம்புதல்
**கறி காச்சுதல்** - கறி சமைத்தல்
**ஓம்** - ஆம்
**வேணும்** - வேண்டும்

**வேளைகள்**

**பிரதேச வழக்கு - பொதுவழக்கு**

**கால** - காலை
**காலம** - காலை
**மால** - மாலை
**நேத்து** - நேற்று
**இப்ப** - இப்பொழுது
**அப்ப** - அப்பொழுது
**நெடுக** - தினமும்
**வெள்ளன** - நேரத்திற்கு
**இராவு** - இரவு, ராத்திரி
**இண்டைக்கு** - இன்று
**வெள்ளாப்போட** - அதிகாலை
**விடிய** - காலை
**காலமேய்க்கு** - காலை
**காத்தால** - காலை
**காலத்தால** - காலை
**விடியக்காலத்தால** - காலை
**நாளைக்கு நிண்டு** - நாளை மறுநாள்

**உணவு வகைகள்**

**பிரதேச வழக்கு - பொதுவழக்கு**

**தேத்தண்ணி** - தேனீர்
**பினாட்டு** - பனாட்டு
**வறை** - சுண்டல்
**புளிச்சொதி** - புளி அவியல்
**புளியாணம்** - உள்ளிச் சொதி
**அவியல், புளிச்சொதி** - சொதி
**பாலாணம்** - பால்சொதி
**இலைக்கறி சுண்டல்** - வறுவல்
**ஆக்கின கறி** - குழம்பு
**கழனி** - நண்டுகழனி
**மட்டித்தண்ணி** - மட்டியை அவித்து சதையுடன் பச்சைமிளகாய், வெங்காயம், உப்பு போட்டு பிசைவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கஞ்சி** - பழஞ்சோறு
**பிரட்டல்** - அதிககுழம்பு இல்லாத கறி
**சீனிப்பணியாரம்** - அரியதரம், அதிரசம் எனப்படும்
**பொரிவிளங்காய்** - அரிசியை வறுத்து திரித்து, மிளகு சீரகம் சேர்த்து சீனிப்பாகில் உருண்டை செய்து பதப்படுத்தல்
**மிளாஞ்சல் அரைக்கிறது** - மிளகாயை ஆய்ந்து அரைத்தல் கூட்டாக மல்லி, சீரகம், மிளகு சேர்த்து அரைத்தல்
**வத்தல்** - மிருகத்தின் இறைச்சியை அரை அங்குல அகலம் ஒரு அடி நீளமாக வெட்டி வெயிலில் அல்லது நெருப்பில் நன்றாகக் காயவைத்தல். இதனை 'காய்ந்த இறைச்சி' அல்லது 'இறைச்சி வற்றல்' என்றும் அழைப்பர்

### விழிக்கும் சொற்கள்

**பிரதேச வழக்கு - பொதுவழக்கு**

**வாள்ள** - வாங்க
**தாள** - தாபிள்ளை
**வாடி** - வாபிள்ளை
**அங்கேரு** - அங்கேபாரு
**போள** - போபிள்ளை
**கடின** - கடிபிள்ளை
**இருள** - இருபிள்ளை
**ஓடியா** - ஓடிவா
**இஞ்சவா** - இங்கே வா
**நில்லுன** - நில்லுபிள்ளை
**என்னள** - என்னபிள்ளை
**விடுள** - விடுபிள்ளை
**இருள** - இருபிள்ளை
**ள** - ஏ பிள்ளை
**ள, வாள** - பிள்ளை இங்கே வா
**எங்கால ள** - எங்கிருந்து பிள்ளை
**எடுத்தா** - எடுத்தாய்
**புடுங்கு** - பிடுங்கு
**குடு** - கொடு
**பாரு** - பார்
**மூஞ்சப்பாரு** - முகத்தைப்பாரு
**கொண்டா** - கொண்டுவா
**தத்துவாரி** - முறைதவறியவன்
**றாஸ்கொல்** - ஆத்திரத்தில் விழிப்பது

### இடங்கள்

**பிரதேச வழக்கு - பொதுவழக்கு**

**கந்தாயம்** - வட்டாரம்
**கோடிப்புறம்** - புறம்பான சிறுவீடு
**திண்ண** - விறாந்தை
**முத்தம்** - முற்றம்
**கடக்கரை** - கடற்கரை
**அடுப்பங்கட்டு** - அடுப்பங்கரை
**கண்ணா அடி** - கண்ணா மரத்தடி
**வேம்படி** - வேப்பமரத்தடி
**பூவரசடி** - பூவரச மரத்தடி
**தாவரம்** - சுருக்கு வெளியே உள்ள கூரைப் பகுதி
**குசினி** - சமையலறை இதை மால் என்றும் அழைப்பர்
**வாட்டு** - வைத்தியசாலையில் உள்ள மனை
**நறுவிலிக்குளம்** - நறுவிலிமரம் இருப்பதால் வந்த பெயர்
**சோற்றுமால்** - சமையலறை அல்லது குசினி
**சிறாம்பி** - பொருட்களை வைப்பதற்கு அடுப்புக்கும், கூரைக்கும் இடையே கட்டப்பட்டிருக்கும் வீட்டிற்கு அமைக்கப்படுவது பறன் எனவும் அழைக்கப்படும்
**சாய்ப்பு** - வீட்டை அண்டி அல்லது வீட்டோடு சேர்த்து ஏற்படுத்தப்படும் சிறிய கூரை

## சமூக கிளை மொழிகள்
## மீனவ சமூகத்தோடு தொடர்புடைய சொற்கள்

**அம்பா** - படகு இழுக்கும் போது மீனவர் பாடும் பாடல். கரைவலை இழுக்கும் போதும் பாடும் பாடல்
**அணியம்** - தோணியின் முன்பக்கம்
**கடையால்** - தோணியின் பின்பக்கம்
காத்து ஈராட்டி - மீன்படும் காலநிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மீன்பாடு - மீன்படுகிறது (கூடுதலாக)

மடி, மறுக்கு - மீன் படுகிறது

தாடக்காரா - வள்ளத்தை பிடித்து கரையில் விடுதல்

நல்ல கணியம் - மீன்பிடிக்க கூடிய நேரம்

புறவலை - கடையால்

ஏரா - வள்ளத்தின் கீழ்பகுதி

ஒதுக்கு - ஓரம்

சாயப்போ - ஒரு பக்கத்தால் போ

வாவு - உலாவு

உசக்க - மேலே

ஈராட்டி - காற்று தணிதல்

செக்கல் - படுபொழுது

சிவல் - மீன் கூட்டம்

காத்து ஈராட்டி - மீன் பிடிப்பதற்கான அமைதியான சூழ்நிலை

கணியம் - மீன்படுகின்ற நல்ல நாட்கள் நேரங்களை பார்த்து கணித்து சொல்வது

சவல - வலி பலகை - வள்ளத்தை சவலால் வலிக்கிறது கம்பு எட்டாத இடங்களுக்கு இதை பயன்படுத்துதல்

துவர் வைத்தல் - கண்டல் மரப்பட்டையை இடித்து, அவித்து சாறு எடுத்து அதில் வலையை தோய்த்து வலைக்கு சாயமிடுதல்

அடக்கட்டை - வள்ளத்தை கரையில் சேர்ப்பதற்கு பயன்படுத்தும் கட்டை

ஆத்துவாய் - வெள்ளத்துக்கு நீரை வெளியே நிரப்புவதும் திரும்பி அதனை இழுப்பதும். இதனை முகத்துவாரம் என்று அழைப்பர்

விலகப் போதல் - தூரப் போகுதல்

சாம வெள்ளி - நடு இரவில் தோன்றும் வெள்ளி

முதற்சாமம் - சாம வெள்ளி தெரியும் நேரம்

கப்பலா வெள்ளி - குப்புற விழுந்தால் துப்பறவா விடியும் என்பர்

குருசு வெள்ளி - சிலுவை வடிவில் உள்ள நட்சத்திரம்

## மீன்பிடித் தொழிலோடு தொடர்புடைய சொற்கள் (பெயர்கள்)

சம்மாட்டி - சமனோட்டி, முதலீடு செய்பவர், முதலாளி என்றும் அழைப்பர்

இழுவைக்காரர் - வலை இழுப்பவர்

சேர்ந்தாள் - தொடர்ச்சியாக வேலைக்கு செல்பவர்

இழுவக்காரன் - இடைக்கிடையே தொழிலுக்கு செல்பவர்

போர்த்தியர் - தொழிலை வழிநடத்துபவர்

குத்தககக்காரன் - கோயிலுக்குரிய குத்தகை எடுப்பவர்

தொழிலாளி - சம்மாட்டி, போத்தியர், மன்றாடி போன்றோரின் சொற்கேட்டு செயற்படுபவர்கள்

மண்டாடி - பிரதான உதவியாளர், சம்மாட்டிக்கு அடுத்த ஆள் இவர் கால நேரம் கணியம், நீரோட்டம் தொழில் நுணுக்கங்கள் என்பவற்றை கணித்து மீன் கூட்டங்களின் கரையேற்றம் என்பவற்றை நுட்பமாக அறிந்து கொண்டு தொழிலை நடத்துபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீன்பிடித் தொழிலோடு தொடர்புடைய சொற்கள்

| | | |
|---|---|---|
| கம்பாங்கயிறு | - | பெரிய அகன்ற கயிறு |
| தண்டு | - | தோணி செலுத்த பயன்படுத்தப்படும் தடி |
| சுப்பு வலை | - | கரையில் வீசி மீன்படிக்கும் சிறிய வலை |
| மண்டா | - | பெரிய மீனினங்களை குத்திப்பிடிக்கும் கருவி |
| தூண்டில் | - | மீனைக் கொழுவி இழுத்துப் பிடிக்கும் கருவி |
| தெல்லி | - | மீன்களை பிடித்துப் போடும் ஒருவகைப்பை |
| பிணை | - | வலையை மிதக்க செய்யப்படும் பொருள் |
| மகுளி | - | மீனினுள்ள வழுவழுப்பான பொருள் |
| வள்ளம் | - | மரக்கலம் |
| தண்டு மரம் | - | தண்டு வலிக்கிறது |
| மரக்கா கம்பு | - | வள்ளத்தை தாங்கும் தடி |
| கம்பான் கயிறு | - | பெரிய கயிறு |
| மாடி | - | திருக்கை போன்றவற்றிலுள்ள வழுவழுப்பான பொருள் |
| சவல் | - | தோணியை விரும்பிய திசைக்கு செலுத்த பயன்படும் தடி |

### வெவ்வேறு மீன்பிடி வகைகள்

| | | |
|---|---|---|
| பட்டிவலை | - | பட்டிபோன்ற அமைப்பில் வலையை போட்டு மீன்பிடிக்கும் வலை |
| தொட்டி வலை | - | பட்டி வலை போன்றது |
| மடவலை | - | கடலில் நீரில் தாழும் வலை |
| மேவலை | - | கடலில் மிதக்கும் வலை |
| கரவலை | - | கடலில் குறிப்பிட்ட தூரத்திற்கு வள்ளத்தில் சென்று வலை வீசப்பட்டு பின் கரைக்கு இழுக்கப்பட்டு மீன் பட்டிருப்பதை அறியும் தொழில் முறை. |
| மாய வலை | - | கரையோரத்தில் வீசப்படும் மீன்பிடிக்கும் வலை |
| இழுப்பு வலை | - | வலையை வளைத்து வீசி இழுக்கும் வலை |
| கரை வலை | - | கயிற்றால் முடிக்கிறது |
| நூல் வலை | - | நூலால் முடிக்கிறது |
| நெத்தலி வலை | - | நெத்தலி மீன் பிடிக்கும் வலை |
| அடிசி வலை | - | பெரிய மீன்களை பிடிக்கும் வலை |
| கம்பான் கயிறு | - | கரைவலை முடியுறது |

## விவசாய சமூகம்

### விவசாயத்தோடு தொடர்புடைய பொதுவான சொற்கள்

| | | |
|---|---|---|
| வெள்ளாமை | - | விவசாயம் |
| கமம் | - | விவசாயம் செய்யும் வயல் |
| வயல் செய்தல் | - | வேளாண்மை செய்தல் |
| புலவு | - | குளத்திற்கு மேலே விவசாயம் செய்யும் இடம் |
| புழுதி உழுதல் | - | வறண்ட நிலத்தை உழுது அதில் நெல்லை விதைத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரும் போகம்** - பெரிய அளிவிலான பயிர்ச் செய்கை பெருந்தொகை நிலப்பரப்பில் நீண்ட காலம் பயிரை விதைப்பது

**சிறு போகம்** - சிறிய அளவிலான பயிச் செய்கை சிறு தொகை நிலப்பரப்பில் குறுகிய காலம் பயிரை விதைப்பது

**இடைப்போகம்** - இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் பயிரை செய்வது

**கன்னட்டி** - சின்ன வயல்

**கம்பு** - தடி

**கமவிதானை** - நீர்ப்பாசன சேவையாளர்

**குளதிகாரி** - குள அதிகாரி

## நெல் விதைப்போடு தொடர்புடைய சொற்கள்

**விதைப்பு** - நெல்லை வயலில் வீசி விதைத்தல்

**நெல்லுப் போடுதல்**- விதைப்பிற்கு தயாரான வயலில் நெல்லை விதைத்தல்

**தரிசு உழவு** - முதன்முதலாக நிலத்தை உழுவது

**இரட்டிக்கிறது** - இரண்டாவது தடவையாக உழுவது

**கலத்குறது** - இறுதியாக உழுவது

**வரப்பு** - வரம்பு

**வரப்பு வெட்டுதல்** - வரம்பு வெட்டுதல், வயலில் நீர் தேங்கி நிற்பதற்கு வசதியாக வயல்களை பிரித்து நீண்ட ஒடுங்கிய மணல் மேடுகளை உருவாக்கல்

**பலகை அடிக்கிறது** - விதைப்பதற்காக நெல்லை சாக்கில் கட்டி குளத்து நீரில் நனைய விடல்

**கால் பரவுறது** - விதைத்த பின்னர் வயலில் தேங்கி நிற்கக் கூடிய சிறிய அளவிலான நீரை வெளியேற்றுவதற்காக காலால் சிறிய வாய்க்கால்களை உருவாக்கல். இதை 'கால்வாகுதல்' என்றும் கூறுவர்.

**அள வைக்கிறது** - விதைத்த பின்னர் வயலில் தேங்கி நிற்கக் கூடிய நீரை வெளியேற்றுவதற்காக மண்வெட்டியால் சிறிய வாய்க்கால்களை உருவாக்குதல்.

**மின்னல் கீறுறது** - விதைத்த பின்னர் வயலில் தேங்கி நிற்க கூடிய சிறிய அளவிலா நீரை வெளியேற்றுவதற்காக மண்வெட்டியால் மிகச்சிறிய வாய்க்காய்களை உருவாக்கல்.

**வக்கட்டை வெட்டுதல்** - நீர் பாய்ச்சுவதற்காக வரப்பிற்கு குறுக்காக சிறிய வாய்க்காலை ஏற்படுத்தல்

**வக்கடை கட்டுதல்** - நீர் பாய்ச்சுவதற்காக வரப்பிற்கு குறுக்காக வெட்டிய சிறிய வாய்க்காலை மூடுதல்

**தொழிற் தண்ணி வடிக்கிறது** - விதைத்த பிறகு உடனடியாக கடத்தப்படுகின்ற நீர். இதனை மேலதிக கழிவு நீர் என்பர்

**நாத்து நடுகிறது** - நாற்று நடுதல். பயிர்களை வயலில் நடுவது.

**கங்கள தண்ணி விடுறது** - விதைத்த பிறகு நெல் முளைத்த பிறகு முதலில் பாத்து கடத்திவிடப்படும் நிர்.

**கம்பிக்கட்டுதல்** - நெல் உருவாகும் பருவத்திற்கு முன்னர்

 Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org 

| | | |
|---|---|---|
| குடலை | - | நெல் உருவாகும் பருவம் |
| காய மடக்கம் | - | நெல் மணிகள் வந்த பிறகு மேல உள்ள கதிர் மடங்குதல் |
| பால் பருவம் | - | குடலைப் பருவத்திற்கு அடுத்த பருவம் |

### விவசாயத்தோடு தொடர்புடைய பொருட்கள்

| | | |
|---|---|---|
| கவுறு | - | கயிறு |
| மம்மட்டி | - | மண்வெட்டி |
| கலப்பை | - | உழுவதற்கு பயன்படும் உபகரணம் |
| நுகம் | - | வண்டியோடு மாடுகளை இணைக்கும் நீண்ட தடி |
| தாக்கத்தி | - | அரிவு வெட்ட பயன்படும் வளைந்த கத்தி |
| அருமிலாறு | - | கூழத்தை அகற்றும் மிலாறு |
| பொலிமிலாறு | - | கூழத்தை அகற்றும் மிலாறு |
| வள்ளக் கை | - | வயலில் பலகை அடிக்கும் போது இரண்டு மாடுகளை இணைத்து பூட்டப்படும் தடி |
| ஆப்பு | - | இணைக்கும் இரண்டு மரச்சட்டத்தின் இடைவெளியில் வைக்கும் சிறிய தடி |
| வாச்சி | - | மரம் சீவும் ஒரு தளபாடம் |
| ஏர்க்கால் | - | கலப்பையையும் மாடு பூட்டிய தடியையும் இணைக்கும் நீண்ட மரத்தடி |
| நுகக் கயிறு | - | வண்டியோட்டுபவர் பிடித்திருக்கும் கயிறு. இது நுகத்தில இருந்து வரும் கயிறு ஆகும். |
| மேழி | - | கலப்பையை செலுத்துபவர் பிடித்திருக்கும் தடி. இதனால் தான் கலப்பை செல்லும் திசை தீர்மானிக்கப்படும் |
| வேலக்காரங்கம்பு | - | சூடடித்த பின் நெல்லிருந்து வைக்கோலை வேறாக பிரிக்க உதவும் இதனை உதர்கம்பு எனவும் அழைப்பர் |

### நெல் அறுவடையோடு தொடர்புடைய சொற்கள்

| | | |
|---|---|---|
| விளைச்சல் | - | அறுவடைக்கு தயாரான நெற்பயிர் |
| கதிர் | - | நெற்பயிர் நெல் மணிகளை கொண்டுள்ள நிலை |
| அரிவு வெட்டல் | - | விதைத்த நெற்கதிர்களை அறுவடை செய்தல் |
| வாரி | - | அதிக விளைச்சல் |
| பொலி | - | வைக்கோல் அகற்றப்பட்ட நெல்மணிகள் |
| சூடு | - | வெட்டிய நெற்கதிர்களை ஒன்றன் மேல் ஒன்றாக பாதுகாப்பாக அடுக்கி வைப்பது |
| வைரப் போலி | - | நல்ல நெல்லும் பதரும் சேர்ந்தது |
| கருக்கா | - | பதர் நெல், சாவி நெல், சப்பி நெல் |
| கட்டக்கந்து | - | சிறிய சூடு |
| வைக்கோல் | - | நெல்மணிகள் அகற்றப்பட்ட கதிர்கள் |
| கத்த | - | வைக்கோலை திரித்து கயிறு போன்று உருவாக்குவது |
| புரி | - | வைக்கோலை கொண்டு பின்னப்படும் கயிறு |
| வைக்கோல் | - | நெல் மணி வேறாக்கப்பட்ட பின் உள்ள நெற்கதிர் பகுதி |
| கதிர்மிரி | - | மாடுகளை கொண்டு கதிர்கட்டுக்களை உழக்கி அல்லது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவு இயந்திரத்தால் அடித்து நெல்லையும் வைக்கோலையும் வேறாக்குதல்

| | | |
|---|---|---|
| கட்டுஉதரி | - | நெல் மணிகள் |
| உப்பட்டி | - | ஒரு கைபிடி விளைந்த நெற்கதிரை களக்கத்தினால் அறுத்துப் போடுவது |
| மாவக்கை | - | 7 அல்லது 8 உட்பட்டி சேர்ந்தது |
| கதிர்கட்டு | - | 8 மாவக்கை சேர்ந்த பெரிய கட்டு |
| களம் | - | வெட்டிய நெற்கதிர்களை மிதிப்பதற்காக ஒன்று சேர்க்கின்ற இடம் |
| சவளம் | - | கதிர் அடிக்கப்படும் நெல் அகற்றப்பட்ட வைக்கோல் |
| பொலிக்கொடி | - | சவளம் எடுத்தப்பிறகு உள்ள நெல் |
| செண்டல் | - | மிதி மிதிக்கும் போது நடுவில் உள்ள கதிர்கள் |
| கட்டுமூடை | - | சாக்கு 6 மரக்கால் நெல்லை அளந்து கட்டுவது |
| ஒட்டு | - | வெள்ளாமை வெட்டிய பின் நிலத்துடன் மிகுதியாக இருக்கும் கதிரின் கீழ்ப்பாகம் |
| களத்துக் கஞ்சி | - | சூடடிக்கும் இடத்தில் சமைக்கும் உணவு. இதனை களச் சோறு எனவும் அழைப்பர் |
| கடாங்கி | - | பட்டறையில் பல மாதங்களுக்கு நெல் பழுதடையாமல் பாதுகாப்பாக பேணப்படும் இடம் |
| குல்லம் | - | நெல் அள்ளுவதற்கு பயன்படும் சுளகு |
| வெட்டு | - | அரிவு வெட்டுதல் |
| மிதி | - | கதிர் மிதி |
| பட்டறை | - | வீடுகளில் நெல்லை சேர்த்து வைக்கும் இடம் |
| புதிர் | - | புதிதாக விளைந்த நெல்லை குற்றி புதிய பானையிலிட்டு சமைத்து விருந்துண்ணல் |

### மாடுகளை வழிநடத்துவதற்குரிய ஒலிகள்

| | | |
|---|---|---|
| ஓகோ | - | வலப்பக்கம் மாட்டை உசார்ப்படுத்தி திருப்புதல் |
| ஒவ் | - | மாட்டை நிற்பாட்டுவதற்குரிய ஒலி |
| ஆ | - | மாடு நேரே போவதற்குரிய ஒலி |
| ஆப் | - | எருமை மாட்டை நிற்பாட்டுவதற்குரிய ஒலி |
| யா | - | மாட்டை திரும்பச் செய்வதற்குரிய ஒலி |
| பொலி | - | மாட்டினால் சூடடிக்கும் போது மாடுகளை வளைந்து வர வேண்டும் என்பதற்கான ஒலியாக பொலி பொலி பொலி என்று கூறுவர் |

### விவசாயம் சார்ந்த அளவைகள்

| | | |
|---|---|---|
| பூசல் | - | மரத்தாலான அளவைப் பெட்டி |
| சேரு | - | வெங்கலத்தாலான அளவைப் பெட்டி |
| சுண்டு | - | தகரத்திலான சிறிய அளவைப் பாத்திரம் |
| கொத்து | - | மூன்று சுண்டு ஒரு கொத்து |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கால் - 16 கொத்து ஒரு மரக்கால்
மூடை - 6 மரக்கால் ஒரு மூடை

**இஸ்லாமிய சமூகம்**
**பெயர்ச் சொற்கள்**

**வலிமா** - திருமணச் சாப்பாடு
**நாசா** - நேர்த்திச் சாப்பாடு
**கந்தச் சோறு** - இறப்பு வீடு
**கந்தூரி** - பள்ளிவாசலில் கொடுக்கப்படும் உணவு
**சகன்** - கூட்டமாக சாப்பிடுதல்
**இறப்பிடித்தல்** - சொல்ல சொல் கேட்பதில்லை
**ஈக்கி** - இருக்கிறது
**வேணும்** - வேண்டும்
**பையன்** - அமதுவா
**நோகு** - நோவு
**மௌத்து** - இறப்பு
**மையம்** - பிரதேசம்
**வாங்கு** - பள்ளியில் தொழுகை
**துறப்பு** - திறப்பு
**மூச்சி** - முகம்
**மோறக்கட்டை** - முகம்
**ஊடு** - வீடு
**ஊரு** - ஊர்
**நேத்து** - நேற்று
**அந்திக்கு** - பின்னேரம்
**சலுவுறனு** - தனகிறது
**கொணறு** - கிணறு
**கொணறு** - விடியற்புரம்

பிறரை அழைப்பது

**அபா** - இங்கே வாங்க
**இங்கே** - தெரியாத ஆளை அழைப்பது
**பிள** - பெண்டாட்டியை புருஷன் அழைப்பது
**என்னங்க** - கணவனை மனைவி அழைப்பது
**என்ணோ** - என்ன
**ஒன்டை** - உன்னுடைய
**வ்வ** - இவர்

**உறவு முறைகள்**

கண்ணா
**கண்ணம்மா** - அம்மம்மா
உம்மம்மா
வாப்புச்சி
வாப்பம்மா
**முத்தாச்சி** - அம்மாவின் அம்மா
பூமா
**சாச்சி** - சித்தி
**சாச்சப்பா** - சித்தப்பா
**பெரிய வாப்பா** - அப்பாவின் அண்ணன்
**மச்சி** - மைனி - மாமாவின் மகள்
**மச்சான்** - மஸ்னா - மாமாவின் மகன்
**ரத்தா** - அக்கா
**காக்கா நாணா** - அண்ணா

**பின்னிணைப்பு**

மன்னார் மாவட்டத்தில் உள்ள பள்ளிமுனை மற்றும் விடத்தல்தீவு கிராமங்களில் பிரத்தியேகமான பேச்சு வழக்குகள் உண்டு. அவை கீழே தரப்பட்டுள்ளன.

**பள்ளிமுனை**

**ஜோடா** - சோடா
**யகோதரம்** - சகோதரம்
**கலட்டு** - வேறாக்குதல்
**சுறுக்கவா** - விரைவாய் வா
**ஆவட்ட** - களைப்பு
**சோவட்ட** - களைப்பு
**அசுக்கிறீம்** - ஐஸ்கிறீம்
**பெத்த மவன்** - பெற்ற மகன்
**பிடிச்சாக்க வாறன்** - பிடித்தால் வருகிறேன்

**விடத்தல்தீவு**

**றைச்சி** - இறைச்சி
**ஒண்டுல** - ஒற்றுமை
**அப்பேக்க** - அப்பொழுது
**உரப்புறது** - விரட்டுதல்
**கேளன** - கேள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உறவு முறைகள்

**சித்தி** - அம்மாவின் தங்கை
**சின்னம்மா** - அம்மாவின் தங்கை
**சின்னாச்சி** - அம்மாவின் தங்கை
**சின்னாத்தா** - அம்மாவின் தங்கை
**சித்தா** - அம்மாவின் தங்கை
**குஞ்சியம்மா** - அம்மாவின் தங்கை
**அன்ரி** - அம்மாவின் தங்கை
**பெரியப்பா** - அப்பாவின் அண்ணன்
**சித்தப்பா** - அப்பாவின் தம்பி
**சின்னய்யா** - அப்பாவின் தம்பி
**குஞ்சி அப்பு**- அப்பாவின் தம்பி
**குஞ்சி** - அப்பாவின் தம்பி
**சீனி அப்பு** - அப்பாவின் தம்பி
**அப்பப்பா** - அப்பாவின் அப்பா
**அப்பையா** - அப்பாவின் அப்பா
**தாத்தா** - அப்பாவின் அப்பா
**அப்பு** - அப்பாவின் அப்பா
**மைனி** - அண்ணனின் மனைவி
**மைத்துணி** - அண்ணனின் மனைவி
**அண்ணி** - அண்ணனின் மனைவி
மச்சாள் - மாமாவின் மகள் அண்ணனின் மனைவி
மச்சி - மாமாவின் மகள்
மச்சான் - மாமாவின் மகன், அக்காவின் கணவன்
மச்சாப்புள்ள - மாமாவின் மகள்
**அத்தான்** - மாமாவின் மகன், அக்காவின் கணவன்
**மச்சினன்** - மச்சான்
**அத்தை** - மாமி
**மாமா** - தாயின் சகோதரம்
**அம்மான்** - தாயின் சகோதரம்
**சின்ன மாமா** - தாயின் சகோதரம்

### திரிபுபட்ட சொற்கள்

**பிலேனா** - பிலோமினா
**சற்சோன்** - சென்யோண்
**மாக்கா** - மார்த்தாள்
**சாங்கம்** - சாயல்

### வங்காலை மக்கள் சென்று மீன் பிடிக்கும் இடங்கள்

("மடி நிறைய மச்சம் தாரும் மைய வாடி ஆண்டவரே என்று பாடி வலை இழுப்பர்")
பாட்டோடைப்பாடு
நடுப்புட்டி பாடு
பீஞ்சில் பாடு
சின்னத்தாள் குருசு பாடு
கண்டலடிப்பாடு
நடுத்தாளப்பாடு
புல்வெளிப்பாடு
இலந்தையடிப்பாடு
கிணத்தடிப்பாடு
கள்ளொதுக்குப்பாடு
கீரியடிப்பாடு
ஆத்துவாய்ப்பாடு
**நடுப்புட்டிப்பாடு** - கீரியடியாறு
**சின்னம்மான்** - தாயின் சகோதரம்
**குட்டி மாமா**- தாயின் சகோதரம்
**சீனி மாமா** - தாயின் சகோதரம்
**பெரிய மாமா** - தாயின் மூத்த சகோதரம்
**பெரியம்மான்** - தாயின் சகோதரம்
**சீனி மாமி** - சின்ன மாமி
**சீனி ஆச்சி** - சின்னம்மா
**சீனி அப்பு** - சித்தப்பா
**சகலன்** - ஒரே குடும்பத்தில் அக்கா, தங்கையை திருமணம் செய்தவர்கள்

### விளையாட்டுக்கள் சார்ந்த வட்டார வழக்குகள்

பாடிகட்டுதல்
ஏப்பந்து
சுரக்காய் பறித்தல்
கிச்சு மாச்சுத் தம்பளம்
கிட்டியடித்தல்
அன்ன ஊஞ்சல்
சடுகுடு
மாம்பட்டை

### ஆலயத்தோடு தொடர்புடைய சொற்கள்

**சுற்றுப்பிரகாரம்** - பவனி
**சுருவலக் கூடு** - சுருபக் கூடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொயில் மருந்து - கோயில் மருந்து

கோயில் காக்கிறது- நோய், துன்பம் போன்றவற்றிற்காக கோயிலுக்குச் சென்று சிலநாட்கள் ஆலயத்தில் தங்கி செபம் பாடல்கள் படித்து அங்கு உண்டு உறங்கி நேர்த்தியினை நிறைவேற்றி வருதல்

கோயில் சோறு காச்சுறது - ஊர் மக்கள் ஒன்றுகூடி ஆலயத்தில் சோறு சமைத்து சாப்பிடுதல்

## ஆலயத்தோடு தொடர்புடைய நபர்கள்

விஸ்பாண்டவர் - ஆயர்

மூப்புச்சுவாமி - குருமுதல்வர்

கட்டளைக்குரு - பங்குத்தந்தை, கட்டளைச்சுவாமி என்றும் அழைப்பர்

கட்டளைக்காரர் - ஆலய நிர்வாகத்தினர்

கணக்கர் - ஆலய நிர்வாக கணக்குகளுக்கு பொறுப்பானவர்

மூப்பர் - கட்டளைக்காரர் முழுவில் மூப்பரே முதன்மை அங்கத்தவரும் ஊரின் தலைவரும் ஆவார். கட்டளைக்குருவின் பங்குக் குரு ஆலோசகர் ஆவார். இவரின் சொல்லுக்கு மக்கள் மதிப்பு கொடுத்து நடப்பார்கள். திருமணம் போன்ற பொதுக் கொண்டாட்டங்களுக்கு இவருக்கு முதலிடம் கொடுக்கிறது.

சங்கீர்த்தம் - ஆலயத்தில் நடக்கும் திருப்பலி மற்றும் இறந்த வீடுகளில் பொது செபத்தை தொடங்கி வைத்து பிரார்த்தனை சொல்லி வழிபாட்டிற்கு உதவுகிறார். ஆலய ஊர் வழமைகளை மீறி திருமணம் செய்பவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பவராகவும் இருக்கிறார். திருப்பலி இல்லாத ஞாயிறு நாட்களில் பூசைத் தியானம் நடத்துபவர்.

கணக்காளர் - சிறாப்பர் அல்லது குத்தகைக்காரர் என்றும் அழைக்கப்படுகிறார். தொழிலாளர்கள் அரச அலுவலர்களிடம் குறிப்பிட்ட வீதாசாரபடி பணம் அறிவிட்டு மாதாந்தம் நடைபெறும் கூட்டத்தில் ஒப்படைக்கிறார். ஆலய கணக்கிற்கு பொறுப்பானவர்.

மொடுதம் - இறந்த வீடுகளில் இறந்தவர்களின் உடலை மொடுதாரித்தல் இவர் பணியாகும்.

பிலசந்தி - பெருசந்தி என்று அழைப்பர். மூப்பவருக்கு அடுத்ததாக இருப்பவராவர். திருமண விருந்து நடக்கும் போது மூப்பர் பிலசந்தியர் சங்கீத்தம் ஆகியோர் இல்லாவிட்டால் அந்நிகழ்வு நிறைவாக அமையாது.

மெலிஞ்சி - ஆலயத்தை பராமரிப்பவர் ஆவர். வழிபாட்டு நேரங்களை மக்கள் அறிந்து கொள்ள ஆலய மணி அடிக்கின்ற கடமை செய்கிறார். ஊரில் விசேட நிகழ்வுகள் நடந்தால் மணி அடித்து ஊருக்கு அறிவிக்கிறார். யாரும் இறந்து போனால் துக்க மணி அடிக்கிறார்.

முற்றிரக்காரன் - ஆலயப் பணிகளில் ஈடுபடுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுக் கூத்து நாடகங்களோடு தொடர்புடைய சொற்கள்

| | | |
|---|---|---|
| **இராயன்** | - | அரசன் |
| **ராசா** | - | அரசன் |
| **மேஸ்திரி** | - | உடுப்பு முடிகளுக்கு பொறுப்பானவர் |
| **ஒப்பனையாளர்** | - | மேக்கப் செய்பவர் |
| **புல சந்தோர்** | - | கதை கூறுபவர் |
| **கட்டியக்காரன்** | - | கட்டியம் கூறுதல், பாத்திரங்களின் வருகை கூறுதல் |
| **சாம்பன்** | - | நாட்டுக்கூத்து நாடகங்களை எழுதுபவர் நாடக அரங்கத்தின் போது இவரே நாடக கொப்பியை கையில் வைத்திருப்பார். |
| **கன்னிக்கம்பு** | - | நாடக மேடை பந்தல் போடும்போது முதலில் சம்பிரதாய பூர்வமாக நாட்டப்படும் முதல் கம்பு அல்லது தடி |
| **வரகவி** | - | கவிதை சிந்தனைக்கு வரவர மனதில் தோன்றுவதற்கு ஏற்ப கவிதைகளை பாடிக் கொண்டிருப்பவர்கள் |
| **அண்ணாவி** | - | நாட்டுக்கூத்து நாடகங்களை பழக்குபவர் |
| **மத்தள அண்ணாவியார்** | - | நாடகத்தை பழக்கும்போது ஆட்டத்தைக் கற்றுக் கொடுப்பவர். நாடகம் முழுவதும் இவரே மத்தளம் அடிப்பார். |
| **ஏடு அவிழ்த்தல்** | - | நாடகம் பாட ஆயத்தம் ஆகும் போது நாடக ஏட்டினை அண்ணாவியார் எடுத்து வர ஊர் மக்கள் ஊர் பெரியவர்கள் ஆலயத்தில் கூடி செபமாலை தியானம் செய்து அவ்வூரின் வேண்டுதல் சொல்லி மக்கள் குறை போக்க பிரார்த்தனை செய்து புனிதர்களின் பரிந்துரையைக் கேட்டு ஏட்டினை பீடத்தில் வைத்து நேர்த்தி கட்டி ஏட்டை அவிழ்ப்பர். |
| **பட்டோலை வைபவம்** | - | நாடகத்தின் பாத்திரங்கள் இன்னாருக்கு இன்ன பாத்திரம் என எழுதப்பட்ட ஒரு காகிதத் துண்டு முதலில் வழங்கப்படுகின்றது. இச்சடங்கினை பட்டோலை வைபவம் என்பர். |
| **சலங்கை** | - | முதல் முதல் நாடகம் நடிப்பவர்களுக்கு அண்ணாவியார் கட்டிவிடுவார். இதற்கு கைமாறாக புதிய நடிகர் ஒரு அன்பளிப்பு வழங்குவார். |

*குறிப்பு - கட்டுரை ஆசிரியரால் ஏற்கனவே அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட நூலில் இடம்பெற்ற விடயங்களும் இங்கு சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன.*

---

## வெற்றி

**முதலில் அவர்கள் உன்னை உதாசீனம் செய்வார்கள்,**
**பிறகு கேலி செய்வார்கள்,**
**அதன் பிறகு சண்டையிடுவார்கள்,**
**கடைசியில் நீ வென்றுவிடுவாய்.**

**- மகாத்மா காந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறையைச் சேர்ந்தவரும் முத்தரிப்புத்துறையில் வாழ்ந்தவருமான

# கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவரின் வாழ்வும் படைப்புக்களும்

- ஓர் ஆய்வு நோக்கு -

அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார்

## வாழ்க்கைச் சுருக்கம்

மரியாம்பிள்ளைப் புலவர் யாழ்ப்பாணம் நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.[1] இவருடைய தந்தையார் பெயர் கிறிஸ்தோ அல்லது கிறிஸ்தோப்பு ஆகும். இவரும் ஒரு மரபுவழிப் புலவர் ஆவார். மரியாம்பிள்ளை அவர்கள் நாவாந்துறையில் றோசம்மா என்ற பெண்ணை முதலில் மணந்து கித்தோரி என்று அழைக்கப்பட்ட விக்ரோறியா என்ற பெண் பிள்ளையைப் பெற்றார். றோசம்மா இறந்தபின்னர் கனகம் என்று அழைக்கப்பட்ட ஆகத்தம்மா என்ற பெண்ணைத் திருமணம் முடித்து பரிமளம் என்று அழைக்கப்பட்ட இன்னேசம் என்ற பெண் பிள்ளையைப் பெற்றார்.

இவர் இளைஞனாக இருக்கும் போது மன்னார் மாவட்டத்தில் உள்ள முத்தரிப்புத் துறையில் வந்து குடியேறினார். முத்தரிப்புத் துறையில் மாசில்லா என்பவரைத் திருமணம் செய்த இவருக்கு அன்ரனி திரேசியான் என்ற ஒரே மகன் இருந்தார்.[2] புலவர் இறந்தபிறகு அவருடைய மனைவி மாசில்லா மறுமணம் செய்து முத்தரிப்புத்துறையிலேயே வாழ்ந்துள்ளார்[3]

முருங்கன் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் புலவர்மேல் கொண்ட அன்பின் காரணமாக முத்தரிப்புத்துறை ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு காணியை புலவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்கள். இந்தக் காணியிலேயே இவர் வீடு கட்டி வாழ்ந்துள்ளார். இவ்வீட்டில் புலவரின் மகன் அந்தோனி திரேசியான் வாழ்ந்துள்ளார்.[4] புலவர் ஒரு மடுத்திருவிழாவுக்குச் சென்றபோது அங்கு மடு அன்னையின் திருச்சுருபப் பவனி வந்தவேளை, "இப்பதியைவிட்டு அப்பதிக்கு என்னை எடுத்துக்கொள்ளும்" என்ற வகையில் ஒரு பதிகம் பாடினார் என்றும் அதன்படி அவ்வேளையிலேயே அவர் உயிர் பிரிந்தது என்றும் சொல்லப்படுகிறது. புலவருடைய இறப்புத் தொடர்பான இந்தத் தகவலை உறுதிப்படுத்த வேண்டி உள்ளது.

## படைப்புக்கள்

புலவருடைய படைப்புக்களை அவருடைய ஒரே மகனாகிய அன்ரனி திரேசியான் அவர்கள்தான் கையகப்படுத்தி வைத்திருந்தார் என்று அறியப்படுகின்றது. ஆயினும் அவருடைய மறைவோடு அப்படைப்புக்களும் காணாமல் போய் விட்டமை கவலையளிக்கும் விடயமாகும். தற்போது எமது தேடலில் நாம் பெற்றுக்கொண்ட, நாம் அறிந்துகொண்ட படைப்புக்களை மட்டும் அடிப்படையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தே இந்தக் கட்டுரை எழுதப் படுகின்றது.

மரியாம்பிள்ளைப் புலவர் பல வகையான கலை இலக்கியப் படைப்புக்களை எழுதியுள்ளார். நாட்டுக்கூத்து நாடகங்கள் (வாசாப்புக்கள்), அம்மானைகள், பல்வேறு வகையான கவிகள் எனப் பலவற்றைப் படைத்துள்ளார்.

## நாடகங்கள்

கிறித்தோ மரியாம்பிள்ளைப் புலவர் அவர்கள் சில நாட்டுக்கூத்து நாடகங்களை குறிப்பாக ஒரு இரவு பாடி ஆடப்படும் வாசகப்புக்களை எழுதிக்கொடுத்துள்ளார். அவை பற்றிய விபரங்களைக் கீழே காணலாம்.

## ஊசோன் பாலந்தை நாடகம்

ஊசோன் பாலந்தை என்ற நாடகம் தொடர்பான குறிப்பு மரியாம்பிள்ளைப் புலவர் அவர்கள் எழுதிய மடுமாதா அம்மானை நூலின் முதலாவது பதிப்பின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மரியாம்பிள்ளைப் புலவரின் தந்தையார் கிறித்தோ புலவர் அவர்கள் இந்நாடகத்தை எழுதியதாகவும் இந்நாடகம் முற்றுப்பெறாத நிலையில் மரியாம்பிள்ளைப் புலவர் அவர்கள் இந்நாடகத்தை பூர்த்திசெய்து எழுதியதாகவும் அந்தக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. ஊசோன் பாலந்தை என்ற இந்நாடகம் புகழ்பெற்ற ஒரு நாடகமாகும். இது இன்றும் யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் - நாவாந்துறை, மெலிஞ்சிமுனை போன்ற இடங்களில் - பல ஆண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.[5] இந்நாடகம் ஒரு இரவுக் கூத்தாகச் சுருக்கப்பட்டு மாதகல், முல்லைத்தீவு, பருத்தித்துறை, மண்டைதீவு எனப் பல்வேறு பிரதேசங்களில் மேடையேற்றப்பட்டுள்ளது.

## சந்தியோகுமையோர் வாசாப்பு
### (புனித சந்தியோகுமையோர் நாடகத்தின் ஒரு பகுதி)

முருங்கன் புனித சந்தியோகுமையோர் ஆலய மக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க புனித சந்தியோகுமையோர் வாசாப்பை இவர் எழுதிக்கொடுத்துள்ளார். முருங்கன் புனித சந்தியோகுமையோர் ஆலயத்தைச் சேர்ந்த மக்கள் முற்காலத்தில் முருங்கன், ஆவணம், முள்ளிக்கண்டல் (தேனுடையான்) என மூன்று கிராமங்களைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். முருங்கன் புனித சந்தியோகுமையோர் ஆலய மக்கள் மரியாம்பிள்ளைப் புலவரிடம் தமக்கென ஒரு நாடகத்தை எழுதித்தரும்படி கேட்ட சூழ்நிலை மிகவும் சுவாரஸ்யமானது.

இந்த மக்கள் தமக்கென்று ஒரு நாடகம் இல்லாத நிலையில் முருங்கன் சுண்டிக்குளிப் புலவரின் பரம்பரையில் வந்த – சுண்டிக்குழியில் வாழ்ந்த **'சின்னச் சமரர்'** என்று அழைக்கப்பட்ட **அந்தோனி பிலிப்பு நேரிசு'** என்ற புலவரிடம் சென்று தமக்கு ஒரு நாடகம் எழுதித்தரும்படி கேட்டுள்ளனர். இவர்களின் கோரிக்கைக்கு அமைவாக இந்தப் புலவர் **விக்றோறி** என்னும் நாடகத்தை சில நிபந்தனைகளுடன் பாடிக்கொடுத்துள்ளார். இதுபற்றிய குறிப்பை திரு. பெஞ்சமின் செல்வம் அவர்கள் எழுதிய **மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம்** என்னும் நூலில் காணலாம்.[7]

இந்த மக்கள் தம்மைவிட உயர்ந்துவிடக்கூடாதென்ற உள்நோக்கம் கொண்ட இந்தப் புலவர் தான் எழுதிக்கொடுத்த நாடகத்தில் 'அறம்' பாடிக்கொடுத்தார் என்று அறியமுடிகிறது.[8] அறம் பாடுதல் என்பது தீமை விளையவேண்டும் என நினைத்து தீய நோக்கத்தோடு பாடப்படும் பாடலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்களின் இத்தகைய பாடல்கள் பலிக்கும் என்ற நம்பிக்கை பொதுவாக கிராமப்புற மக்களிடம் உண்டு.
சின்னச் சமரர் என்ற அந்தப் புலவர் எழுதிக்கொடுத்த நாடகத்தில் ஒரு பாடல் இவ்வாறு உள்ளது.

**"கட்டண்டார் தாலியைக்**
**கிட்டக்கொண்டேகினேன்**
**அத்தருணத்தில் அவள்**
**செத்த குரல் வைத்து**
**அழுதார்கள்**
**அண்டைக்கவன**
**ஆகாதெண்டு கண்டேன்**
**பூவில் வெகு நன்மை**
**ஆச்சே"[9]**

இதில் 'அறம்' பாடப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகவே அறிந்துகொள்ள முடிகிறது. இந்த நாடகம் அரங்கேற்றப் பட்டபின்னர் முருங்கன் சந்தியோகுமை யோர் ஆலயத்தைச் சார்ந்த மக்கள் சமுதாயத்தில் மரணங்கள் அதிகரித்தன; பிள்ளைச் செல்வம் இல்லாமல்போனது. இதனால் இச்சமுதாயம் அழியும் நிலையை எதிர்நோக்கியிருந்தது. இப்படியானதொரு நிலையில்தான் இம்மக்கள் முத்தரிப்புத் துறையில் வாழ்ந்த நாவாந்துறையைச் சேர்ந்த மரியாம் பிள்ளைப் புலவரிடம் இந்நாடகத்தைக் கொண்டுசென்று காட்டினார்கள். அதைப் பார்வையிட்ட அவர் அந்நாடகத்தில் பல அறங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தார். அத்தோடு அம்மக்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க சந்தியோகு மையோர் நாடகத்தை ஒரு இரவுக் கதையாகப் எழுதிக் கொடுத்தார். அந்நாடகத்தின் காப்புக் கவியில் முன்னைய அறங்கள் விலகும்படி அவர் பாடியுள்ளதை அவதானிக்கலாம்.

**"பொடிபொடியாய்த் தகர்த்தெறிந்தேன்**
**முன்னே உள்ள**
**புலவர் செய்த தடையறங்கள்**
**பேயின் மாய்கை கடிதகன்று - இன்று**
**சந்தியோகு மையோர் கருணை வளர்**
**நாடகப்பாவானதாலே"**

என்று பாடிக் கொடுத்தார். இந்த வாசாப்போடு முருங்கன் சந்தியோகு மையோர் ஆலயத்தைச் சேர்ந்த (இந்தக் கட்டுரையாசிரியரின் பேரனார்) திரு. மரியான் சந்தான் புலவர் (1905 – 1957) அவர்கள் எழுதிய 'வர்த்தகன் கோர்வை' என்று அழைக்கப்படுகின்ற பகுதியையும் இணைத்து 'புனித சந்தியோகுமையோர் நாடகம்' என்ற பெயரில் இந்நாடகம் இரண்டு இராக்கதையாக முருங்கனில் மேடையேற்றப்பட்டு வருகின்றது.

இந்நாடகத்தில் புனித யாகப்பரின் போதனையிருந்து அவருடைய இறப்பு வரையுள்ள பகுதியை புலவர் மரியாம் பிள்ளை எழுதியுள்ளார். தொம்பிலிப்பு வத்தகன் வருகையிலிருந்து தொம்பிலிப்பு வத்தகன் மகன் கழுவேற்றி இறக்கப்பட்டது வரையான பகுதியை முருங்கனைச் சேர்ந்த புலவர் மரியான் சந்தான் எழுதியுள்ளார். றெம்மிகேல் அரசன் வருகை தொடக்கம் படைப்போர் முடியும்வரை உள்ள பகுதியை மீண்டும் புலவர் மரியாம்பிள்ளை எழுதியிருக்கிறார்.

சிலாவத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் திருவிழாக்களை முன்னிட்டு அரங்கேற்றப்பட்ட நாடகங்களைப் பழக்குவதற்காக மரியாம்பிள்ளைப் புலவர் அடிக்கடி சிலாவத்துறைக்கு வந்துபோய் இருப்பதை அறியமுடிகிறது. சிலாவத் துறைத் திருவிழாவுக்கு போய்வந்த முருங்கன் ஊர்ப் பெரியவர்கள் இவரை அறிந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கிறது. இந்த அறிமுகத்தின் நிமித்தமே இவர்கள் இந்தப் புலவரிடம் தமது நாடகம் தொடர்பான விடயத்தைப் பேசியிருக்க வாய்ப்பு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருங்கன் புனித யாகப்பர் கோவிலடி மக்கள் என்று பொதுவாக அறியப்படுகின்ற மக்கள் சமூகத்தின் கலைப்பொக்கிசமாக விளங்குவது சந்தியோகுமையோர் நாடகமாகும். வழக்கமாக இச்சமூகத்தைச் சேர்ந்த முருங்கன், ஆவணம், முள்ளிக்கண்டல்[10], என்ற மூன்று கிராமத்து மக்களுடன் பின்னாளில் மன்னார் நகரத்தைச் சேர்ந்த இந்த மக்களின் உறவுகளும் இணைந்து இந்நாடகத்தை மேடையேற்றிவருகின்றனர். இதனால் இது 'பெரிய நாடகம்' என்று இம்மக்களால் அழைக்கப்படுகின்றது.

இந்நாடகம் 1940, 1958, 1969, 1978, 1994, 2009 ஆகிய காலப்பகுதியில் முருங்கனில் மேடையேற்றப்பட்டதாக அறியமுடிகிறது.

## புனித அருளப்பர் வாசாப்பு

### (அர்ச். அடைக்கல மாதா நாடகத்தின் ஒரு பகுதி)

மாவிலங்கேணி என்ற கிராமத்தில் அர்ச். அடைக்கலமாதா நாடகம் இரண்டு இராக்கதையாக பாடப்பட்டுவருகின்றது. இது மறவர் சமூகத்திற்கான சாதி நாடகமாக அந்த மக்களால் கொள்ளப்படுகின்றது. இந்த நாடகத்தின் இரண்டாம் இரவுக் கதையான புனித அருளப்பர் கதையை[11] மரியாம்பிள்ளைப் புலவர் எழுதிக்கொடுத்துள்ளார். வெட்டப்பட்ட புனித அருளப்பரின் கையை மாதா ஒட்டுகின்ற கதையாக இந்த நாடகம் அமைந்துள்ளது.

இந்த வாசாப்பின் கதைச்சுருக்கம் இவ்வாறு அமைந்துள்ளது. தமஸ்கு என்ற நகரத்தை இயத்து என்னும் மன்னன் மகிழ்வோடு ஆண்டுவந்த காலம். இசோரி தேசத்தை லேயோன் என்னும் சிற்றரசன் சத்தியவேதத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கத்தோடு திருச்சுருபங்களுக்கு வணக்கம் செய்பவரை இம்சை செய்கிறான். சுருபங்களை வணங்கும் பெண்களை சிறையில் அடைத்து வருத்துகின்றான். லேயோனின் அட்டகாசங்களை அடக்கும்பொருட்டு இயத்து மன்னனின் மந்திரியாகிய அருளப்பருக்கு தேவதாய் காட்சி கொடுக்கிறாள். அதன் பயனாக சிறையில் இருக்கும் பெண்களுக்கு சுருப வணக்கத்தைக் கைவிடாதபடி அருளப்பர் புத்திமதி கூறுகின்றார். இதை அறிந்த லேயோன் மன்னன் கள்ளக் கடிதம் வரைந்து இயத்து மன்னனின் மந்திரியாகிய அருளப்பரின் கரத்தைத் தறிக்கின்றான். அருளப்பரின் உயர்ந்த விசுவாசத்தின் பொருட்டு வெட்டுண்ட கரம் மீண்டும் வளர்கிறது. இதை அறிந்த மன்னர்களின் மனங்களில் பயமும் திகிலும் உண்டாகிறது. அருளப்பரின் வெட்டுண்ட கரத்தை வளர்த்த கன்னியைப் போற்ற மன்னவனாம் லேயோன் மனம் மாறுகின்றான். கன்னிமரியாவின் புதுமையைக்கண்டு மதம் மாறுகின்றான்.

உண்மையில் மாவிலங்கேணி மற்றும் ஏனைய கிராமங்களைச் சேர்ந்த மறவர் சமூகத்தவர்கள் இந்தப் புலவரிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இவர் புனித அருளப்பர் கதையை வாசகப்பாவாக (ஒரு இரவுக்கதையாக) எழுதிக் கொடுத்துள்ளார். இந்நாடகக் கதையில் வரும் படைப்போர் என்ற பகுதியையும் இந்நாடகத்தின் பொது மங்களத்தையும் எழுதாத நிலையில், பிறகு எழுதித் தருவதாகக் கூறி இவர்களிடம் புலவர் இந்நாடகத்தைக் கொடுத்துள்ளார். ஆனால் இவற்றை எழுதிக் கொடுக்காமலேயே மரியாம்பிள்ளைப் புலவர் இறந்துவிட்டார். எனவே இந்த மக்கள் முருங்கன் சுண்டிக்குளி கபிரிகேற் புலவரிடம் சென்று மரியாம்பிள்ளைப் புலவர் எழுதிக்கொடுத்த முற்றுப்பெறாத தமது நாடகத்திற்கு படைப்போரையும், மங்களத்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதித்தரும்படி கேட்டுள்ளனர். தமது ஒரு இராக்கதையை இரண்டு இராவாக நீட்டித் தரும்படியும் கேட்டிருக்கிறார்கள். அதற்கு இசைந்த சுண்டிக்குளிக் கபிரிகேற் புலவர், படைப்போரையும், மங்களத்தையும் எழுதிக் கொடுத்ததுடன் தம்மிடம் **'சவின கன்னி'**[12] என்ற ஒரு இரவுக்கதை வாசாப்பு இருப்பதாகவும் மரியாம்பிள்ளைப் புலவரின் வாசாப்போடு தன்னுடைய வாசாப்பையும் சேர்த்து இரண்டு இரவாகப் படிக்கும்படி கூறி தமது வாசாப்பைக் கொடுத்துள்ளார். **எனவே மாவிலங்கேணியில் மறவர் சமூகத்தவர்களின் சாதி நாடகமாகப் பாடப்படும் இரண்டு இராக் கதையான அர்ச். அடைக்கலமாதா நாடகத்தின் முதல் இரவுக் கதை முருங்கன் சுண்டிக்குழி கபிரிகேற் புலவர் எழுதிய சவின கன்னி வாசாப்பாகவும், இரண்டாம் இரவுக் கதை நாவாந்துறை மரியாம்பிள்ளைப் புலவர் எழுதிய புனித அருளப்பர் வாசாப்பாகவும் உள்ளது**[13]

இந்த இரண்டு நாடகமும் ஒன்றிணைந்த கொப்பி 'அர்ச். அடைக்கலமாதா நாடகம்' என்ற பெயரில் தற்போது (2018) இசைமாலைத்தாழ்வைச் சேர்ந்த திரு. சிங்கராசா அவர்களிடம் உள்ளது. இந்தக் கொப்பியின் எழுத்து நடையை நோக்கும்போது இது 1950களுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த சந்திபிரிக்காமல் எழுதும் முறையில் எழுதப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. திரு. சிங்கராசா அவர்களின் கூற்றுப்படி நாவாந்துறை மரியாம்பிள்ளைப் புலவர் எழுதிக்கொடுத்த அருளப்பர் வாசாப்பு ஏட்டில் இருந்ததாகவும் அதனைத் தம் சமூகத்தினர் கொண்டுபோய் சுண்டிக்குளிக் கபிரிகேற் புலவரிடம் கொடுத்தபோது ஏட்டில் இருந்த வாசாப்பாவையும் தன்னுடைய சவுன கன்னி வாசாப்பையும் ஒரே கொப்பியில் அவர் எழுதிக்கொடுத்ததாகக் கூறுகின்றார். அர்ச். அடைக்கலமாதா நாடகத்தின் இரண்டாம் இராக்கதையான மரியாம் பிள்ளைப் புலவர் எழுதிய அருளப்பர் நாடகத்தின் பின்னரே சுண்டிக்குளி கபிரிகேற் புலவர் எழுதிய படைப்போர் காட்சி வருவதாகவும் சிங்கராசா குறிப்பிடுகின்றார். ஆனால் இந்த நாடகத்தின் பிரதியில் சுண்டிக்குளி கபிரிகேற் புலவர் எழுதிக்கொடுத்த பொது மங்களம் இடம்பெறவில்லை. அதற்கான காரணத்தைக் கேட்டபோது அந்தப் பொது மங்களம் மாவிலங்கேணியைச் சேர்ந்த திரு. புக்கா அவர்களால் தொலைக்கப்பட்டு விட்டதாக சிங்கராசா தெரிவித்தார். அர்ச். அடைக்கலமாதா நாடகம் இதுவரை ஒரு தடவை மட்டுமே அதாவது 1969 இல் மேடையேற்றப்பட்டதாக அறியமுடிகிறது. முருங்கன் மக்கள் இந்தப் புலவரிடம் நாடகம் எழுதிப் பெற்ற காலத்திலேயே மறவர் சமூக மக்களும் இவரை அணுகி இந்த நாடகத்தை எழுதிப் பெற்றிருக்க வேண்டும் என சிங்கராசா தெரிவிக்கின்றார். அப்படியென்றால் 1940 அளவில்தான் இந்த நாடகம் எழுதிக்கொடுக்கப்பட்டிருந்தால் ஏன் இதனை அவர்கள் 1969இல் அதாவது 29 வருடங்களுக்குப் பிறகு படித்திருக்க வேண்டும் என்பது கேள்வியாக எழுந்து நிற்கின்றது.

## வரப்பிரகாசர் நாடகம்

முத்தரிப்புத்துறை மக்களுக்காக மரியாம்பிள்ளைப் புலவர் **வரப்பிரகாசர்** என்ற பெயரில் ஒரு நாடகத்தை எழுதிக்கொடுத்துள்ளார். இந்நாடகம் முத்தரிப்புத்துறை மக்களால் தொடர்ந்து பாடப்படவில்லை எனச் **சிப்பிக்குள் முத்து** என்ற தலைப்பில் முத்தரிப்புத்துறையின் வரலாறு தொடர்பாக முத்துச் சிப்பியன் என்பவர் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.[14]

## அம்மானைகள்

இவர் ஐந்து அம்மானைகள் எழுதியதாக அறியப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மருதமடு அர்ச். செபமாலை மாதா அம்மானை
2. மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் அம்மானை
3. சந்நீக்கிலாவின் நவசந்த அம்மானை
4. புனித கயித்தார் சரித்திரம்
5. யேசுநாதர் அம்மானை

இவற்றைவிட வேறு அம்மானைகளையும் இப்புலவர் எழுதியிருக்கக்கூடும். ஆயினும் அவை பற்றிய நம்பகரமான தகவல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

முதல் மூன்று அம்மானைகளில் மருதமடு அர்ச். செபமாலை மாதா அம்மானை இப்போது அச்சில் கிடைத்துள்ளது. இந்த அம்மானை முதன் முதலாக 1927ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது. பின்னர் 1990ஆம் ஆண்டு யாழ் கத்தோலிக்க இலக்கியக் கழகத்தால் யாழ்ப்பாணம் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டது. அன்றைய யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் இந்த நூலை அச்சிடுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். இந்த இரண்டாவது பதிப்பு மூலமாகத்தான் முதல் பதிப்பு பற்றிய தகவல்களைப் பெறமுடிகிறது. முதல் பதிப்பு இதுவரை கிடைக்கவில்லை. அதைப் பெறுவதற்கான தேடல் தொடர்கிறது.

அடுத்த இரண்டு அம்மானைகளான மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் அம்மானை மற்றும் சந்நீக்கிலாவின் நவசந்த அம்மானை பற்றிய தகவலை இந்தியாவைச் சேர்ந்த அம்மானைகள் பற்றிய ஆய்வாளர் டாக்டர் ஆ.பி. அந்தோனிராசு என்பவர் மூலமாகவே அறிந்துகொள்ள முடிகிறது. இவர் எழுதிய **'கிறிஸ்தவ அம்மானைச் சிந்தனைகள்'** [15] என்ற நூலின் (1988) பின்னிணைப்பில் அவர் பட்டியலிட்டுள்ள 61 கிறிஸ்தவ அம்மானைகள் பட்டியலில் இந்த மூன்று அம்மானைகளின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளது.

மன்னார் முத்தரிப்புத்துறையில் வாழ்ந்த மரியாம்பிள்ளைப் புலவரின் இந்த அம்மானைகள் பற்றிய தகவல்களை அதிலும் குறிப்பாக நூலுருப்பெறாத 'மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் அம்மானை' மற்றும் 'சந்நீக்கிலாவின் நவசந்த அம்மானை' பற்றிய தகவலை இந்தியாவில் உள்ள இந்த ஆய்வாளர் எப்படிப் பெற்றுக்கொண்டார் என்பது இங்கு ஆய்வுக்குரியது.

முத்தரிப்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருக்குடும்ப துறவற சபை அருட்சகோதரி பூவதி அவர்கள் தரும் தகவல் இது தொடர்பான வெளிச்சத்தைத் தருவதாக உள்ளது. அருட்சகோதரி அவர்களின் தகவலின்படி முன்னாள் யாழ்ப்பாண ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் வேண்டுகோளின்பேரில் தான் அரிப்புக்குச் சென்று மரியாம்பிள்ளைப் புலவரின் படைப்புக்களைப் பெற்று ஆயரிடம் ஒப்படைத்தாகவும் அதிலே என்ன இருந்தது என்பதுபற்றித் தனக்கு தெரியாது எனவும் குறிப்பிடுகின்றார்.

மரியாம்பிள்ளைப் புலவரின் படைப்புக்கள் குறித்தும் குறிப்பாக 1927இல் அச்சிடப்பட்ட மருதமடு செபமாலை மாதா அம்மானை குறித்தும் ஆயர் தியோகுப பிள்ளை அறிந்திருக்க வாய்ப்பு உண்டு. அம்மானைகளில் பரீட்சியம் உள்ளவரான ஆயர் தியோகுப் பிள்ளையிடம் இந்தியாவைச் சேர்ந்த ஆய்வாளர் தன் ஆய்வு நோக்கத்திற்காக இலங்கையில் எழுதப்பட்ட அம்மானைகள் தொடர்பான தகவல்களைக் கோரி யிருக்கலாம். எனவே ஆயர் அவர்கள் அருட்சகோதரி ஊடாக மரியாம்பிள்ளைப் புலவரிடம் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய படைப்புக்களைப் பெற்று அவை தொடர்பான தகவல்களை அந்த ஆய்வாளருக்கு வழங்கியிருக்க வாய்ப்பு இருக்கின்றது.

'மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் அம்மானை' மற்றும் 'சந்நீக்கிலாவின் நவசந்த அம்மானை' ஆகியவை அச்சில் வந்தனவா அல்லது கையெழுத்துப் பிரதியாக இருந்த நிலையில் இந்த அம்மானைகளின் பெயரை ஆய்வாளர் அந்தோனி இராசு பெற்றுக்கொண்டாரா என்பது தெளிவாகவில்லை.

புனித கயித்தார் சரித்திரம் மற்றும் சேசுநாதர் அம்மானை ஆகியவை தொடர்பான தகவல்கள் மடுமாதா அம்மானையின் முதல் பதிப்பில் இடம் பெற்றுள்ளதாக அந்த முதல் பதிப்பை அச்சிட்ட மாரீசன்கூடலைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை எசேக்கியேல் அவர்களின் பேரன் திரு. வசீகரன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[16] இந்த அம்மானைகள் அச்சில் வந்தனவா என்பதை நிச்சயமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

## ஏனைய இலக்கியங்கள்

### ஞானசவுந்தரி நாடகத்திற்கான 'சாற்று கவி'

முள்ளிக்குளம் மக்கள் பாடி ஆடிவரும் ஞானசவுந்தரி என்னும் நாடகத்திற்கு மரியாம்பிள்ளைப் புலவர் அவர்கள் சாற்று கவி பாடியுள்ளதை அறியமுடிகிறது.

முள்ளிக்குளம் பெரியவர்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஞானசவுந்தரி நாடகத்தை குப்பைப்புலவர் என அறியப்பட்ட கபிரியேற் புலவர் ஏட்டில் எழுதிக்கொடுத்ததாகவும், அதனை முள்ளிக்குளத்தைச் சேர்ந்த **அந்தோனி லேனை மற்றும் அந்தோனி யோசேப்பு குரூஸ்** ஆகிய இருவரும் கொப்பியில் எழுதியதாகவும் பின்னர் தாம் கொப்பியில் எழுதியதை அரிப்பில் வாழ்ந்தவரான நாவாந்துறை மரியாம்பிள்ளைப் புலவர் அவர்களிடம் காட்டி சரிபார்த்து அத்தாட்சிப்படுத்தியதாகவும் அதனைப் பார்வையிட்ட அவர் அந்நாடகத்திற்கு சாற்றுகவி எழுதிக்கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. அந்தச் சாற்றுகவி "மங்காத ஒளிபரவு லங்காபுரத்திலே — வாடை மாகாணமதிலே..." என ஆரம்பிக்கின்றது.

## நிறைவாக

மரியாம்பிள்ளைப் புலவர் பற்றிய இந்த ஆய்வு ஒரு முழுமையான - நிறைவான ஆய்வு என்று சொல்ல முடியாது. இவருடைய வாழ்வு மற்றும் இவருடைய படைப்புக்கள் பற்றிய பல தகவல்களை இன்னும் தேடிப் பெறவேண்டி உள்ளது. தற்போது பெறக்கூடிய தகவல்களை அடிப்படையாக வைத்தே இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

புலவர் பிறந்த இறந்த ஆண்டு மாதம் திகதியை அறிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய படைப்புக் களின் முழுமையான பட்டியலை உறுதிசெய்ய முடியவில்லை. தற்போது கிடைக்கக்கூடியதாக இருந்து படைப்புக் களைத் தேடிப்பெற்று இந்நூலில் சேர்த்துள்ளோம். மறைபொருளாக உள்ள பல விடயங்கள் காலவோட்டத்தில் வெளிச்சத்திற்கு வரலாம். அப்போது இப்புலவர் பற்றிய இன்னும் பல அரிய தகவல்களை அறியமுடியும்.

மரியாம்பிள்ளைப் புலவர் அவர்கள் எனது சொந்தக் கிராமமான முருங்கன் மக்களின் உள்ளத்தில் நீங்கா இடம்பிடித்துள்ளவர். அவர் எழுதிக் கொடுத்த நாடகத்தை எனது ஊர் மக்கள் மிகவும் பவித்திரமாகப் போற்றி அதனை மேடையேற்றி வருகின்றார்கள். எனது தந்தையார் புலவர் சந்தான் பாவிலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இப்புலவர்பற்றி அடிக்கடி எமது வீட்டில் பேசுவதை எனது சிறு வயதில் நான் கேட்டிருக்கின்றேன். எனவே இப்புலவருக்கு எனது முருங்கன் ஊர் மக்கள் சார்பான நன்றிக்கடனாக எனது இந்தக் கட்டுரையும் இப்புலவர் பற்றிய எனது ஆய்வும் அமையும் எனக் கருதுகின்றேன்.

**(Endnotes)**

[1] இவர் நாவாந்துறையில் உள்ள புனித மரியாள் ஆலய சமூகத்தைச் சேர்ந்தவர்.

[2] புலவரின் ஒரே மகனான அன்ரனி திரேசியான் 02.06.1925இல் பிறந்துள்ளார். இவர் திருகோணமலையில் உள்ள துறைமுகத்தில் வேலை செய்தவர்.

[3] புலவர் இறந்தபிறகு அவருடைய மனைவி திருமதி மாசில்லா அவர்கள் முத்தரிப்புத்துறையைச் சேர்ந்த மரிசால் குட்டி என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு முறையே திரேசம்மா, சூசையப்பு, ஆபேல் ஆகிய மூன்று பிள்ளைகள் உண்டு. திரேசம்மா மற்றும் ஆபேல் ஆகியோர் இன்றும் (2018) முத்தரிப்புத்துறையில் வசிக்கின்றனர். சூசையப்பு செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ள நேரியகுளம் என்ற கிராமத்தில் வாழ்ந்து இறந்துவிட்டார்.

[4] முருங்கனைச் சேர்ந்தவர்கள் புலவருக்கு அன்பளிப்பாகக் காணிகொடுத்த விடயத்தை அவருடைய மனைவியின் இரண்டாம் தாரத்துப் பிள்ளைகள் உறுதிப்படுத்தினர்.

[5] இந்நாடகப் பிரதி இக்கட்டுரையாசிரியருக்குக் கிடைக்காத காரணத்தால் இந்நாடகம் தொடர்பான விரிவான குறிப்புக்கள் இங்கு இடம்பெறவில்லை.

[6] மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம் நூலை எழுதிய பெஞ்சமின் செல்வம் அவர்கள் தமது நூலில் இந்தப் புலவர் பற்றிய குறிப்பைத் தந்துள்ளார். "இவர் வயிரமுடிகாத்த வச்சிர நாட்டுத் தேவன் மரபில் நானாட்டான் கிழக்குச் சுண்டிக்குழிக்கிராமத்தில் 18ஆம் நூற்றாண்டில் அந்தோனிப்புலவரென்னும் பெரிய சமரருக்கு சிரேட்ட புதல்வனாகப் பிறந்தவர். தகப்பன் சமரரென்று அழைக்கப்பட்டதால் இவர் சின்னச்சமரர் என பலராலும் அழைக்கக்கப்பட்டவர். 1840 வரையில் இவர் காலமாகியுள்ளார்" காண்க : பெஞ்சமின் செல்வம், மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம், நானாட்டான், 1978, ப.23, 24, 25.

[7] பெஞ்சமின் செல்வம், மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம், நானாட்டான், 1978, ப.23,24.

[8] யேசுதாசன் ச., "சற்பிரசாத வாசாப்பு – உள்ளக நோக்கும் அரங்கேற்ற மரபுகளும்", **சற்பிரசாத வாசாப்பு ஒரு வரலாற்றுப்பார்வை,** புனித சூசையப்பர் ஆலய மேய்ப்புப்பணிச் சபை, கற்கிடந்தகுளம், 2009, பக்.6.[9] கலைஞர் குழந்தை, "முருங்கன் புனித இயாகப்பர் ஆலய வரலாறு" **முருங்கன் புனித இயாகப்பர் ஆலய நூற்றாண்டு விழா மலர்,** ப.32[10] முள்ளிக்கண்டல் என்ற இந்தக் கிராமம் மாந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ளது. இக்கிராமம் 'தேனுடையான்' என்ற பெயராலும் முன்னர் அழைக்கப்பட்டது. தற்போது இந்தக் கிராமம் மக்கள் குடியிருப்பு இல்லாத இடமாக மாறிவிட்டது.

[11] இங்கு குறிப்பிடப்படும் அருளப்பர் யார் என்று சரியாக அறியமுடியவில்லை. நிச்சயமாக இயேசுவிற்க வழியை ஆயத்தம் செய்ய வந்த திருமுழுக்கு அருளப்பரோ அல்லது இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒரவரான நற்செய்தி அருளப்பரோ இல்லை. மாறாக திருச்சபை வரலாற்றில் வருகின்ற அருளப்பர் என்ற பெயரைக்கொண்ட பல புனிதர்களில் ஒருவராக இவர் இருக்கக்கூடும்.

[12] சவுன கன்னி என்பவர் ஒரு தாய். இவருக்கு ஒரு சிறுவயது மகன் இருந்தான். இவன் மாதா பக்திமிக்கவனாக மாதாவின் புகழைப் பாடிக்கொண்டிந்தபோது யூதர்கள் இவன்மேல் கோபம்கொண்டு இவனைக் கொலை செய்து புதைத்துவிடுகின்றனர். மாதாவின் அருளால் அவன் கல்லறையில் இருந்து உயிர் பெற்று எழுகின்றான். இதுதான் இந்நாடகத்தின் கதை. இந்த நாடகத்தின் கதையைக்கொண்டுதான் முருங்கன் செபமாலை குழந்தை அவர்கள் பரதேசி மகன் என்ற அரை மணித்தியால வசன நாடகத்தை எழுதியுள்ளதாக சிங்கராசா குறிப்பிடுகின்றார்.

[13] இசைமாலைத்தாழ்வு சிங்கராசா அவர்கள் வழங்கிய தகவல்.

[14] சிப்பிக்குள் முத்து, முத்தூர் சிப்பியன், முத்தரிப்புத்துறை (ஆண்டு குறிப்பிடப்படவில்லை).ப.46

[15] அந்தோனி இராசு, ஆ. பி., கிறித்துவ அம்மானைச் சிந்தனைகள், ஆரோக்கியம் பதிப்பகம், திருச்சி, இந்தியா, 1988.

[16] திரு. வசீகரன் அவர்கள் தற்போது ஜேர்மனியில் வசிக்கின்றார். இவர் இத்தகவல்களை உறுதிப்படுத்தி திரு.அநுரா அவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் சைவசமய வரலாறும் அதன் வளர்ச்சியும்

திரு. சந்திரலிங்கம் றமேஸ் (J.P)
B.A(Pera), Dip.in.Teaching.Hin(Spl)
M.A(Jaf).in.Tamil(Merit), P.G.Dip.in.Edu
M.Ed(Jaf),Dip.in.Edu(Mgt), M.phil.inTamil.

## 1.0 அறிமுகம்:

'மன்னார் சைவசமய வரலாறும் அதன் வளர்ச்சி நிலையும்' என்ற ஓர் சுருக்க ஆய்வானது, மன்னார் மாவட்டத்தில் புராதன காலத்தில் இருந்து தற்காலம் வரை சைவ சமயமானது எவ்வாறான நிலைகளில் காலந்தோறும் வளர்ச்சியுற்று வந்துள்ளது என்பதை அகழ்வாராட்சிப் பொருட்கள், வரலாற்றுச் சான்றுகள், இலக்கிய மூலாதாரங்கள், முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு இச் சுருக்க ஆய்வானது நோக்கப்படுகின்றது.

இதில் மிகப்புராதன காலத்தில் மன்னாரில் சைவம் நிலவியதற்கான சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு மன்னாரில் பூர்வீக மதமாக சைவம் நிலவியதனையும், பின்னர் படிப்படியாக வளர்ச்சியுற்றுவந்ததினையும், மன்னாரில் போர்த்துக்கேயரின் வருகையுடன் கிறிஸ்தவ மதப் பிரவேசமும், அராபியர்களின் வணிகப் பிரவேசத்தினால் இஸ்லாம் மதமும் மன்னாரில் பரவியமையும், இதன் காரணமாக சைவசமய வீழ்ச்சிநிலையும் அதனைத் தொடர்ந்து பல்வேறு சவால்களுக்கு மத்தியில் சைவ சமயம் நின்று நிலைபெற்று இன்றுவரை எவ்வாறு வளர்ச்சிபெறுகின்றது என்பதனை பின்வரும்வகையில் நோக்க முடிகின்றது.

அந்தவகையில் மன்னார் மாவட்டத்தின் பூகோள, பௌதீகம் சார் விளக்கங்களும், சைவசமய வரலாற்றை வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்றுக் காலம், தற்காலம் என்னும் அடிப்படையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## 2.0 மன்னார் மாவட்ட அமைப்பு:

மன்னார் மாவட்டத்தின் அமைவிடமானது இந்து சமுத்திரத்தின் நித்திலம் என சிறப்பிக்கப்படுகின்ற ஈழத்திருநாட்டின் வடமேற்குத்திசையில் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தின் எல்லைகளாக, வடக்கே கிளிநொச்சி மாவட்டமும், வடகிழக்கே முல்லைத்தீவு மாவட்டமும், கிழக்கே வவுனியா மாவட்டமும், தென்கிழக்கே அநுராதபுர மாட்டமும், தெற்கே புத்தளம் மாவட்டமும், மேற்கே மன்னார் குடாக்கடலையும் எல்லையாகக் கொண்டுள்ள நெய்தலும், மருதமும் முல்லையும் சங்கமிக்கும் நிலத் தோற்றத்தைக் கொண்டுள்ளது. அதன் பிரதேசமானது மன்னார் நகரம், நானாட்டான், முசலி, மாந்தைமேற்கு, மடு என்னும் ஐந்து பிரதேசங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்கப்பட்டும், பல கிராமங்களையும் உள்ளடக்கிக் காணப்படுவதோடு, கல்வி, கலை, சமய அனுட்டானங்கள் என்பவற்றில் சிறந்து விளங்குவதோடு, பல்வேறுபட்ட கலாசார பண்பாட்டு விழுமியங்களை தாம் வாழும் கிராம, பிரதேசங்கக்கேற்ப கடைப்பிடித்து வாழுகின்ற மக்கள் அமைப்பினைக் கொண்டும் விவசாயம், மீன்பிடி, வணிகம் போன்றவற்றை பிரதான தொழில்களாகவும் கொண்டு மன்னார் மாவட்டம் காணப்படுகிறது.

### 3.0 மன்னார் சைவ சமய வரலாறு:

ஒரு இனமானது தனது இனத்தின் அடயாளங்களான மொழி, மத, பண்பாடு, கலை, கலாசாரங்களில் பற்றுறுதியுடன் இருப்போமேயானால் அந்த இனத்தின் இருப்பை எக்காலத்திலும் அழியாது நிலைநிறுத்திக்கொள்ள முடியும். ஆனால் ஈழத்தில் தமிழர்களோ அதிலும் குறிப்பாக சைவத் தமிழர்கள் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட பல்வேறு இன, மத, ஒடுக்கு முறைகளுக்கு உட்பட்டு நிர்க்கதியாகி எம் முந்தையரின் வழிவந்த தேசங்களில் இன்று முகவரி இழந்து நிற்பது யார் செய்த பாவமோ! மறத்தமிழர்கள் மடிந்ததாக சரித்திரம் இல்லை. உண்மைகள் ஒரு காலமும் உறங்காது. எம் இனமும், மதமும் எப்பொழுதும் குன்றிலிட்ட தீபம் போல் உண்மையை உரத்துச் சொல்லும். பாரம்பரிய வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழும், சைவமும் எச்சந்தர்ப்பத்திலும் அழியாது.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தின் பூர்வீக மதமாக திகழ்ந்தது சைவசமயமேயாகும்.

*'16ம் நூற்றாண்டு வரையில் நல்லூரை ஆட்சி புரிந்த சங்கிலியனின் கீழ் மன்னார் தீவு இருந்தபடியால், இளஞ்சிங்கம் அரசனுக்கு திறைகொடுத்து ஆட்சிபுரிந்து வந்தான். அப்போது இங்கு சைவ மதம் பரவியிருந்தது'* [1]*(மன்னாரில் கிறிஸ்தவம் தோன்றலும், பட்டின மாதாகோவில் வளர்ச்சியும்' மன்னல் - 2018 பக் 42)*

பின்னர் காலத்திற்கு காலம் வருகைதந்த அராபியர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் முதலான பிற இனத்தவர்களின் வருகையானது சைவ சமயத்திற்கு பெரும் சவாலாக அமைந்து காணப்பட்டது.

*'சவேரியாரின் குருத்துவத் தொண்டரின் சத்திய மறை போதனையால் 1541ல் சைவ சமய மக்கள் கிறிஸ்தவ மதத்தை சிறிது சிறிதாக பின்பற்றத் தொடங்கினர்'*[2] *(மன்னாரில் கிறிஸ்தவம் தோன்றுலும், பட்டின மாதா கோவில் வளர்ச்சியும்' மன்னல் - 2018 - பக் - 43)*

எனவே இவ்வாறான நிலையில் முன்பு மன்னாரில் பெரும்பான்மையான மதமாக காணப்பட்ட சைவம் இன்று சிறுபான்மை மதமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் ஒரு பாரம்பரிய மதமாகிய சைவ சமயத்தினது வரலாற்றை எல்லோரும் அறியும் பொருட்டே பின்வரும் காலப்பாகுபாட்டில் பிரித்து நோக்கப்படுகிறது. அவை

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
2. வரலாற்றுக் காலம்

### 3.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

மன்னார் சைவ சமய வளர்ச்சியின் நிலையை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் எவ்வாறு காணப்பட்டது என்பதனை பின்வரும் அம்சங்களில் பிரித்து நோக்க முடிகின்றது. அவை

3.1.1 புராதன காலம்

3.1.2 இதிகாச காலம்

அவ்வாறே மன்னார் சைவ சமய வளர்ச்சியினை வரலாற்றுக் கால அடிப்படையில் பின்வரும் அம்சங்களில் பிரித்து நோக்க முடிகின்றது. அவை

3.2.1 தமிழ்புலவர் காலம் (கி.பி. 1-5ம் நூற்றாண்டு வரை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.2.2 சமய நாயன்மார்கள் காலம் (கி.பி. 6-9ம் நூற்றாண்டு வரை)
3.2.3 தமிழக மன்னர் ஆதிக்க காலம் (கி.பி 10-14ம் நூற்றாண்டு வரை)
3.2.4 ஐரோப்பியர் ஆதிக்க காலம் (கி.பி 15 - 18ம் நூற்றாண்டு வரை)
3.2.5 ஆறுமுகநாவலர் காலம் (கி.பி 19ம் நூற்றாண்டு)
3.2.6 மறுசீரமைப்புக் காலம்
3.2.7 ஈழப்போராட்ட காலம்
3.2.8 தற்காலம்

எனவே மேற்கூறப்பட்ட கால அடிப்படையில் மன்னாரில் சைவ சமயமானது எத்தகைய நிலையில் காணப்பட்டது என்பதனையும் இன்றுவரை அதன் மங்காத செழுமையும், சிறப்பும் காணப்படுவதினையும் நோக்க முடிகின்றது. அந்தவகையில் பின்வரும் காலத்தினை நோக்கின் புலப்படும்.

**3.1.1 புராதன காலம்:**

சிவபூமி மன்னாரில் சைவ சமய வரலாற்றினை நோக்குவோமாயின் அதன் புராதன கால வரலாறு மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சர சிவத்தல சேத்திர வரலாற்றோடு ஆரம்பிக்கப்படுகின்றது. அந்த வகையில் சைவ சமயத்தின் தொன்மையானது, இற்றைக்கு 5000ம் ஆண்டுகளுக்கு முன்னரான சிந்துவெளி நாகரிகத்துடன் ஆரம்பிக்கப்படுவதாக சேர். ஜோன் மார்ஷல் குறிப்பிடுகின்றார். எனவே சிந்துவெளி நாகரிகமானது மனித நாகரிகம் தோன்றிய எகிப்திய, சுமேரிய (மொசப்பத்தேமிய) நாகரிகத்துடன் ஒப்பிட்டு அந்நாகரிக காலத்திற்கு சமமான காலமாக சிந்துவெளி நாகரிகத்தினை கருகின்றனர் அகழ்வாராய்ச்சியாளர்கள். அந்த வகையிலே பழம் பெரும் நாகரிகமான சிந்துவெளி நாகரிகம் போன்று சிவபூமி மன்னாரின் மாதோட்ட நாகரிகமும் அதற்குச் சமமான காலங்களில் தோன்றியுள்ளது. என மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களோடு மாதோட்டமும் ஒப்பிட்டுக் கூறப்படுகின்றமையானது அதன் புராதன கால சைவசமய பாரம்பரியத்தை சிறப்பிக்கின்றது.

*'ஏறத்தாழ இற்றைக்கு 3800 ஆண்டுகளுக்கு முன்னர் மாந்தைத் துறைமுகம் இருந்தது என்பதையும், அங்கிருந்து அக்காலத்தில் இந்தியாவிற்கு செம்பு, யானைத்தந்தம், முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதையும் இலங்கை தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எஸ். யூ. தெரனியகலை என்பவர் 1997 இல் ஆராய்ச்சி முடிவாக வெளியிட்டுள்ளார். எனவே மொஹஞ்சதாரோ, ஹரப்பா காலத்திலும் மாந்தை நிலவியது என்பது ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.' (சைவநெறி தரம் - 10 பக்33, 34 கல்வி வெளியீட்டுத்திணைக்களம்)*

மேலும் ஈழநாட்டின் ஆதிக் குடிக்களான இயக்கர், நாகர், வேடர் முதலான கோத்திர இனத்தவர்களே வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களில் குறிப்பாக நாகர்கள் மாதோட்டத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு இன்றும் அவர்கள் வாழ்ந்த ஊரான மாந்தைச் சந்தியில் இருந்து அடம்பன் வீதி ஊடாக ஏறத்தாழ 1.5 கிலோமீற்றர் தூரத்தில் பெரிய நாவற்குளம் (பெரிய நாகர் குளம்) இதிலிருந்து தெற்குத் திசைநோக்கி 2 கிலோமீற்றர் கல் தூரத்தில் நாகதாழ்வு (நாகர் தாழ்வு), மன்னார் பிரதான வீதியில் இருந்து மாந்தைக்குச் செல்லும் வழியில் சிறுநாவற்குளம் (சிறிய நாகர் குளம்) ஆகிய நாகர்கள் குடியிருந்த இடங்கள் அமைந்துள்ளது. இது ஆதிக்குடிகளான நாகர்கள் தமது குல அடிப்படையில் வாழ்ந்த இடங்களாகும். எனவே ஆதிக் குடிகளான நாகர்கள் மாதோட்டத்தில் வாழ்ந்து திருக்கேதீச்சரத்தை வழிபட்டதாகவும் கூறப்பட்டது.

*"இயக்கர்களும், நாகர்களும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இலங்கையின் பூர்வீகக் குடிகளாவர். நாகர்கள் திருக்கேதீச்சரத்தை வழிபட்டதற்குச் சான்றாக "நாகநாதர்" என்றொரு பெயர் திருக்கேதீச்சர நாதருக்கு இன்னமும் வழங்குகின்றது" (சைவநெறி தரம் 10 - பக் 33, 34 கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)*

மேலும் மாதோட்டமானது "மகாதுவட்டா" என்னும் தேச தச்சன் இப்பிரதேசத்தை ஆண்டு இங்குள்ள சிவத்தலமாகிய திருக்கேதீச்சரத்தை வழிபட்டான் எனவும், இதனால் இவ்விடம் "மகாதுவட்டாபுரம்" எனவும், பின்னாளில் "மாதோட்டம்" எனவும் விளங்கியது என்பர். மகாதுட்டா இராமாயண காலத்திற்கு முந்தியவர் எனக் கூறப்படுகின்றது. இவ் மாதோட்டமானது மிகவும் வளம் பொருந்திய பிரதேசமாக காணப்படுகின்றது. இதனாலே இங்கு தெங்குமரம், நுங்கு, வாழைத் தோட்டங்கள், மாஞ்சோலைகள், பலா மரங்கள் எனும் முக்கனி தருகின்ற மரங்களும், வண்டு பண் செய்யும் பூமரச்சோலைகளும், எண்ணற்ற பயன்தரு நிழல் தருகின்ற மரச்சோலைகளாலும் சூழப்பட்டதும் எங்கும் வயல் நிலங்களாகவும் காணப்பட்டத்தினால் பெரிய தோட்டங்களும், இங்கு இருந்திருக்கின்றன. இதனாலோ, மா - பெரிய எனக் கொண்டு "மாதோட்டம்" எனவும் இவ்விடம் அழைக்கப் பட்டிருக்கலாம்.

*"கி.மு 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 5ம் நூற்றாண்டு வரை மாதோட்டக் கரையில் பண்டமாற்று வியாபாரம் நடைபெற்று வந்துள்ளது. இக்காலத்தில் மாதோட்டம் உலகப்பிரசித்தி பெற்ற ஒரு வர்த்தகத் துறைமுகமாகவும், விளங்கிற்று. அப்போது உரோமானியர், எகிப்தியர், கிரேக்கர், சீனர், அரேபியர் முதலானோர், இங்கு வந்துகூடி பண்டமாற்று வியாபாரம் செய்துள்ளனர்." (திருக்கேதீச்சர திருக்குடத்திருமஞ்சனப் பெருவிழா மலர் - 1976)*

*"கி.மு. 6ம் நூற்றாண்டில் கலிங்க நாட்டு அரச குமாரனாகிய விஜயன் என்பவன் தன் நண்பர்களுடன் இம்மாதோட்டத் துறைமுகத்தினூடாக இலங்கையை அடைந்தான் என்றும் அப்போது இத்துறைமுகம் "மகாதித்த" எனப் பெயர் பெற்று விளங்கியது என்றும், மகாவம்சம் என்னும் நூல் கூறுகின்றது. "தித்த" என்பது பாளி மொழியில் துறைமுகம் என்பதாகும்" (திருக்கேதீச்சர திருக்குடத்திருமஞ்சனப் பெருவிழா மலர் - 1976)*

எனவே இவ்வாறு விஜயனுடன் வந்த அவனது அமைச்சர்களுள் ஒருவனான "உபதிஸ்ஸ" என்ற பிராமணனால் திருக்கேதீச்சரம் வழிபட்டதாக கூறப்படுகின்றது. இதன் முன்னரும் பின்னரும் பல கடல்கோள்கள் இடம்பெற்று மாந்தையின் சில பகுதிகள் அழிந்தன. இவ்வாறு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் சிவபூமி மன்னாரில் சைவப் பாரம்பரியம் சிறப்புற்று விளங்கியதினை அறியமுடிகின்றது.

### 3.1.2 இதிகாச காலம்

சிவபூமி மன்னாரில் சைவப் பாரம்பரியமானது இதிகாசகாலமான மாகாபாரதம், இராமாயணம் ஆகிய காலங்களிலும் தொடர்புடையனவாக காணப்பட்டுள்ளது. குறிப்பாக மாகாபாரதத்தில் அர்ச்சுணன் தீர்த்தயாத்திரையின் பொருட்டு பல தலங்களுக்குச் சென்று பின் ஈழம் நோக்கி வந்து திருக்கேதீச்சர நாதரை வழிபட்டதுடன் இங்குள்ள புண்ணிய தீர்த்தமாகிய பாலாவியிலும் நீராடிச் சென்றுள்ளதாகவும் தட்சிணகைலாச புராணம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இராமாணயத்தில் இராமன் ஈழத்திற்கு வந்து இராவணனோடு போர் புரிந்து பின் அவனை அம்பினால் கொன்றமையினால் ஏற்பட்ட *"பிரமகத்தி தோஷம்" நீங்க புனித பாலாவியில் நீராடி தோஷம் களைந்து பின் 108 சிவலிங்கங்களை திருக்கேதீச்சரத்திற்கு அன்பளிப்புச் செய்து பின் இராமேஸ்வரம் மீண்டதாகவும்,*

*"பெரும் படையின் சமுத்திரங்கடந்து இலங்கை நகர் வந்து இராவணனைக் கொண்ற பாவம் நீங்குவதற்காக பாரிய துறைமுகமாகவும் அழகிய தேசமாகவும் இருந்த மன்னார் மாதோட்டத்தில் திருக்கேதீச்சர நாதரை வணங்கியும், பாலாவியில் நீராடியும், பின் தனுஷ்கோடிக்குக் கரையில் இராமஈஸ்வரம் (தற்போதைய இராமேஸ்வரம் ) அமைத்தார்" (இராவணேஸ்வரன் இந்திர உலா பேரறிஞர் கந்தசாமி பாலசுப்பிரமணியம் பக் - 103)*

சிவநேயச் செல்வரான இலங்காபுரி வேந்தனான இராவணன் மனைவியும், மயனின் மகளுமான மண்டோதரியால் இத்தலம் வழிபடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் திருக்கேதீச்சரம் அமைந்துள்ள இடத்தினை அடுத்துள்ள இடங்களில் ஆட்சியாளர்கள் குடியிருந்த மாளிகைகள் காணப்பட்டன. இதுவே தற்போது "மாளிகைத்திடல்" எனவும், திருக்கேதீச்சர ஆலயத்திற்கு பூசை செய்யும் பிராமணர்கள் குடியிருந்த இடம் பார்ப்பணர் மோட்டை (பாப்பாமோட்டை) எனவும், திருக்கேதீச்சர ஆலயத்திற்கு நீர் வழங்கும் நீர்ப்பாசனக்குளம் அமைந்த இடம் "கோயிற்குளம்' எனவும் அதுவும் இன்று ஒரு கிராமமாக காணப்படுகின்றது. இதைவிட இன்னும் பல சைவக்கிராமங்கள் மன்னார் சைவப்பாரம்பரியத்தை வெளிப்படுத்தி நிற்பதை இன்றும் நேரடியாக காணமுடிகின்றது.

எனவே மேற்கூறப்பட்ட சான்றாதாரங்களில் இருந்து சிவபூமி மன்னாரில் சைவசமயத்தவர்கள் மிகவும் தொன்மையான காலத்தில் வாழ்ந்துள்ளமையினையும், பெரும்பாலும் சைவர்களது கலாசாரம் புராதன காலத்தில் இருந்து திருக்கோயில்களை மையமாகக் கொண்டு வளர்ந்தமையினை அறிய முடிகின்றது. இன்றும் கூட அத்தகைய சூழலே காணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட வரலாற்றுக்கு முற்பட்ட புராதன காலத்தில் மன்னார் சைவ சமய வரலாற்றை அறிவது மட்டுமல்லாது, வரலாற்றுக் காலங்களிலும் மன்னார் சைவ சமய வரலாறுகளையும் வளர்ச்சி நிலைகளையும் நோக்குவது சாலப் பொருத்தமானதொன்றாக காணப்படுகின்றது.

### 3.2.1 தமிழ்புலவர் காலம்
### (கி.பி.1-5ம் நூற்றாண்டு)

இக்காலப்பகுதியிலும் மன்னார் சிவபூமியில் சைவர்கள் சிறப்பாக வாழ்ந்துள்ளனர். ஈழத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஈழத்துப் புலவர்களாலும், வணிக முறையினாலும் ஏற்பட்டதினை அறிய முடிகின்றது. இக்காலத்தில் பல சைவப் புலவர்கள் மாந்தையையும், அதனை அண்டிய பிரதேசங்களிலும் வாழ்ந்து பல வாழ்மொழிப்பாடல்களை பாடியதாகவும் அறிய முடிகின்றது. குறிப்பாக ஈழத்து இலக்கிய வரலாற்றுக் காலத்தின் திறவுகோல் என சிறப்பிக்கப்படுகின்ற "பூதந்தேவனார்" என்பவர் மன்னார் துவரங்கேணியைச் சேர்ந்தவர் எனவும், அக்காலத்தில் இவர் மாந்தைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகம் ஊடாக தமிழ் நாட்டிற்குச் சென்று வந்ததாகவும் சங்க இலக்கியங் களான அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை இலக்கியங்களில் இவரது பாடல்கள் இடம்பெறுவதாக தமிழ் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் சங்ககாலத்தில் வாழ்ந்த புலவரான "முறஞ்சியூர் முடினாகனார்" என்பவர் மன்னார் முசலியைச் சேர்ந்தவர் என இடப்பிறழ்வான கருத்து காணப்படுகின்றது. மேலும் அகநானூற்றில் "நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார் பணிதிறை கொணர்ந்த பாடுயர் நன்னகர்" என "மாந்தை" கூறப்படுவதில் இருந்து மாந்தைக்கும், தமிழகததிற்கும், புலவர்களுக்கும் தொடர்பு இருந்துள்ளது என்பது ஈண்டு நோக்கத்தக்கது. அத்துடன் திருமூலர் தனது திருமந்திரத்தில் ஈழத்தை "சிவபூமி" என அழைத்துள்ளார். மேலும் இக்காலப்பகுதியில்

*"தொலமி என்னும் புவியியலறிஞர் கி.பி 2ம் நூற்றாண்டில் மாதோட்டம் இருந்ததையும் குறிப்பிட்டுள்ளார்" (சைவநெறி தரம் 10 பக் 33)*

*"கி.பி 4ம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட ஸ்ரீமேகவண்ணன் என்னும் சிங்கள அரசனின் காலத்தில் மாதோட்டத்திற் சைவக் கோயில் ஒன்று இருந்ததென "தாதுவம்சம்" எனும் நூல் கூறுகின்றது"* (சைவநெறி தரம் 10 பக் 33)

இவ்வாறு தமிழ்ப்புலவர் காலத்தில் மன்னாரில் சைவ சமயம் நிலைபெற்றுள்ள தினை அறிய முடிகின்றது.

### 3.2.2 சமய நாயன்மார்கள் காலம் (கி.பி 6-9ம் நூற்றாண்டு)

இக்காலத்தில் சைவ சமய நாயன்மார்களான கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூரத்தி நாயனாரும், கி.பி. 8ம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் அக்காலத்தில் சைவத்தின் வளர்ச்சி கருதி தலங்களின் மகிமைகளைப் பாடும் வகையில் நேரடியாக கண்ணுற்றும், அகக்கண்ணால் கண்டும் பல பாடல்கள் பாடியுள்ளனர். அந்தவகையில் ஈழத்திலும் உள்ள இரண்டு பிரசித்திபெற்ற சிவத்தலங்களான திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆகிய தலங்களின் மகிமைகளைப் பாடியுள்ளனர். எனவே சம்மந்தரும், சுந்தரரும் இராமேஸ்வரத்தில் நின்று அகக்கண்ணால் நினைத்து பாடியதாகக் கூறப்படுகின்றது. இதனை

"..... சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரம் சார்ந்த சொன்ன மலர்மா லைகள் சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்..."

என சேக்கிழார் தனது பெரிய புராணத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில் சம்மந்தர் தனது தேவாரத்தில் மாதோட்ட இயற்கை அழகினை

"கருதுன்றவூர் கனைகடற்கடிகமழ் பொழிலணி மாதோட்டம்" எனவும்

"வாழையும் பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்.." எனவும்

"வண்டு பண் செய்யும் மாமலர்ப்பொழின் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்..." எனப்பாடுவதினை நோக்க முடிகின்றது.

மேலும் சுந்தரரது தேவாரத்தில்

"வங்கமலி கின்றகடல் மாதோட்டநன் நகரில்..." எனவும்

"தெங்கம் பொழில் சூழுந்திருக கேதீச்சரத்தானே" எனவும் மாதோட்டத்தின் இயற்கை அழகையும், இறைவன் கோயிலின் பெருமையினையும் பாடிய மையில் இருந்து சமயநாயன்மார்கள் காலத்திலும் சிவபூமி மன்னாரில் சைவம் நிலைபெற்ற சிறந்து விளங்கியமையினை நோக்க முடிகின்றது.

மேலும் இற்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்னர் பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தை, கட்டுக்கரைக் குளத்தை அண்டிய பிரதேசங்களில் சைவ சமயத்தவர்கள் செறிவாக வாழ்ந்துள்ளனர் என்பதனை அண்மையில் நடைபெற்ற (2016) கட்டுக்கரைக்குள அகழ்வாராய்ச்சி மூலம் அறியப்படுகின்றது.

*1"மன்னார் கட்டுக்கரைகுள குருவில் பகுதி அகழ்வாராய்ச்சியில் இற்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன் மக்கள் வாழ்ந்த அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது"[1]*

*2"மன்னார் மாவட்டத்தின் மேற்குக் கரையோரத்தில் உள்ள மாதோட்டத் துறைமுகத்தில் இருந்து அநுராதபுரத்தின் புராதன இராசதானிக்கு அமைக்கப் பட்டிருந்த வீதியோரத்தில் இந்தக் குடியிருப்புக்கள் அமைந்துள்ளது"[2]*

*3"மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் அகழ்வாராய்ச்சியில் ஐயனார் வழிபாடு செய்யப்பட்ட இடம், அக்கால ஐயனார் கோவில் ஒன்று அமைந்திருந்தமைக்கான அடையாளங்கள் இந்த அகழ் வாராய்ச்சியில் கிடைத்துள்ளன"[3]*

*(1,2,3 இலக்கத்தகவல்கள் - பேராசிரியர் புஸ்பரட்ணம் யாழ் பல்கலைக்கழகம் 17 செப்டம்பர் 2016 தகவல் - BBC செய்தி தாழ்.)*

எனவே இதிலிருந்து ஐயனார் வழிபாடு சைவர்களின் வழிபாடு என்பதில் இருந்து மன்னாரில் சைவ சமயத்தவர் களின் தொன்மை புலப்படுவதோடு, ஐயனார் வழிபாடு இந்தியாவில் மதுரையில் சிறப்பாக வழிபட்டு வந்ததினையும், இதிலிருந்து மன்னாருக்கும் மதுரைக்கும் மிக நெருக்கமான தொடர்பு இருந்திருக் கின்றது என்பதனை அறிய முடிகின்றது.

மேலும் திருக்கேதீச்சர ஆலயத்தில் நடைபெறுகின்ற "திருமுறைப் பூசையானது இந்தியாவில் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்திலும் நடைபெறுகின்றது. இதனை அக்காலத்தில் இராஜராஜசோழனே ஏற்படுத்தியிருந்தான். எனவே கேதீச்சரத் திலும் இம்மன்னனே இப்பூசையினை அறிமுகப்படுத்தி யிருக்கலாம். ஏனெனில் இம்மன்னன் திருக்கேதீச்சரத்தை வழிபட்டதினால் இவ்வாலயம் "இராஜரா ஜேஸ்வர மகாதேவன் கோவில்" எனச் சிறப்பிக்கப்படுவதினை அறியமுடிகின்றது.

*"கோவிலின் இரண்டாவது சுற்றுப் பிரகாரதில் தென்புற பக்தி மண்டப வரிசையில் வைக்கப்பட்டுள்ள திருமுறைகளும், வேதாகமப் பொக்கிசங் களும் பேணிக் காக்கப்படுவதுடன், தினமும் பரிவார பூசை நடைபெறும்போது இவை பூசிக்கப்பட்டு வருகின்றது'' (கேதீச்சரத் தலத்தின் புகழும் புனருத்தாரணமும் கவிதாயினி திருமதி. சிவகௌரி மன்னல் 2018 பக் 73)*

மேலும் திருக்கேதீச்சர திருத் தலத்தின் பாலாவி தீர்த்ததிற்கும் இந்தியாவின் காசித்தல தீர்த்தத்திற்கும் பிறவிப்பிணி அறுக்கும் மகிமை உள்ளது. இதனால் இரண்டு தலங்களின் தீர்த்தங்களும் புண்ணிய தீர்த்தமாக சரித்திரப்பிரசித்தி பெற்று விளங்கு வதினையும் அறிய முடிகின்றது.

*"திருக்கேதீச்சரத்திருத்தலம் பல சரித்திர நிகழ்வுகளைக் கொண்டது. காசியைப் போன்ற சிவ புண்ணிய தலமாகிய இத்திருக்கேதீச்சரத்தில் பாவம் வினையறுக்கும் பாலாவித் தீர்த்தமாடி நியதிகளை நிறைவு செய்து கொண்டு ஆலய மாட வீதியில் அங்கப் பிரத்திட்சனை செய்வோர் பிறவிப் பிணி நீங்குவர்..." (கேதீச்சரத் தலத்தின் புகழும் புனருத்தாரணமும் கவிதாயினி - திருமதி சிவகௌரி மன்னல் 2018 பக் - 72)*

இவ்வாறு சமயநாயன்மார்கள் காலத்திலும் சிவபூமி மன்னாரில் சைவம் சிறப்புற்று விளங்கியமையினை அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.2.3 தமிழக மன்னர் ஆதிக்க காலம் (கி.பி 10-14ம் நூற்றாண்டு)

தமிழ் நாட்டில் சோழப்பேரரசு எழுச்சியுற்ற காலப்பகுதியில் குறிப்பாக பிற்கால சோழ மன்னர்களான முதலாம் இராஜராஜசோழன், முதலாம் இராஜேந்திர சோழன் போன்றோர் ஈழத்தைக் கைப்பற்றி பொலனறுவையை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த காலத்தில் குறிப்பாக முதலாம் இராஜேந்திரசோழன் ஈழத்தின் வடமேற்கு திசையில் உள்ள சிவத்தலமான திருக்கேதீச்சரத்தை வழிபட்டதாகவும் திருப்பணிகள் செய்ததாகவும் சோழர் ஆட்சி காலத்தில் இது "இராஜராஜேஸ்வர மகாதேவன் கோயில்" என சிறப்பு பெயரைப் பெற்றது. அத்தோடு திருவிராமேஸ்வரம் எனும் ஆலயமும் இங்கு சிறப்புப் பெற்று விளங்கியது. இதனை கி.பி 11ம் நூற்றாண்டில் சோழர்களின் இரு கல்வெட்டில் "மாதோட்டத்தில் திகழ்ந்த இராஜராஜேஸ்வரம், திருவிராமேஸ்வரம் ஆகிய இரு கோவில்கள் பற்றிய குறிப்புகள் காணப்பட்டதாகவும் இதிலிருந்து இக்காலத்தில் மன்னார் சிவ பூமியில் சைவசமயம் வளர்ச்சிநிலைகள் உயர்வு பெற்றமையினை அறியமுடிகின்றது.

அத்துடன் கி.பி 12ம் நூற்றாண்டில் சேக்கிழார் தனது பெரியபுராணத்தில் சமய நாயன்மார்களின் மகிமையை கூறும் பகுதியில் சம்பந்தரும், சுந்தரரும் இராமேஸ்வரத்திலிருந்து அக்காலங்களில் திருக்கேதீச்சரத்தை கண்டு தோத்திரம் பாடியமையினை

*"மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன் வணங்கிப்*
*பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த*
*சென்னியர்மா தோட்டத்துத் திருக் கேதீச்சரஞ் சார்ந்த*
*சொன்னமலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்" (பெயரிபுராணம் சேக்கிழார்)*

எனக் கூறப்படுவதில் திருக்கேதீச்சரம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கி.பி 13ம் நூற்றாண்டில் இரண்டாம் பாண்டியப்பேரரசின் ஆதிக்கம் நிலவிய காலத்தில் முதலாம் சுந்தர பாண்டியரின் ஆதரவினையும் பெற்று வளர்ச்சி அடைந்தமையினை நோக்க முடிகின்றது. இன்றும் பாண்டியர் மரபின் சிறப்பங்கள் காணப்படுகின்றமை நோக்கப்படுகின்றது.

அத்துடன் கி.பி 14ம் நூற்றாண்டில் விஜயநகர பெருமன்னர் இலங்கையின் வடபகுதியில் சிலகாலம் பெற்றிருந்த செல்வாக்கின் போது திருக்கேதீச்சர ஆலயமும் இவர்களது ஆதரவைப் பெற்று வளர்ச்சி அடைந்ததை வரலாற்றாசிரியர் கருதுவர்.

இதன்பின்னர் கி.பி 1540 இல் மாந்தை துறைமுகத்தை சார்ந்த கடற்பிரதேசத்தில் கடல்கோள் ஒன்று ஏற்பட்டது. இதனால் திருக்கேதீச்சரத்தின் ஒரு பகுதி முற்றாக அழிவடைந்து காணப்பட்டது என்பதினை அராலி விஸ்வநாதர் சம்பவக் குறிப்பில் காணப்படுகின்றது. போர்த்துக்கேயர் கி.பி 1590 இல் மன்னாரைக் கைப்பற்றினர். மதநடவடிக்கைகளில் மிகவும் கடும் போக்குடையவர்களாக காணப்பட்ட போர்த்துக்கேயர் மன்னார் சிவபூமியின் சைவ சுதேசிகளை கட்டாயத்தின் பேரில் மதமாற்றம் செய்வித்ததோடு, இங்குள்ள சைவ ஆலயங்களையும் இடித்து தரைமட்டம் ஆக்கினர். இச்செயற்பாட்டால் திருக்கேதீச்சர ஆலயமும், திருவிரா மேஸ்வரம் என்னும் ஆலயமும் முற்றாக திட்டமிட்டு அழித்தும் அவ்வாலயங்களில் இருந்த பொருட்களை சூறையாடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்களைக் கொண்டு துறைமுகம், கோட்டை முதலானவற்றைக் கட்டியதாக கூறப்படுகின்றது. இவ்வாறு சைவர்களின் வாழ்வை நிலைகுலையச் செய்தனர்.

“பனையால் விழுந்தவனை மாடேறி உழக்கியது போலவும்”, “வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போலவும்” போர்த்துக்கேயரின் கொடுமைகளை தாங்காத மன்னார் சைவ மக்கள் மீது அடுத்து ஒல்லாந்தரின் ஆதிக்கமும் அவர்களின் வாழ்வியலை சின்னாபின்னப் படுத்தியது. இதனால் சைவர்களின் பாரம்பரிய வாழ்வியலானது திருக் கேதீச்சரம், திருவிராமேஸ்வரம் ஆலயங்களின் அழிவோடும் நிலை குலைந்து அழிந்து போயின. எனவே எனது நோக்கில் மன்னார் சைவசமய வரலாற்றில் இக்காலம் இருண்டகாலம் என கருதுகின்றேன்.

### 3.2.5 ஆறுமுகநாவலர் காலம் (19ம் நூற்றாண்டு)

மன்னாரில் சைவ சமயமானது போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் அழிவடைந்து சுமார் 3 நூற்றாண்டு காலம் மண்ணுக்கடியில் அமைதியாக கிடந்தது. சைவர்களும் ஏதிலிகளாக தமது பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் தொலைத்து விரும்பியோ விரும்பாமலோ அந்திய மதங்களுக்கும், கலாசாரங் களுக்கும், வாழ்வியலுக்கும் அடிமைப் பட்டிருந்தனர். வறண்டு வாடிய தமது இனத்திற்கும், மதத்திற்கும் நல்மழையாக 19ம் நூற்றாண்டில் வந்துதித்த பெருமகனாராம் நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தோன்றினார். தனது அறிவாலும், ஆற்றலாலும் அழிந்த சைவத்தை மீட்டுத் தந்த உத்தமர் ஆவர்.

புனிதமிக்க தெய்வீக சிவத்தலங்கள் வழிபடும் பக்குவர்க்ள அருகிய காலத்தில் மறைவதும் பக்குவர்கள் சிலரின் தவ விஷேடத்தினால் ஒரு பாகமோ முழுவதுமோ வெளிப்படுவதும் இயற்கை என்று அறிந்தோர் கூறக்கேட்டதுண்டு. எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்து சென்ற நூற்றாண்டு மத்தியில் ஒரேயொரு ஆறுமுக நாவலர் இதயத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டது. யாழ்ப்பாண சமய நிலை என்ற துண்டுப்பிரசுரத்தின் இறுதிப் பந்தியில் பின்வருமாறு நாவலர் கூறுகின்றார்.

*“சைவ சமயிகளே! தேவாரம் பாடப்பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ் இலங்கையிலுள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருகோணமலைக்குச் சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிக மொன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்திற்கு திருஞான சம்மந்தமூர்த்தி நாயனார் திருப்பதிக மொன்றும், சுந்தர் மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத்திருக்கேதீச்சரம் வட மாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்தில் உள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிதுபுதிதாக அவ்விலங்கையில் எத்தனையோ கோவில்கள் கட்டப்படுகின்றனவே நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாத தென்னையோ! இவ்விலங்கை யிலுள்ள விபூதித்தாரர்கள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணை பெருந்தொகைப்பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லீரும் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்வார்.”*
*(திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும் - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)*

எனக் கூறிச் சைவர்களை ஊக்கப் படுத்தினார். அத்துடன்,
*“மன்னாருக்கு சமீபத்தில் உள்ள மாதோட்டத்திலே திருக்கேதீச்சரம் என்னும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தேன் பொந்து ஒன்று உள்ளது. அங்கு மருந்து ஒன்று மறைந்துள்ளது. அதனைச் சென்றடையுங்கள்" (திருக்கேதிச்சரமும், நாவலர் அவர்களும் - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)*

என்று நாவலர் பெருமான் அன்று சைவர்களுக்கு விடுத்த விஞ்ஞாபனத்துடன் சைவ சமயத்தவர்களுக்கு ஒளி பிறந்தது. எனவே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் காலம் மன்னார் சைவ சமய வரலாற்றில் ஓர் மறுமலர்ச்சிக் காலமாகியது.

'1894 ஆம் ஆண்டு தை மாதம் பசுபதிச் செட்டியார் தலைமையில் அங்கு சென்ற சைவர்கள் காடு வெட்டி கோயிலைத் தேடினர் இறைவனின் சித்தமாக மேற்பரப்பில் ஏறத்தாழ 10 மீற்றர் ஆழத்திலிருந்து பழைய கோவிலின் தீர்த்தக் கிணறு காணப்பட்டது. பின்னர் அக்கோயிலில் பிரதிட்டை செய்திருந்த மகாலிங்கம் சோமஸ்கந்தர், விநாயகர், நந்தி முதலிய விக்கிரகங்கள் கண்ணுக்கு தென்பட்டன. அவ்வாண்டு ஆவணி மாதம் பழைய கோவிலிருந்த இடத்திற்கு ஏறத்தாழ கால் கிலோமீற்றர் வடக்கே சிறிய *கோவில் ஒன்றினை நிறுவினர். அக்கோவிலின் பரிபாலணம் நாட்டுக் கோட்டை நகரத்தாரிடம் இருந்தது. அவர்கள் 1903 ஆம் ஆண்டு கற்கோயில் சிவலிங்கமும் அன்று ராமேஸ்வரம் வழியாக காசியிலிருந்து கொணர்வித்த சிவலிங்கமும் அம்பாள் விக்கிரகமுமே இன்றும் மூலஸ்தானத்தில் உள்ளன. அகழ்ந்தெடுத்த சோமஸ்கந்தர் இப்பொழுதும் திருவிழாவிற்கு எழுந்தருழல் வழக்கம்' (சைவநெறி தரம் - 10 கல்வி வெளியீட்டுத் திணைக்களம் பக் 38)*

தொடர்ந்து சைவப்பெரியார் திருவாளர் க. சிவபாதசுந்தரனாரும் திருக்கேதீச்சரப் பதிகங்களை பதுப்பித்தும் மடங்களை அமைத்தும் நாவலர் விட்ட பணிகளை தொடர்ந்தும் செய்தவந்தனர்.

### 3.2.6 மறுசீரமைப்புக் காலம்

இக்காலமானது மன்னாரில் சைவசமயத்தின் வரலாற்றில் பொற்காலமென கூறலாம். ஏனெனில் திருக்கேதிச்சரம் உட்பட மன்னார் மாவட்டத்தின் பல சைவர்கள் ஆலயத்தை மையாக வைத்து வாழ்ந்தமை மட்டுமன்றி சமய விரதங்களையும் விழாக்களையும் கடைப்பிடித்தும் வந்துள்ளனர். இதனால் சைவம் புதுப்பொலிவு பெற்றுக் காணப்பட்டது. குறிப்பாக திருக்கேதீச்சர ஆலயமானது 1944 ல் ஈழத்தில் சிவனடியார் திருக்கூட்டம் என்ற சைவ அமைப்பின் பெயரில் 1948 ல் ஐப்பசி 3ம், 4ம் திகதிகளில் திருக்கேதீச்சரத்தில் சைவ மாநாடு ஒன்றினைக் கூட்டினர். இதனால் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பல சமயப் பெரியவர்கள் கலந்து கொண்டு ஆலயத்தை மறுசீரமைக்க வேண்டும் எனக்கூறினர். இதனால் 1948 ஒக்டோபர் 28ம் திகதி திருக்கேதீச்சர ஆலய திருப்பணி சபையை நிறுவி புனரமைப்புக்களை செய்தனர். பிற்பட்ட சில காலங்களில் திருக்கேதீச்சரம் ஆலயம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. குறிப்பாக

- 1956ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மதுரை திருஞான சம்பந்தர் ஆதீன முன்னாள் முதல்வரான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிக சுவாமிகளும், சுந்தரம் லிமிடட் உரிமையாளர்களும் கும்பாபிசேகம் செய்வித்தனர்.
- 1960 ஒக்டோபர் 31ல் சிவமணி சீமான் கந்தையா வைத்தியநாதன், சட்டத்தரணி திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரால் கும்பாபிசேகம் செய்விக்கப்பட்டது.
- 1976 யூலை 4ம் திகதி திருவாளர் எஸ். சோமசுந்தரம் சட்டத்தரணி அவர்கள், சிவத்தொண்டர் இ. நமசிவாயம் அவர்களும், திரு. எஸ். சோமசுந்தரம், கேணல். இரா. சபாநாயகம் முதலானோரினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியால் மகா குடமுழுக்கும் நடைபெற்றது. இதன் பின் அலங்காரத் திருவிழா கொடியேற்றத் திருவிழாவாகி சிறப்பாக நடைபெற்றது.

- 1983ம் ஆண்டு ஐந்து திருத்தேர்களும் ஆலயத்தில் வலம் வந்தன. வைகாசி விசாகத்திலன்று நடைபெறும் பாலாவியின் தீர்த்த உற்சவம் சிறப்பானதாகும். சிவராத்திரி விழாவும் வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

மேலும் மன்னார் சைவ சமய வரலாறானது திருக்கேதீச்சர ஆலயத்தோடு ஆரம்பிக்கப்பட்ட போதும் பல புராதன ஆலயங்கள் மன்னாரின் ஏனைய பிரதேசங்களில் தோன்றி இன்று வரை சிறப்பாக வளர்ச்சிபெற்று சைவத்தின் இருப்பை பறைசாற்றுகின்றது. அந்த வகையில் நானாட்டான் ஸ்ரீசெல்வமுத்து மாரியம்மன் தலைமன்னார் முத்து மாரியம்மன் ஆலயத்தையும் குறிப்பிடலாம். அத்தோடு பின்வரும் கிராமங்களிலுள்ள ஆலயங்களை நோக்குவோம்.

1. முத்துமாரி அம்மன் கோவில் - தலைமன்னார் (மிகப்பழமையானது)
2. காத்தாரி அம்மன் கோவில் - படப்படி தலைமன்னார்
3. ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலயம் - பேசாலை (95 வருடங்களிற்கு முன்)
4. ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் - காட்டாஸ்பத்திரி பேசாலை
5. துர்க்கை அம்மன் ஆலயம் - உதயபுரம் பேசாலை
6. மாரியம்மன் ஆலயம் - தாராபுரம்
7. பாலமுருகன் ஆலயம் - கீரி 1984
8. ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் - செல்வநகர் 1940
9. திருச்செந்தூர் முருகன் ஆலயம் - தோட்டக்காடு
10. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி ஆலயம் - எழுத்தூர் 1970
11. பிள்ளையார் கோவில் - சின்னகரிசல் புராதன ஆலயம்
12. அம்மன் கோவில் - 5ம் கட்டை தலைமன்னார் வீதி
13. ஸ்ரீபாலமுருகன் ஆலயம் - மன்னார் வைத்தியசாலை 1982
14. ஞானவைரவர், திருமுருகன் ஆலயம் - பெரியகடை
15. லிங்கேஸ்வரர் ஆலயம் - தலைமன்னார் வீதி, சாவற்கட்டு 1987
16. ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயம் - சௌத்பார் 1966
17. வேலமுருகன் ஆலயம் - சாந்திபுரம் 1964
18. அம்மன் ஆலயம் - அம்மன்தோட்டம் சௌத்பார் 1950
19. சித்திவிநாயகர் ஆலயம் - உப்புக்குளம் 1913
20. இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் - உப்புக்குளம் 1913
21. ஆலடிப்பிள்ளையார் ஆலயம் - மன்னார் நகரம் 1938
22. அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் - பாலம்பிட்டி 1991
23. பிள்ளையார் கோவில் - பாவிலுப்பட்டான்பிட்டி 1996
24. முருகன் கோவில் - பறப்பான்கண்டல்
25. முருகன் கோவில் - முள்ளிப்பள்ளம்
26. திருமுருகன் ஆலயம் - சிறுநாவற்குளம்
27. முனியப்பர் கோயில் - மாந்தை
28. அம்மன் கோயில் - கள்ளிக்கட்டைக்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. அம்மன் கோயில் - வண்ணாமோட்டை
30. அனுமார் ஆலயம் - வண்ணாமோட்டை 1987
31. சித்திவிநாயகர் ஆலயம் - இத்தியடி சின்னப் பண்டிவிரிச்சான்
32. சித்திவிநாயகர் ஆலயம் - பூம்புகார்
33. ஸ்ரீமுருகன் ஆலயம் - தச்சனா மருதமடு 1957
34. மாணிக்க விநாயகர் ஆலயம் - வைரவப்புளியங்குளம்
35. ஐயனார் கோயில் - பாலம்பிட்டி 1875
36. பட்டிவழி பிள்ளையார் கோயில் - பாலம்பிட்டி
37. மரதடிப்பிள்ளையார் - பாலம்பிட்டி
38. சித்திவிநாயகர் ஆலயம் - பாலம்பிட்டி 1955
39. பிள்ளையார் கோயில் - முள்ளிக்குளம் 1970
40. குதிரைவிட்டான் பிள்ளையார் கோயில் - முள்ளிக்குளம்
41. நாகதம்பிரான் கோயில் - கங்காணிக்குளம் 1990
42. சிவன் ஆலயம் - இரணை இலுப்பைக்குளம் 1916
43. சித்திவிநாயகர் ஆலயம் - பெயரிய பண்ணிவிரிச்சான்
44. பிள்ளையார் கோயில் - பெரிய வில்லடி 1995
45. முனியப்பர் கோயில் - தச்சனாமருதமடு 1970
46. விநாயகர் ஆலயம் - தச்சனாமருதமடு 1990
47. பாலவிநாயகர் ஆலயம் - தச்சனாமருதமடு 1951
48. சக்தி கணபதி ஆலயம் - விளாத்திக்குளம் 1970
49. உத்திரமாகாளி கோயில் - தச்சனாமருதமடு 1972
50. பத்திரகாளி கோயில் - ஆவரங்கால் 1916
51. அம்மன் கோயில் - இரணை இலுப்கைக்குளம் 1930
52. பிள்ளையார் ஆலயம் - இரணை இலுப்பைக்குளம் 1916
53. அம்மன் கோயில் - மண்கிண்டி 1916
54. முருகன் ஆலயம் - கல்மடு 1958
55. வீரபத்திரர் ஆலயம் - வவுனியன் பெரியகுளம் 1916
56. பிள்ளையார் கோயில் - விளாத்திக்குளம் 1916
57. அம்மன் கோயில் - விளாத்திக்குளம் 1930
58. முருகன் ஆலயம் - பாசங்குளம் 1916
59. அம்மன் கோயில் - அணைக்கல்போட்டார் குளம் 1971
60. முருகன் கோயில் - சின்னவலயன்கட்டு 1950
61. முத்துமாரியம்மன் கோயில் - கட்டுக்கரை முருங்கன் 1920
62. ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் - 1954
63. விநாயகர் ஆலயம் - செம்மண் தீவு
64. முருகன் ஆலயம் - முருங்கன்
65. வைரவர் ஆலயம் - கற்கிடந்த குளம்
66. வைரவர் ஆலயம் - முருங்கன் சந்தி
67. பிள்ளையார் ஆலயம் - கட்டையடம்பன் 1977
68. அம்மன் கோயில் - முருங்கன்
69. சனீஸ்வரன் கோயில் - கட்டையடம்பன் 1810
70. முருகன் ஆலயம் - கட்டையடம்பன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. பிள்ளையார் கோயில் - சிறுக்கண்டல் 1975
72. அம்மன் கோயில் - பரிகாரிகண்டல் 1937
73. பிள்ளையார் கோயில் - வெள்ளாளர்கட்டு 1850
74. வைரவர் கோயில் - ஆண்டாசெட்டித்தெரு
75. அம்மன்கோயில் - சிலாவத்துரை
76. அம்மன்கோயில் - அரிப்பு
77. பிள்ளையார் கோயில் - மடுவீதி
78. கஜமுகன் ஆலயம் - சிறுகண்டல் 1968
79. கற்பக பிள்ளையார் கோயில் - கடற்கரைப்பிட்டி விடத்தல்தீவு 1922
80. கற்பக விநாயகர் கோயில் - கள்ளியடி 1648
81. முத்துமாரியம்மன் கோயில் - இலுப்கைக்கடவை 1650
82. பிள்ளையார் கோயில் - பிள்ளையார்பிட்டி, அடம்பன்
83. பிள்ளையார் கோயில் - பெரியமடு 1990
84. சித்திவிநாயகர் ஆலயம் - பெரியமடு 1960
85. அம்மன் கோயில் - காயாநகர் பெரியமடு 1995
86. அம்மன் கோயில் - காயாநகர் 1977
87. மாவடி வைரவர் ஆலயம் - பள்ளமடு 1920.
88. ஐயனார் கோயில் - வெள்ளாங்குளம் வடக்கு 1942
89. நாச்சிம்மார் கோயில் - வெள்ளாங்குளம்
90. சந்திரசேகர பிள்ளையார் கோயில் - வெள்ளாங்குளம்
91. ஐயனார் கோயில் - வெள்ளாங்குளம் தெற்கு
92. வைரவர் கோயில் - வெள்ளாங்குளம் தெற்கு
93. முனியப்பர் கோயில் - வெள்ளாங்குளம் வடக்கு 1938
94. முருகன் கோயில் - வெள்ளாங்குளம் வடக்கு 1987
95. வைரவர் கோயில் - வெள்ளாங்குளம் வடக்கு
96. பிள்ளையார் கோயில் - மூன்றாம்பிட்டி
97. முருகன் கோயில் - பாலியாறு
98. கற்பகபிள்ளையார் ஆலயம் - கோயிற்குளம்
99. நொங்குவெட்டி ஐயனார் கோயில் - கோயிற்குளம்
100. சித்திவிநாயகர் ஆலயம் - புதுக்குளம்
101. வைரவர் பிள்ளையார் ஆலயம் - சவிரிக்குளம்
102. காளிகோயில் - ஆத்திமோட்டை 1930.
103. கற்பக விநாயகர் ஆலயம் - ஆத்திமோட்டை 1935
104. ஐயனார் ஆலயம் - ஆத்திமோட்டை 1995
105. பிள்ளையார் ஆலயம் - கூராய் 1971
106. பிள்ளையார் ஆலயம் - சீதுவிநாயகர் குளம் 1960
107. சித்திவிநாயகர் ஆலயம் - இலுப்பைக்கடவை
108. அம்மன்கோயில் - இலுப்பைக்கடவை 1995
109. முனீஸ்வரன் ஆலயம் - இலுப்பைக்கடவை
110. பாலமுருகன் கோயில் - இலுப்பைக்கடவை 1985
111. சித்திவிநாயகர் கோயில் - வட்டக்கண்டல்
112. விநாயகப்பிள்ளையார் கோயில் - இத்திக்கண்டல் 1980 *(சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி சிறப்பு மலர் 1999 - பக் 135 - 144)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மேற்குறிப்பிட்ட மன்னார் மாவட்டத்தில் உள்ள சைவ ஆலயங்களைச் சூழ சைவர்கள் மிகப்புராதன காலத்திலிருந்து மன்னார் தீவிற்குள்ளும், பெருநிலப்பிரதேசத்திலும் செறிவாக வாழ்ந்துள்ளனர், வாழ்கின்றனர் என்பதோடு இங்குள்ள பல ஆலயங்கள் திருக்கேதீச்சர புராதன ஆலயத்தோடு தொடர்புடைய காலத்தில் இருந்துள்ளது என்பதை அவ்வாலயங்களின் மிகப் பழைமையிலிருந்து அவதானிக்கலாம். குறிப்பாக நானாட்டான், தலைமன்னார், இலுப்பைக் கடவை, கள்ளியடி, கோவிற்குளம், வெள்ளாங்குளம், பாலம்பிட்டி, கரிசல் முதலான இடங்களிலுள்ள ஆலயங்களை குறிப்பிட்டுக்கொள்ளலாம்.

ஆகவே இங்குள்ள மக்கள் ஆகமமுறைசார்ந்த வழிபாட்டினையும், ஆகமமுறைசாரா வழிபாட்டினையும் மேற்கொண்டதோடு சைவப்பாரம்பரியத்தினை ஆலயத்தினூடாக பேணியமையும் நோக்கப் படுகின்றது.

### 3.2.7 ஈழப்போராட்ட காலம்

இலங்கையில் 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் பின்னர் கலவரங்களாக தோற்றம் பெற்று இறுதியில் ஆயுதப் போராட்டமாக முழுவடிவம் பெற்றது. இக்காலத்தில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டு எங்கும் போர்மேகம் கொண்டு காணப்பட்டது. இக்காலத்தில் சைவ மக்கள் தமது வாழ்விடத்தை விட்டு வேறு இடங்களுக்குச் சென்று குடியேறியமையும் பலர் இந்தியாவிற்கும், வெளிநாடுகளுக்கும் சென்றனர். இதனால் அவர்களால் ஆதரிக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்ட பல ஆலயங்கள் அழிக்கப்பட்டன.

*"கொடிய போரினால் திருக்கேதீச்சர ஆலயமும், அதன் அழகிய மண்டபம், மனைகள், முதியோர் இல்லங்கள், கல்லூரி, சிவன் குருகுலம், மருந்தகம், பொது நிறுவனங்கள், ஆலய உடைமைப் பொருட்கள், பஞ்சமூர்த்திகளை சுமந்து அழகே உருவம் அசைந்தாடி வீதி உலா வரும் அணிசேர் அலங்காரம் உடைய ஐந்து திருத்தேர்கள், சகடைகள், சப்பிர கேடகங்கள், தண்டிகைகள், பரிவார மூர்த்திகள், வாகனங்கள் அனைத்தும் அழிந்தும் சிதைந்தும் போயின." (திருக்கேதீச்சர திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழா மலர்)*

எனவே சில இடங்களில் சைவர்கள் தற்காலிகமாக குடியேறிய இடங்களில் சில சிறிய ஆலயங்களை உருவாக்கி வழிபட்டமையினை ஆலயங்களின் பட்டியல்களை அவதானிப்பதன் மூலம் அறியலாம்.

அத்துடன் மன்னார் நகர பகுதியில் உள்ள சைவர்கள் இராணுவத்தின் அனுமதி பெற்று திருக்கேதீச்சர ஆலயத்திற்கு மிக கடுமையான சோதனைகளின் மத்தியில் சென்று வழிபட்டு வந்தனர். அத்தோடு பெரும்பாலான மக்கள் தமது பாரம்பரிய வாழ்விடங்களை இழந்தமையால் பிற சமயத்தவர்கள் வாழும் இடங்களில் வாழ்ந்தமையாலும், கலப்பு திருமணங்களாலும் மன்னாரில் சைவம் கீழ்நிலைப்படத் தொடங்கியது. எனவே குறிப்பாக ஈழப்போராட்ட காலம் மன்னாரில் சைவ சமய எழுச்சிக்கு பாரிய தடையாக இருந்ததை நோக்கலாம்.

### 3.2.8 தற்காலம்

இன்று மன்னாரில் சைவ சமயத்தை நோக்கும் போது சைவர்கள் பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோவில்களை அடிப்படையாக கொண்டு வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். அத்துடன் கோயில்களின் எழுச்சிகள், அவற்றின் பரிபாலிப்பிற்கும் உதவி வருவதோடு கோயில்களில் நடைபெறுகின்ற பூஜைகள், விழாக்களையும், பொதுவான சமய விரதங்களையும் பண்டிகைகளையும் செவ்வனே கடைப்பிடித்து வருகின்றனர்.

இக்காலத்தில் சைவ சமய வளர்ச்சியானது திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டும், சைவ சமய அமைப்புக்கள், பாடசாலை, அறநெறிப் பாடசாலை, இலக்கிய முயற்சிகளினூடாகவும் வளர்க்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக கோயில்களை அடிப்படையாகக் கொண்ட சைவத்தின் வளர்ச்சியினை நோக்கும் போது மன்னாரில் காணப்படுகின்ற ஆலயங்களை மையமாகக் கொண்டு சைவ மக்கள் வாழ்வதோடு தமக்கென ஆலய நிர்வாகத்தையும் அமைத்து பரிபாலித்து வருகின்றனர். கோவில்களில் நித்திய பூசைகள் நடைபெறுகின்ற அதே நேரம் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் விசேட பூசைஞம் நடைபெறுகின்றன. அத்தோடு திருவிழாவும், கொடியேற்றம், அலக்கார திருவிழா என ஆலயங்களில் நடைபெறுகின்றது. பெரும்பாலான ஆலயங்களில் ஆகம முறை சார்ந்த வழிபாடுகள் அத்தணர்களால் பூஜைகளும் செவ்வனே ஆற்றப்படுகின்றது. ஆகம முறைசாரா வழிபாடாக சைவர்களால் பூசைகள் ஆற்றப்பட்டு வழிபடப்படுகின்றன.

யுத்தம் முடிவுற்றதான தற்காலத்தில் பல ஆலயங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. கோவில்களை அடிப்படையாகக் கொண்ட சைவ வளர்ச்சிக்கு சிவாச்சாரியர்களின் பங்களிப்பு, பணி மிகவும் போற்றுதற்குரியது.

இன்னும் மன்னாரில் பிற இடங்களிலும் தமது ஆலய பூஜை பணியை செவ்வனே மேற்கொண்டு சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற சிவாச்சாரியர்களும் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள்.

மேலும் தற்கால மன்னாரில் சைவ சமய வளரச்சியில் சைவ மத அமைப்புக்களினது பணிகள் மிகவும் போற்றத்தக்கது. பல அமைப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் இன்னும் தமது சேவையை செய்யும் அமைப்புக்களாக பின்வருவனவற்றை நோக்க முடிகின்றது.

- இந்து சமய வளர்ச்சிச் சங்கம்
- இந்து ஆலயங்களின் ஒன்றியம்
- அறநெறிப் பாடசாலைகளின் இணையம்
- சைவக் கலை இலக்கிய மன்றம்
- சிவபூமி இந்து இளைஞர் மன்றம்
- கலாநிதி மனோகரக்குருக்கள் நற்பணி மன்றம்
- நலிவுற்றோர் நலன் காப்பு நிதியம்
- இந்து முன்னணி கலகம் - பேசாலை
- சிவ தொண்டர் அணி
- மகா சிவராத்திரி மடம்
- இந்து மகா சபை
- இந்து மக்கள் பேரவை மாந்தை மேற்கு
- நவோதைய சக்தி இந்து இளைஞர் மன்றம்
- சைவப் பேரவை
- இந்துக்குருமார் பேரவை

எனப் பல அமைப்புக்களும் இன்றும் சைவ சமய வளர்ச்சிக்கு கடும் பணியாற்றுகின்றன. அத்துடன் சைவ சிறார்களின் நலநோன்பு நிலையங்களாக

- அன்னை இல்லம்
- சிவன் அருள் இல்லம்

என்பனவற்றையும் அவற்றின் பணிகளையும் சிறப்பாக நோக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சைவத்தின் வளர்ச்சிக்கு பாடசாலைகளினது பங்களிப்பை நோக்கும்போது குறிப்பாக மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, மன்/ கௌரியம்பாள் பாடசாலை, மன்/ மோட்டக்கடை அ.த.க.பாடசாலை சைவ சமய பாட ஆசிரியர்களின் கற்பித்தலாலும் ஏனைய பாடசாலையின் சமய விழாக்களாலும் தற்காலத்தில் சமயம் வளர்க்கப்படுவதினை நோக்க முடிகின்றது.

அத்துடன் சைவசமய வளர்ச்சிக்கு சைவ சிறார்களுக்கு சமய பாடத்தினை கற்பிப்பதும், அவர்களின் கலாசாரங் களையும் பண்பாட்டையும் பேணும் முகமாக அறநெறிப் பாடசாலைகள் ஆலயத்தினூடாக வளர்க்கப்படுவதினை யும், அவற்றினைகட்டுக்கோப்பாக வழிநடத்துகின்ற அறநெறிப் பாடசாலை களின் இணையத்தின் பணியையும் குறிப்பிடலாம். மேலும் மன்னாரில் சைவத்தை இன்றும் அழிந்து போகாது பாதுகாக்கும் பொருட்டு சமய நிறுவனங்களிற் கூடாகவும், தனி மனிதர்களாகவும் நின்று தமது பாரம்பரியத்தினையும், கலாசாரத்தி னையும், பண்பாட்டினையும் பேணிக்காத்து இன்று வரை வழிநடத்துகின்ற மன்னார் சைவ மத பெரியவர்களான குறிப்பாக வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன், பொறியியளாளர் எஸ். எஸ். இராம கிருஸ்ணன், எஸ். பிருந்தாவனநாதன், அதிபர் ஏ. ஐ. தயானந்தராஜா, வி. செல்வரெட்ணம் (செல்வம் பிரதர்ஸ்), திருக்கேதீஸ்வரம் கண்ணன் குருக்கள், மஹா தர்மகுமாரக் குருக்கள், மனோ ஐங்கர சர்மா, வீ. பாபு குருக்கள், ம. நடேசானந்தன் முதலியோரது சமய பணியினை நன்றியோடு பதிவு செய்வதோடு, இன்னும் பல பெயர் குறிப்பிடப்படாத சைவ சமய பெரியவர்களும் ஊரிடை பூத்த சிறு மலர் போன்று பணியாற்றுபவர்களும், அரச உத்தியோகத்தர்களும், மன்றங்களின் உறுப்பினர்கள், தொண்டர்களென பலரது அயராத உழைப்பினால் இன்றும் மதம் காக்கப்படுகின்றது.

அத்துடன் இக்காலத்தில் சைவ சமய இலக்கிய முயற்சிகளாக சைவமக்களிற்கும், சைவச்சிறுவர்களிற்கும் கூறும் பொருட்டு பேசாலை இந்து முன்னணியினால் அன்னை பத்திரிகையும், திரு. எஸ். ரமேஸ் அவர்களினால் இந்துதீபமும் வெளிவந்து பின் இவை மக்களின் ஆதரவின்மையால் தடைப் பட்டது. மேலும் திரு. க. சிவம் அவர்களி னால் ஆலயத்தின் பக்திபாமாலையும் திரு. எஸ். முத்து அவர்களால் வெளியிடப்பட்ட பக்திவிஜயமும் மஹாதர்ம குமாரக் குருக்களின் நந்தி காலாண்டிதழ், திரு. எஸ். ஜெகனின் உலக ஆரம்பமும் மன்னார் மாவட்டமும், திரு. கு. கனகசபாபதி அவர்களின் திருக்கேதீச்சர வரலாறும் பன்னிருத்திருமுறைகள் என்ற நூலும் இக்கால இலக்கிய முயற்சி களாகும். இவை மேலும் வளர வேண்டும் என்பதே எனது பேரவா.

அத்துடன் போருக்குப் பின்னரான தற்காலத்தில் மன்னாரிலுள்ள பல சைவ ஆலயங்களும் புனருத்தாரணம் செய்யப் பட்டு வருவது சிறப்பான விடயமாகும். குறிப்பாக திருவானைக்கூடம் சித்தி விநாயகர் ஆலய இராஜகோபுர நிர்மாணிப்பையும், தற்போது திருக்கேதீச்சர ஆலயமானது கருங்கல்லினாலான வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்கள் மாமல்லபுர சிற்பக்கல்லூரியில் இருந்து கொண்டுவரப்பட்டு கண்ணையும், கருத்தையும் கவரும் உறுதியான ஆலய மீள் புதுப்பித்தல் திருப்பணியானது அதன் திருப்பணிச்சபை நிதியுடன், சிவனடியார் களின் அன்பளிப்பு நிதியோடு, இந்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் ஒரு பகுதி நிதி நன்கொடையுடன் திருப்பணி சபையினரின் நெறிப்படுத்தலில் இணைச்செயலாளர் ஓய்வுநிலைப் பொறியியலாளர் திரு. எஸ். எஸ். இராமகிருஸ்ணன், அவர்களின் அயராத முயற்சியினால் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. திருக்கேதீச்சரம் முற்றாக கருங்கற் கோயிலாக நிர்மாணிக்கப்படுவதும், உப்புக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தில் சப்ததள ராஜகோபுரம் அமைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமன்றி இன்று எமது சைவ சமயமானது பிறமத ஆதிக்கத்தினால் பாரிய சவால்களை எதிர்கொள்கின்றது. குறிப்பாக திட்டமிட்ட குடியேற்றம், திருச்சொரூபங்களின் தாபிப்பு, வரலாறுகளை புரட்ட முனைதல், கலப்புத்திருமணம், அடக்குமுறைகள், பிறமதப்பிரசாரம், கலப்புக் குடியிருப்பு, உரிமைகள் மறுப்பு எனப் பல கோணங்களிலும் தற்போது சவால்கள் நிறைந்துள்ளன. இவற்றுக்கு மத்தியில் மன்னாரில் சைவம் சிறப்புற்று காணப்படுவது சிறப்புக்குரியதாகும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**உசாத்துணை நூல்கள்:**


1. இலங்கையின் இந்து சமயம் - பேராசிரியர் சி. பத்மநாதன் அகில இலங்கை இந்துமாமன்றம், குமரன் புத்தக இல்லம் 2005
2. சைவ நெறி தரம் 10 - கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 1999
3. மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி - நாற்பதாண்டு நிறைவுவிழா வெளியீடு 1999
4. திருக்கேதீச்சர வரலாறும் பன்னிரு திருமுறைகளும் - குருசாமி கனகசபாபதி
5. உலக ஆரம்பமும் மன்னார் மாவட்டமும் - திரு. எஸ். ஜெகன் நானாட்டான்
6. மன்னல் 2017, 2018 - பிரதேச செயலகம், மன்னார் நகரம்


---

## சிந்தனைக்கு...

**பேசும் முன் கேளுங்கள்.**
**எழுதும் முன் யோசியுங்கள்.**
**செலவழிக்கும் முன் சம்பாதியுங்கள்.**
**முதலீடு செய்யும் முன் விசாரியுங்கள்.**
**குற்றம் செய்யும் முன் நிதானியுங்கள்.**
**ஓய்வு பெறும் முன் சேமியுங்கள்.**
**இறப்பதற்கு முன் தர்மம் செய்யுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முசலி மண் ஈன்ற முஸ்லிம் புலவர்கள்

எம். கே. எப். ஹினாயா
B.A. Dip. in Ed
மன்/ முசலி தேசிய பாடசாலை

**அறிமுகம்:**

வட மாகாணத்திலே உள்ள மன்னார் மாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கும் முசலிப் பிரதேசம் இது ஒப்பற்ற ஒரு தனித்துவமான பிரதேசம் ஆகும். வடக்கே மல்வத்து ஓயா (அருவியாறு), கிழக்கே அடர்ந்த வில்பத்துக் காடு, மேற்கே இந்து மகா சமுத்திரம், தெற்கே மோதரகம ஆறு (உப்பாறு) ஆகிய இயற்கை அரண்களை எல்லைகளாகக் கொண்டமைந்தது இம் முசலிப் பிரதேசம்.

செந்நெல் விளையும் வயல் சூழ் மருத நிலத்தையும் முத்துச் சிப்பியும் மீனும் கொண்டு விளங்கும் கடல் வளம் பொருந்திய நெய்தல் நிலத்தையும் இன் சுவைத் தேனையும் வன ஜீவராசிகளையும் கொண்ட முல்லை நிலத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் முசலி, ஆரம்ப காலத்தில் முத்துக்குளித்தலுக்குப் பெயர் பெற்று காணப்பட்டதுடன் தொன்மையான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட ஒரு பிரதேசமாகவும் விளங்குகின்றது.

முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையுடனும் இன ஐக்கியத்துடனும் வாழும் இப்பிரதேசத்தில் 22 முஸ்லிம் கிராமங்கள் காணப்படுகின்றன.

பொருளாதார வளத்துடன் கல்வி வளமும்மிக்க பிரதேசமாக விளங்கும் முசலி மண்ணின் கிராமங்கள் தோறும் புலவர்கள் வாழ்ந்து நிறைய பாடல்களை இயற்றிப் பாடியுள்ளதோடு இஸ்லாமிய புராண விரிவுரையாளர்களாகவும் விளங்கினர். அதாவது அக்காலத்தே மன்னார், பெரியமடு, விடத்தல் தீவு, வவுனியாவின் பல பகுதிகளில் இருந்தும் புலவர்களை அழைத்து இஸ்லாமிய புராண விரிவுரை கூறும் வழக்கம் இருந்தது. இது மாபெரும் விழாவாக நடைபெறும். முசலிப் பகுதியிலுள்ள புலவர்கள் பலர் இவ் விரிவுரை கூறும் நிகழ்வுக்கு அழைக்கப்பட்டனர். அழைக்கப்படும் புலவருடன் 'மாணாக்கர்' என்கின்ற ஒரு வரும் மற்றும் ஒருவருமாக மூவர் செல்வர். மாணாக்கர் சீறாப் புராணம் போன்ற ஏதாவது நூலில் இருந்து ஒரு பாடலைப்பாட புலவர் அதற்கு விரிவுரை கூறுவார். மூன்றாமவர் 'ஆமாம்' போடுவார். இவ்வாறே அநேகப் பாடல்களுக்கு விரிவுரை கூறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முசலி மண்ணில் கிராமப்புற ஆட்ட நிகழ்வுகளாக 'கோலாட்டம், களிகம்பு' போன்றவை இடம்பெறும். இவற்றின் போது பாடப்படும் பாடல்களையும் இம்மண்ணின் புலவர்களே இயற்றினர். இவை தவிர வாழ்வியல் நிகழ்வுகள், சரித்திர சம்பவங்கள், இயற்கை, வறுமை, மழை வேண்டிப் பிரார்த்தித்தல் போன்ற பல்வேறு வகையான பாடல்களை முசலி முஸ்லிம் புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களது பாடல்கள் ஓசை நயமும் இன் சுவையும் நிறைந்தன, எதுகையும் மோனையும் இயைபு அணிகளும் இழையோடுவன, உவமையும் உருவகமும் கொண்டு மிளிர்வன.

இப்புலவர்களினதும் அவர்களது படைப்புக்களினதும் விபரம் வருமாறு:

**ஜமால்தீன் புலவர் - (கூளாங்குளம்)**

கூளாங்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் புலமைத்துவத்தில் சிறப்பு மிகுந்தவர். சிறந்த, விஷக்கடி வைத்தியராகவும் விளங்கினார். மக்களின் வறுமை நிலை, சமூக விரோத செயல்கள், இயற்கை அம்சங்கள், ஏக இறையோனின் வல்லமைகள் என்பவற்றை கருப்பொருளாகக் கொண்டு ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார். இவரது பாடல்கள் இரண்டு தொகுதிகளாக நூலுருப் பெற்று வெளிவந்தன. வானம் பார்த்த பயிர்ச் செய்கையை மேற் கொண்டிருந்த அன்றைய நிலையில், உரிய காலத்தில் மழை கிடைக்காமையால் வாடி வதங்கிப் போன பயிர்களுக்கு மழை கிடைக்கப் பிரார்த்தித்து இவர் பாடிய ஒரு சில பாடல்கள் வருமாறு:

'சீர் பெறும் இலங்கை நகரென்றுஞ் செழித்து
சேமமுறு வாகு பெற உனதடி பணிந்து
ஏர் பெருக மங்கலச் செல்வமது உறுக
ஏகனே நன் மாரி இவ்வருச மீவாய்'

*'அல்ஹம்து லில்லாஹி ஆன புகழெல்லாம்*
*ஆதியே உனையன்றி வேறு கதியுண்டோ*
*பல்வினைகள் தீர்த்துறுகு உனது றகுமத்தால்*
*வாவிகளில் நீர் பெருக வாகு மழை பொழிவாய்'*

ஒரு தடவை வவுனியா சாளம்பைக்குளம் எனும் இடத்திற்கு புராண விரிவுரைக்காக ஜமால்தீன் புலவர் அழைக்கப்பட்டிருந்தார். அங்கு சென்று வந்த புலவரது உள்ளத்தினை இடையிலுள்ள ஊர்களின் இயற்கை வனப்பும் செயற்கை அழகும் கொள்ளை கொண்டன. புலவரது கற்பனையில் உதித்தது பாடல், கூளாங்குளத்தில் இருந்து சாளம்பைக் குளம் வரை தான் கடந்து சென்ற பாதையில் உள்ள ஒவ்வொரு ஊர்களின் பெயர்களையும் உள்ளடக்கியதான பாடல் ஒன்றைப் பாடினார்.

*'பாராய் புதுவெளி பெண்ணே*
*பார்க்கத் துலங்குதாம் கண்ணே*
*பாலத்தா வென்னும் மடுவொன்றிருக்க*
*பால்பொங்கிய நீரினைப் பாராய் - அங்கு*
*பாத்திய முஹம்மது நொத்தாரிசுக் கமம் - நம்*
*வேலைக்குதவும் அகத்திமுறிப்பதை*
*வேண்டிய மட்டும் சீராய்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சாலை நிகரடி பள்ளக் கமமடி*
*சாத்திய மானதோர் புள்ளச்சி பொற்கேணி*
*................................'*

இப்புலவரின் காலத்தில் நாட்டின் பல இடங்களில் வைசூரி அம்மை நோய் பரவியிருந்தது. அது ஒரு தொற்று நோயாதலால் அந்நோய் கண்டவர்கள் பொது மக்களை விட்டு ஒதுங்கியிருத்தல் வேண்டும் என்பது அரச கட்டளை. அக்காலத்தில் 'சினரிப்பு' என்ற ஊரில் வைசூரி நோய் கண்ட 'சோரா முதலியார்' எனும் பெயர் கொண்ட இஸ்லாமிய மெய்ஞ்ஞானி ஒருவர் அருவியாற்றின் (மல்வத்து ஓயா) கரையை அடைந்து அங்கு வாசம் செய்தார். இச்செய்தியைக் கூறுகிறார் நம் ஜமால்தீன் புலவர். காப்புச் செய்யுளை முதலில் அமைத்து, ஏனைய விடயங்களைத் தொடர்ந்து பாடுகிறார்.

*'அல்ஹம்து லில்லாஹி ஆனவா - புகழ்*
*அனைத்தும் படைத்திரண மீபவா*
*நல்லவன் தனக்கருள் செய்பவா - உன்னை*
*நாளும் துதிக்க நற்கிருபை செய்*

*சிந்து வளைந்த சிலோனிலே*
*சிறு தேச மாம் மன்னார் பகுதியில்*
*வந்திடும் சேரா முதலியார் - வரம்*
*வாய்ந்ததைக் கேளடி தோழியே*

*சின்னரிப் பென்னுமோர் ஊரிலே*
*சிலர் சேம மதுற்றிடும் சீரிலே*
*தன்னவ னருள் கெட்ட வைசூரி - அம்மை*
*தான் வந்து தொட்டதன் பேரிலே*

*அரசர்க்குப் பயந்தவ ரேகியே*
*அருவி யாற்றங்கரை யதிலாகியே*
*உரமுள்ள சுரமொடு வருத்தமாய்*
*உணவுண்டி இல்லாமல் இருந்தாராம்*

*சோலைக்குள் இவர் படும் சிக்கலும்*
*சுணையானதன் நீருண்டு கக்கலும்*
*வாலை மதி நீரகப்பவும் - தினம்*
*வாஞ்சையர் எதிர் வந்து கூறுவார்*

*அஞ்சிட வேண்டாம் நீ மரத்தடி*
*அதில் ஆதியைத் தொழுது இருந்திடில்*
*துஞ்சிடாக் கஞ்சியும் தருகின்றோம் - எனத்*
*தூக்கியே முத்தினை பகிர்தலாய்'*

இவ்வாறு தொடர்கிறது பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்து - வந்து
சோலை - வாலை } எதுகை அணி கொஞ்சி விளையாடுகிறது.
அஞ்சிட - துஞ்சிடா

இவ்வாறு ஜமால்தீன் புலவரின் கவிதைகள் தமிழுக்கு வளமூட்டுகின்றன.

**முகம்மது சரிபுப் புலவர் (கொண்டச்சி)**

கொண்டச்சி கிராமத்தின் பூர்வீக பரம்பரையைச் சேர்ந்த இவர் நினைத்தவுடன் கவிபாடும் இறையருள் பெற்றவர்.
இதனால் 'கடாற்சக் கவி' என சிறப்பாக அழைக்கப்பட்டார். இரண்டு கால்களும் செயலிழந்த நிலையில் காணப்பட்டமையால் 'நொண்டிப் புலவர்' எனவும் அழைக்கப்பட்டார். இனிமையான குரல் வளம் உடையவர். இவரால் பாடல்களை எழுத முடியாது. எனினும் இவரது பாடல்களை எழுதுவதற்காக இவரது வலது, இடது புறங்களில் இருவர் அமர்ந்திருப்பார்கள். இவரால் எழுதப்பட்ட
1. முத்திச் சுடர்
2. கௌது நாய காரணப் புராணம்
3. இலங்கையின் வெள்ள இயல்பு கீதம்
போன்ற மூன்று நூல்கள் நூலுருப் பெற்றன.

இப்புலவரது பாடல்களில் ஒன்று வருமாறு

*'வஞ்சியவர் கொஞ்சிமுயர் வானமுத்து*
*வருசை மடமாது கதி ஜாவின் முத்து*
*மாஞ்சிடும் கொடை நபி மகிழு முத்து*
*மாமணியதாயுலகில் வந்த முத்து*
*மங்கா மணி முத்து மரகதப் பொன் முத்து*
*புங்கரும் புகழும் முத்து*
*புலியான அலியார் மனைவி பாத்து முத்து'*

இவரது நூல் தொகுப்பில் காணப்படும் இன்னொரு பாடல் இதோ

*'வன் பிணிநலிவறுமை வஞ்சமிவை நீக்கி வைப்பீர்*
*வடிவொளியிறையறுசினில் மறுமினிசுரும்*
*வல்லமை கேளும் ஒலியே*
*அன்பு வைத்தியா மயங்களு மகன்றிடவும்*
*..............................................................*
*.............................................................'*

மேற்கூறிய இரு பாடல்களும் நூலுருப் பெற்ற பாடல்களாகும்.

1969 ஆம் ஆண்டு அப்போதைய வீடமைப்பு அமைச்சராய் இருந்த எம். எச். முஹம்மத் எனும் மந்திரி முசலி மகா வித்தியாலயத்திற்கு வருகை தந்த போது
முருங்கன் - முள்ளிக்குளம் பாதை 21 மைல் திருத்தப்படவேண்டும்.
அருவியாற்றுக்குப் பாலம் தேவை
அகத்திக் குளம் தேக்கமாய் அமைக்கப்பட வேண்டும்.
சிலாவத்துறை வைத்தியசாலை தரமுயர்த்தப்பட வேண்டும்.
போன்ற முசலிப் பகுதியின் தேவைகளை சரிபுப் புலவர் பாடல் மூலம் சுட்டிக்காட்டினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மன்னாரில் இருந்து முள்ளிக்குளம் வரை ஆனந்தமே
வீடமைப்பு மந்திரி விரைந்தார் ஆனந்தமே
..........................
ஆற்றுக்கொரு பாலம்
அகத்திக் கொரு நற்தேக்கம்
சுகத்துக் கொரு ஆஸ்பத்திரி
.......................'

இவரது பாடலின் கருத்தை விளங்கிக் கொண்ட மந்திரி அவற்றை நிறைவேற்றிக் கொடுத்தாராம்.

**க. நெய்னா முகம்மது மரைக்காயர் புலவர்**

பண்டாரவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் முசலிப் பகுதியின் மூத்த கல்விமான்களுள் தலை சிறந்த ஒருவர். பிரசித்தி பெற்ற நொத்தாரிசாகவும் விளங்கினார். சீட்டுக்கவி, வழிநடைச் சிந்து, பிரார்த்தினைப் பாடல்கள் போன்றன இவர் பாடிய பாடல்களாகும்.

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான சினேக உறவு நெடுங்காலம் இருந்தே வந்துள்ளது. நெய்னா முகம்மது மரைக்காயர் புலவர் வங்காலையில் வசித்த தனது நண்பர் மத்தேசு கூஞ்ஞு என்பவரிடம் குதிரைகள் கேட்டனுப்பிய சீட்டுக் கவிகளை இங்கு நோக்கலாம்.

*'பார்த்தறிந்துற்றவன் கப்பநெய்னா வென்போன்*
*பார் மீதிலீன்ற சுதன்*
*பாவலன் சிரோன்மணி நெய்னா முகம்மது*
*பாவலனாவதுடனே*
*நலமுடைய நிருபம் வளர் மன்னாரெனும் பதியா*
*நகரதற்குரிமையான்*
*நாடெல்லாம் விளையு செஞ்சாலிகளடங்கலும்*
*நயமுறச் சேர்ந்து மிகவாய்*
*நற்பேறு வங்காலையிற் கால காலமும்*
*நன்மையுறவே வாழ்பவன்*

*அட்ட லட்சுமி வளரத் தன் மத்தேசு கூஞ்ஞைக்கு*
*அகமகிழ வெழுதும் நிருபம்*
*ஆண்குதிரையென்றி லொன்றானதாலன் னதற்*
*காம் பெரியதான பேடு*
*அழகிய நிறத்தோடு பழகிய குணத்துள்ள*
*வச்சுவமொன்றுங்கள் பால்*
*அனுதின முனது பேரினிறும் படியதாய்*
*அனுப்புக உமக்குமென்ன*
*ஆதியருள் பொருதினும் வாது மிக வளரும்*
*ஆரோக்கியமுறும் வாக்ய மிதுவே'*
*அச்சுவம் - குதிரை*

இவ்வரிகளை நோக்கும் போது நாயக்கர் காலப் புலவர்களின் வித்துவச் செருக்கு இங்கும் வெளிப்படுவதை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹபீபு முகம்மதுப் புலவர்**

இவர் புதுவெளியிலே பிறந்து சிலாவத்துறையிலே வாழ்ந்தவர். முசலிப் பிரதேசத்தின் காதியாகவும், சமாதான நீதவானாகவும் கடமையாற்றிய இவர் பிரபல்யமான புலவரும் இஸ்லாமிய புராண விரிவுரையாளருமாவார். மன்னார் மாவட்டக் கிராமங்கள் தோறும் இவரை அழைத்து இவரின் புராண உரையைச் சிறப்பிப்பதுண்டு. இப்புலவர் புத்தளம் அகதிகள் முகாமில் வசித்த போது, பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எம். ஏ. நு.்.மான் அவர்கள் இப்புலவரைச் சந்தித்து இவரது கவிதைகளை ஆய்வு செய்து இவரைப் பாராட்டியதுடன் இவரது கவிதைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.

1990 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட நினைவினைக் குறித்து இவர் பாடிய பாடலொன்று வருமாறு.

*'நாடிழந்து நகரிழந்து நங்கையரின் நகையிழந்து*
*காடு வழியாக சிலர் கஷ்டப்பட்டு வந்தாரல்லோ*
*ஆடிழந்து மாடிழந்து அரண்மனைகள் தானிழந்து*
*தோடிழந்து தொங்கிழந்து துயரப்பட்டு வந்தோம் அல்லாஹ்*
*வீடிழந்து நெல்லிழந்து வேலை செய்த மாடிழந்து*
*பாடு பட்ட பணமிழந்து பரிதவித்து வந்தோம் அல்லாஹ்'*

நாடு, நகர், நங்கை, நகை - சொற்கள் தோறும் எழுத்துக்கள் ஒன்றி வரும் மோனை அணி.

நாடு, காடு, ஆடு, தோடு, வீடு, பாடு - சீர்கள் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரும் எதுகை அணி.

இது கவிஞரின் கவியாற்றலன்றோ!

**ஜமால்தீன் புலவர் (அகத்தி முறிப்பு)**

1936 ஆம் ஆண்டு மே மாதம் அகத்தி முறிப்புக் கிராமத்தில் பிறந்த இவர் இயல்பிலேயே கவியாற்றல் மிக்கவராகக் காணப்பட்டார். கிராமத்தின் சிறு நிகழ்வு தொடக்கம் நாடாளுமன்ற உறுப்பினர் வருகை வரையிலான அனைத்து விசேட நிகழ்வுகளின் போதும் இவரது கவிகள் அரங்கேறின.

1978 இல் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கெண்ட முதல் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா கண்டி நகரில் கேலாகலமாய்ப் பதவியேற்ற போது அப்பதவியேற்ற நிகழ்வுக்கு கோலாட்டத்துக்காக அகத்தி முறிப்புக் குழுவே சென்றது. அக்கோலாட்டப் பாடலை இயற்றியவர் இந்த அகத்தி முறிப்பு ஜமால்தீன் புலவரே. அவ்வேளை முசலிப் பிரதேச உதவி அரசாங்க அதிபராக பதவி வகித்த வீ. கிருஷ்ண மூர்த்தி ஐயா அவர்கள் இந்நிகழ்வுக்காக முழு ஏற்பாட்டையும் செய்து அழைத்துச் சென்றிருந்தார்.

மேலும் இவர் பாடிய பாட்டுக்களாக:

1. கட்டுக்கரைப் பாட்டு
2. அகத்தி முறிப்புப் பாட்டு
3. வேளாண்மை வெட்டுப் பாட்டு
4. அருவியாற்றுப் பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மாவில் பாட்டு
6. சகாய வேலைப் பாட்டு (விடுதுறைக் காவியம்)
7. பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். ஏ. றஹீம் வரவேற்புப் பாட்டு (விருத்தம்)
8. அகத்திப்பாட்டு
9. ஏராளமான களிகம்புப் பாட்டுக்கள்

என்பவற்றைக் குறிப்பிடலாம்.

தான் பிறந்து வளரந்த அகத்தி முறிப்புக் கிராமத்தின் கீர்த்தியை 'அகத்தி முறிப்புக் கிராமம்' என்ற தலைப்பில் ஒரு பாடலுக்குள் படம் பிடித்துக் காட்டுகின்றார் புலவர். இப்பாடலில் வரும் சொல்வளம், எதுகை மோனை, இயற்கை வர்ணனை, அணிச்சிறப்பு என்பவற்றை நோக்கும் போது இப்புலவரின் கவியாற்றல் எமக்குத் தெளிவாகும். இதோ பாடலின் சில வரிகள்:

*'இறையோனே ஆதி இரட்சகனே உன்னருளால்*
*நிறை மதி நட்சத்திரம் நிதம் உதிக்கும் சூரியனும்*
*தரை மீதுயிரினங்கள் தானும் மற்றும் படைப்பு எல்லாம்*
*வரையற ஆட்சி செய்யும் வல்லோனே காத்தருள்வாய்*

*நற்றவத்தாலுதித்த நாதராம் முஹம்மதின்*
*பொற்பாதமே பணிந்து போற்றியே புகழ்ந்து - பின்பு*
*கற்றோர்கள் முன்னிலையில் கற்றிடாத மூடன் யானும்*
*சற்றே தயக்கமுடன் சாற்றுகின்றேன் ஓர் கவிதை*

*தெற்கால உப்பாறு திசை கிழக்கு சோலை வனம்*
*நிற்காது நீரோடிடும் நீண்டருவி ஆர் வடக்கு*
*அற்புதத்தாலியங்கும் அலைகடல் மேற்குத் திசை*
*பொற்பு நிறை வளமும் பொன் முசலிப் பகுதி*

*இத்திசைக் குள்ளடங்கும் இப்பெரும் கிராமமிது*
*வற்றாது நீர்த்தடாகம் வயல் நிலங்கள் எத்திசையும்*
*முத்தென நெல் மணிகள் முப்போகமும் தான் விளைந்து*
*எத்திசையும் புகழும் எம்மகத்திமுறிப்பூரு.*

*இயற்கை வளம் நிறைந்து எங்கினும் பசுமை நிறம்*
*மயக்கும் விழி மொழியாள் மங்கையரும் தங்க குணம்*
*சுயத்தால் மரியாதையால் சொல் செயலாளட வரும்*
*நயத்தோடு வாழ்ந்து வந்த நம் மகத்திமுறிப்பூரு*

*கார் மேகம் மழைபொழிய கண்ட திசையெல்லாம் வாவி*
*நீர் ஓடியே நிரம்பி நித்தம் வயற்காடு பொங்கி*
*ஏர் பூட்டி நிலங்கிளறி இவர்கள் செய்யும் தொழிலால்*
*பார் மீது புகழோங்கும் பாரகத்திமுறிப்பூரு*

*நற்கலை மகள் சார்ந்த நாவலர்கள் வாழ்ந்த இடம்*
*பற்பல பிணியகற்றும் பண்டிதரும் மெத்த உண்டு*
*கர்ணனுக் கொப்பாக பல கனவான்களும் கூடி இங்கு*
*நற்செயலதிகமிகு நம்மகத்தி முறிப்பூரு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காட்டானை பிடித்து கைக்குள் அடக்கி வாழ்ந்த*
*நாட்டார் வலிமைதனை நாடறியும் எப்பொழுதும்*
*பாட்டாளி மக்களிவர் பலன்பெற்று வாழ்ந்திருந்தார்*
*ஏட்டிலடங்கா புகழ் எம்மகத்திமுறிப்பூரு*

*எந்நாடும் ஆளுகின்ற இரட்சகனே இப்பாடலை*
*தன்னாலியற்றுகின்றேன் தாசன் ஜமாலுத்தீன் என்போன்*
*இந்நாளிலே இதற்கு ஏதும் குறை நேர்ந்திடாது*
*கன்னாசணுகிடாமல் காத்ருள்வாய் யாறஹமே!'*

கன்னாசு - சாத்தான்

இப்பாடல் வரிகளை நோக்கும் போது முதற் செய்யுள் காப்புச் செய்யுளாகவும், இரண்டாம் செய்யுள் அவைக்கு அடங்கும் விதம் கூறும் செய்யுளாகவும் ஏனைய செய்யுட்கள் ஊரின் அமைவிடத்தையும் இயற்கை எழிலையும் பண்பாட்டுக் கோலங்களையும் அழகாய் எடுத்துரைக்கின்றன. 'முத்தென நெல்மணிகள்...' எனும் தொடரில் உவமை பளிச்சிடுகின்றது. இவ்வாறு இந்த அகத்திமுறிப்பு ஜமால்தீன் புலவர் தமிழ் நயம் கனியப் பாடுகின்றார்.

**முகம்மது கௌதுப் புலவர்**

1926 ஆம் ஆண்டு முசலிக் கிராமத்தில் பிறந்தார். இவரது பாடல்கள் சமய அடிப்படையிலான பாடல்களாகவே காணப்பட்டன. இவர் மன்னார், பெரியமடு, விடத்தல்தீவு போன்ற பல இடங்களில் பாடிப் பரிசுப் பெற்றவர். வாழ்த்துக் கவிகள் மட்டுமன்றி வசைக் கவிகளும் பாடியுள்ளார். முசலிப் பகுதியில் ஆண்கள் பாரம்பரியமாக ஆடிவரும் 'களிகம்பு' என்ற கோலாட்டத்திற்குரிய 'களிகம்பு' ப் பாடல்களை பாடுவதில் வல்லமை பெற்றவர். அவரது பாடல் வரிகளில் சில

*'குரு வென்றும் அறிஞ்ஞரென்றும் கூறிக்*
*குல்லா அணிவார்*
*குறைகளெல்லாம் அவரிடத்தே*
*குடிகொண்டே இருக்கும்*
*தாடிகள் வைத்திடுவார்*
*தத்துவங்கள் பேசிடுவார்*
*..............................................'*

என்று தொடர்கிறது பாடல்.
இது, மார்க்க அறிஞர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் சில மௌலவிமார்களின் பித்தலாட்டத்தினை கூறுகிறது.

**மீ. ஹபீபு மும்மதுப் புலவர் - சிறுக்குளம்**

முசலி அளவக்கைச் சிறுக்குளத்திலே 1921 இல் இக் கவிஞர் பிறந்தார். இவரின் கவிதைச் சிறப்பால் இப்பிரதேச மக்களால் 'கவியப்பா' என செல்லமாக அழைக்கப்பட்டவர். இப்பிரதேசக் கிராமங்களில் ஆடப்படும் களிகம்பு, கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளின் போது அவற்றுக்குப் பொருத்தமாக பாட்டிசைப்பதோடு இவ்வாட்டங்களில் சமர்த்தராகவும் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகம்மது காசிம் புலவர்**

அகத்தி முறிப்பில் வாழ்ந்த இவர் பிரதேச மக்களின் குடியேற்ற வரலாறு பற்றி பல கவிதைகளைப் பாடியுள்ளார். மட்டுமன்றி நெற் செய்கையில் மேற்கொள்ளப்படுகின்ற உழுதல், அறுவடை செய்தல், சூடடித்தல் போன்ற செயற்பாடுகளின் போது இவற்றைச் செய்யும் மிருகங்களின் காலடி ஓசைக் கொத்த சந்த நடையைப் பிரதிபலிக்கும் வகையிலும் கவிதைகளைப் பாடியுள்ளார்.

**மஸ்தான் புலவர்**

பொற்கேணிக் கிராமத்தைச் சேர்ந்த இவர் பல கவிதைச் சமர்களில் போட்டியிட்டு தம் ஆற்றலை வெளிப்படுத்திய ஒருவராவார். கேட்போர் வியக்கத்தக்கதாய் அடுக்குத் தொடராகக் கவி பாடுவதில் வல்லவராய் விளங்கினார்.

மேற்கூறிய புலவர்களைத் தவிர
பக்கீர் முகம்மது புலவர் - முசலி
காசிம் புலவர் - தம்பட்ட முதலி கட்டு
கிதுரு முகம்மது மரைக்காயர் - பண்டாரவெளி
முகிதீன் சாஹிபு மரைக்காயர் புலவர் - புதுவெளி
மானாள் வச்ச புலவர் - அகத்தி முறிப்பு
அப்துல் கபூர் - பண்டாரவெளி (தற்போது உயிருடன் வாழ்ந்து வருகிறார்)
அலிமுகம்மதுப் புலவர் - இத்திக்குளம்
அப்துல் அசீஸ் புலவர் - வேப்பங்குளம்
கச்சு மும்மதுப் புலவர்

போன்றோரும் முசலிப் பகுதியில் புலவர்களாய் வாழ்ந்து பல பாடல்களைப் பாடியுள்ளனர்.

ஆண்பாற் புலவர்கள் மட்டுமன்றி பெண்களும் கூட பல பாடல்களை இயற்றிப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. செய்னம்பு என்ற பெண்மணி பாடிய பாடல் வரிகள் வருமாறு

*'ஓட்டைப் பெட்டி பீத்தற் பெட்டி*
*வீட்டிலுள்ள ஓலைப்பெட்டி*
*கட்டித் தந்தேன்டி நானுனக்கு*
*கல்புருகும் என்று சொல்லி*

*மண்ணுருகும் மணலுருகும்*
*மற்றவர் மனமுருகும்*
*கல்லுருகிப் போனாலும் - உன்*
*கல்புருகக் காணில்ல'*
*கல்பு - உள்ளம்*

வசைக் கவிகள் பாடுவதிலும் முசலி மண் ஈன்ற இப்புலவர்கள் சளைத்தவர்கள் அல்லர். இப்பகுதியில் வாழ்ந்த புலவர் ஒருவர் பனைமரம் ஏறும் சாணான் ஒருவனிடம் 'ஏட்டோலை' கேட்கிறார். அவனும் தருவதாகக் கூறி பலநாள் ஏமாற்றுகின்றான். இதனால் சினம் கொண்டெழுந்த புலவரின் வாயிலிருந்து பிறந்ததே ஒரு வசைக்கவி:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'ஏட்டோலை கேட்டதற்கு*
*இல்லையென்று சொல்லாம*
*தாட்டோட்டு பண்ணுறானே*
*சாணான் சண்டாளன் - அவன்*
*மாட்டோட கன்றோட*
*மருமக்கள் மாரோட*
*கூட்டோட குடியோட*
*கொள்ளையில போக*
*அருள்புரிவாய் ஆண்டவனே'*

'காள மேகம் இருண்டது கவிமாரி மொழிந்து'
என்பதற்கிணங்க இங்கும் புலவரின் கவிதை அமைகின்றது.
மற்றுமோர் வசைப் பாடலொன்றையும் நோக்குவோம்.

*'வண்டுகள் தேனுண்டு ஆகாயம் பறக்கவும்*
*வண்டாடிப் பூச்சாய்ந்து அறுந்துமே வீழவும்*
*அறுந்த பூ நிலச் சூட்டில் வாடி வதங்கவும்*
*வீண் படர் சொன்னவர் வெம்பிக் கிடக்கவும்'*

இவ்வாறு முசலி மண்ணில் வாழ்ந்த புலவர்களின் கல்விப் புலமையும் கவிச்சிறப்பும் தனித்தன்மை வாய்ந்ததாய் விளங்குகின்றது. முசலிப் பிரதேசத்தில் வாழ்ந்த புலவர்களில் அநேகமானோரும் அவர்களின் பாடல்களை மனனம் செய்து வைத்திருந்தோருள் அதிக மானோரும் இயற்கை மரணம் எய்தி வருவதால் இப்புலவர்களின் தகவல்களையும் அவர்களது படைப்புக்களையும் அரிய பொக்கிசங்களாகக் கருதி பேணிப்பாதுகாக்க வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது. எனவேதான் பல்வேறு வழிகளில் தகவல்களைப் பெற்று 'முசலி மண் ஈன்ற முஸ்லிம் புலவர்கள்' எனும் தலைப்பில் இவ் ஆய்வுக் கட்டுரையை இறைவனின் துணையோடு எழுதி நிறைவு செய்கின்றேன்.
எல்லாம் வல்ல இறைவன் இம்முயற்சியைப் பொருந்திக் கொள்வானாக.

**உசாத்துணைகள்:**

முசலி முஸ்லிம்கள் - கலாநிதி எஸ். எச். ஹஸ்புல்லா (பதிப்பு 1997)
கிராமியப் பாடல், கும்மிப்பாடல் - ஜமால்தீன் புலவர் (பதிப்பு 1938)
கல்லாறு சிறப்பு மலர் - மன்/ கொண்டாச்சி அ.மு.க. பாடசாலை (மரகத விழா)
பாடல்களை மனனம் செய்து வைத்திருந்த பெரியோர்கள்

---

***" பலம் உடல் வலிமையை சார்ந்தது அல்ல,***
***வெல்ல முடியாத மன தைரியத்தை சார்ந்தது.***
***மன தைரியத்தில் ஒருவர் நிலைத்து இருந்தாலே,***
***எளிதாக வெற்றிபெற்று விடலாம்."  - மகாத்மா காந்தி -***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பிரதேசமும் நாட்டார் வழக்காறுகளும்

செல்வி. கோதை பரத லோசினி
ஆசிரியர்

**முன்னுரை:**

"தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா!"

என்ற பாரதியாரின் வரிகளுக்கு பெருமை சேர்ப்பது தமிழர்கள் பாதுகாத்து வரும் தொன்மையான நாகரிகமும் கலாசாரக் கூறுகளுமே என்றால் அது மிகையாகாது. எம் முன்னோர்கள் விட்டுச் சென்ற அழியாத சொத்துக்கள் தமிழினத்தை அடையாளப்படுத்தும் மரபுகளும் வழக்காறுகளுமே. அவற்றை மென்மேலும் வளர்த்தெடுப்பதிலும், அழியாமல் காப்பதிலும் ஈழத்தமிழர்களாகிய நம்மவர்களின் முயற்சிகள் இன்றியமையாதன.

**வாழ்வியலுடன் இணைந்த நாட்டார் வழக்காறுகள்:**

நாட்டார் வழக்காறு (Folklore) என்பது நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, நம்பிக்கைகள், இலக்கியங்கள், கதைகள், பழமொழிகள், வாய்மொழி வரலாறு, விடுகதைகள், வாழ்வழிப்பாடல்கள், கலைகள் போன்ற பலவற்றை உள்ளடக்கியதாகும். ஒரு சமூகத்தின் தொன்மையை அதன் இருப்பை விளங்கிக் கொள்வதற்கு அப்பிரதேசத்தில் நிலைத்துக் காணப்படும் நாட்டாரியற் கூறுகளே சிறந்த கண்ணாடியாக அமைகின்றன. மனிதனது வாழ்க்கையோடு இரண்டறக் கலந்திருந்த இந்த நாட்டாரியற் கூறுகள் காலத்திற்குக் காலம் வெவ்வேறு நாமங்களில் வழங்கி வந்திருந்தாலும் அவ்வக் கால வாழ்வியல் அம்சங்களை அவை பிரதிபலிக்கத் தவறவில்லை. அதனாலேயே வளர்ச்சி யடைந்த சமூகத்தினரிடையே காணப்படும் எச்சசொச்ச நாட்டாரியற் கூறுகளைக் கொண்டு அச்சமூகத்தின் வளர்ச்சிப் படிநிலை எவ்வாறமைந்துள்ளது என நாட்டுப்புறவியல் ஆய்வாளர் கூறுகின்றனர். எனவேதான் மனிதனது பிறப்பு முதல் இறப்புவரையுள்ள அனைத்துப் படிநிலைகளிலும் இந் நாட்டார் கூறுகள் இரண்டறக் கலந்துள்ளன எனக் கூறப்படுகின்றது.

**மன்னாரும் நாட்டார் வழக்காறுகளும்:**

தமிழருக்குரிய கலை, கலாச்சாரங் களைப் பொக்கிஷமாக மதித்துப் போற்றி, வளர்த்து வருகின்ற பிரதேசங்களுள் மன்னார் பிரதேசத்திற்குத் தனியிடமுண்டு. இலங்கைத் தமிழருக்குரிய இன்னோரன்ன பண்பாடுகளை, கலைகளை வழக்காறு களை தமக்கென சில தனித்துவங்களுடன் பேணிப் பாதுகாப்பதிலும் வளர்த் தெடுப்பதிலும் மன்னார்ப் பிரதேச மக்கள் முனைப்புடன் முன்னிற்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் வசிக்கும் பிரதேசங்கள் தனக்கென சில தனித்துவங்களை கொண்டிலங்கும் மன்னார் மாவட்டத்தின் பழம்பெருமைக்குச் சான்றாக மாதோட்டத் துறைமுகம் அமைந்து காணப்படுகின்றது. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய காலத்திலேயே இந்தியா உட்பட பிறநாட்டு வணிகர்கள் வந்து சென்ற துறைமுகமாக விளங்கிய பெருமை மாதோட்டத்திற குள்ளது. இதற்கு எடுத்துக் காட்டாக இப்பகுதிகளில் அதிகமாகக் காணப்படும் வியாய், பெருக்கு ஆகிய மரங்களைக் காட்டலாம். இலங்கையின் வடமாகாண த்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்டத்தின் எல்லைகளாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, அனுராதபுரம், புத்தளம் ஆகிய அமைந்துள்ளன. மன்னார் மாவட்டம் பற்றிக் குறிப்பிடும் போது நம் சிந்தையை பக்தி மயமாக்கும் மிக முக்கியம் வாய்ந்த திருத்தலங்களை நாம் மறக்க முடியாது. அதிலொன்று சிவத்தலமான திருக்கேதீச்சரம் ஆகும்.

"... வண்டு பண் மலர்செயு மாமலர்ப் பொழில்
மஞ்ஞை நடமிடு மாதோட்டம்..." என்றும்
"... பொன்னிலங்கிய முத்து மாமணிகளும்
பொருந்திய மாதோட்டம்..."

எனவும் திருக்கேதீச்சரம் பற்றி திருஞானசம்பந்தர் தமது பதிகங்களில் பாடுவதைக் காணலாம். அடுத்ததாக கத்தோலிக்கரின் பெருமை வாய்ந்த வழிபாட்டுத் தலமான மடு தேவாலயத்திற்கு இன, மத, மொழி வேறுபாடின்றி யாத்திரிகர் வருடந்தோறும் வந்து செல்வது குறிப்பிடத்தக்கது.

மன்னார் பிரதேச மக்களிடையே "சாதியம்" பாரிய அளவில் செல்வாக்குச் செலுத்தாவிட்டாலும் சமூக அடுக்காமை யில் பல குழுக்களும் அக்குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய தொழில்களும், தனித்தனியான ஆலயங்களும், திருமண, மரணச் சடங்கு முறைகளும் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. கல்வி விருத்தி, பொருளாதார மேம்பாடு, சமூக அந்தஸ்து இவற்றைத் தாண்டி இன்னும் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான வேறுபாடுகள் காட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பின்னணியில் கிராமப் புறங்களில் காணப்படும் நம்பிக்கைகள், சடங்குகள் காரணங்கள் வேறுபட்டு அமைவதையும் காணமுடிகிறது.

அந்தவகையில் மன்னார் பிரதேசத்தில் நாட்டார் வழக்காறுகள் எவ்வெவ் வடிவங்களில் இருந்து வந்துள்ளன என்பதை நோக்கும்போது, அவை நாட்டார் பாடல்களாக, கதைகளாக, கதைப்பாடல் களாக, நம்பிக்கைகளாக, சடங்குகளாக, பழமொழிகளாக, மரபுத்தொடர்களாக, நாட்டுப்புற மருத்துவமாக, விழாக்களாக, நாட்டுப்புற கட்டடக் கலைகளாக, நாட்டுப்புற உணவு முறைகளாக, நாட்டுப்புறப் பேச்சு வழக்குகளாக பல்வேறு வகைமைகளில் இருந்து வந்துள்ளதை அறிய முடிகின்றது. மன்னார் பிரதேச நாட்டார் வழக்காறுகள் பற்றிய ஓர் ஆழ்ந்த தேடல் பல்வேறு தனித்துவங்களை வெளிக்கொணரும் என்பதில் ஐயமில்லை. இக்கட்டுரையானது மன்னார் பிரதேச நாட்டார் பாடல்கள் பற்றிய சில செய்திகளை மட்டுமே ஆராய்கிறது.

**மன்னார் பிரதேசமும் நாட்டார் பாடல்களும்**

நாட்டார் கலை வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல, அவை தெய்வபக்தி, அழகுணர்ச்சி, நல்லொழுக்கம் முதலியவற்றை எடுத்துக் காட்டுவன வாகவும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனடிப்படையில் நாட்டுப்புறக் கலைகளிலே மிக முக்கியமான இடத்தைப் பெற்றுக் கொள்வது நாட்டார் பாடல்களேயாம். தொல்காப்பியர் குறிப்பிடும் "பண்ணத்தி" யினுள் நாட்டார் பாடல்களும் அடங்குகின்றன. நாட்டார் பாடல்கள் இனிமையானவையாகவும், எளிமையான வையாகவும், வட்டார வழக்குச் சொற்க ளாயும் பேச்சு வழக்குச் சொற்களானவை யாகவும் காணப்படுகின்றன. மன்னார் பகுதியில் வழக்கத்திலிருந்து வந்த பாடல்களை மேல்வரும் பகுப்பு முறையினுள் அடக்கலாம்.

1. மருத்துவிச்சிப் பாடல்கள்
   (வழக்கொழிந்த விட்டன)
2. தாலாட்டுப் பாடல்கள்
3. குழந்தைப் பாடல்கள்
   விளையாட்டுப் பாடல்கள்
4. காதற் பாடல்கள்
5. தொழிற் பாடல்கள்
6. ஒப்பாரிப் பாடல்கள்
7. நாடகப் பாடல்கள்

பெண்களின் பிரசவம் வீடுகளில் பார்க்கப்பட்ட காலங்களில் மருத்து விச்சிப்பாடல்கள் மிகவும் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. அதிலும் குறிப்பாக தலைப்பிரசவம் ஒரு விழாவாகவே நடந்திருந்தது. இன்று இந்நிலை அறவே வழக்கொழிந்து விட்டதாகக் கூறப்படு கின்றது. தாலாட்டுப் பாடல்களைப் பொறுத்த வரையில் கிராமப் புறங்களில் கூட இவை அருகி வருகின்றன. மன்னார் பிரதேசத்தில் வழக்கிலிருக்கும் தாலாட்டுப்பாடல்களில் ஒன்று வகை மாதிரியாக தரப்படுகிறது.

*"ஆராரோ ஆராரோ*
*என் கண்மணியே கண்ணுறங்கு*
*உறங்குறங்கு அன்னமே*
*உங்க கொடுங்க ரெண்டும் நோகாம*
*என் தாரா உறங்குறங்கு*
*எங்க கனிமரத்தின் வண்டுறங்கு*

*நித்திரைக்கோ நீரழுதீர் உங்க*
*சித்திரப்பூத் தொட்டிலில*
*அரசே அழ வேண்டாம்*
*உங்க அம்பவள வாய் நோகும்*
*பச்ச இலுப்பை வெட்டி*
*பால் வடிய தொட்டில் கட்டி*
*தொட்டிலுமோ பொன்னால*
*தொடு கயிறோ முத்தால*
*முத்தளப்பான் செட்டி*
*முடி தரிப்பான் ஆசாரி*
*ஆசாரி நல்ல தச்சன் அவன்*
*காசாலே மாலை செய்வான்*
*ஆராரோ ஆரிவரோ*
*ஆரமுதே கண் வளராய்"*

தாலாட்டுப்பாடல்களில் குழந்தையின் அழகு மென்மைத்தன்மை, பெறுமதி அத்துடன் சமூக அடுக்கமைவு என்பன இடம்பெறுவதைக் காணலாம்.

மன்னார் பிரதேசத்தில் இன்றும் சில குழந்தைப் பாடல்கள் வழக்கிலுள்ளன.

*"திரி திரி அம்மா தென்னந்திரி*
*தெருவா லோடிய கள்ளன் வாறான்*
*திருக்கைக்கோ திருக்கை வாலுக்கோ*
*கண்டெடுத்தவன் கொண்டோடு தாயே*
*கொண்டோடு*
*கொண்டோடு தாயே கொண்டோடு..."*

*"பறப்பான் பறப்பான் கண்டலாம்*
*தேறு தேறு மஞ்சளாம்*
*தெள்ளி எடுத்த கூட்டமாம்*
*கூட்டத்துல விளக்கெரிய*
*குண்டிராசா மஞ்சள் போட*
*அடுப்புல இருந்த முருங்கக் காய*
*ஆரெடுத்தா பண்டியெடுத்தா*
*பண்டிக்கு மேல பற விழுந்து*
*ஒத்தக் கால மடக்கு..."*

இவ்வாறான குழுந்தைப் பாடல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பாடல்கள் பொருண்மையுள்ளன வாகவும் சில பொருண்மையற்றனவாகவும் ஓசை நயம் சிறப்பாக அமைந்து காணப்படுகிறன. இவை தவிர குழந்தைப் பாடல்களில் "ஆக்காட்டிப்பாடல்" மன்னார்ப் பிரதேசத்திற்கான தனித்துவத்துடன் அமைந்துள்ளது.

காதற்பாடல்களைப் பொறுத்த வரையில் தனித்துவமான பல பாடல்கள் வழங்கொழிந்து விட்டன. அவற்றில் வகை மாதிரிக்கு ஒரு பாடல் பின்வருமாறு

*"சின்னத் தரவையிலே மயிலாள்*
*சிலந்தி விளைந்த தெண்டு*
*சின்ன அரிப்பான் கொண்டு மயிலாள்*
*சிலந்திக்குப் போனாளாம்*
*போனதைக் கண்டானாம் மாமன் மகன்*
*மா மையல் கொண்டானாம்*
*கொண்டதை வென்றானாம்*
*அவளுடன் கூடவே சென்றானாம்..."*

இப்பாடல் தொடர்ச்சியான நீண்ட பாடலாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் பிரதேச நாட்டார் பாடல்களில் தொழிற் பாடல்களுக்குச் சிறப்பிடமுண்டு. மன்னார் பிரதேசத்தில் சீவனோபாய தொழில்களாகக் காணப்படும் மீன்பிடி விவசாயம் என்பவற்றுடன் இரண்டறக் கலந்தவையாக இப்பாடல்கள் அமைந்து காணப்படுகின்றன. விவசாயத் துடன் தொடர்புடைய ஏற்றப்பாடல்கள், அரிவு வெட்டுப்பாடல்கள், பொலி தூற்றுப்பாடல்கள் என்பனவும், மீன்பிடியுடன் தொடர்புடைய கட்டுமர இழுவைப் பாடல்கள், வலையிழுக்கும் போது பாடுகின்ற பாடல்கள் என பலவகையாகப் பாடல்கள் இசைக்கப்பட்டு வந்துள்ளன. சிறந்த சமூகப் பொருண்மை மிக்க வாழ்வியலம்சங்கள் இப்பாடல் களினூடாக வெளிப்படுவதைக் காணலாம்.

மன்னார் பகுதியில் வழங்கப்பட்டு வந்துள்ள அம்பாப்பாடலொன்று வகை மாதிரியாக:

*"ஏலே வலை ஏலத் தண்டு - ஏலம்மா*
*ஏலே யீலோ*
*ஓவேலம்மா ஓவேலம்மா*
*ஓவேலென்று சொல்லுங்கடா*
*ஓங்கார மாயறைஞ்சி*
*ஓங்கார சத்தமெண்டு*
*ஆங்காரமாய் நடந்து*
*ஆனந்தம் கொள்ளலாமோ?*

*கொள்ளையில் போவானெண்டு*
*கோவம் கொண்டு சொல்லலாமோ?*
*அந்தா வாறா சிந்தாமணி*
*நந்தவனத்திலிருந்து*
*நாலாறு தென்னை மரம்*
*தென்னை மரம் பன்னாடை*
*தேங்காய் இளங்கும்பை*
*குரும்பையது அரும்ப முன்னம்*
*கூறி வந்தாள் மோர் விலையை*
*மோரின் விலையறிய*
*வாருமண்ணன் போய் வருவம்*
*போய் வருவம் என்று சொல்லி*
*தாயை மறந்தனையா*
*தாய் வீடு போறனெண்டு*
*போனவனை காணலியே.."*

இவ்வாறு பாடல்கள் நீண்டு செல்லும் தன்மையுடையன. அம்பா பாடல்களில் சிறப்பு என்னவெனில் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒவ்வொரு விதமான பாடல்கள் காணப்படும். மீன்கள் வலையில் சேர கடவுளை வேண்டி புராணக் கதைகளைக் கூறுவனவாகவும், நையாண்டி பாடல்களாகவும், வேடிக்கையான கதைகளை உரைப்பனவாகவும் அமைந்து காணப்படுகின்றன. 'விரசம்' கலந்திருப்பது அம்பா பாடல்களில் தனிச்சிறப்பாகும். பாடல்களுக்கேற்ப பாடுபவர்கள் தமது உடல்களை ஒருமித்து அசைப்பதையும் காணமுடிகின்றது. மன்னார் பிரதேசத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் அம்பாப் பாடல்கள் தனித்துவமாக ஆய்வு செய்யப்பட வேண்டியவை.

ஒப்பாரிப்பாடல்களைப் பொறுத்த வரையில் மன்னார் பிரதேசத்தில் வழக்கொழிந்து விட்டன என்றே கூறலாம். மரணச் சடங்குகளில் "மாரடித்தல்" ஒரு சடங்காகக் கொள்ளப்பட்டிருந்த நிலை இன்று அருகிவிட்டது. இப்பகுதியில் வழக்கிலிருந்த ஒப்பாரிப்பாடல் ஒன்று வகை மாதிரியாகத் தரப்படுகிறது.

*"பந்தலில பூசணிக்காய்*
*பதம் பதமாய் தொங்குதய்யா*
*பந்தி போட நீருமில்லை*
*பாசக் கிளியே பறந்தா போனீர்..."*

இயேசுவின் பாடுகளை நினைவுகூரும் காலங்களில் (ஆசந்தி - யேசுவின் உடலை சுமந்து செல்லல்) புலம்பல் பாடல்களாக ஒப்பாரி காணப்படுகின்றன.

*"நேசமுள்ள யேசுவே உன்*
*ஆசை மகனாரே*
*நித்திரையோ கல்லறையில்*
*நேச மகனாரோ..."*

இவ்வகையானப் பாடல்கள் கேட்போரின் உள்ளங்களை உருக வைக்கும் ஓசையுடன் பாடப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட பாடல்கள் தவிர மன்னார் பிரதேசத்தில் குறிப்பாக கிராமப் புறங்களில் வீடுகளில் நாடகப்பாடல்கள் பாடப்படுவதைக் காண முடிகிறது. கூத்துக் கலைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் இவ்வகையான பாடல்களைப் பாடுகின்றனர். வகைமாதிரியாக:

*"அலை தங்கு புவியெங்கும் ஒரு சந்திரக் குடையும் - சொந்*
*தரசுய்ந்த தன தந்திர அரசன் வந்தனனே*
*மலைதங்கு புய மன்னர் திறை கொண்டஞ்சலி செய்ய*
*மகரந்த மலர் வஞ்சி மன்னன் வந்தனனே*
*வருகின்றான் ராயன் சபை தன்னில்*
*வருகின்றான் ராயன்"*

*"வானத்திந்திரன் போல ஒமரிக்கு மன்னன்*
*வாழ்வுற்ற துணைவியும் மனைவி மக்காள்*
*தான தந்தின தந்தை தானானா தன*
*தான தந்தின தந்தை தானானா*
*அப்பப்பா இவளென்ன ஆத்தாளும் மகளும்*
*அடக்கமாய் இருந்தாற் போல்*
*நடக்கவே துணிந்திட்டார்.."*

கட்டமைக்கப்பட்ட யாப்புக்களாலான இவ்வாறான பாடல்கள் சாதாரண மக்களாலும் எளிமையாக பாடப்படுவதைக் காணலாம்.

**சடங்குகளும் நம்பிக்கைகளும்**

மன்னார் பிரதேச நாட்டார் வழக்காறுகளில் மக்கள் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்த சில சடங்களையும் நம்பிக்கைகளையும் காண முடிகிறது. மன்னார் பகுதியில் காணப்படும் சடங்குகளாக திருவிழாக்களின் போது

- கொடியேற்றம்
- நவநாள் அனுட்டிப்பு
- தேரிமுத்தல்
- தீர்த்தம் (ஆசீ நீர்)
- வீதியுலா

போன்றன கடைப்பிடிக்கப்படுகின்ற.

சமூகச்சடங்குகளைப் பொறுத்த வரையில்

- பச்சை வடம்போடுதல்
- பாதை மறித்தல்
- கால் கழுவுதல்
- மடிச்சீலை எழுதுதல்
- முதல் முடி மழித்தல்
- ஞானஸ்நானம்
- கண்ட தண்ணி ஊற்றுதல்
- முழுக்காட்டுதல்
- சம்பந்தம் பேசுதல்
- வெத்திலை மாற்றுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சீதனம் பேசுதல்
- தெரு உலாத்துதல்
- சம்பந்தச் சோறு சாப்பிடுதல்
- குருசு போடுதல்
- முதன் மண் வெட்டுதல்

இவ்வாறு சடங்குகளைக் காணலாம். இவை பிறப்பு தொடக்கம் இறப்புவரையான சகல படிநிலைகளிலும் கிரமமாக முன்னெடுக்கப்படுகின்றன. இன்று இவற்றில் அலட்சியப் போக்கு, முதன்மை படுத்தாத நிலையே காணப்படுகின்றது எனலாம்.

நம்பிக்கைகளைப் பொறுத்தவரையில்

- அறம் பாடுதல்
- பாட்டுப்பாடுதல்
- மடை போடுதல்
- மை போட்டுப்பார்த்தல்
- நேர்த்தி கட்டுதல்
- கிராமிய தெய்வ வழிபாடு
- கஞ்சி காய்ச்சிக் கொடுத்தல்
- ஆசீர்வதித்தல்
- படகு நீராட்டுதல்
- நிறைகுடத்தில் விழித்தல்
- பிறை பார்த்தல்
- சகுனம் பார்த்தல்
- பஞ்சமியில் இறந்தால் - -குடியெழும்புதல்

போன்ற பல்வேறு நம்பிக்கைகள் இன்றும் காணப்படுகின்றன. கிராமிய மக்கள் மத்தியில் மட்டுமன்றி நகர்ப்புறங் களில் வாழும் மக்கள் மத்தியிலும் இவ்வாறான நம்பிக்கைகள் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இவை தவிர கிராம மக்களிடையே காணப்படும் இன்னுமொரு செயற்பாடு "பட்டப் பெயர்" சூட்டி அழைத்தலாகும். குறித்த பட்டப்பெயரின் மூலமே குறித்த நபரை அடையாளம் கண்டு கொள்ள முடிகின்ற மையிலிருந்து இதன் அவசியத்தை உணரவைக்கின்றது.

**முடிவுரை**

தமிழரின் தொன்மம் அழிந்து விடாமல் அதை பாதுகாப்பதிலும், வளர்த்துச் செல்வதிலும் குறிப்பிட்ட பங்களிப்பை நல்கி வரும் மன்னார் மாவட்டமானது, இன்றைய காலகட்டத்தில் தொழனுட்பத்தின் அதீத விருத்தியால் தனது "தனித்துவத்தை" இழந்து செல்லும் நிலையையும் நாம் காண முடிகிறது. இளந்தலைமுறையினரை கட்டிப் போட்டிருக்கும் கணணி யுகத்திலும் கூட கன்னித் தமிழின் களங்கமில்லா எழில் காண வேண்டுமெனின் நாகரிகப் பூச்சு பூசாத நாட்டார் வழக்காறுகளை நனி பருக நாம் வழி சமைப்போம்.

**உசாத்துணை:**


- தேவாரத் திருப்பதிகங்கள் (இரண்டாந்திருமுறை)
- சுத்தரப்பிள்ளை காரை. செ. (2000) வட இலங்கை நாட்டார் அரங்கு, சென், குமரன் புத்தக இல்லம்.
- விசாக ரூபன் கி. (2013) நாட்டார் வழங்கியல் ஓர் அறிமுகம், யாழ்ப்பாணம், மலர் பதிப்பகம்.
- ப. அமலோற்பவி லெம்பேட், வயது 64
- எஸ். எவ். பத்திநாதன் வயது 66


---

**இருதயம் விரிவடைந்துள்ள இடத்தில்தான் உண்மை ஞானம் உதிக்கும். அந்த உண்மை ஞானம்தான் நம்பிக்கை.**
**-சுவாமி விவேகானந்தர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தின் காணிப்பயன்பாட்டுக் கோலங்களில் கருவேலை மரங்கள்

வினோதினி (சர்மிலா திருநாவுக்கரசு)
மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல்
அலுவலகம் – மாவட்ட செயலகம், மன்னார்.

## அறிமுகம்

இந்து சமுத்திரத்தின் முத்து என்று போற்றப்படுகின்ற இலங்கைத்தீவின் வடபுலத்தில் அமைந்துள்ள வளம் கொழிக்கும் மாவட்டங்களில் மன்னார் மாவட்டம் தனித்துவமானது. நில வளமும் நீர் வளமும் சூழ்ந்த இயற்கையின் கொடைகளை தன்னகத்தே கொண்டுள்ள மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 199600 கெக்ரெயராகும். இவற்றில் நிலப்பரப்பு 1880 கெக்ரெயராகவும் உள்நாட்டு நீர் நிலைகள்



116 கெக்ரெயராகவும் காணப்படுகின்றது. (அட்டவணை 1 - மாவட்டத்தின் பொதுவான காணிப்பயன்பாடு)

அட்டவணை 1

மாவட்டத்தின் பொதுவான காணிப்பயன்பாடு

| காணிப்பயன்பாடு | அளவு (கெக்ரெயர்) |
|---|---|
| நகரப்பயன்பாடு உள்ளிட்ட கட்டட அம்சங்கள் | 12890.5 |
| விவசாய நிலங்கள் | 43114.16 |
| பற்றைகள் புல்நிலங்கள் உட்பட காடுகள் | 116207.1 |
| நீர்நிலைகள் | 15455.8 |
| ஈரநிலங்கள் | 15455.8 |
| மணற்பாங்கான பிரதேசங்கள் | 4108 |

*மூலம் - மாவட்ட காணிப்பயன்பாட்டு அலுவலகம். 2016*

**காணிப்பயன்பாட்டு ரீதியில் மாவட்டத்தின் காட்டுப்பரம்பலும் கருவேலை மரங்களும்** மன்னார் மாவட்டத்தில் காணப்படும் மூலவளங்களில் புதுப்பிக்கக்கூடியதும் மீள் உருவாக்கம் செய்யக்கூடியதுமான இயற்கைவளமாக காட்டு வளம் காணப்படுகிறது. மாவட்டத்தின் மொத்தக் காடுகளில் பெரும்பாலானவை மடு முசலி மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுகளிலேயே பரவியுள்ளன. இவற்றினை அடர்ந்த காடுகள் அடர்த்தி குறைந்த திறந்த காடுகள் வளர்ப்புக் காடுகள் பற்றைகள் புல்நிலங்கள் என்கின்ற காணிப்பயன்பாட்டு வகைகளுக்குள் பிரித்து நோக்கலாம். (அட்டவணை 2 – மாவட்டத்தின் காட்டுப்பரம்பல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2

**மாவட்டத்தின் காட்டுப்பரம்பல்**

| வகைகள் | அளவு |
|---|---|
| அடர் காடுகள் | 36794.3 |
| திறந்த காடுகள் | 61623.1 |
| வளர்ப்புக் காடுகள் | 2015.4 |
| முட்புதர்கள் | 14067.8 |
| புற்தரைகள் | 3500.5 |

*மூலம் - மாவட்ட காணிப்பயன்பாட்டு அலுவலகம் - 2016*

மாவட்டத்தின் மொத்த நிலப்பரபில் 116207.1 கெக்ரெயர் அளவில் காடுகள் பரம்பியுள்ளபோதும் இவற்றில் 14067.8 கெக்ரெயர்கள் முட்புதர்களாகவும் பற்றைகளாகவும் காணப்படுகின்றன. இப்பற்றைகளில் இனங்காணக்கூடிய அளவில் உடை கருவேலை(சீந்தல்) விடத்தல் அகத்தி விளாத்தி போன்ற இனங்களே அதிகமாகப் பரவியுள்ளன. இவற்றில் மாவட்டத்தின் பெரும்பாலான விளைநிலங்கள் வீதியோரங்கள் வெற்றுக்காணிகள் வீட்டுக்காணிகள் போன்ற இன்னோரன்ன இடங்களில் கருவேலை மரங்கள் (Prosopis Juliflora) கணிசமான அளவில் பரம்பியுள்ளன. இயற்கையில் பாரியளவு மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய இம்மரங்கள் மாவட்டத்தில் பரவியுள்ளமை சூழலியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் மாவட்டத்தின் எதிர்காலத்தில் நேரடியானதும் மறைமுகமானதுமான பல பாதிப்புக்களை உண்டு பண்ணும் சாத்தியக்கூறுகள் அதிகமாகவுள்ளன.

## கருவேலை மரங்களின் பூர்வீகமும் பரவலும்

மெக்சிக்கோ கரீபியன் தீவு தென் அமெரிக்கா ஆபிரிக்கா ஆகிய நாடுகளை பூர்வீகமாகக்கொண்ட இம் மரங்கள் பல்வேறுபட்ட தேவைகளுக்காக இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டதாகவும் அங்கிருந்து இலங்கைக்கு பரவியதாகவும் வாய்வழிக்கதைகள் மூலம் அறிய முடிகின்றது. தவிர மன்னாரின் பாப்பாமோட்டை பிரதேசத்தில் சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்பு இக்கருவேலை மரங்கள் வேறு சில மரங்களுடன் சேர்த்து நட்டு வளர்க்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. எவ்வாறாயினும் மன்னார் மாவட்டத்தின் மாந்தைமேற்கு மன்னார் நகரம் நானாட்டான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் அதிகளவாகவும் ஏனைய பிரதேசங்களில் முன்னையவற்றுடன் ஒப்பிடுகின்றபோது குறைந்த அளவிலும் பரவியுள்ளன.

சுமார் பன்னிரெண்டு மீற்றர்கள் உயரம் வரை வளரக்கூடிய இம்மரமானது புளிய மர இலைகளைப்போன்ற சிறிய இலைகளையும் முட்களையும் மஞ்சள் நிறப்பூக்களையும் கொண்டது. இம்மரத்தின் காய்கள் இளமையில் பச்சை நிறமாகவும் முற்றிய பருவத்தில் மஞ்சள் நிறமாகவும் காணப்படுவதுடன் இம் மரத்தின் வேர்கள் சுமார் 175 அடி ஆழம் வரை வேரூன்றக் கூடியவை.

## கருவேலை மரங்களின் பொதுவான இயல்புகள்

- அன்னியத் தாவரமான இம்மரங்கள் காணப்படுகின்ற பிரதேசங்கள் பெரும்பாலும் வறள் வலயங்களாக இருப்பதால் அதி வரட்சி நிலமைகளையும் தாங்கி செழித்து வளரக்கூடிய இயல்பினைக் கொண்டவை.
- மழைவீழ்ச்சியற்ற காலப்பகுதிகளில் நிலத்தடி நீரை அதிக அளவில் உறிஞ்சியும் வளியில் உள்ள ஈரப்பதனை உறிஞ்சியும் நீண்டு வாழ்கின்ற தன்மை கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இம் மரத்தின் இலைகள் கடும் கோடையிலும் செழிப்புடன் இருப்பதை அவதானிக்கலாம்.

- ஆணிவேர் மட்டுமன்றி பல் பக்கவேர்களும் பரந்து காணப்படுவதனால் மழைகாலங்களின் நிலத்தடி நீர் சேமிப்பில் பாதிப்பை உண்டு பண்ணக்கூடியவையாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றன.
- மிக இலகுவில் நோய்த்தாக்கங்களுக்கு உட்படாத வீரியமான இம்மரம் வளர்கின்ற பிரதேசங்களில் ஏனைய தாவரங்களின் வளர்ச்சி தடைசெய்யப்படுகின்றது.

**கருவேலை மரங்களின் பரவலால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள்**

தாவரங்களின் விரைவான பரம்பலுக்கு வீரியமான விதைகள் முக்கியமானவை இம்மரத்தின் விதைகள் இலகுவில் பரவலடையக்கூடிய வகையிலும் நீண்ட காலம் சிதைவடையாமல் இருக்கூடிய வகையிலுமான பல அம்சங்களைக் கொண்டுள்ளது.

காற்று கழுவு நீரோட்டம் விலங்குகள் போன்றவற்றினால் கடத்திச்செல்லப்படும் விதைகள் எண்ணைப்பசையினைக் கொண்டுள்ளதால் நீரினால் கடத்தப்படுகின்றபோது சிதைவடையாமல் பாதுகாக்கப்படுகின்றன. தவிர நல் வாசனையுடைய இம் மரத்தின் பழங்கள் கால்நடைகளை ஈர்க்கும் இயல்பு கொண்டவை. இவ்வாறான தனித்த சில இயல்புகளினால் மிக விரைவாக பரம்பலடையும் இம் மரங்கள் பரவியுள்ள பிரதேசங்களில் ஏற்படுகின்ற பாதிப்புக் களை நேரடியான பாதிப்புக்கள் மற்றும் மறைமுகமான பாதிப்புக்கள் என இரண்டு வகையாகப்பிரித்து நோக்கலாம்.

இவற்றில் நேரடியான பாதிப்புக்களாக மிகைப் பரம்பல் தன்மையுடைய இம் மரங்கள் விரைவாக அடர்ந்து வளர்ந்து நிலத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமிப்புச் செய்வதுடன் மரங்களின் கீழ் எவ்விதமான கீழ் வளரிகளையோ புற்களையோ வளர்வதற்கு இடம் கொடுக்காமல் நிலத்தினை வளம்குன்ற வைக்கின்றன. அத்துடன் கிளைகளில் காணப்படும் விசத்தன்மையுடைய கூரியமுட்கள் கால்நடைகளுக்கும் மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. தவிர தாவரத்தின் இலைகளையும் காய்களையும் உண்ணுகின்ற கால்நடைகள் சில சமயங்களில் வயிற்றுப்போக்கிற்கு உட்படுகின்றன.

இதேநேரம் மறைமுகமான பாதிப்புக்களாக இம்மரத்தின் உறுதியான பக்க வேர்கள் மழைகாலங்களில் நிலத்தடி நீர் சேமிப்பில் தாக்கங்களை உண்டு பண்ணுவதோடு ஆணிவேர்கள் சுமார் 175 அடி ஆழம் வரை ஊடுருவி வரட்சிக்காலத்திலும் தமக்குத் தேவையான நீரினை பெற்றுக்கொள்கின்றன. இதனால் இம் மரங்கள் அடர்ந்து காணப்படுகின்ற பிரதேசங்களில் தரைக்கீழ் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்.

மழைவீழ்ச்சியற்ற கோடை காலங்களில் கரையோரப் பிரதேசங்களிலுள்ள இம்மரங்கள் தரைக்கீழ் நீரை அதிகமாக உறிஞ்சுவதனால் ஏற்படுகின்ற தரைக்கீழ் நீர் இழப்பினை ஈடுசெய்யும் வகையில் உட்புகும் உவர்நீர்க்கலப்பினால் தரைக்கீழ் நீர் உவராகும் வாய்ப்புக்கள் அதிகமாகும். இவ்வாறு உவராகிய தரைக்கீழ் நீர் ஆவியாகும் போது நீரோடு கொண்டு வரப்படுகின்ற உவர்ப்படிவுகள் தரைமேற்பரப்பில் படியவிடப்பட்டு நிலம் உவராகுவதுடன் விளைநிலங்கள் தமது இயல்பிலிருந்து மாற்றமடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையில் மட்டுமன்றி மனித உடலிலும் பாதிப்பை உண்டு பண்ணும் இம்மரத்தின் இலைகள் வளியிலுள்ள ஈரப்பதனையும் உறிஞ்சி உயிர்வாழ்வதனால் இம் மரங்களுக்கு அருகில் வீசுகின்ற காற்றும் வெப்பமுடையதாக மாற்றப்படுவதோடு மனித உடலில் நீரிழப்பு மற்றும் சரும வரட்சியைத் தூண்டுவதோடு கர்ப்பகால பாதிப்புக்களையும் உண்டுபண்ணக்கூடியது.

## முடிவு

அமெரிக்க தேசிய தாவரவியற் பூங்காவினால் வெளியிடப்பட்டுள்ள வளர்க்கக்கூடாத நச்சு மரங்களின் பட்டியலில் முன்னிலை வகிப்பதும் இயற்கைச்சூழலில் பாரிய மாற்றங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்படுத்தி அதனூடு எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதும் என அடையாளம் காணப்பட்டுள்ள இம் மரங்கள் பரவியுள்ள பிரதேசங்களின்மீது அதிகூடிய கவனத்தினைச் செலுத்தி இவற்றினை இல்லாதொழிப்பதற்குரிய முனைப்புக்களை முன்னெடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயம். இலங்கையில் அம்பாந்தோட்டை பிரதேசத்தில் இவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை கவனிக்கத் தக்கது.

இம் மரங்களை அழிப்பதற்குரிய முறைகளாக வேரோடு பிடுங்குதல் தீயிட்டு எரித்தல் ஆகியவை முன்னிலைப்படுத்தப படுகின்றன. தவிர அக்ரோகெயார் போன்ற இரசாயன மருந்துகள் உரிய ஆலோசனை களுடனும் வழிகாட்டுதலுடனும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்குறித்த வழிமுறைகளைப் பின்பற்றி கருவேலை மரங்களை அழித்தபின்னர் நிலத்தின் இயல்பிற்கு ஏற்ப நிழல் மரவள்ளி வேம்பு பனை போன்ற தாவரங்களை வளர்த்து பயனடையமுடியும்.

இந்நிலையில் எமது மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகத் தினால் நடைமுறைப்படுத்தப் படுகின்ற சூழலிற்கான விசேட வேலைத் திட்டத்தின்கீழ் முன்மாதிரியாக ஒரு சில கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு இம்மரங்களின் பரவலும் பாதிப்புக்களும் தொடர்பான விழிப்புணர்வுக்கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு மக்கள் விழிப்பூட்டப் பட்டுள்ளனர். இதேபோல ஒவ்வொரு திணைக்களங்களும் தங்களது ஆளுகைக் குட்பட்ட நிலங்களில் இம் மரங்களின் பரவலை அழித்து பயன்தரும் மரங்களை நாட்டுவதற்குரிய முயற்சிகளை முன்னெடுத் தல் மாவட்டத்தின் எதிர்கால நலனிற்கு அவசியமானது.

## உசாத்துணைகள்


1. Esther, Mwangi. & Brent, Swallow. Invasion of *prosopis juliflora* and local livelihoods, Case study from the Lake Baringo area of Kenya.

2. https://en.wikipedia.org/wiki/Prosopis_juliflora

3. International Legume Database and Information service (ILDIS), (2015). *Prosopis Juliflora.* Version 10.01, November 2005. Retrieved 2007- Dec 29.

4. Zeraye Mehari Haile. (2008). Invasion of Prosopis juliflora (SW.) DC and Rural Livelihoods, The Case of Afar Pastoralists at Middle Awash Area of Ethiopia.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றாய்த் தமிழ் செய்வோம்!

அருட்திரு. செ. அன்புராசா
அடிகள்
முல்லைத்தீவு

**தமிழ் புதிய திசையில்..**

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனத் தமிழை முத்தமிழாக நம் முன்னோர் பாரம்பரியமாக பார்த்துவந்தனர். ஆனால், காலமாற்றத்தால் தமிழைப் புதுமையாகப் படைக்கவேண்டி இருக்கிறது. இதன் ஒரு வெளிப்பாடகத் தான், 'நேற்றுவரை மூன்று தமிழ், இன்று முதல் நான்கு தமிழ், இதோ கைத்தொலைபேசியில் கணணித்தமிழ்!' என்றான் ஒருதடவை கவிப்பேரரசு வைரமுத்து. தமிழ், புதியதொரு பரப்பை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியிருக்கிறது.

நிலங்களைக் குறிஞ்சி, மருதம், முல்லை, பாலை, நெய்தல் என 05ஆகப் பார்த்த தமிழ் மரபைக் கடந்து, இப்போது, 06ஆவது நிலமாக (திணயாக) புலம்பெயர் நிலத்திணையும் (Tamil Diaspora), 07ஆவது நிலமாக அகண்ட தமிழ் உலகை ஒரு குடும்பமாக இணைக்கும் 'மின் ஊடகத்னையும் (Electronic Tamil World) எமது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கின்றது. இவ்வாறு, தமிழ் கூறும் நல்லுலகம் இன்று புதியதொரு திசையில் உருண்டுகொண்டு இருக்கிறது. இத்தமிழ் கூறும் நல்லுலகில் நாம் எங்கிருக்கிறோம்? எத்தகைய தமிழ்த்தொண்டு ஆற்றுகிறோம்? என்பது நம் சிந்தனைக்குரியது. குறிப்பாக, நம் மண்ணும் மக்களும் சின்னா பின்னமாக்கப் பட்டு, நம் பண்பாடுகளும் கலை கலாச்சாரங்களும் அழிக்கப்பட்டு, நம் சமய நம்பிக்கைகளும் வாழ்வியல் விழுமியங்களும் சீரழிவுக்கு உட்படுத்தப் பட்டு வரும் நிலையில் நம் தமிழ்மொழி வாழ, வளர என்ன செய்துகொண்டிருக் கின்றோம், என்ன செய்யப்போகின்றோம் என்பது மிகமிக முக்கியமானது.

வீரத்திற்கும் கலைகளுக்கும் பெயர் பெற்ற, சலுகைகளுக்கும் சௌகரியங்களுக்கும் விலைபோகாது வாழ்ந்த ஒரு மக்கள் குழுமத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள். இன்று நாம் வாழும் சூழலில் எப்படித் தமிழ்மொழியை வாழவைக்கிறோம்? எதில்காலத்தில் எப்படி வாழவைக்கப் போகின்றோம்? என்பது நம் தொடர் சிந்தனைக்கும் இடைவிடா செயற்பாட்டிற்கும் உரியதொன்றாகின்றது.

**மொழி, ஒரு மக்கள் சமூகத்தின் உயிர் மூச்சு**

உலகில் இன்று பயன்படுத்தப்படும் சுமார் 7300 பிரதான மொழிகளில் 06 மொழிகளான - எபிரேயம், கிரேக்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லத்தீன், சம-ஸ்கிருதம், சீனம், தமிழ் ஆகிய மொழிகள் செம்மொழி நிலைக்கு உயர்ந்து நிற்கின்றது. ஒரு மொழி செம்மொழி ஆவதற்கான தகமைகள்:

1. 2000 ஆண்டுகள் இலக்கண இலக்கியத் தொடர்ச்சி இருக்கவேண்டும்.
2. இன்னும் உயிருள்ள மொழியாக அது வாழ்ந்துகொண்டிருக்கவேண்டும்.
3. உலகப் பண்பாட்டிற்கு செழுமை சேர்த்திருக்கவேண்டும்.
4. தன்னிலிருந்து சில மொழிகளை ஈன்ற மொழியாகி இருக்கவேண்டும்.

இந்நான்கு பண்புகளையும் கொண்ட மொழிதான் செம்மொழியாக முடியும். அவ்வகையில் தமிழ், செம்மொழிகளுள் ஒன்றாக சர்வதேச ரீதியில் வைத்துப் பார்க்கப்படுகின்றது என்றால் தமிழ் மொழியின் சிறப்பு எத்தகையது என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

மொழி, ஒரு இனத்தின் அடையாளம் மட்டுமல்ல, ஒரு மக்கள் இனத்தின் உயிர்மூச்சு - ஆன்மா ஆகும். இக்கருத்தியலை, 'தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்றான் கவிஞர் பாரதிதாசன். மொழி, ஓர் மக்கள் சமூகத்தின் - இனத்தின் அறிவுத் திறன்கள், சிந்தனைகள், பண்பாடு, கலை கலாசாரம், சமய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், அரசியல், பொருளாதாரம் போன்ற அனைத்து அம்சங்களையும் தாங்கி நிற்கின்றது.

மொழி இல்லையேல், மேற்குறிப் பிட்டவை எல்லாம் காலவோட்டத்தில் காணாமல் போய்விடக் கூடியவையாகும்! எனவே, நம் தமிழ்மொழி தேவையானது, அவசியமானது, இன்றியமையாதது, அத்தியாவசியமானது. ஆக, நம் மொழி இன்றி நமக்கு வாழ்வில்லை என்றாகின்றது. அதனால்தான், நடனவிழா, நாடகவிழா, கலைவிழா போன்ற விழாக்களோடு தமிழ் மொழிக்கும் விழாவெடுக்கின்றார்கள் தமிழர்களும் தமிழ்பேசும் மக்களும்.

**நன்றாய் தமிழ் செய்வோம்!**

'என்னை நன்றாக இறைவன் படைந்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற திருமூலரின் வாக்கைத் தெய்வ வாக்காக ஏற்ற தமிழ் புரவலர்களும் அறிஞர்களும் கடந்த பல நூற்றாண்டுகளாய் தமிழ்மொழியை வளர்த்திருக்கிறார்கள். 'தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை' என்ற பாரதிதாசனின் வார்த்தைகள் தமிழ்மொழிக்குத் தொண்டுசெய்த பல அறிஞர்களின் வரலாற்றில் நிரூபணமாகி இருப்பதைக் கண்டுணரலாம்.

எனவே, இன்றைய உலகின், நாம் வாழும் சூழலில், எவ்வாறு 'நன்றாய் தமிழ்செய்ய முடியும்' என்பது பற்றிச் சிந்தனை செய்யவேண்டிய அவசிய - அவசரத் தேவை இருக்கிறது.

2011களில் என்னுடைய பராமரிப்பில் முப்பது மாணவர்கள் இருந்தார்கள். அவர்களில் ஐந்து பேருக்கே தமிழ்ப் பெயர்களை அவர்தம் பெற்றோர் வைத்திருந்ததை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது! ஏனையவர்களுடைய பெயர்கள் எப்படிப்பட்ட பெயர்கள் என்றால்; டிலூசன், டிலக்சன், டில்கான், டெல்கின் எனவும்; தனுசன், தர்சன், தபூசன் எனவும்; உசாந்தன், துசாந்தன், நிசாந்தன் என்றும் செல்கின்றன. இதில் ஒரு பெயரைக்கூட மேலதிகமாக எதுகை மோனைக்காகக் கூடச் சேர்க்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இப்போக்கு, இவ்வாறே செல்லும் என்றால், நாளடையில் தமிழர்களாகிய நாம் நமது அடையாளத்தை இழந்து போகக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பது தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் ஆங்கிலப் பெயர் களையும், பிரான்சியர்கள் பிரான்சிய பெயர்களையும், ஸ்பானியர் ஸ்பான்யப் பெயர்களையும், யப்பானியர்கள் யப்பானியப் பெயர்களையும் தம் குழந்தைகளுக்கு வைக்கின்றார்கள். ஏன் தமிழர்கள் மட்டும் தங்கள் பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயர்கள் வைக்கின்றார்கள் இல்லை என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டி இருக்கின்றது - ஏன் ஆய்வுசெய்து பார்க்கவேண்டிய அவசியத் தேவையும் இருக்கின்றது போலவே தெரிகின்றது.

**நாம் வாழ்க்கைச் சூழலில் நன்றாய்த் தமிழ் செய்வதற்கான சில வழிகள்**

1. நம் குழந்தைகள் தமிழ்ப் பெயர்களைத் தாங்கி வாழவேண்டும். தமிழில் அழகான பெயர்கள் இல்லையென்றா வேறுமொழிப் பெயர்களுக்கு அல்லது அர்த்தமில்லாத நாம் விரும்பும் சத்தங்களை மட்டும் கொண்ட பெயர்களுக்கு நாம் செல்லவேண்டி இருக்கின்றது? பிரபல ஆங்கில நாடகாசிரியர் சேக்ஸ்பியர், 'பெயரில் என்ன இருக்கிறது? பெயர் என்பது ஒரு குறியீடு. மனிதன் பெயரால் அடையாளம் காணப்படுகிறான், செயல்களால் சிறப்படைகிறான்' என்பார். இக்கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாயினும், நம் பண்பாட்டைப் பொறுத்தவரை, நாம் வாழும் சூழலைப் பொறுத்தவரையில்; பெயர், நமக்கும் நம் பண்பாட்டிற்கும் அடையாளத்தைத் தருகின்றது; அவ்வடையாளம் இம்மண்ணில் நம் இருப்பைப் பொறுத்தவரை மிக முக்கியமானது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டி யிருக்கிறது.

ஆகவேதான், அருட்தந்தை ஸ்ரனிஸ்லாஸ் சேவியர் (தனிநாயகம் அடிகள்) அடிகளார் தம் குடும்பப் பெயரான 'தனிநாயகம்' என்ற தமிழ்ப்பெயரை தம் பெயராக மாற்றிக்கொண்டது இதன் உட்பொருளை உணர்த்தி நிற்கின்றது. அவரே தமிழ்கூறும் நல்லுலகினல் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் என்று அன்போடு அழைக்கப்படுகின்றார்.

2. அன்புக்குரிய பெற்றோர்களே! 'நாம் இருவர் நமக்கிருவர்' என்று கொங்சக் காலத்திற்கு முன் சொன்னார்கள், கேட்டோம். பின்னர், 'நாம் இருவர் நமக்கொருவர்' என்றுசொல்லி மறைமுகமாகவும் நேரடியாகவும் எம்மைக் கைக்கொள்ள - கடைப்பிடிக்க கட்டாயப்படுத்துகின்றார்கள். மேற்சொன்னவை போன்ற ஆபத்தான - அபத்தமான எம் சமுதாயத்தை குட்டிச்சுவராக்கும் நன்கு திட்டமிடப்பட்ட தீய கொள்கைகளும், பொருத்த மில்லாத நடைமுறைகளும் இன்று திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன. இனிவரும் காலங்களில், 'நாம் இருவர், இனி நமக்கேன் ஒருவர்!' என்ற கொள்கையைக் கொண்டுவந்தாலும் அதனை ஆதரிக்க ஆட்களும், அமுல்ப்படுத்த இங்கு அதிகாரிகளும் இருக்கின்றார்கள். மக்களே! பெற்றோர்களே! விழிப்பாயிருங்கள். நம் மக்களின் விருத்தியைத் தடுக்கும் சதித்திட்டங்களை விழிப்பாயிருந்து முன்மதியுடன் - துணிவுடன் எதிர்கொள்ளுங்கள். குழந்தைகள் நமக்கு வேண்டும், தமிழ்க் குழந்தைகள் நமக்கு வேண்டும். இம்மண்ணில் வாழ்வதற்கு நமக்குக் குழந்தைகள் இன்னும் வேண்டும். போரில் அழிந்தவர்கள், அழிக்கப் பட்டவர்கள், புலம்பெயர்ந்தவர்கள், காணாமல் போனவர்கள் என ஆயிர மாயிரம் மக்களை நாமும் நம் மண்ணும் இழந்திருக்கின்றோம். எனவே, ஒவ்வொரு குடும்பத்திலும் 04 குழந்தைகளாவது வேண்டும் என்பதை இன்றைய நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும். சமுதாயத்திற்கு உகந்த நல்ல பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து, ஆளாக்குவதும் என்னைப் பொறுத்த வரையில் இன்றைய காலகட்டத்தில் நம் பெற்றோர் செய்யக்கூடிய மிகப்பெரும் தமிழ்ப்பணியே!

இன்று, ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகளோடு நிறுத்திவிடுவது 'style'ஆகவும் 'sample' ஆகவும் (இன்றைய நடைமுறையாகவும், மாதிரியாகவும்) மாறிவருகின்றது. கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறை மறைந்து தனித்தனிக் குடும்பங்களாக வாழும் போக்கு, சமூக - வீதிவிபத்து விபரீதங்கள் போன்றவற்றை வைத்துப் பார்க்கும்போது குடும்பத்தில் 'ஒன்று, இரண்டு பிள்ளைக் கொள்கை' நம் இருப்புக்கு ஆரோக்கியமானது அல்ல என்பது தெளிவாகின்றது.

இதுபற்றி விபரமாக இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைக்குமென்றால் இதற்கான பல்வேறுபட்ட உள, குடும்ப, சமூக, சமய, அரசியல், பொருளாதார காரணங்களை என்னால் முன்வைக்க முடியும்.

3. பல்வேறுபட்ட விழாக்களைக் கொண்டாடும் நாம் தமிழ்மொழிக்கும் கிரமமாக விழாக்களை எடுத்து மொழியை வளர்க்கும் பணிகளை மேற்கொள்ளவேண்டும். அது மட்டுமல்லாது நம் விழாக்களை தமிழ்ப்பண்பாடு விளங்க நடத்துவதும் மிக அவசியமானது.

4. வேற்றுமொழிக் கலப்பின்றி குறிப்பாக ஆங்கிலமொழிக் கலப்பின்றி தமிழ் பேசப்படவேண்டும். வேற்று மொழிகளை நாம் பயில்வதும் பயன்படுத்துவதும் நல்லது, இக்காலத்தில் அது மிக அவசியமானது, இன்றியமையாதது, கட்டாயமானது, காலத்தின் தேவையும்கூட. ஆனால், தமிழ் பேசுகின்ற போது தமிழைப்பேச வேண்டும், ஆங்கிலம் பேசுகின்றபோது ஆங்கிலத்தில் பேசவேண்டும். பிறமொழிக் கலப்பின்றி தூய தமிழில் நம் மொழியாகிய தமிழைப் பேசுவோம்.

5. தமிழர்களாகிய நாம் தமிழ்ப் பண்பாட்டில் வளர்வதும் அவசியமானது. மிதமிஞ்சிய சுயநலப்போக்கும், ஆணவச் செருக்கும், பேராசைகளும், போலி கௌரவங்களும், சமூக அக்கறையின்மையும், சுய சேதமும் மலிந்துவிட்ட சூழலில் நம் தமிழ் இலக்கியங்களும், இதிகாசங்களும், தமிழ்ப் புலவர்களும், அறிஞர்களும், நீண்ட - நெடிய தமிழ்ப் பாரம்பரியமும் கோடிட்டுக்காட்டும் விருந்தோம்பல், பிறரன்பு, ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் கோட்பாடு, என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற உயர் நோக்கு, அகத்தினை புறத்தினை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் எனும் கொள்கை, 'யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நிகரற்ற மனநிலை, 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்னும் உயர்ந்த இலட்சியம் போன்ற தமிழர் தம் பண்பாட்டு விழுமியங்களை வாழ்ந்து நாம் வாழும் சூழலில்! நன்றாய்த் தமிழ் செய்ய' அழைக்கப் படுகிறோம்.

### நிறைவாக

நிறைவாக, இன்றைய எம் வாழ்க்கைச் சூழலில் இவற்றைச் செவ்வனே செய்து, 'நன்றாய்த் தமிழ்செய்து' வாழ எல்லாம் வல்ல இறைவன் நம்மைத் தூண்டி எழுப்புவாராக.

'வீழ்வது நாமாக இருந்தாலும்
வாழ்வது தமிழாக இருக்கட்டும்',
'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே
முழங்கு!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தரிப்புத்துறை பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வை

வீ. எம். றெஜீஸ் பெர்னாண்டோ
ஆசிரியர்
மன்/ அரிப்பு றோ.க.த.க.பா.

"தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" எனும் அவாவுடன் இன்பதம் தமிழால் இயலுமான தரவுகளுடன் தமிழ்கூறும் நல்லுலகம் தொல்லு தமிழின் தொன்மையை ஊடு கடத்தும் என்ற உணர்வுடன் நூறு வீத தமிழர்கள் செறிந்து வாழும் முத்தூர் கிராம வரலாற்றுள் நுழைவோம்.

இந்து சமுத்திரத்தின் முத்தாகத் திகழும் எமது இலங்கைத் தாய் நாட்டின் முத்துக்கள் கிடைத்த முத்துக் குளித்த கிராமம்தான் இந்த முத்தரிப்புத்துறை. சிப்பிக்குள் விளைகின்ற இந்த முத்தினை மூழ்கி எடுப்பதற்காக தேர்ச்சி பெற்ற முத்துக்குளிப்பாளர்கள் தேவைப்பட்டபோது இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மக்கள் பரம்பரைதான் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் பிரான்சிஸ் சவேரியாரால் கத்தோலிக்க சமயத்தைத் தழுவி போர்த்துக்கீசரால் இங்கு கொண்டு வரப்பட்டனர். தமிழரிடையே தொன்று தொட்டு சாதி அமைப்பு ஒழுங்கு இருந்ததன் பின்னணியில் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த அளவில் வேளாளர், குருகுலத்தோர், பரதவர், மறவர், திமிலர், சான்றார், வண்ணார், அம்பட்டர், கொல்லர், கடையர், வலையர், சங்கிலியர் (பறையர்), சோனகர் என்றவாறு சாதிப்பிரிவினர் ஊர்கள் தோறும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கென்று தனித்துவமான சில கலாசார பண்பாட்டு ஒழுங்கு முறைகள் உள்ளன. இம்மக்கள் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற சமயங்களைப் பின்பற்றி வருகின்றனர்.

அந்த வகையில் முத்தரிப்புத் துறையில் பரதவரும் திமிலரும் ஒற்றுமையுடன் இங்கு வந்து வாழத் தொடங்கினர்.

இம்மக்களின் கலை, கலாசாரம், பண்பாடு, வழிபாட்டு முறைகள், நடை, உடை பாவனைகள், நாகரிகம், விருந்தோம்பல், கண்ணியம், வீரம், வாய்மை, சித்த வைத்தியம், ஆயுள் வேத வைத்தியம், ரண வைத்தியம், மாந்திரியம் முதலிய கலாசார அம்சங்களை இக்கிராமத்தவர்கள் கொண்டு வாழ்ந்தனர். இவ்விடயங்களிற்பல தற்காலத்தில் அழிந்தொழிந்து விட்டதாக அமரத்துவ மடைந்த திரு. லூ. அலோசியஸ் பறுனாந்து என்னும் 'முத்தூர் சிற்பியன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது 'சிப்பிக்குள் முத்து' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கிராமமானது முற்றுமுழுதாக முத்துக்குளித்தலோடு தொடர்புடைய வணிகத்துறைகளில் கேந்திர நிலையமாக இருந்துள்ளது. இது முசலிப்பிரதேசத்தில் உள்ள பழம் பெரும் கடலோரக் கிராமமாகும். முத்துக்குளித்தலோடு நேரடித் தொடர்புடையதாயும் முத்துப் பார்களுக்கு நேர் வடக்கே அமைந்துள்ள இடமாகவும் முத்துக்குளித்தலால் மகிமையடைந்த முத்தரிப்புத் துறையானது இப்பிரதேச கரையோர கிராமங்களில் காலத்தால் பழையது.

மன்னார் வளை குடாவில் விளைந்த பெறுமதிமிக்க முத்துக்களினால் பெற்ற மிகையான வருவாய் இந்து சமுத்திரத்தில் எதிரிகளின் இராணுவக் கப்பல்களை கண்காணிக்க வசதியாக இருந்தமை, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை அமைந்த கரையோரப் பாதையின் மையத்தளமாக விளங்கியமை போன்ற பல காரணங்களால் ஐரோப்பியர் முத்தரிப்புத் துறையின் சாதகமான ஒரு மேட்டுப் பகுதியில் நிரந்தரமான ஒரு கோட்டையை அமைத்திருந்தனர். இப்பிரதேசத்தில் ஐரோப்பியர் கால நிர்வாகத்தை நினைவூட்டும் வரலாற்று எச்சங்கள் பல இன்றும் உள்ளன.

இக்கிராமத்தை அண்மித்ததாக ஏறத்தாழ ஒரு கிலோமீற்றர் தெற்குத் திசையாக சிதைந்து கிடக்கும் ஒரு செங்கல் கோட்டை ஒன்று உள்ளது. இக்கட்டிடமானது ஒரு காலத்தில் இப்பிரதேசத்தை ஆண்ட அல்லிராணியின் கோட்டை என்ற நம்பிக்கை இன்றும் இப்பிரதேச மக்கள் மத்தியில் நீடித்து வருகிறது. இது ஓர் ஆய்வுக்குரிய விடயமாகவும் உள்ளது. உரோமானிய கட்டடக்கலையைத் தழுவியதாக அல்லிராணி கோட்டை இருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

வெனிஸ் நகரத்து வணிகனும் சீன அரசு சபையில் அரசியல் ஆலோசகராயும் இருந்த மார்க்கோ போலோ மையக் கிழக்கின் யாத்திரிகர்களான இபின் பக்குட்டா, புகழ்பெற்ற பிரித்தானிய மாலுமியான றொபட் நொக்ஸ் போன்ற வரலாற்று முக்கியஸ்தர்கள் கால்பதித்த பூமி எனும் பெருமையும் இவ்வூருக்கு உண்டு.

கலாநிதி குணராசா தனது 'இலங்கை வரலாறு' எனும் நூலில் குறிப்பிடுகையில், 'முத்தூர் கடலில் விளைந்த முத்துக்கள் பட்டை தீட்டப்பட்டு சிந்து நதிக்கரை நாகரீக மக்களால் விரும்பி கொள்வனவு செய்யப்பட்டன' என்கிறார்.

16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் வருகையால் ஏற்பட்ட கத்தோலிக்க மதப் பரம்புதலுக்கு முன்னர் இங்கு வாழ்ந்தவர்கள் இந்து சமயத்தவராக இருந்ததாக அறிய முடிகிறது. சான்றாக இங்குள்ள பழம்பெரும் இந்து மயானமும் சிறிய இந்துக் கோவிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று முத்தரிப்புத் துறையில் 100 வீதம் கத்தோலிக்கர் உள்ளபோதும் 1949ம் ஆண்டுவரை சில இந்து மற்றும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்ததாக இவ்வூர் பெரியவர்கள் கூறுகின்றனர்.

முத்தரிப்புத்துறைக்கு தென் கிழக்குத் திசையில் அமைந்துள்ள முசலி பிரதேச முஸ்லிம் கிராம மக்களின் அனேகமானோர் முத்துக்குளித்தலுடன் நேரடித் தொடர்புடையவர்களாக இருந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் முத்தரிப்புத்துறையின் வரலாற்றுச் சிறப்புமிக்க அருவி ஆறு கடலுடன் (இந்து சமுத்திரம்) கலக்குமிடம் புனித காணிக்கை மாதா ஆலயத்தின் பின்புறம் என்பது குறிப்பிடத்தக்கது.

புவியியல் ரீதியாக கடலோரத்தில் அமைதியான அழகிய இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் அமைந்துள்ள முத்தரிப்புத்துறையானது முசலி பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் அமைந்துள்ளமை இதன் வரலாற்றுத் தன்மை குறித்து ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றது.

**நுழைவாசல்:**

இலங்கைத்தீவின் வடமேற்குத் திசையில் அமைந்துள்ள மன்னார் வளைகுடாவின் முத்துக்களம் அமைந்துள்ள இடமாக முத்தரிப்புத்துறை காணப்படுகின்றது.

புராதன காலத்திலிருந்து பெறுமதி மிக்க கடலகத் தொழிலான முத்துக் குளித்தல் இப்பிரதேசக் கடலிலேயே சிறப்பாக நடைபெற்றது. இங்கு குளிக்கப்படும் முத்துக்கள் உலகப் பிரசித்திப் பெற்றவை. பண்டைய காலத்திலிருந்து புகழ்பெற்ற முத்துக் குளித்தலுடனும் முத்து வாணிபத்துடனும் நேரடித் தொடர்புடைய பழம்பெருந்துறையாக முத்தரிப்புத்துறை காணப்பட்டது.

இங்கு முத்துக்குளித்தல் தொழில் பரப்பாக முத்தரிப்புத் துறையில் இருந்து முள்ளிக்குளம் வரையுள்ள 'முத்துப் பார்களில்' குளிக்கப்படும் முத்துச் சிப்பிகளை (சலிந்து) அரித்துத் தரம்பிரிக்கும் பரபரப்பான வேலைகளை ஒவ்வொரு பருவங்களிலும் சிறப்பாக நடைபெற்ற மையப் பிரதேசமாக முத்தரிப்புத்துறை விளங்கியுள்ளது. இதன்நிமித்தமாக "முத்தரிப்புத்துறை" என்ற அழகிய பெயரை இக்கிராமம் பெற்றுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் தமிழ்நாட்டின் கிழக்குக் கரையில் முத்துக்குளித்தலுக்காக வந்து முசலி பிரதேசத்தில் பல கிராமங்களை அமைத்துக் கொண்டனர். ஆக முத்தரிப்புத்துறை முதலாக முசலி பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தின் உருவாக்கமும் ஆரம்பகால முத்துக் குளித்தலுடன் தொடர்பு பட்டுள்ளமை வரலாற்று உண்மையாகின்றது.

முத்தரிப்புத்துறை என்ற கிராமத் தாயின் மடியில் தவழும் மக்கள் குணாதிசயங்களில் முக்கியமானதாக வந்தாரை வரவேற்று உபசரித்தல், எந்தவொரு விடயத்திலும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகத்திரண்டு நின்று செயற்படுதல், மீன்பிடித்து கரைக்கு மீண்டு மீன்களை இறக்கும்போது, கறிக்கான மீனை வந்து கேட்போர்க்குத் தாராள மனதுடன் கொடுக்கும் பண்பு அது மகத்தானது. இந்த நல் மனதால் அவர்களின் தொழில் வளம் சிறக்கும் இறையாசீர் பொழியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**அல்லிராணி கோட்டை:**

அல்லிராணி கோட்டை பற்றிய சரித்திரக் கதைகள் சற்று சுவாரஸ்யம் வாய்ந்ததாக உள்ளது. கிறிஸ்துவிற்கு முன் 7ம் நூற்றாண்டில் மகாசம்பூரண இராமாயணமும் அதன்பின் 5ம் நூற்றாண்டில் மகாபாரதமும் நடந்ததாக வரலாறு கூறும் அதேவேளை கிருஷ்ண பகவானும் அர்ச்சுனனும் திருக்கேதீஸ் வரரை தரிசிக்க வந்தபோது மாந்தையிலிருந்து தென்திசை நோக்கிப் பெண்கள், குடங்களில் ஏதோ சுமந்து செல்வதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட அர்ச்சுனன் "இந்தப் பெண்கள் என்ன சுமந்து கொண்டு எங்கே செல்கின்றார்கள்?" என கிருஷ்ணரைக் கேட்க? "நமக்கு ஏன் தேவையில்லாத வேலை, நாம் வந்த வேலையை முடித்துக் கொண்டு நாம் போவோம்" என்று சொல்ல, அர்ச்சுனனும் இவர் சொல்ல மறுப்பதில் ஏதோ மர்மம் இருப்பதாக எண்ணி, "நீர் கூறாவிட்டால் நான் இதிலே என் உயிரை மாய்ப்பேன்" என்று வாளை உருவ, அதிர்ச்சியடைந்த பகவானும், "அப்பா பொறு" இங்கிருந்து தெற்கே கடற்கரையில் ஒரு மாளிகையில் 'அல்லிராணி' என்று ஒரு மகா ஆணவம் பிடித்த ஓர் பேரழகி ஆட்சி செய்கிறாள். அவள் ஆண்வாடையே ஆகாத ஒரு அகந்தைக்காரி. பூத கணங்களை வசப்படுத்தி ஆட்சி செய்யும் சூனியக்காரி ஆபத்தானவள், இவள் குளிக்கத்தான் பால் சுமந்து கொண்டு போகிறார்கள்" என்றார். அவள் ஆணவத்தையும் அடக்கி, என் ஆண் வாடையையும் அவளுக்குக் காட்டுகிறேன். அவளிடம் செல்ல நீர்தான் உபாயம் செய்ய வேண்டும் எனக் காலில் வீழ்ந்தான் என்றும் கண்ணனும் "நீ கலங்காதே, உனக்கு பேடியாகும் வரம் உண்டு அல்லவா? அதைக்கொண்டு விளையாடலாம் என்று கூறி, கண்ணன் நட்டுவராகவும் அர்ச்சுனன் ஆடல் அழகியாகவும் சென்று அல்லி ராணியின் அரண்மனைக்கு அருகில் அரங்கமைத்து ஆட, நட்டுவனார் ஆடல் ஆலாபர்ணத்துக் கேற்ப ஆடல் சதங்கை ஒலியையும் கேட்ட அல்லி, உடனே சேவகனை அனுப்பி அவர்களை அழைத்து அவர்களின் நடத்தையும் அபிநயத்தையும் கண்டு அளவுகடந்த மகிழ்ச்சி கொண்டு, நட்டுவனாருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பிவிட்டு அவளைத் தனது அரண்மனை ஆடல் அழிகிகட்கு ஆசானாக்கி அவளோடு அந்தபுரத்தில் வைத்துக்கொண்டதாகவும், ஒரு நாள் அர்த்தராத்திரியில் அவள் சுயரூபம் அடைந்து அல்லியை அணைக்க அவள் திடுக்கிட்டு கண்மயங்கி அவன் மடியிலே கிடக்கும் வேளை மூன்றாம் சாமக் காவலாளி பராக் சொல்லி அடித்த மணியோசையில் கண் விழித்த அல்லி ராணி ஓர் ஆணின் மடியில் தான் கிடப்பதையும், தான் பிடித்த விரதத்தையும் எண்ணியவளாய் அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்துவிட்டு அவனைப் பூதங்கள் கையில் ஒப்படைத்து வதைக்கக் கட்டளையிட்டாள்.

அந்தப் பூதங்களும் அண்டாச் சட்டியில் மண்ணைப் போட்டு அர்ச்சுனனின் கையையும் காலையும் கட்டி சட்டிக்குள் போட்டு தீயை மூட்டி கடலை வறுப்பது போல வறுத்தும், ஆயுதங்களால் தாக்கியும் ஏதும் செய்ய முடியாத நிலையில் அர்ச்சுனன், அவர்களின் ஆயுதங்களைக் கொண்டே அவர்களை அழித்ததைக் கண்ட அல்லிராணி அவனின் தவலிமை யையும் வீரத்தையும் கண்டு அவனிடம் சரணடைந்து அவனை மணந்து கொண்டதாக ஒரு வரலாறுண்டு.

இவ்விபரமானது திருக்கேதீஸ்வர வரலாற்றை 1958 - 1959களில் அரச மாத சஞ்சிகையாக வெளிவந்த 'லங்கா' எனும் புத்தகத்தில் பெரும் அரசியல் வாதியும் அமைச்சராயுமிருந்த கலாநிதி. சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் எழுதிய வரலாறு தொடர்கட்டுரையில் இருந்து பெறப்பட்டது. ஆனால் இன்று அந்த மாளிகை முத்தரிப்புத்துறையில் கடல் அரக்கனால் ஆக்கிரமிக்கப்பட்டு ஒரு பகுதிதான் அல்லிராணியின் ஆணவத்தைப் போல தலைநிமிர்ந்து அலைகளை எதிர்த்து கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

சுற்றுலாப் பயணிகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து நாளாந்தம் வருகை தந்து அல்லிராணி கோட்டையின் அழகினை கண்டு ரசித்துச் செல்வதைக் காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லிராணி கோட்டை பற்றிய மற்றுமோர் வரலாற்றுக்கதையும் உள்ளது. பண்டைக்காலந்தொட்டு 'அல்லிக்கோட்டை' என அழைக்கப்படும் இடத்தை 'தோரணமால்' என்றும் அழைப்பர், காரணம் - கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றப் போய் தோற்றபோது கண்டி பட்டத்து இளவரசி தோர்ணம் குஸ்மா பண்டாரவையும் அவள் தம்பியான ஜெயதர்ம சிங்காவையும் சதிசெய்து, இராச்சியத்தைக் கைப்பற்ற திட்டம் தீட்டிய சித்தப்பனுக்குப் பயந்து இருவரும் தெரியாமல் கோட்டை இராச்சியத்துக்கு வந்து போர்த்துக்கேயரிடம் சரணடைந்தார்கள்.

பதினாறாம் நூற்றாண்டில் (1505) இலங்கையைக் கைப்பற்றிய போர்த்துக்கேய மன்னர் வளைகுடாவில் அரும்பெரும் திரவியங்களான முத்து வாங்கியும், பளவப் பாறைகள், வலம்புரிச் சங்குகள், மற்றும் அழகான சங்கு, ஊரி வகைகளும் இருப்பதைக் கண்டு கொலம்பசின் ஆலோசனைப்படி தூத்துக்குடி துறை முகத்திலிருந்து 60 கடல் மைல் தூரத்தில் உள்ளது அரிப்பு எனவும், இங்கேதான் கோட்டையும் கோயிலையும் அரணையும் கட்டுவதெனக் கூறி, தோர்ணா குஸ்மாரை கொழும்பு கோட்டைக்குக் கொண்டுவந்து, கோட்டையிலும் வைக்காது அங்கிருந்து அரை மைலுக்கு அப்பாலுள்ள அல்லி கோட்டையில் வைத்து ஞானஸ்ஞானம் (திருமுழுக்கு) கொடுத்து, 'கத்தறீனா' என நாமமிட்டுப் பாதுகாத்து வந்தனர். இதனால்தான் 'தோர்ணமால்' எனவும் அழைக்கின்றனர்.

அல்லிக்கோட்டை பற்றி மேலும் தெரிய வருவது, மால் என்பது வாடி வீடு, இல்லம், இருப்பிடம் எனப் பொருள்படும். இந்த அல்லிக் கோட்டையின் கட்டிட அமைப்பு 'கொட்றிக்' கட்டடக்கலை எனவும், மேல்மாடியில் உள்ள ஒவ்வொரு அறையிலும் 20 பேர் பந்தி அமர்ந்து பரிமாறலாம் எனவும், அல்லிக் கோட்டையில் இருந்து ஒரு பலசாலி கல்லெறியும் தூரத்தில கடல் இருந்ததாகவும், கலாநிதி நல்லூர் ஞானப்பிரகாசம் அடிகளார் குறிப்பிட்டிருக்கின்றார்.

'கொற்றிக்' என்பவர் ஒரு ஸ்பானிய இராணுவ கட்டடக் கலைஞர். அங்கு அவர் கோட்டையை அமைக்கும் போது அருகில் கப்பலேந்தி மாதா கோவிலையும் அல்லிக் கோட்டை கட்டிட அமைப்பைப் பின்பற்றிக் கட்டியுள்ளார். இது ஒல்லாந்தரின் இடிபாடுகளிலும் தெரிகின்றது. இந்தக் கட்டிடங்களின் கல் மற்றும் சுண்ணாம்புகளை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தினால் கால எல்லை புலப்பட வாய்ப்புள்ளது.

ஒல்லாந்தர் வருகையின் பின் தகர்க்கப்பட்ட போர்த்துக்கேயரின் கோட்டை இருந்த அதே அரணுக்குள் தான் ஒல்லாந்தர் முருகைக் கற்களால் கோட்டை அமைத்து இருந்துள்ளனர். அந்தக் கோட்டையும் வன்செயல் காலத்தில் தரைமட்டமாக்கப்பட்டது. ஆனால் அல்லிராணி கோட்டைக்கும் வெளிநாட்டவருக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. அல்லிராணி கோட்டை என்பது தனித்தமிழ் அரசியின் கோட்டையாக இருந்துள்ளதாக இருவேறு கருத்திற்கு இடமில்லை.

**முத்துக்குளிப்பும் மேல்நாட்டு ஊக்கமும்:**

கடல்படு திரவியங்களான முத்து, வலம்புரி, பவளம், சங்கு வகைகளை ஏராளம் பெற்ற போர்த்துக்கேயர் அவைகளை தனவந்த நாடுகட்கு ஏற்றுமதி செய்தனர். இவற்றினாலான ஆபரணங்கள் அரசர்களிடத்திலும், விசேடமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைகுடா அரபு நாடுகள், பாரசீகம், அரேபியா, எகிப்து போன்ற நாடுகளின் செல்வச் சீமான்கள் தங்கள் காதலர்க்குப் பரிசுப் பொருளாக வாரி வழங்கினர்.

இன்னும் ஒரு சுவாரசியம் என்னவென்றால் எகிப்திய பேரழகி கிளியோபற்றா தன் உடற்கட்டுக்கோப்பு குன்றாமலும் தன் அழகு குன்றாமலும் இருக்க, முத்தூரின் முத்தை நீத்திப் பஸ்பமாக்கி சாப்பிட்டாள், இதையறிந்த செல்வச் சீமான்கள் எல்லாம் தாங்களும் அவ்வாறு சாப்பிடத் தொடங்கினர்.

முத்துமாலை அணிந்தால் தனிக் கௌரவம் இருந்தது. அதனால் மாட்சிமை பொருந்திய எலிசபெத் மகாராணியின் (பிரிட்டன்) மணிமுடியிலும் முத்தரிப்புத் துறையின் முத்து பதிக்கப்பட்டுள்ளமை இவ்வூரின் பெருமைக்குச் சான்றாகும்.

இவற்றையறிந்த அரபு நாட்டு முஸ்லீம்கள் விழித்துக்கொண்டு ஒட்டகங்களில் பண மூட்டைகளையும் ஒட்டக இரைக்காக பெருக்க மரங்களைப் பயிரிட விதைகளையும் ஏற்றிக் கொண்டு கால் நடையாக இந்தியா வந்து, படகுகளிலும் கட்டுமரங்களிலும் முஸ்லிம்கள் முதன்முதல் முத்தரிப்பில் முத்து வியாபாரிகளாக இலங்கை மண்ணில் கால் வைத்தனர். முத்தலி என்னும் முத்து வியாபாரி தம்பட்டம் அடித்து தன் வியாபாரத்தை விளம்பரப்படுத்தியதால் அவன் இருந்த இடம் இன்று தம்பட்ட முத்தலிக்கட்டு என அழைக்கப்படுகின்றது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கை இருந்த போது, நகரங்களில் மணிக்கூட்டுக் கோபுரங்களும் கட்டப்பட்டன. அப்பொழுதுதான் அல்லிக் கோட்டையின் இரண்டு அருகில் இருந்த கட்டடங்களும் மேல் மாடியும் உடைக்கப்பட்டு கோபுரம் கட்டப்பட்டதாக அறிய முடிகிறது. இக்கலங்கரை விளக்குக் கோபுரம் இன்றும் உள்ளது.

இதனை விரிவுபடுத்தி கடலரிக்கும் கோட்டையின் மீதிப் பகுதியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசிற்கு உள்ளது. இவ்வூர் மக்களுக்கும் உள்ளது. இதன் சுற்றுப் புறத்தை வனப்புள்ளதாக் கினால் மேலும் அதிகளவான சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க முடியும். தமிழரசர்களான ஆரியச் சக்கரவர்த்திகள் வரிசையில் சங்கிலியன, பண்டாரவன்னியன் இவர்களுடன் வரலாறு அதிகம் அறியப்படாத அல்லிராணி பற்றி எதிர்காலத்தில், மேலை நாட்டாரின் சுவடிகளை ஆய்வு செய்யும் போது அரிய பல வரலாற்று உண்மைகள் வெளிக் கொணரப்படலாம்.

**உசாத்துணை:**

1. முத்தூர் சிப்பியனின் சிப்பிக்குள் முத்து
2. ஊர் மக்கள்

---

## சிந்தனைக்கு...

**சந்தேகத்தையும்,**
**பயத்தையும் வென்றவன் -**
**தோல்வியை வென்றவன்.**

**தியாகம் செய்யவும்,**
**மன்னிக்கவும்.**
**நன்றி கூறவும் தெரிந்து**
**கொண்டு விட்டால்**
**மகிழ்ச்சியையோ,**
**அமைதியையோ தேடி ஓட**
**வேண்டியதில்லை. அவையே**
**நம்மைத் தேடி வரும்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைசாட்சிகள் மட்டில் இறை மக்கள் கொண்டுள்ள பற்றும் வணக்க வரலாறும்

அருட்பணி.
ம.க. அருள்பிரகாசம்
(M.A - Sociology)

1544ம் ஆண்டளவில் மன்னார் தீவில் வாழ்ந்த தொடக்க கால குடியிருப்பாளர்கள் கத்தோலிக்க மறைக்கு மனம் மாறி கிறிஸ்துவுக்காக மறைசாட்சிகளாக மரித்தனர். (மங்களராசா 2014-21) புனித பிரான்சிஸ் சவேரியார் இவர்களின் இறப்பை பற்றிக் குறிப்பிடும்போது "எங்களுடைய காலத்திலும் மறை சாட்சிகளுக்கு குறைவில்லை" என வர்ணித்துள்ளார். இவர்களை ஆசியாக் கண்டத்தின் முதல் மறை சாட்சிகளாக கொள்ளவேண்டுமென வரலாற்று ஆய்வாளர்கள் கருத்து முன்வைத்துள்ளனர். இந்தியா, இலங்கை, சீனா ஆகிய நாடுகளின் திருச்சபை வரலாற்றை நோக்கும்போது மன்னார் மறைசாட்சிகள் பற்றி அனைத்து வரலாற்று ஆசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர். இதன் பின்னணியில் பிரான்சிஸ் சவேரியாரைப் புனித நிலைக்கு உயர்த்தும் காலகட்டத்தில் இந்தியாவிலும், இலங்கையிலும் எழுதப்பட்ட பல நூல்களில் மன்னார் மறைசாட்சிகள் பற்றிய குறிப்புக்கள் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

**புதிய கத்தோலிக்கர்களின் வருகை:**

"மன்னார் மறைசாட்சிகள்" கிறிஸ்துவுக்காக உயிர்நீத்து 17 வருடங்களின் பின்னர்தான் மன்னார் தீவுக்கு கத்தோலிக்கர்கள் வரத் தொடங்கினர். குறிப்பாக 1561ம் ஆண்டு அதாவது 17 வருடங்களின் பின்னர் தான் அருட்பணி. கென்றி கென்றிக்கஸ் அடிகளார் மன்னார் தீவின் முதல் பங்குத்தந்தையாக நியமனம் பெற்று இந்திய கத்தோலிக்கர் சிலரை தம்முடன் அழைத்து வந்து மறைசாட்சி மரணத்தால் மக்கள் குடியிருப்பற்றுக் கிடந்த தற்போது எருக்கலம்பிட்டி என அழைக்கப்படும் இடத்தில் குடியேற்றினார்.

இவ்வாறு குடியேறிய மக்கள் மத்தியில்தான் முதல் முதல் மன்னார் மறைசாட்சிகள் பற்றிய விழிப்புணர்வு கென்றிக் கென்றிக்கஸ் அடிகளார் ஊட்டி வளர்த்தார். இதனால் இம்மக்கள் மன்னார் மறைசாட்சிகளில் அதிகம் பற்றுடையவர் களாக விளங்கினர். இம்மக்கள் இவ்வாறு கத்தோலிக்க நம்பிக்கையில் வேரூன்றி பேதிரு பட்டணம், பவுல் பட்டணம் என்று கூறும் அளவிற்கு பெரும் வளர்ச்சி கண்டனர். இவ்வாறு இம்மக்கள் குடியேறிய காலம் தொடக்கம் இன்றுவரை மன்னார் மறைசாட்சிகளில் பற்றுக் கொண்டு வணங்கி வருகின்றனர். தமிழில் பாண்டித்தியம் அடைந்த கென்றிக் கென்றிக்கஸ் அடிகளார் பல ஆன்மீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களைத் தமிழில் எழுதினார். அவர் தமது சபைத் தலைவர்களுக்கு எழுதிய கடிதங்களில் மன்னார் மறைசாட்சிகள் பற்றி எழுதியுள்ளார். மாதோட்டத்தில் இருந்து மறைசாட்சிகளின் உறவினர்கள் மீண்டும் பட்டித்தோட்டத்தில் தனது காலத்தில் குடியேறினர் என்று கென்றிக் கொன்றிக்கஸ் டிகளார் தனது கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார். இவர் 4 அல்லது 5 வருடங்கள்தான் மன்னார் தீவில் பங்குத்தந்தையாக இருந்து மக்களை வழிநடத்தினார். இவருடைய காலத்திற்குப் பின் படிப்படியாக பங்குத்தளம் என்பது இல்லாமல் போய் இந்தியாவில் தமிழ் நாட்டில் இருந்து குருக்கள் வந்து ஞாயிறு திருப்பலி நிறைவேற்றி வந்தனர்.

**பேதிரு பட்டணத்தின் அழிவு:**

ஒருமுறை ஒரு குருவானவர் ஞாயிறு திருப்பலி நிறைவேற்ற வர பிந்தியபடியால் இம்மக்கள் கோபங்கொண்டு அவரை கட்டி கடலில் எறிந்துள்ளனர். அவ்வேளையில் அக்குரு உங்கள் பட்டணம் எரியும் என்று சாபமிட்டார். உடனே பட்டணம் எரிந்து சாம்பலானது. அழிவு நிலையில் இருக்கும் பேதிருவானவர் கோவிலை நானும் அருட்பணி. தமிழ் நேசனும் சென்று பார்வையிட்டோம்.

**புதிய குடியேற்றம்:**

இவ்வாறு இந்த இரு பட்டணங்களும் அழிந்த படியால் தப்பிய மக்கள் தோட்டவெளி தொடக்கம் கிளியன் குடியிருப்பு வரையுள்ள இடங்களில் போய் குடியேறி 12 திருத்தூதர்களுக்கு ஆலயம் எழுப்பி வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கள் ‘மன்னார் மறைசாட்சிகள்’ தமது உற்றார், உறவினர் என்று கொள்ளும் அளிவிற்கு பற்றுக் கொண்டுள்ளனர்.

**மறைசாட்சிகளின் இராக்கினி ஆலயம்:**

இம்மக்கள் மத்தியில் காணப்பட்ட ‘மன்னார் மறைசாட்சிகள்’ மேல்கொண்ட பற்றை அவதானித்த திருஅவை தோட்டவெளியில் அமைந்திருந்த புனித அன்றூ ஆலயத்தை அன்னை மரியாவுக்கு அர்ப்பணித்து மறைசாட்சிகளின் இராக்கினி ஆலயமாக அபிஷேகித்து மன்னார் மறைசாட்சிகளைப் புனித நிலைக்கு உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

வருடா வருடம் மன்னார் மறைசாட்சிகளை முன்னிலைப்படுத்தி மறைசாட்சிகளின் இராக்கினி விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. மன்னார் மறைசாட்சிகள் பற்றிய பல நூல்கள் வெளிவந்துள்ளன. மன்னார் மறைசாட்சிகளோடுதான் இலங்கை மன்னார், யாழ்ப்பாணம், திருஅவை வரலாறு ஆரம்பமாகின்றது. பொதுவான வரலாற்று நூல்களாக இருந்தாலும் மன்னார் மறைசாட்சிகள் பற்றிய குறிப்பு இருப்பதைக் காணலாம்.

1944ம் ஆண்டு மன்னார் மறைசாட்சிகளின் 400வது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. அதனை முன்னிட்டு சில நூல்கள் வெளிவந்தன. இறைமக்கள் மன்னார் மறைசாட்சிகளின் பரிந்து பேசுதலில் நம்பிக்கை கொண்டு இலங்கையின் எல்லா இடங்களிலும், இருந்து இன, மத, சமய, சமூக வேறுபாடு இன்றி வந்து பார்வையிட்டு பரிந்துரை கேட்டு பலன் பெறுகின்றனர்.

**இறைமக்களின் விசுவாசம்:**

புனித மறைசாட்சிகளின் இராக்கினி ஆலயத்திற்கு மக்கள் வந்து இவ்விடம் புனித பூமி என நம்பி இங்குள்ள மண், எலும்புகளை விசுவாசத்துடன் எடுத்துச் சென்று நோய்கள் துன்பங்கள் வரும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை நீரில் உரசி, கரைத்து அருந்தி, நோயுள்ள இடங்களில் பூசி குணம் பெற்று வருகின்றனர். இலங்கையில் இனப் போராட்டம் தொடங்குவதற்கு முன் கால்நடையாக கத்தோலிக்கரும் ஏனைய மதத்தவர்களும் வெள்ளிக்கிழமைகளில் பாத யாத்திரை மேற்கொண்டு இவ்வாலயத்தில் வந்து மன்னார் மறைசாட்சிகளின் பரிந்துரை கேட்டு இறைவனை வழிபட்டு வந்தனர்.

**மன்னார் மறைமாவட்டத்தின் உதயம்:**

1981ம் ஆண்டு மன்னார் மறைமாவட்டம் உதயமான பின்னர் இன்னும் மேலாக மன்னார் மறைசாட்சி களின் பரிந்துரையில் நம்பிக்கை கொண்டு மக்கள் வருடாந்த விழாவில் கலந்து பரிந்துரை கேட்டு வந்தனர். இந்த வேதசாட்சிகளின் இராக்கினி விழாவினை மன்னார் மறைமாவட்டம் உதயமாகிய விழாவாக கொண்டாட மன்னார் திருச்சபை முற்பட்டது. எல்லாப் பங்குகளிலும் இருந்தும் மக்கள் வருகை தந்து மன்னார் மறைசாட்சிகள் பீடநிலைக்கு உயர்த்த வேண்டி மன்றாடி வருகின்றனர்.

2006ம் ஆண்டு மன்னார் மறைமாவட்டம் ஆரம்பமாகி 25ம் ஆண்டு நிறைவு விழா சிறப்பாக் கொண்டாடப்பட்டு மன்னார் மறைசாட்சிகள் புனித நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும் என்னும் நோக்கில் ஆய்வுகளும் வழிபாடுகளும் நடத்தலாம் என மன்னார் முன்னயைநாள் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை கேட்டுக்கொண்டார். அருட்தந்தை. மங்களராசா, அருட்தந்தை பிலேந்திரன், அருட்தந்தை தேவராஜா கொடுதோர், அருட்தந்தை அருட்பிரகாசம் ஆகியோர் இதற்கென விசேடவிதமாக நியமிக்கப் பட்டனர். அன்றில் இருந்து பல ஆய்வுகள் வழிபாடுகள், முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையினால் மன்னார் மறைசாட்சிகளின் சமூக நல அமைப்பு எனும் அமைப்பினை உருவாக்கி பல ஆய்வுகள், தேடல்கள், வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவில் இருந்தும் பல குருக்கள் வந்து மன்னார் மறைசாட்சிகள் புனித நிலைக்கு உயர்த்தப்பட வேண்டுமென முயற்சிகள் செய்து வருகின்றனர்.

அருட்தந்தை தேவராஜா கொடுதோர் மற்றும் அருட்பணி அருள்பிரகாசம் அவர்களினால் கீளியன்குடியிருப்பு, துள்ளுகுடியிருப்பு போன்ற இடங்களில் மன்னார் மறைசாட்சிகள் பற்றிய விழிப்புணர்வும், வழிபாடும் நடாத்தப்பட்டது. அருட்தந்தை மங்களராசா மன்னார் மறைசாட்சிகள் எனும் ஆய்வு நூல் எழுதி யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்திலும் அந்நூலை வெளியிட்டு சிறப்பான முயற்சியில் ஈடுபட்டார். மன்னார் வேதசாட்சிகளின் சமூகநல அமைப்பின் தலைவர் அந்தோனி பிச்சை என்பவரும் நீண்டகாலம் மன்னார் மறைசாட்சிகள் பற்றி பல தேடல்களை தேடி கண்டுபிடித்து நூல்களும் வெளியிட்டுள்ளார். அருட்பணி இ. செபமாலை அடிகளாரும் இதில் மிகவும் அக்கறை கொண்டு றோமாபுரி வரை சென்று பல முயற்சிகளை மேற்கொண்டு ள்ளார். அருட்பணி தமிழ்நேசன் அடிகளாரும் இம்முயற்சியில் பல ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளார். அருட்தந்தை அன்ரனைனஸ் அடிகளாரும் யாழ்ப்பாணம் அருட்சகோதரர் ஒருவரும் இந்த மறைசாட்சிகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டு பல உண்மை விடையங்களை கொணர்ந்துள்ளனர்.

மன்னார் மறைசாட்சிகளின் பரிந்துரையில் பல அற்புதங்கள் நடைபெற்று வருகின்றது. குழந்தைப் பேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லதாவர்கள், கான்சர் வியாதிக்காரர் இன்னும் பல நோய்களினால் பீடிக்கப்பட்டவர்கள் பல அற்புதங்களை பெற்றுள்ளனர். பிற சமயத்தவர்களான முஸ்லிம்களும், இந்துக்களும் இதற்கு சாட்சியாக உள்ளனர். பல ஆண்டுகளாக ஆன்மீக வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. டிவையின் தியான முறைகள் ஆரம்பிக்கப்பட்டு வழிபாடுகள் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றது.

**தற்போதைய நிலைமை:**

தற்போது ஒவ்வொரு வியாழக் கிழமையும், மறைசாட்சிககளின் பரிந்துரை கேட்கவும், அவர்களை புனித நிலைக்கு உயர்த்தவும் வேண்டி வழிபாடுகள் தியானங்கள், திருப்பலிகள் நடைபெற்று வருகின்றது. மறைசாட்சிகள் எலும்புகள் எனக் கருதப்பட்டு எடுக்கப்பட்ட எலும்புகள் ஓர் இடத்தில் புனிதமாக வைத்து கல்லறை எழுப்பி மறைசாட்சிகளின் கல்லறை என ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மறைமாவட்ட விழாவின் போதும் அவ்விடத்தில் விளக்கேற்றி வணங்கி வருகின்றனர்.

இங்கு வருகின்ற எல்லோரும் மறைசாட்சிகளின் கல்லறையைத் தரிசித்து செல்வர். மறைசாட்சிகளின் பரிந்துரையால் பல அற்புதங்களைப் பெற்றுள்ளனர். 400 வருடங்களுக்கு முன் நடைபெற்ற இந்த உண்மை மறைசாட்சிய மரணம் பல இடையூறுகள் மத்தியிலும் இன்னும் வீரியமாக மக்கள் மத்தியில் விளங்குகின்றது.

**முடிவுரை:**

எமது மன்னார் மறைசாட்சிகளின் பரிந்துரையின் சாட்சியமாக எமது மன்னார் மறைமாவட்டம் அழைத்தலின் விளைநிலம் என்று அழைக்கும் அளவுக்கு பல தேவ அழைத்தல்கள் திருஅவைக்கு கிடைக்கப் பெற்று வருகின்றது.

இந்த உண்மை சாட்சியத்தின் வெளிப்பாடாக மன்னார் மறைமாவட்டக் குருக்கள், அமலமரித்தியாகிகள், பிரான்சிஸ்கன் சபைத் துறவிகள் அதாவது உலகில் உள்ள அனேகமான, ஆண் பெண் துறவற சபைகளில் பலர் துறவிகளாகவும் குருக்களாகவும் உள்ளனர். எமது மறைசாட்சிய மண்ணில் இருந்து கிடைக்கப் பெற்ற குருக்கள் துறவிகள் உலகளாவிய ரீதியிலே பணியாற்றி வருகின்றனர். இது மன்னார் மறைசாட்சிகளின் பரிந்துபேசுதலின் தொடர் உண்மை சாட்சியம் என்பதில் ஐயமில்லை. கிட்டத்தட்ட 700க்கு மேற்பட்ட குருக்கள் துறவிகள் மன்னார் மண்ணின் மறைசாட்சிகளின் வாரிசுகளாக விளங்குகின்றனர்.

---

## சிந்தனைக்கு...

**பொறுமையிலும் உயர்ந்த தவம் இல்லை.**
**திருப்தியிலும் உயர்ந்த இன்பம் இல்லை.**
**கருணையிலும் பெரிய அறம் இல்லை.**
**மன்னித்தலிலும் ஆற்றல் மிக்க ஆயுதம் இல்லை!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடக்குப்பாஸ்

## என்ற பேசாலையின் தொன்மைக் கலை

எஸ். ஏ. உதயன்
தேசியக் கலைஞர்

அது எப்போதும் பங்குனி மாதத்தில் விபூதிப்புதன் அன்று "மனிதனே நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்று பாதிரியார் நெற்றியில் கரி பூசி கத்தோலிக்கரான இந்த ஊர்மக்களை தவத்திற்கு அர்ப்பணித்த பின் வரும் முதலாம் ஞாயிற்றுக்கிழமையில் அந்த விசேடம் நடக்கிறது..

ஐந்து வருடத்திற்கு ஒருமுறை பேசாலை ஊர் மக்கள் இப்படி மனதிலும் தேகத்திலும் உற்சாகத்தைப்பூசிக்கொண்டு தங்களுக்கே யுரித்தான பாரம்பரியக் கலையான உடக்குப்பாஸ் காண்பிக்க வேண்டுமென்று ஒன்றாகக் கூடிவருகிறார்கள்..

அந்த மகத்தான நிகழ்வைப்பற்றி அறிந்து கொள்ள இம்முறை யாழ். பல்கலை அரங்கியற்துறை மாணவர்கள் இங்கு வருகின்றனர்.

இந்த ஊரின் சமூகச் செயற்பாட்டுக்கான மையமாக வெளித்தெரிகிற இந்தப் பிரமாண்ட மண்டபம் அவர்களை வரவேற்கிறது.. பக்கத்திலேயே இருக்கும் புனித. வெற்றி நாயகி ஆலயத்தோடே போட்டி போடுவது போல உயர்ந்து நிற்கும் இந்த மண்டபத்தை அண்ணாந்து பார்க்கிறார்கள்.. புதுமையாக இருக்கும் இது ஏன் புனிதமாக இருக்கவில்லை என்று கேட்கத் தோன்றுகிறது..

"ஓம்..கனகாலமா பாஸ்காட்டாமல் பூட்டிவைச்சிருந்ததுதானே..வெளவால்களின் உறைவிடமாப் போயிற்றுது.."

அவர்கள் அப்படிச் சொன்னாலும்.. அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. அதெப்படி..யேசுவின் திருப்பாடுகளைக் காட்டுவதற்காகவே கட்டப்பட்ட அரங்கை..அதுவும் நாட்டில் வேறெங்குமில்லாத உடக்குப் பாஸைக் காட்டக் கூடிய மண்டபத்தை இப்படிக் கைவிடுவது நல்லதல்லவே..என்ற கேள்வியோடே அங்கு வந்திருந்த ஊர்ப் பெரியவர்களைப் பார்க்கிறார்கள். அந்தப் பார்வையின் கேள்வி அவர்கள் மனதைத் தைத்திருக்க வேண்டும்..தலை குனிகிறார்கள்.

"நாட்டில சண்டை நடந்தபோது இந்த ஊர் மக்களின் இடப்பெயர்வு..இந்தியாவுக்கு ஒருதடவையல்ல மூன்று தடவைகள் ஓடிப்போனாம்... மண்டபத்தைப் பராமரிக்க ஏலாமல் போயிட்டுது. மண்டபத்தில இருந்த பெறுமதியான சாமான்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிஞ்சிற்றுது.'' என்றவருக்கு அதிலிருந்த இன்னுமொருவர் வக்காலத்து வாங்குவது போலக் கதைத்தார்.

"இனி இந்த மண்டபத்தில பாஸ் காட்ட ஏலாது பாருங்க.. ஊர் முன்னைய மாதிரி இல்ல.. பெருத்துப்போச்சு.. மிஞ்சி மிஞ்சி இந்த ஆலய முற்றத்தில மூவாயிரம் பேர்தான் இருந்து பாக்கலாம்..இப்ப ஊராக்களிட தொகையே ஏழாயிர மாயிட்டுது.. இனி உடக்குப் பாஸ் காட்டினால் இனஞ்சனம் எண்டும் புறத்தியாக்கள் எண்டும் வரப்போற சனத்த எங்க கொண்டு போய் வைக்கிறது..''

அவர்கள் சொல்லுகிற இந்தப்பிரச்சினை உண்மையில் கவனிக்க வேண்டியதுதான். அதற்கு இதே போன்று ஒரு மண்டப அரங்கை நாங்கள் வேறொரு இடத்தில் கூட தற்காலிகமாக நிருமாணித்து வேண்டுமானால் தருகிறோம். அதற்காக இந்த மண்டபத்தைக் கைவிட்டு விடமுடியுமா என்று கேட்கின்றனர் சம்பூரணம் மெர்லின் பெரேரா மற்றும் பெனில்டஸ் டன்ரன பறுனாந்து என்பவர்களின் தலைமையில் ஒருங் கிணைக்கப்பட்ட இளைஞர்கள்.

அவர்கள் சொல்லுவதும் நியாயந்தான். 2000ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து சனம் மீளக்குடியேறியபோது பாஸ்மண்டபம் ஒன்றுக்கும் உதவாத நிலையில் இருந்ததென்று பத்திமாப் பாடசாலை வளவில் கியூபட் G.S தலைமையில் இளைஞர்கள் அரங்கு அமைத்து தந்து அங்கு எல்லாப் பாஸூம் காட்டினீர்கள் தானே.. என்ற அந்த இளைஞர்களின் கேள்விக்கு பெரியவர்களால் பதில் சொல்ல முடியாமல்தான் இருக்கிறது..

என்றாலும் இந்தப் பாஸ் மண்டபத்தை ஒரு போதும் பழுதடைய விடக்கூடாது.. என்ற முனைப்பில் மண்டபத்தை துப்பரவு செய்திருக்கிறார்கள் இளைஞர்கள். கடந்த வருடம் (2017) உடக்குப்பாஸ் காட்டு வதற்கு மக்கள் கூடி முனைப்பெடுத்திருப் பதாகச் கேள்விப்பட்ட செய்தியில் ஏற்பட்ட மனக்குதிப்போடு வந்திருந்த யாழ். பல்கலைக்கழக அரங்கியல் துறை மாணவர்களுக்கு நிறைய நிறையவே புதினம் போல ஆச்சரிய முகிழ்ப்புக்கள்..!

அவர்களுக்கு அந்த மண்டபத்துக்குள் நுழைந்து பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் முட்டிக்கொண்டு நின்றதால் கேட்டார்கள்.
"நாங்கள் மண்டபத்தைப் பார்க்கலாமா..?''
அதில் நின்ற ஒரு பெரியவர் சிரித்தார்..
"ஓம்.. இப்ப பார்க்கலாம்..பாஸ் வேல தொடங்கிட்டோமெண்டால் புறத்தியார் யாரும் உள்ள வாறதுக்கு அனுமதி யில்ல..''
"அப்போ இன்னும் பாஸ் வேல தொடங்கவில்லையா..''
"இல்ல.. அது இன்டைக்கு தலைச்சடங்கு முடிஞ்சாப்பிறகுதான்..வாங்கோ.''.
போத்துக்கீசர் கோட்டைக்கதவு போல அதைவிட சிறியதாக இருந்த தடித்த பலகையால் போடப்பட்ட பழைய கதவண்டையில் கூட்டிச்சென்றார் அவர்.. உள்ளிருந்து வெளியில் நிற்பவர் யாரென்று அறிந்து கொள்வதற்கு ஏற்றவகையில கதவில் ஒரு சதுர ஓட்டையிட்டு அதில் அனுமதியின்றி உட்பிரவேசிக்கத்தடை என்று எழுதப்பட்டிருக்கிறது..
நுழைந்தார்கள் !
அவர்கள் வாசலில் வந்து நிற்கும் போதே அந்த மண்டபத்தின் உட்பக்க விசாலம் கண்ணுக்கு நெருக்கமாக வியக்க வைத்தது. இடதும் வலதுமாக துவங்கிய வராண்டா.. இடது பக்கத்தின் முடிவிடமாகவும் வலது புறத்தில் இருட்டில் மேலேறிச் செல்லக்கூடிய படிக்கட்டை உற்பத்தி செய்து கொண்டு விரிந்தது..ஒரு வித குளிர்ச்சியோடே தூசு கலந்த வாடை நாசியை நறுநறுத்தது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கட்டு ஆரம்பிக்குமிடத்தில் நின்று பார்க்கிறார்கள்.. மேலேறி இடதும் வலதுமாக சுருங்கை போன்ற பக்க வாசல்களோடு இன்னொரு கோணத்தில் படிக்கட்டுக்கள் கீழிறங்குவதாக வளைந்து செல்லுமிடத்தில்.. அகன்ற மேடை. பலகைகளினால் தளமிடப்பட்டவைகள். அதையும்தாண்டி நீளும் படிக்கட்டுகள் மற்றும் ஒரு உச்சி மேடையில் பார்வையை விழுத்த அதில் ஏறிப்பார்க்க வேண்டும் என்ற உந்துதலோடு ஏறி நடக்கிறார்கள். உப்பரிகைப் பார்வைதான்.. அதுவும் பலகைத்தளம்தான் குதித்துப்பார்க் கிறார்கள்..தொம் தொம் என்ற சத்தம்..

அது உடக்கைக் கொண்டு ஓடுபவர்கள் வேண்டுமென்றே அந்த சத்தம் எழும்பச் செய்வார்களாம்.. அந்தப் பெரியவர் சொல்கிறார் இரைச்சலும் ஆர்ப்பரிப்பும்தான் எங்கள் பாஸுக்கே முக்கியமானது.. அவ்வாறு பேரொலி எழுப்புவதற்காக நாங்கள் பல கிறிச்சான்களையும் கல்லுருட்டிகளையும் பெருஞ்சத்தம் முழங்கும் சைரன்களையும் பாவிப்போம் என்கிறார்.. உடக்கோடு இயங்குபவர்களோ வழிநடத்துபவர்களோ மேஸ்திரிமாரோ மண்டபத்துக்குள் கதைக்கும் எந்தக்கதை யும் வெளியில் பார்வையாளர்களுக்கு கேட்கக் கூடாது என்பதற்காகவும் பரபரப்புக்காகவும் அவ்வொலியை நாங்களே ஏற்படுத்து வோம்.. என்கிறார் அவர்.

நாங்கள் பார்க்கும் படிக்கட்டுக்கள் போன்று மறுவலத்திலும் இருப்பதாகச் சொல்ல அவர்கள் அந்தப்படி மூலம் கீழிறங்கு கிறார்கள். மலைத்துப் போகிறார்கள்..

"என்னடாப்பா இது..இப்படியொரு அரங்கை நிருமாணிக்க இவர்களின் முன்னோர்கள் எத்துணை திட்டமிட்டிருக்க வேண்டும்.. காட்சியை வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இங்கு நடப்பது ஆச்சரியமாக இருக்கும் விதத்தில் உடக்குகள் தோன்றி மறையும் என்று சொல்லுகிறார்கள்..

கீழ்தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம் என்ற காட்சிகளுக்கு உடக்குகளை நடத்துபவர்கள் நின்று செயற்படத்தக்க விதத்தில் அரண்மனைத்தட்டிகளும் கோட்டை மதில்கள் போன்ற தட்டிகளும் கட்டப்படுகின்றனவாம்..இவற்றையெல்லாம் அந்த மேஸ்திரி எங்களுக்கு விளக்கிக் கொண்டே வந்தார்..

1905ம் ஆண்டு இங்கிருந்த டொலஸ் என்கிற o.m.i சுவாமிதான் இந்த மண்டபத்தைக்கட்டும் பணியிலே கால் வைத்தாராம். அவருக்குப் பிறகு லெப்பிலே என்கிற சுவாமி 1912ம் ஆண்டிலே கட்டுமாணப்பணியை முடித்து வைத்திருக்கிறார் என்ற வரலாற்றுக் குறிப்புச் சொல்லும் மூத்தவரின் பெயர் திரு.எஸ்.ஞானப்பிரகாசம் லெம்பேட். உயரமாய் வில்டிவில் முருகைக் கற்களால் கட்டப்பட்ட சுவர்களின் கனதியைப் பார்க்கும் போது அந்த நாட்களில் வாழ்ந்த நுட்பக் கலைஞர்களின் திறமை நமக்குப் புலப்படுகிறது.

இத்தனை உயரமாக ஏன் கட்ட வேண்டும் என்ற பல்கலை மாணவர்களின் கேள்விக்கு அந்த மூத்தவரே பதில் சொல்கிறார்.
"நீங்க கேட்கிறது சரிதான்.. அந்த நாளையில யாக்கோமே கொன்சால் வேஸ் என்கிற கெட்டிக்கார வெள்ளக்காரச்சுவாமி எழுதின வியாகுலப்பிரசங்கம்தானப்பு எங்கட இந்த உடக்குப்பாஸுக்கே ஆதாரம்..கேட்டிகளா.. மொத்தம் ஒம்பது பிரசங்கம்..ஒவ்வொண்ணும் ஒண்ணுமாதிரி நடத்தணுமின்டா இப்பிடி உயரமா மண்டபம்தானப்பு வேணும்.. இதுக்கு முன்னுக்கு ஓலைக்கொட்டகை போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டின பாஸில அப்பிடி இப்பிடியின்டு கொஞ்சம் குறைபாடு இருந்திருக்கும்.. அதெல்லாம் நிவர்த்தி பண்ணிற மாதிரி இந்த மண்டபத்த நல்லாத்திட்டம் போட்டு கட்டியிருக்கிறாங்க எங்கட பழைய ஆட்கள்'' இந்த மண்டபத்தில் முதல் முறையாக 1907ம்ஆண்டு அந்த நாளையில மூப்பராக இருந்த மரியானு மீயேஸ்தான் தலைமையேற்று பாஸ் நடத்தியிருக்கிறார் என்ற செய்தியையும் அவர்கள் பதிவுசெய்கிறார் திரு.எஸ்பி.லெம்பட்.

**தலைச்சடங்கு**

கீழ்தளத்தில் தலைச்சடங்குக்கான ஆயத்தம் நடந்து கொண்டிருந்தது..

ஊர்ப் பெரியவர்களும் தலைச்சடங்கு என்றவுடன் அது என்னவென்று அறிந்து கொள்ளும் ஆர்வம் அங்கு புதிதாய் வந்தவர்களுக்கு இயல்பாகவே பிறக்கிறது.. ஏழு வருசத்திற்குப்பிறகு இன்றுதான் ஊர் மூப்பரினால் அந்த மண்டபம் திறக்கப்படுகிறதாம்... ஊரில் பெரியவர் களான கட்டளைகாரர், மூப்பர், சிறாப்பர், மொடுதகம், சங்கீத்தம் ,கைப்பிள்ளையார் என்ற வெள்ளை வேட்டிக்காரர்களோடு மேஸ்திரிமாரும் முன்னால் நிற்க பங்குச் சுவாமியாரும் இளந்தாரிகளும் வேலைகாரரும் சேர்ந்து இன்றைக்கு மண்டபத்தைத் திறந்து சம்பிரதாய பூர்வமான ஒரு சடங்கோடு இதை ஆரம்பித்து வைக்கிறார்கள். நிலவறைக் குள் செல்லப்போகும் மேஸ்திரி மாருடன் பல்கலைக்கழக மாணவர்களும் செல்ல வேண்டும் என்ற தங்களுடைய விருப்பத்தை தெரிவிக்கிறார்கள். "எல்லாருமில்ல ஒராள் போங்க.".என்று அனுமதி கிடைக்க..யார் போவது என்று தீர்மானிக்கிறார்கள்.

மண்டபத்தின் மத்திய கீழ்த்தளத்தில் 20x20 அடி நீள அகலத்தில் வெறும் ஐந்தடி மட்டுமே உயரம் கொண்ட ஒரு நிலவறை.. கும்மிருட்டு.. சடசடத்து கிட்டவந்து மோதாமல் திரும்பிப் போகும் வௌவால்.. கோயில் எலக்றீசியன் நிரோசன் தற்காலிகமாக ஒரு பொட்டொளி வெளிச்சம் பாய்ச்சுகிறார்..

குறுக்கும் சுற்றிலுமாக கட்டப்பட்ட கயிறுகளில் தொங்கும் முப்பதுக்கும் அதிகமான சம்மனசுகளின் உடக்குகள்.. வெண்பஞ்சு நிறத்தில் வான தூதர்கள் கையைக் குவித்த வண்ணமே இன்னும் நிஸ்டை கலையாதர்கள் போல தெங்கிக் கொண்டிருப்பதை பார்க்க மனம் அச்சத்தாலோ பக்தியாலோ என்னவோ ஒருவிசை பொங்கித் தணிகிறது. கூடவே பசாசும்தான் இந்த அறையின் அந்தமொன்றில் தொங்குகிறது..

ஆங்காங்கு சுவரில் சாத்தப்பட்டு வைத்திருக்கும் தலையில்லாத உடக்குகள்.. சேவகர்கள் போலத் தெரிகிற அந்த ஏழடி உடக்குகளில் இன்னமும் முன்பு போட்டிருந்த அலங்காரங்கள் கலைந்தும் கலையாமலும்.. இன்னும் சில பேர் குப்புற ஒருவருக்கு மேல் ஒருவராக அடுக்கி வைத்திருந்த நிலையில்.. உடக்குத்தான் என்றாலும் ஒரு விசை முள்ளிவாய்க்கால் ஞாபகம் வந்து போகிறது..

இந்தப்பாவைகள் எல்லாம் வைக்கோலை மூலாதாரமாகக் கொண்டு நிருமாணிக்கப் பட்டதாக இருப்பதால் அவையாயும் சேதாரப்பட்டு மய்த்துப் போய்க்கிடக்கிறது. இனி எல்லாமும் திரும்பவும் செய்ய வேண்டும். பாவைக்கூத்தில் பயன்படுத்தும் பொம்மைகள் இரண்டு வகையில் செய்யப்படுகின்றன.ஒன்று மேலிருந்து நூலினால் அசைக்கும் பாவை. இதனை மேற் குசிறுப் பாவைகள் என்கிறார்கள். பேசாலைப் பாஸில் மேலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கப்படும் சம்மனசுகள்,பசாசுகள் என்பவையும் ஏழாம் பிரசங்கத்தில் பயன்படுத்தும் சிலுவையும்,மாதாவை ஊடுருவும் வாட்களும் இந்தமேற்குறு வகையில் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான உடக்குகள் கீழிருந்து கம்பி தடிகளினால் இயக்கப்படும் கீழ் குசிறு பாவைகள்தான். இவ்வாறு செய்யப்படும் உடக்குகள் ஆடப்படும் தளத்தில் இருந்து ஆறடி மறைப்புக்கு மேலே வெளித் தெரியும்படி உடக்கின் வலது பக்க தோள் மூட்டிலிருந்து ஒருநீண்ட தடி வலது காலினை ஊடறுத்து வெளியே ஒருஆள் தூக்கும் அளவிற்கு நீட்டப்பட்டிருக்கும். வெளியில் தெரியும் உடக்கு சுமார் ஏழடி அளவில் செய்யப்பட்டு பாத்திரங்களுக் கேற்ப ஆடை அணிகளால் சோடிக்கப் பட்டிருக்கும். வைக்கோலி னாலும், மூங்கில்களினாலும், பனை நாரினாலும் செய்யப்பட்டு காரிக்கன் துணியினால் போர்த்தியிருக்கும் ஒரு உடக்கின் நிறை இருபத்தைந்து கிலோவுக்கு உட்பட்டதாக இருக்கும்.

கீழே தரையில் கொட்டிக்கிடக்கும் கப்பிகளும் கம்பிகளும் வயர்களும்.. பொட்டொலி விளக்குகளும்.. பொறிகளும் அமர சேகர முதலியாரின் பேயோட்டியின் மகள் ஓவியம் போல ஒருவித ஏகாந்த வெளிச்சத்தில்.. அங்கே கவனத்தை ஈர்த்துக்கொண்டு ஒரு காலத்தால் முந்திய கனமான பெரிய பெட்டகம்.. தலைமை மேஸ்திரிதான் அதைத்திறக்க வேண்டும்..

ஏழு வருடத்திற்கு முன்னால் பாஸ் காட்டி முடித்துவிட்டு உடக்குகளின் தலை களையும், கைகளையும் மற்ற பௌத்திரப் பொருட்களையும் தலைமை மேஸ்திரி பக்குவமாகவும், பத்திரமாகவும் இந்த பெட்டகத்தினுள்ளேதான் அடுக்கி வைத்தார்.

இப்போது அவர்தானே அந்தப் பெட்டகத்தை திறக்க வேண்டும் என்பதால் அவர் அவருக்கு அடுத்த படிநிலையில் இருக்கும் மற்றொரு மேஸ்திரியையும் இன்னுமொருவரையும் கூட அழைத்துக் கொண்டு நிலவறைக்குள் நுழைகிறார்கள்.

நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு தரையில் கொட்டிக்கிடக்கும் வௌவால் கழிவுகளின் மேல் கால்வைத்துப் போகும் போது அசூசையும் நாற்றமும்.. வயிற்றைக் குமட்டுகிறது.. நிரோசன் வெளிச்சம் பாய்ச்சுகிறார்.. கீச் கீச் சென்று நம்மை மோதிக்கடந்து போகும் வௌவால் களின் நீண்டகால உறைவிடம் இன்று கலைக்கப்படுவதால் ஏற்பட்ட கலவரம் ஓய சில நிமிடங்கள்..

பெட்டகம் திறக்கப்படுவதை நினைத்து மனம் நாற்றத்தை புறக்கணித்து ஆவலை விதைக்கிறது.. பூச்சிப் போலை மணம் மூக்கில் வந்து ஏற.. இப்போது பரவாயில்லை.. மேஸ்திரியார் அந்தப்பெட்டகத்தைதிறக்கிறார்.

ஏழு வருடங்களுக்குப்பிறகும் வைத்தது வைத்தபடி..மேஸ்திரியாரின் முகத்தில் மலர்ச்சி.. அவரின் ஞாபகத்தில் கையை விட்டுப்பார்க்கிறார்.. கதைக்க மறந்து நின்றவர்கள் கதைக்கிறார்கள்..எல்லாம் ஒற்றைக் கேள்விகளும் ஒற்றைப் பதில்களுமாய்..

அந்த இட்டு முட்டான நிலவறைக்குள் எல்லாரும் போய் நிற்க முடியாதுதான்.. என்பதோடு இதுவும் ஒரு சம்பிரதாயமாக மாறிப்போயிருக்கிறது..

மற்றவர்கள் மண்டபத்தினுள்ளேயிருந்து நிலவறை வாசலில் காத்திருக்கிறார்கள். இனி ஒரு தலையில்லாத உடக்கு ஒன்றை ஒரு மேஸ்திரி கொண்டுவர தலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேஸ்திரி பேதுருவானவரின் தலையைக் கொண்டுவருவார்.. மற்றவர் அந்த உடக்குக்கு அணிவிக்க வேண்டிய அங்கியைக் கொண்டுவருவார்.

பேதுருவானவர் என்றால் யார்..? அவர்தான் யேசுவின் சீடர்களில் முதன்மையானவர். அது மட்டுமல்ல அவர்தான் திருச்சபைக்குத் தலைவர்.

மூங்கிலால் வனையப்பட்ட நெஞ்சுக் கூட்டோடு வைக்கோல் அடைத்த காரிக்கன் துணி மூங்கில் கூட்டின் வலதாகவும் இடதாகவும் பக்கவாட்டில் தொங்கி முடிவிடத்தில் சிறப்பாக மரத்தில் செதுக்கப்பட்ட கைகள் பொருத்தி தைக்கப்பட்டிருக்கிறது..

இப்போது பேதுருவானவருக்குரிய பச்சைவர்ண நீள் அங்கியை இந்த தலையில்லாத உடக்குக்கு அணிவித்து விட்டு இடமிருந்து வலமாக தோளிலும் இடுப்பிலும் பொருந்தக்கூடியது போல இளஞ்சிவப்பில் பளபளக்கின்ற பழைய காலத்து சாமோஸ் என்ற வகை சால்வையை மேஸ்திரிமார்கள் போர்த்துகின்றனர்.

பேதுருவானவரின் தலையை வைத்து பாதிரியார் வேண்டுதல் வழிபாடு வைக்கிறார். ஆசிநீர் தெளிக்கிறார். பிறகு அங்கிருந்த பெரியவர்கள் எல்லாரும் அந்தத் தலையைத் தொடுகிறார்கள்.. தச்சு மேஸ்திரி கைபார்க்க தலைமை மேஸ்திரி உடக்கிலிருந்து மேல்புறமாக நீண்டிருக்கும் கழுத்துக் கம்பில் தலையை மாட்டிவிட தச்சு மேஸ்திரி அதற்குரிய ஆணியை உடக்கின் தலைக் கழுத்து வழியாக செலுத்தி மறுபுறம் நட்டைப் போட்டு இறுக்குகிறார்.

பேதுருவானவரின் கண்கள் இரண்டும் மூடித்திறக்கும் பாவனையில் செய்யப் பட்டிருக்கிறது. அதாவது கெத்சமனிப் பூங்காவில் யேசு விழித்திருந்து ஜெபிக்கும்போது பேதுருவானரும் அவரோடிருந்த சீடர்களும் தூங்கி விழுவதாகக் காண்பிக்க வேண்டுமே. அதற்காக பேதுருவானவரின் கண்கள் மூடித்திறப்பது போல ஆக்கப் பட்டிருக்கிறதாம். கன்னக் கதுப்புகளில் நரை முடியும் நடு மொட்டையில் முன் பக்கத்தில் மட்டும் கொஞ்சூண்டு நரை முடியுமாக அழகாக ஒரு தச்சு மேஸ்திரியால் பல ஆண்டுகளுக்கு முன்பே செய்யப்பட்டு வர்ணம் தீட்டப்பட்ட தலையதுவாம். இந்தளவிற்கு இக்காலத் தில் நுட்பமாக இந்த ஊரில் யாராவது தலை செய்வார்களா என்று கேட்டால் இல்லையென்றுதான் பதில் வருகிறது.

பாஸில் தோன்றுகிற எல்லாக் கதாப்பாத்திரங்களிலும் இப்படி கண் சுழலுமா என்றால் இல்லை. முக்கியமான பாத்திரங்களுக்கு இப்படி நுட்பங்களைப் பயன் படுத்தியிருக்கிறார்கள்.

**உடக்குகள் தயாரிப்பும் மேஸ்திரிமாரும்.**
யேசுவின் உடக்கிற்கு இன்னும் விசேடமாக..

வெகு நேர்த்தியாக தலையை அசைக்க விழியை உருட்ட உடலைப்பதறுவது போல துடிக்க வைக்கவென பிரத்தியேக ஏற்பாடுகள்.

பேதுருவானவருக்கு தலை வைக்கும் சடங்கில் மேஸ்திரிமாருக்கு ஊர்ப்பெரியவர் கள் கைவளம் வைத்து சந்தோசப்படுத்து வதும் நடக்கிறது..

“முதல்...ஆக்களக் கூப்பிட்டு மண்டபத்த சுத்தமாக்குங்கப்பா..”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் தலையாட்டியபடியே வேலையைத் துவங்குகிறார்கள்.. பழையவர்களும் இளையவர்களுமாக.. சில மணி நேரங்களில் எல்லாம் முடிகிறது.. நாலைந்து பெரிய பட்டாசுக்கட்டைக் கொழுத்தி மண்டபத்துக்குள் வீச அதன் படபடப்பு வெடிக்கு பறக்கும் வௌவால்கள் இனித்திரும்பி வரக்கூடாது.. இது எல்லோரினதும் பிரார்த்தனை..!

தலைச்சடங்கு முடிந்த அன்றைக்கே மண்டபப் பொருட்கள் எல்லாம் வெளியில் வந்து விடும்.. உடக்குகள், உடையலங்காரப் பொருட்கள், தட்டிகள், அங்கிகள், சீன்சுகள், கயிறுகள், கப்பிகள் என்றும் நிலவறைப் பெட்டகத்திலிருந்து வெளியே வந்துவிடும்.. கோயில் மேடையில் துணிமணிகள் எல்லாம் வெய்யிலில் காயவைத்து விடுகிறார்கள். அந்தப் பொருட்களையெல்லாம் பயபக்தியோடு பார்த்து சுற்றி வளைய வருகின்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் ஒரு திருவிழா தொடங்கிவிட்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது.. புதிதாக என்னென்ன பொருட்களைச் செய்யவேண்டும். திருத்தப்பட வேண்டியது எவை என்றெல்லாம் பார்த்துப் பார்த்து தலைமை மேஸ்திரி சொல்ல அதற்கென்று கணக்கெடுக்கப்படும்.

கடந்த காலத்தில் உடக்குகளை ஏற்கனவே செய்யப்பட்டிருந்த நெஞ்சுக் கூட்டினை அடிப்படையாக வைத்துச் செய்து வந்தார்களாம். அவை இற்றுப் போவதும் அழிந்து போவதுமாய் இருப்பதை.. நிரந்தரமாக இருக்கும் வகையில் பைபர் கிளாஸ் நாரிழைகளால் வடிவமைக்க முடியுமா என்று யோசிக்கிறோம் என்கிறார் மண்டப தச்சு மேஸ்திரி நிச்மன் ஆசாரி.

அவர் அப்படி யோசிப்பதும் கவனத்தில் எடுக்க வேண்டியதுதான்..பாஸ் என்று நினைத்தால் பணம் வேண்டுமே என்று செலவைப்பார்த்துக்கொண்டிருந்தால் சரியா.. என்கிறார் அங்கு நிதியைக் கையாளும் கணக்குப்பிள்ளை..

இயேசு, மரியாள், அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு பேர்கள், பக்தியுள்ள ஸ்திரிகள், சீரோன் ஊர் சிமியோன், வெரோணிக்கா, அன்னாஸ், கைப்பாஸ், யூத குருக்கள், யூதர்கள், பிலாத்து, பிலாத்துவின் கையாள், ஏரோது, போர் வீரர்கள், சம்மனசுகள், பசாசுகள், கள்வர்கள் என்று பல உடக்குகள் அங்கு வடிவமைக்கப்படுகின்றன..இசேுவுக்கான உடக்கு காட்சிக்குத் தகுந்தது போல வெவ்வேறாகச் செய்யப்படும். ஊடக்குகளின் தலையை மிகத் தத்ரூபமாக மரத்தில் செதுக்கியிருப்ப தென்பது சாதாரணமல்ல..நேர்த்தியான கலை வடிவங்களாக அவற்றைக் கொள்ளலாம்.

வைக்கோலும் தடியும் துணியுமாகச் செய்யும் இப் பாத்திரங்களை ஆடை அணிகள் கொண்டு அலங்கரிக்கும் பணியை சிலுவைக் கயிறு இழுக்கும் முக்கிய மேஸ்திரியான சந்தியோகு பறுனாந்து அவர்களே செய்கிறார். அவர் பாஸ் மண்டபத்தில் முழு நேர பணிபுரிபவராகத் திகழுகிறார்.

உடக்குகளின் தலையை மிக நுட்பமாக பாத்திரங்களுக்கேற்ப முகலட்சணமாய் இருக்கத்தக்கதாக கலாபூசணம் அம்புறோஸ் குலாஸ் மற்றும் மெல்டன் குரூஸ் என்போர் வர்ணம் தீட்டித்தரு கிறார்கள்.

முன்பு சூசை குலாஸ் என்ற சித்திரிப்புக் கலைஞர் ஆக்கிய கப்பித்தான் குதிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை இப்போது மிக நுட்பமாக மத்தேஸ் செல்வம் குரூஸ் மற்றும் ஜே.நிலுக்சன் குரூஸ் என்ற இளைய தலைமுறை நுட்பக்காரர்கள் ஆக்கித் தருகிறார்கள். கப்பித்தான் குதிரை என்பது லேசுப்பட்டவிசயமல்ல.. பேசாலைப் பாஸில் கப்பித்தானும் குதிரையும் செய்கிற ஆர்ப்பாட்டம் முக்கியமானது என்ற போதிலும் இவை யாவுமே பாரம் கூடியதாக இருக்கின்றன என்பதற்கு மாற்றாகவே ஆசாரி நிச்மன் சொல்லுவதைக் கவனத்தில் எடுக்கவேண்டியிருக்கிறது..

**கண்ணாடியிழையில் உடக்கு**

கடந்த 2003ல் காட்டப்பட்ட பாசுக்கு ஓரிரு உடக்குகளை கண்ணாடியிழை நாரிலேயேதான் செய்தோம். அது பொருத்தமாகத்தானே இருந்தது.. என்ற ஆசாரியின் கருத்தை மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

சீமெந்தில் அளவுப்பிரமாணப்படி உடக்கின் உருவை நிலத்தில் செய்து அதன்மேல் கண்ணாடியிழையால் 'மோல்ட்' செய்து தேவையான உருப்படிகளை வார்த்து எடுப்பது என்ற அந்த யோசனையை ஏற்றுக்கொள்கிறார்கள். பைவர் கிளாஸ் உடக்குகள் சேதாரம் இல்லாமலும், பழுதடையாமலும், நீண்ட காலத்திற்குப் பயன்படுத்த முடியும் என்பதோடு அது பாரம் குறைவாகவும் இருக்குமென்பதால் தூக்குவதற்கு இலகுவாக இருக்கும் எனவும் நம்புகிறார்கள்.

ஆனாலும் இது உடக்கு என்ற தொன்மையிலிருந்து விலகும் ஒரு நடவடிக்கையாகவே கட்டுரையாளர் கருதுகிறார்.

வியாகுலப்பிரசங்கத்தின் கதையாடலுக்கேற்ப அந்த மண்டப அரங்கை மாற்றிவிடும் பணியில் முக்கிய மேஸ்திரியாகவும் வியாகுலப்பிரசங்கத்தை அவலச்சுவையோடு பாட வல்லவராகவும் யேசுவை சிலுவையில் இருந்து இறக்கும் அரிமத்தியா சூசையுடன் இணைந்து தோன்றும் கலைஞராகவும் செயற்படும் அமரர் சந்தியா ஆரோக்கியசாமி துரம் அவர்களின் முனைப்பான செயற்பாட்டை உடக்குப்பாஸ் வரலாறு என்றும் மறக்காது. அவர் செய்த அந்தப்பணிகளை இக்காலத்தில் அவரது மகனாகிய தேசியக்கலைஞரும் மேஸ்திரியுமாகவும் இருக்கும் திரு. எஸ்.ஏ உதயன் துரம் அவர்களும் அவரது குழுவினரும் காட்சியமைப்புக்களை சீராகவும் துரிதமாகவும் செயற்படுத்த அர்ப்பணித்து உழைக்கின்றனர்.

பிலாத்துவின் அரண்மனை ,ஏரோதின் அரண்மனை, அன்னாஸ் கைப்பாஸ் அரண்மனை, ஜெத்ஸமெனித் தோட்டம், இராப்போசன அறை, கற்றூன் வாதைக்குரிய இடம், கல்வாரி மலைச்சாரல் என்பதோடு இயேசுவின் மரணம், உயிர்ப்பு என்பதற்கான விசேட காட்சி ஏற்பாடுகள் நரகம், ஜெருசலேம் தேவாலயம், என்பவற்றை உருவாக்கும் பணியில் அவர்கள் ஈடுபடுகிறார்கள்.

அரங்கப் பொருட்களையும் காட்சியமைப் பையும் நிறுவும் இக்குழுவில் திரு.ரெஜி குலாஸ், திரு. அல்வினோ பறுனாந்து, திரு. மாக்மில்லன் குரூஸ், திரு. றொகே டயஸ், திரு. ஸ்பெல்வின், திரு. ஆனந்தன் லியோன், திரு. தியோஜினஸ் லோகு, திரு. ஜெறாட் லோகு, அருட் சகோ. ச. லூமன் லோகு என்போர் அயராதுழைப்பவர்களாய் இருக்கிறார்கள்.

பேசாலை மக்கள் இது எங்களுடையது என்று தனியாக சொந்தம் கொண்டாடும் இந்த உடக்குப்பாஸ் கலையை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு குறித்துரைப்பதில் நியாயம் இருக்கிறது. இப்போது நீண்டகாலத்துக்குப் பிறகு இக்கலை திரும்பவும் பேசாலையில் ஆரம்பிக்கப்படுகிறது. எங்கள் முன்னோர்களின் வழிமுறைகளில் சில இக்காலத்துக்குப் பொருந்தாது என்பதால் சில மாற்றங்களை இக்கலைக்குள் கொண்டு வருவது அவசியமாகின்றது.

**உடக்குப் பாஸ் கலையினூடாக சமூக ஒற்றுமை.**

அத்தோடு இந்த உடக்குப்பாஸ் கலை கலாசாரத்தினூடாக தலைமுறை தலைமுறையாக பற்பல பண்பாட்டு விழுமியங்களையும் மக்களுக்கு கற்றுத்தருவதாகச் சொல்லுகிறார்கள் பெரியவர்கள்.. நோன்பு இருத்தலோடு ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, கீழ்ப்படிவு, கடும் உழைப்பு என்பவற்றை உடக்குப்பாஸ் வேலைகளின் போது நாம் காணமுடிகிறது.. இக்கலைச் செயற்பாட்டினை அந்த ஊர் மக்கள் சடங்கு ரீதியாகவும் பாரம்பரிய ரீதியாகவும் சில ஒழுங்குபடுத்தப்பட்ட நடைமுறைக்குள்ளாகவே முன்னெடுத்து வருகிறார்கள்.

உடக்குப்பாஸ் காட்டப்படவேண்டும் என்ற தவிப்புணர்வு இந்த ஊரவர்க்கு ஒவ்வொரு தவசிலும் ஏற்படுவதுதான் என்றாலும் முன்னைய காலங்களில் பாஸ் காட்டுவதற்கென்று ஒரு சீரான இடைவெளியை பல்வகைக் காரணத்துக்காக வைத்திருந்ததாகச் சொல்கிறார் இக்காலத்தில் முக்கிய மேஸ்திரிமார்களில் ஒருவராய் இருக்கும் திவ்வியநாதன் பீரிஸ். அவருக்கு இப்போது 69 வயதாகியிருக்கிறது.. தும்பைப்பூப்போல முழுக்க வெண்மையாகி கிழ அழகூட்டும் தலைமுடியை எதற்காகவோ மனுசன் கறுப்பு டை பூசி.. அதுவும் அரை குறையாகத்தான்.. கெடுத்து வைத்திருப்பதாக பட்டெனச் சொல்லத்தோன்றுகிறது. பளிச்சென்று சிரித்தபடியே பல்கலை மாணவர்களுடன் கதைக்கிறார்..

முன்பு மூப்பராய் இருந்த சலேசியான் பீரிஸ் என்பாரின் இரண்டாவது மகன் என்று தன்னை அறிமுகப்படுத்துகிறார். இவருக்கு முன்பு பாஸ் மண்டபத்தின பிரதான ஆளுமையாகத் திகழ்ந்து அமரத்துவம் அடைந்த ஜேம்ஸ் பீரிஸ் என்பாரின் சகோதரர்.. அண்ணனைப்போல நான் இந்த உடக்குப்பாஸில் முன்பு ஈடுபாடு கொள்ளாமல் விட்டிருந்தாலும் சிறுவயதில் அப்பாவும் அண்ணனும் சேர்ந்து மண்டபத்தில் செய்த வேலைகளையெல்லாம் நான் பக்கத்திலிருந்தே பார்த்திருக்கிறேன்.. ஆண்டவருடைய உடக்குகளின் வேலைப்பாடுகளை அவர்கள் இருவருமே முன்பு செய்து வந்தார்கள்.. இப்போது அவர்கள் இருவருமேயில்லை என்பதாலும் இந்தப் பாஸ் மேஸ்திரி என்ற சமூக அந்தஸ்தை விட்டுக்கொடுக்க முடியாது என்பதாலும் எனக்கும் பாஸ் தொடர்பான அனைத்து வேலைகளும் தெரியும் என்பதாலும் இப்போது முக்கிய மேஸ்திரிமார்களில் ஒருவராகப் பணியாற்றுகிறேன்..

அவரது கெட்டித்தனமான நுட்ப வேலைகளைப் பக்கத்திலிருந்தே பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கிடைத்தது..

இந்தப்பாஸ் வேலைகளை புறத்தியார் யாரும் அறிவதற்கு இடமளிக்கக்கூடாது என்ற கருத்துக்கு எதிராகவே அவர் பேசுகிறார்.. உண்மையில் உடக்குப்பாஸ் என்றால் என்ன என்பதையும் அதை அரங்ககலையாக ஆற்றுகைப் படுத்துவதில் எம்மக்களின் அர்ப்பணித்த உழைப்பை மற்றவர்கள் ஏன் அறிந்து கொள்ளக்கூடாது என்று அவர் கேள்வி எழுப்புகிறார்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ் மண்டபத்தின் வெளியில் பார்வையாளர்களாக இருப்பவர்களுக்கு நாங்கள் பாஸ் மண்டபத்தினுள்ளேயிருந்து படுகிற பாடு தெரியப் போவதில்லை. ஒரு உடக்கின் கண நேரஅசைவையும் நாங்கள் பொருள் உள்ளதாக மாற்றுவதற்கு அதிகப் பிரயத்தனம் எடுத்துக் கொள்கிறோம். நிறையவே ஒத்திகைகள் பார்க்கிறோம். ஒரு விசில் சத்தத்திற்குட்பட்டு கிறிச்சான் ஒலி எழுப்புவோரும், பிரசங்கம் வாசிப்போரும், உடக்குகளைக் கையாள்வோரும், பிரதிக்கேற்ப நிகழ்வை வழிநடத்துவோரும், மேஸ்திரிகளின் பொறிகளின் இயக்கமும், காட்சி விதானிப்போரின் கணப்பொழுதுச் செயற்பாடுகளும், ஒலி ஒளியமைப்புக் காரரின் கருத்தான கவனிப்பும், பாத்திரங்களுக்காக குரல் கொடுப்போர் பேசும் வசனங்கள், பின்னணி இசை ஒரு புள்ளியிடுதலில் சங்கமிக்க வேண்டுமே.. இது மனிதர்களின் நடிப்பால் ஏற்படுத்துவதென்றால் நடிகரின் புரிதல் மட்டும் போதும் இதற்கேற்ப மற்றவைகளை ஒருங்கிசைவு செய்ய முடியும்..

இது உடக்கு.. ஒரு உடக்கினை சாதாரணமாக மூன்று பேர் கையாளுதல் வேண்டும். கால் கம்பு பிடித்து உடக்கைத் தூக்குபவருக்கு பிறிதொரு நபர் யாரும் உடக்குப் பாரம் சுமப்பதில் ஒத்தாசை புரிய முடியாது. அதைப்போல உடக்கின் இருண்டு கைகளுக்குமான கைக்கம்பி பிடிப்போர் உடக்குத் தூக்குபவருடன் எல்லா நேரமும் ஒத்திசைய வேண்டும். அப்படிச் செய்யாதபோது உடக்கின் அசைவு வெளியில் இருந்து பார்ப்பவர் களுக்கு என்னவோ போல் இருக்கும்..

ஒரு காட்சியை மண்டபத்தின் மூன்று தளங்களிலும் இயங்குபவர்களும் சேர்ந்தே ஒரு நேரத்தில் நடத்துகிறார்கள். பிரசங்க வாசிப்பாளரின் வாசிப்புக்கேற்ப ஒரு தளத்தில் நடக்கும் பிரதான ஒரு காட்சிக்கு இணக்கமாக மற்றைத் தளங்களில் இயங்குபவர்கள் தமது நகர்வை மேற்கொள்வார்கள் எனினும் அந்த ஒரு தளத்தில் நிகழும் பிரதான காட்சியை மற்றைய தளக்காரர்கள் பார்க்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைப்பதில்லை.. கீழே இதுதான் நிகழுகிறது என்ற கணிப்பும் தள மேற்பார்வையாளரின் சமிக்கையுமே அவர்களை வழிநடத்தும்.. “பாஸ் நல்லா இருந்துது..”என்று சொல்லும் ஒரு பார்வையாளர் இது இப்படித்தான் நடத்தப்பட்டது என்று தெரிந்து கொள்ள வேண்டாமா..?

இதை திவ்வியநாதன் என்ற ஒரு முக்கிய உடக்குப்பாஸ் மேஸ்திரி ஒரு அங்கலாய்ப்பாய்ச் சொல்லுவதென்பதை எம்மால் சாதாரணமாகப் பார்க்க முடியவில்லை என்கிறார்கள் பல்கலை மாணவர்கள். உண்மையில் அது எல்லோருக்கும் எழுகின்ற கேள்விதான். பாஸ் வேலைகளையோ பாஸ் நடத்துவதையோ புறத்தியார் என்று சொல்லுக்கூடிய வேறு ஆட்கள் ஏன் பார்க்கக்கூடாது..?

“அதெப்பிடி.. இதைப் பார்க்க எப்பிடிங்க விடுறது..இது எல்லாமே நூல் வேலையாலும், சின்னதில இருந்து பெரிய பெரிய அச்சுக்களாலும் நூற்றுக்கணக்கில் ஆக்கள் இயக்கிக் காட்டுறதல்லவா..?”

“சரிதான்.. இதை மற்றவர்கள் பார்த்து அதைப்போல அவர்களுடைய ஊரிலயும் செய்து விடுவார்கள் என்ற பயமா.?”.

“ச்சேச்சே..இதுமாதிரி ஒரு மனித முகத்தையுடைய தலைய அல்லது கையை மரத்தில மினக்கெட்டு செதுக்கியெடுக்க இப்ப யாரிருக்கா..? அப்பிடித்தான் இருந்தாலும் இதுக்கான செலவு என்னாகும்.. யாரும் இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில இதைச் செய்வாங்களா..? எங்களிட்ட இருக்கு நாங்க செய்யுறோம்..''
''அப்படியென்டால் மற்றாக்கள் பாக்கிறதுக்கு அனுமதிக்க வேண்டியது தானே.''.
''இல்ல..'' அவர் சப்பைக் கட்டு கட்டுகிறார்.. ''அது ஒண்ணுமில்ல.''.
அவர்களுடைய சம்பாசணையில் கலந்து கொள்ளுகிறார் சித்தரிப்புக்கலைஞரான மேஸ்திரி சந்தியோகு பறுனாந்து.

''வெளியில இருந்து பாக்கிறவங்களுக்கு ஏற்படுத்திற அருட்சியும் இது எப்பிடிடா செய்யுறான் எண்ட கேள்வியும் உள்ளே என்னடா நடக்குது எண்ட ஆச்சரியமும்தான் இந்த உடக்குப்பாஸிட மாயம்.. உள்ள வந்து பாத்திட்டா அந்த மாயம் உடைஞ்சு போயிறுமே..''.
அவர் சொல்ல மாணவர்கள் வாயைப்பிளக்கிறார்கள்.. ''ஓம் அவர் சொல்வது சரிதான்..''

மக்களால் தலைமை மேஸ்திரியாக நியமிக்கப்படுகிறவருக்கு கீழே பெரியவர்களும் இளையவர்களுமாக இயங்குவதில் அந்த ஊரின் ஒற்றுமை புலப்படுகிறது. பாஸ்காட்டும்போது மண்டபத்துக்குள் கிருசைகளாலும், டமாரங்களாலும், பேரொலிப்பானாலும் (லொறி ஹோரன்) ஏற்படுத்தும் பேரிரைச்சலுக்குள்.. தலைமை மேஸ்திரியின் கட்டளைகளையும் மக்களின் வேலைக்கான உரத்த சத்த கூப்பாடுகளையும் உள் மறைத்து ஒரு பெரிதான கலை அரங்கேறுகின்றது..

**உடக்குப்பாஸின் தோற்றுவாய்.**

இத்தகு சிறப்பு வாய்ந்த இக்கலை நம் நாட்டில் தற்காலத்தில் வேறிடங்களிலோ அல்லது இந்தியாவிலோ உலகின் வேறு பாகத்திலோ செயன் முறையில் இருப்பதாக நாம் அறிந்திருக்கவில்லை. ஆனால் இலங்கையிலேயே 1800 களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணம், சீதுவ, சிலாபம் பகுதிகளில் இவ்வகை உடக்குப்பாஸ் ஒரு காலத்தில் நடைமுறையில் இருந்து பின்பு வழக்கொழிந்து போனதாக ஆய்வாளர் பண்டிட்.உபாலி லீலாரத்ன தனது art tradition of puppet's play கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இது இக்கலை மனிதர்களால் ஆற்றப்படும் பெரும் முயற்சி என்பதாலும் பணப் பொருட்செலவு மிகுந்திருப்பதாலும் இக்கலையினைத் தொடர்ந்து முன்னெடுக்க அடுத்து வந்த தலைமுறையினர் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை என்பதாலும் உடக்குப்பாஸ் கலை இல்லாது போய்விட்டதாக பண்டிட்.உபாலி லீலா ரத்ன தனது கட்டுரையில் எழுதுகிறார்.

ஆயினும் பேசாலை மக்கள் இக்கலையை விடாப்பிடியாவும் உற்சாகமாகவும் தொடர்ந்து ஆற்றி வந்ததால் அது இன்று உலக கலை ஆர்வலர்களின் பார்வையில் கணிக்கப் பெறுவதாய் இருக்கிறது. இலங்கையின் கல்வித்துறையின் அழகியல் கற்கும் மாணவர்களுக்கான கலைத் திட்டத்தில் பேசாலை உடக்குப் பாஸ் பற்றிய அறிமுகத்தை வழங்க இலங்கை தேசிய கல்வி நிறுவகம் முன்வந்திருப்பது இன்னும் இக்கலை பற்றிய நுண்ணனுக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் நாமும் இக்கலை நிகழ்வு தொடர்பான ஒரு குறும் ஆய்வை மேற்கொள்ளத் தேவையிருக்கிறது.

**விசேட அரங்காற்றுகை உடக்குப்பாஸ்**

சித்திரை மாதத்தில் கிறீஸ்தவர்கள் இயேசுநாதரின் பாடுகளைத் தியானிக் கிறதும் அதற்காக விசேட வழிபாடுகள் நடத்துவதும் இயேசு மரித்ததாகச் சொல்லப்படும் பெரிய வெள்ளியில் இயேசுவின் பாடுகளைக் காட்சியாக மனிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்துக் காண்பிக்கிறதுமான கலைச் செயற்பாடுகள் அரங்கியல் வரலாற்றின் ஒரு அழுத்தப்பதிவாக உலகெங்கிலும் இருந்து வருவதை நாம் மறுக்க முடியாது..

அந்த வகைக் காட்சியை 'பாஸோ' என அழைப்பது வழக்கம். இந்தப் 'பாஸோ' எனப்படுவது போத்துக்கேய மொழியை அடியாகக் கொண்டது. இங்கும் அந்தப் பாஸோதான் நடக்கிறது என நாம் எண்ணும்போதே நீளமாய் ஒரு மறுதலிப்பு.. இது அது இல்லை.. இந்த மறுதலிப்பு விசயம் தெரிந்த எல்லாரிடம் இருந்தும் வருகிறது.. அப்படியானால் இது என்ன..? அந்தப் பாஸோவிலிருந்து எப்படி இது வேறுபடுகிறது..?

இது உடக்கு எனப்படும் பெரிய வகைப் பொம்மைகளை மனிதர்கள் இயக்கி காண்பிக்கும் ஒரு பிரமாண்ட அரங்காற்றுகை.! இதனை ஆய்வாளர்கள் நூதனமான ஒன்றாகப் பார்க்கிறார்கள்..

சித்திரை மாதம் நிகழவிருக்கும் இந்த அதிசயத்தைப்பற்றி மிக்க ஆர்வமாகப் நாம் பேசுவதிலும் அதிக விஷயம் இருக்கிறது. பேசாலை என்ற இந்த ஊர் இன்னும் கட்டுக்குலையாத கலைப்பாரம்பரியங்களை தன்னகத்தே அவற்றின் வீச்சம் குன்றாது வைத்திருக்கிறது..! அவற்றில் ஒன்றான இந்த மண்ணுக்கே மட்டுமுரிய உடக்குப் பாஸ் என்ற இந்தக்கலை வடிவத்தின்பால் ஊர் மக்கள் எல்லோருமே ஒட்டுமொத்த முயற்சியை அளிக்கை செய்வதை நம்மால் அதிசயமாகத்தான் பார்க்க முடிகிறது..

புனித வெற்றியன்னை ஆலயத்தின் முன்றலில் ஏறத்தாழ இருநூறு வருடங்களுக்கு முன்னதாகவே கட்டப்பட்டு இந்த ஊரவர்களால் பயன் படுத்தப்பட்டு வருகின்ற பிரமாண்ட பாஸ் மண்டபத்தை ஐந்து வருடத்திற் கொருமுறை திறந்து அவர்கள் பாஸ் வேலைகளை ஆரம்பிக்கிறார்கள்.. ஆம். இது தவக்காலத் திருவிழா என்ற செய்திக்குப் பின்னால் ஒரு வரலாறு இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இப்போதல்ல.. முன்னைய காலத்தில் உடக்குப் பாஸ் காட்டுகிற வருடத்தில் அந்த ஊர் மக்கள் தவக்கால நோன்புக் கடமையை பிசகாமல் செய்திருந்தார்கள். இப்போது அப்படியல்ல.. ஊர் கெட்டுப் போச்சு என்று முணுமுணுக்கிறார் கோயில் தெருவில் கடை வியாபாரம் செய்யும் ஒரு வணிகர். அந்த நல்ல மக்கள் வாழ்ந்த சமூகத்திலா நாம் இப்போது வாழ்கிறோம் என நினைக்க கவலையாக இருப்பதாக இப்போதிருக்கும் கோயில் மெலிஞ்சியார் கவலையோடு சொல்லும் போது நமக்கும் வலிக்கிறது.. அவர் முன்னாள் மன்/பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்து ஒய்வு பெற்றிருப்பதாக எமக்குச் சொல்கிறார்.. அவர் கலை நுட்பமும் விசயம் தெரிந்தவருமாக இருப்பதை மற்றவர்களும் உறுதிப்படுத்தினார்கள்.. பழைய நாட்டுக்கூத்துக்களில் எல்லாம் நடித்துப் பெயர் பெற்றிருப்பதாக அவர் எம்மிடம் சொன்னார்..

இந்த உடக்குப்பாஸ் தொடர்பாக உங்களுக்கு ஏதாவது அனுபவம் உண்டா என்று கேட்டதற்கு அவரது கண்கலங்குகிறது.. பாஸ் மண்டபத்தின் இயங்குதளமாக அங்கு காணப்படும் மூன்றுதளங்களுக்கும் தவிர்க்க முடியாத ஒத்தாசையை வழங்குவது மண்டபத்தின் மேலிருக்கும் பரண் செயற்பாடுதானாம். அந்தப் பரணில் ஏறி நின்று கிழே நிற்கும் தலைமை மேஸ்திரியின் விசில் சத்தத்திற்கு செவிமடுத்து காரியம் ஆற்ற வேண்டும்.. எல்லாம் டைமிங்தான்.. ஏதாச்சும் தவறு நடந்தால் அதைத் திருத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. முன்பு சூசைப்பிள்ளையார், சைமன் லோகு, இன்னோசன் குரூஸ், போன்றவர்கள் செய்த வேலைக்கு இப்போது இவர்தானாம் இன்சார்ஜ் என்கிறார் மெலிஞ்சியார் சி.எம். பறுனாந்து.. முன்பெல்லாம் மண்டபத்தின் முப்பத்து ஐந்து அடி உயர உச்சியில் போடப்படும் பரணில் அனாயசமாக ஏறி வேலை பார்த்த அந்த தனது இளந்தாரி வயதை நினைவு கூர்கிறார்.. இப்போது அவருக்கு அறுபத்தேழு வயது..முன்பு போல அவரால் முடியவில்லை என்பதையும் அவரே ஒப்புக்கொள்கிறார்.. ஆனால் இப்போது புதுப் பொடியங்கள் அந்த வேலைகளை நன்றாகத்தான் செய்கிறார்கள். புதிய இளைஞர்கள் குற்றமற இயங்கும் வல்லமை படைத்தவர்கள் என்றும் உத்தரவாதம் தருகிறார் முன்னாள் பாடசாலை அதிபரான மெலிஞ்சியார்.. இப்போது யோண்சன் பெர்னான்டோ, அல்போன்ஸ் குரூஸ் என்பவர்கள் மண்டபத்தின் பரண் வேலைகளில் சிறப்பு வாய்ந்தவர்களாம்.. எட்டாம் பாஸின் போது மாதாவில் ஊடுருவும் ஏழுவாட்கள் மற்றும் சம்மனசுகளை கச்சிதமாக கீழே இறக்கி மேலேற்றும் நுட்பங்களை இவர்கள்தான் இன்றும் செய்து வருகிறார்கள். ஆண்டவர் குருசில் மரிக்கும் போது உச்சியிலிருந்து பசாசு ஆங்காரத்தோடு கீழிறங்கி நரகத்தில் விழுந்து மடிகின்ற காட்சியை பரண் வேலைகாரர் செய்வதென்பது மிக்க நுட்பமான வேலை.. ஏழாம் பாஸில் ஆண்டவரை சிலுவையில் அறைந்து தரையில் கிடங்கு வெட்டி யூதர்கள் சிலுவையை செங்குத்தாக தூக்கி ஒரே போடாக கிடங்கில் போடும் காட்சிக்கு சனம் அதிர்ந்து போய்விடும்.. அந்தக் காட்சியில் பரண் வேலைதான் முக்கியம்.. ஆண்டவர் மரிக்கும்போது அவருடைய சிலுவையைச் சுற்றி படு வேகமாக செட்டு செட்டாய் சம்மனசுகளை இறக்க வேண்டும்.. அதைப்போல ஆண்டவர் கெத்தமனியில் பாடுபடும்போது அவருக்கு ஆறுதல் கூற விண்ணிலிருந்து வரும் சம்மனசு இரண்டு கப்பியில் கணப் பொழுதில் மாறி ஒரு ரவுண்டு அடித்து வரும் காட்சியும் அலாதியானது..

இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் பரண் வேலைகாரர் யோண்சனிடம் உங்களுடைய வேலை பற்றிச் சொல்லுங்கள் எனக்கேட்க "அது நம்மளப் பொறுத்தவரை ரொம்ப சிம்பிளானதுதான்.. ஆனா பாஸ் முழுக்க மேல அந்தரத்திலேயே வெளவால் மாதிரித் தொங்கிண்டிருக்கணும்.. ஆனா ஒண்ணு கீழ கிடந்து கஸ்டப்பட்டு வேலை செய்யிறவங்களப்பாத்தா நமக்குப் பரிதாபமா இருக்கும். ஓடிப்போய் அவங்களுக்கு உதவி செய்யணும் போல இருக்கும்.. ஆனா ஏலுமா..?" என்று கேட்டுவிட்டுச்சிரிக்கிறார். இந்த முறை எப்படி என்று கேட்டோம்..பார்க்கலாம் என்றவர் இன்றைக்கு நடக்கவிருக்கும் தலைச்சடங்கைப் பார்ப்பதற்காக அழைத்தார்..

இனி ஒரு மாதம் வரையிலுமான காலத்தில் ஊரும் பேருமாகச் சேர்ந்து வேலைதான்.. மண்டபத்தில் பகல் முழுவதும் நடக்கும் வேலை. மேஸ்திரிமார் தங்களுக்குப் பொறுப்பான வேலைகளைச் செய்வதற்கென்று அவர்களுக்கு கெட்டித்தனமாகத் தெரிந்த இளசுகளில் நாலைந்து பேரை தன்னுடனேயே வைத்துக் கொள்ளுகிறார்கள்.. மேஸ்திரி சொல்லும் வேலையை அவர்கள் ஓய்வில்லாது செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.. சிலர் நேரம் கிடைக்கிற போது வருகிறவர்கள்தான்.. என்றாலும் சிலர் முழு நேரப்பணி செய்வதால் அவர்களுக்கு கூலி என்றில்லாமல் கொஞ்சக் காசை சந்தோசமாக காகித உறைக்குள் வைத்துக் கொடுப்பதுமுண்டு.. இப்படி பணக் கொடுக்கல் வாங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் பார்த்துச் செய்யும் பொறுப்பு சிறாப்பருக்கு உண்டு என்பதால் அவர் நல்ல கண்காணிப்பு..! தலைச்சடங்கு நிறைவுற்றதும் மற்றவர்களுக்கு கட்டளையிடும் தொனியில் கதைப்பவரில் அனேக செய்திகள் இருப்பதாகப்பட அவரை அணுகும் பல்கலை மாணவர் களுக்கு இன்னும் புதிதான தகவல்கள் காத்திருந்தன.

அவர்தான் தலைமை மேஸ்திரியாராம்.. எஸ்.ஏ.மிராண்டா என்று தன்னை அறிமுகப்படுத்தும் அவரின் வயது 87..தனக்கென்று பல இயலாமைகளை உடலளவில் வைத்திருப்பதாகச் சொன்னாலும் உடக்குப்பாஸ் என்றவுடனே உற்சாகமாகிவிடுவதாகச் சொல்லுகிறார்.. கடந்த 1983, 2000, 2004 ம் ஆண்டுகளில் பேசாலையில் இந்த உடக்குப்பாஸைக் காட்டியபோது அப்போது மூப்பராய் இருந்து இன்று அமரராகிவிட்ட நீக்கிலாஸ் சூசையப்பு குரூஸ் என்பவரிடம் இருந்து இந்த தலைமை மேஸ்திரிப் பொறுப்பை பெற்றதாகச் சொல்லும் தலைமை மேஸ்திரி எஸ்.ஏ.மிராண்டா ஒரு நாடக நெறியாளர் என்பதோடு எழுத்தாளராகவும் இருப்பதால் அரசாங்கம் அவருக்கு கலாபூசணம் விருது வழங்கி கௌரவித்திருப்பதையும் சொல்கிறார்.

இப்போது இந்த ஊரில் உடக்குப்பாஸ் காட்டுவதென்றால் விசயம் தெரிந்த மூத்த மேஸ்திரிமார்களில் முதல் தலைமையாட் களாகவும் முதியவர்களாகவும் இருப்பவர் களென்று ஐந்த பேரைத்தான் எல்லாரும் சொல்லுகிறார்கள்..வயதின் அடிப்படையில் சந்தியா அந்தோனிச்சாமி துரம் ,சந்தியா அந்தோனி மிராண்டா, சூசை அம்புறோஸ் குலாஸ், வெலிச்சோர் திவ்வியநாதன் பீரிஸ், செபமாலை சந்தியோகு பறுனாந்து என்ற இந்த ஐந்து பேருந்தான் உடக்குப்பாஸின் நுட்பங்களை அறிந்தவர்களாக இருக்கிறார்கள்..ஆனாலும் முதுமையின் காரணமாக இவர்களில் சிலர் இயங்க முடியாதிருப்பதையும் சொல்ல வேண்டியிருக்கிறது..

அச்சச்சோ.. அப்படியானால் உடக்குப்பாஸ் நடைமுறை இல்லாமல் போய்விடும் நிலை வந்துவிடுமோ என்று சடுதியாக வரும் பயத்தை நீக்குகிறார் எஸ். ஏ உதயன் துரம் என்ற இந்த தலைமுறைக்கான கலைஞர்..

பேசாலை உடக்குப்பாஸ் நுட்பம் பற்றிய தெளிவை தம்மைப்போன்ற பழைய மேஸ்திரி மார்களின் வாரிசுகளாய் இருக்கிறவர்களும் கற்றுத்தான் வைத்திருக்கிறோம்..அப்படியிருக்க நாங்கள் ஏன் பயப்பிட வேண்டும் எனக் கேட்கிறார்..

தற்காலத்தில் தேசியக்கலைஞரும் அரங்கச் செயற்பாட்டாளரும் எழுத்தாளரு மாய் இருக்கின்ற திரு. எஸ். ஏ உதயன் உடக்குப்பாஸ் கலையின் மூத்த மேஸ்திரியாகவிருந்த அமரர் சந்தியா ஆரோக்கியநாதர் துரத்தின் மகன்... அவர் இன்றைய தலைமுறை இளைஞர்களுக்கு உடக்குப்பாஸ் தொடர்பான நுட்பங்களை போதிக்கவும் செயற்படக்கூடியவருமாக இருப்பதை குறித்துரைக்கின்றார்கள் அந்த ஊர் மக்கள்.

திரு. சாந்து மெரில் மிராண்டா, திரு. மத்தேயுஸ் செல்வம் குரூஸ், திரு. ரெத்தினம் கிறிஸ்ரி றெவல், திரு. யேசுதாசன் றிச்மன் என்று நீண்டு தொடரும் புதிய தலைமுறை உடக்குப்பாஸ் நுட்பக் கலைஞர்களின் வழிகாட்டலில் இயங்கத்தக்க புதிய கலைஞர்கள் பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாலையில் இருப்பதாக திரு எஸ்.ஏ உதயன் தெரிவிக்கிறார்.

**பழைய மேஸ்திரிமார்கள்**

உண்மையில் போத்துக்கீசர் காலத்தில் இந்த உடக்குப்பாஸ் கலைக்கு பிதாமகர்களாக இருந்தவர்கள் உடக்கு என்ற ஒரு பாவையைச் செய்து அதன்மூலம் யேசுவின் திருப்பாடுகளைக் காட்சிப்படுத்தி அதனைத் தியானிக்கலாம் என்ற முனைப்புடன் செயற்பட்டதாகவும் அது எப்படி நடந்தேறியது என்பதற்கான எவ்வித ஆவணமும் எம்மவர்களால் பேணப்படாதிருந்தமை தவறுதான்.. ஆனால் 1920களுக்குப்பிறகு உடக்குப்பாஸ் என்ற இந்த ஊருக்கான தலையாயக் கலையை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற தீவிரம் இந்த ஊரின் மூத்தவர்களிடையே காணப்பட்டிருக்கிறது என்பதை நான் என் பாட்டனார் வாயிலாகக் கேட்டறிந்திருக் கிறேன் எனச் சொல்லும் திரு எஸ்.ஏ.மிராண்டா வாத்தியார் தனக்குத் தெரிந்தவரை அதி உயர்வான நுட்பக்கலையை இந்த உடக்குப்பாசுக்கு வழங்கியது சலேசியன் பீரிஸ் என்ற இந்த மண்ணின் மகன்தான் என்று அடித்துக் கூறுகிறார்.. அவருக்கு முன்னான காலத்தில் இந்த உடக்குப்பாஸை முன்னெடுத்த மேஸ்திரிமார்கள் பற்றி அவரிடம் கேட்டார்கள்.

"அருளானந்தம் குரூஸ் தங்க நகை வேலைகளைச் செய்யிறவர்..அவரிட கைப்பட்டுத்தான் இங்கஉள்ள சித்தரிப்பு வேலையெல்லாம் நடந்துது. அந்தோனி பீரிஸ். இவருதான் அந்த நாளையில எட்டாம் பாஸில நடக்கிற அத்தனைகாட்சி சித்தரிப்புக்கும் பொறுப்பானவரு.. அது போல அந்தோனி குலாஸ் ஆண்டவரிட திரு உருவத்த உடக்கில செய்யிறவரு.. அது மாதிரி மாதா, கப்பித்தான் இந்த ரெண்டு உடக்குகளையும் வடிவமைக்கிற நுட்பக்கலைஞர் அவர்தான்... இராசையா நீயெஸ்.. இந்த மனுசன் பாஸ் மண்டபத்தில தந்திரக்காட்சிகளச் செய்யிறதுக்கு பேர் போனவரு.. கயித்தான் பறுனாந்து..மனுசன் திடகாத்திரமானவரு.. மண்டபத்தில பரணில ஏறி நிக்கிறதும் உச்சத்தில கப்பி மாட்டி கயிறிழுத்து பாஸ் காட்சிகள நகர்த்திறதும் இவருதான்.. இவரோட கூடவே இருக்கிற வேலகாரர்தான் தோமாஸ் குரூஸ்.. இவங்களச் சொல்லும் போது எனக்கு சட்டென்டு ஆரோக்கியநாதர் துரம் ஞாபகத்தில வாறாரு.. மனுசன் எந்தாப் பெரிய ஆளுமை..உடக்குப்பாஸில ஓல் ரவுண்டர்.. எனக்கு அந்த மனுசனோட இந்தப்பாஸ் மண்டபத்தில வேலை செஞ்ச அனுபவம் கடந்த மூணு பாஸிலயும் இருக்கு..ஹி இஸ் ஏ வெரி கிரியேட்டிவிட்டி மேன்.. வி மிஸ் ஹிம்..என்று சொல்லிவிட்டு கண்களை மூடுகிறார்.. அவருக்கு மரித்துப்போன ஆரோக்கிய நாதர் துரத்தோடு இப்போது களத்தில் நின்று வேலை செய்தால் எப்படியிருக்கும் என்ற நினைப்பு ஓடுகிறது..

ஓம்.. மண்டபத்தில மரப் பொறிகளச் செய்யிறதுக்கென்டு இருந்தவர்தான் பஸ்கால் மிராந்த.. இப்ப அவரு செய்த பொறிகளில கனக்க அழிஞ்சு போயிட்டுது.. ஆண்டவரிட சிலுவைக்குப் பின்னால தொங்கிற ராய்ஸ் என்ட சுடர் வீசுக் கருவிய ஆக்கிப்படைக்கிற மேஸ்திரி சாந்து மிராண்டா.இவங்களெல்லாம் இப்ப எங்களோட இல்ல..ஆனால் இவங்கட வாரிசுகளாயிருக்கிற சில பெரிசுகளும் சில இளசுகளும் எங்க ஊர்க் கலையை இப்பவும் ஒரு குறையுமில்லாம செய்கிறாங்கள்.. இந்தப்பாஸ் பேசாலையில கிடுகால கொட்டில்கள் அமைத்து ஆலயத்தின் பக்கத்திலேயே எங்கள் முன்னோர்கள் காட்டியிருந்தாலும் பாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தை புதிதாக அமைத்து 1907 ம் ஆண்டு முதன் முறையாக இங்கு பாஸ் காட்டியபோது அப்போது எங்கள் ஊருக்கு மூப்பராக இருந்த மரியானு மீயேஸ்தான் தலைமை வகித்தாரு. ஊரின் பெருங் கலைஞர்கள் சேர்ந்த ஏற்பாடு செய்கிற உடக்குப்பாஸைத் தலைமை ஏற்று நடத்துகிற அதிகாரமிக்கவர்தான் மூப்பர். அந்த வகையில் அவருக்குப் பின்னால எவரோஸ் சக்கரியாஸ் குரூஸ், சந்தியா குரூஸ், கயித்தான் தலிமா, தொம்மை எலியாஸ் பீரிஸ், வெலிச்சோர் பீரிஸ், தாவீது செபஸ்தியான் பீரிஸ் ,அவ்ரான் செபஸ்தியான் குரூஸ் மாஸ்ரர், வெலிச்சோர் யேம்ஸ் பீரிஸ், நீக்கிலாஸ் சூசையப்பு குரூஸ் எனப்படுகிற பெரிய கெட்டிக்காரங்களெல்லாம்தான் இந்தப்பாஸை நடப்பிச்சாங்க.. நான் இப்ப சூசையப்பு குரூஸ் ஐயாட்ட இருந்து தலைமைப் பொறுப்பை வாங்கி இந்த பாஸை நடத்துறன்.. மாதாவேயென்டு இத்தின நாளைக்கு ஒரு குறையு மில்லாமத்தான் நடக்குது..

ஆயினும் இந்த உடக்குப்பாஸின் வளர்ச்சியும் பரிணாமமும் பற்றிய கலந்துரையாடல் தொடர்ந்து இந்த ஊரில் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் புனித. வெற்றிநாயகி ஆலயத்தின் வரலாறு பற்றி எழுதப்பட்ட ஆவணங்கள் மூலமாகவும் நாம் அறியக்கூடியதாய் இருப்பதாக அவர் சொல்லுகிறார்.

**மூத்தோர் கூற்றுக்கள்.**

ஆரம்பத்தில 1730களில் இருந்தே பேசாலையில் இந்த உடக்குப்பாஸ் காட்டி வந்தார்கள் என்று கட்டுரையாளர் எஸ்.ஜி. பெரேரா தனது Life of fr.jacome gonsalvaz என்ற கொன்சால்வேஸ் சுவாமிகள் பற்றி எழுதிய ஆய்வுக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்..இதே கூற்றினை பேசாலையின் மூத்த குடிமகன் காலம் சென்ற ஜே.வி. பல்தானு அவர்கள் 1890 ஆண்டில் பழுதடைந்திருந்த ஆலய கப்பலாவைத் திருத்திக்கட்டுவதற்கு முன்னமே இங்கு ஓலைக்கொட்டில் அமைத்து பாஸ் காட்டப்பட்டதாகச் சொன்னதாக பிறிதொரு கட்டுரையில் கலாபூசணம் எஸ்.ஏ. மிராண்டா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறே பேசாலைக் கோயிலின் அடுத்தாரில் முன்பு காணப்பட்ட சிலுவைப் பள்ளமும் அங்கு பாஸ் காட்டியதற்கான சான்றாக இருந்தது.. உடக்குப்பாஸ் காட்டுவதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் பாஸ் மண்டபம் ஒரு ஆச்சரியமான கட்டிடமாகத் தெரிந்தது. பார்க்கிற இடமெல்லாம் மூன்றடி அகலச்சுவராக திடுமென உயர்ந்தும் அகன்றும் நிற்கிற அந்த மண்டபம் மிக நுட்பமான கட்டிடம்..செங்கல்லினாலும் முருகைக்கற்களினாலும் கட்டப்பட்டு பழைய காரை பூசப்பட்ட சுவர்கள் திருப்பங்களோடு இறங்கி நிமிரும் படிக்கட்டுக்களையும் வியப்போடு பார்க்கிறேன் என்று பண்டிட்.உபாலி லீலாரெத்தின எனும் கட்டுரையாளர் எழுதியிருப்பதை இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

இதன் பிற்பட்ட காலத்தில்.. அதாவது 1950க் குப்பின்பு லெம்பவம் எனப்பட்ட யேசுவின் பாடுகளுக்கு முந்திய சில புதுமைகளும் முக்கிய நிகழ்வுகளுமாகிய கானாவூர் கலியாண வீட்டில் தண்ணீரை இரசமாக்குகின்ற புதுமையும், யேசுவை இரண்டு பசாசுகள் சோதிக்கின்றமையும், மாதா யேசுவுக்கு பாடுகளுக்கு விடை கொடுப்பதாகவுமுள்ள காட்சிகள் உட்பட்ட முழுப்பாஸ் காட்சிகளையும் காட்டுவதற்கு உரிய வேலைகளை ஒரு தொழில் பிரிப்பாக சில நுட்பக் கலைஞர்கள் தமது பொறுப்பெடுத்து வேலைகளைப்பகிர்ந்து கொண்டார்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தச்சுப்பட்டறை ஒட்டு வேலைகள் இரும்பு வேலைகள் கடைச்சல் எல்லாமே மண்டபத்துக்குள்தான்..
மண்டபத்தினுள்ளேயே இயங்கும் தச்சுப்பட்டறை, கொல்லப்பட்டறை என்பவற்றுக்கு அமரர் யேசுதாசன் (வேலாயுதம்), அமரர் திரவியம், அமரர் அந்தோனி குலாஸ் என்பவர்கள் நுட்பக்கலைஞர்களாகவும் அவர்களை வழிநடத்தும் மேஸ்திரியாக அமரர் ஆரோக்கியநாதர் துரம் இருந்திருப்பதற்கான சாட்சியங்களை இந்த ஊரைச்சேர்ந்த பலர் முன்மொழிகிறார்கள்.. குறிப்பாக வடமாகாண இலக்கியப் பெருவிழா 2016 நிகழ்வில் அன்னாரது பெயரில் அரங்கமைத்து, பொறியியலாளரும் உடக்குப்பாஸ் ஒளியமைப்பு நிருவாகியுமான திரு. எஸ். கியோமர் குலாஸ் அவர்கள் நடாத்திய அரங்கத் திறப்புரை இதற்கு சான்றாக அமைகிறது.

உடக்குப் பாசுக்கென்று பயன்படுத்தும் எல்லாப்பண்டங்களுமே இங்கு பௌத்திரமாகத்தான் கவனிக்கப்படுகின்றன.. உடக்குத்தலைகளில் வைக்கின்ற டோப்பா எனப்படும் விக்குளையும் கூட கற்றாழை நார்களில் செய்து பொருத்தமான சாயமிட்டு காயவைத்து பக்குவமாக செய்து முடிப்பதில் இருந்து ஆடை அணிகலன்களை சீலைகளில் வடிவமைத்து அதற்குரிய ஒப்பனைகளை முத்துக்களாலூாலும் வத்திப்பேப்பர்களாலும் நூல்களாலும் உரோமானிப் போர்வீரர்கள் போலவும் எபிரேயர்கள் போலவும் பொருத்தமாக அணிவித்து உடக்கின் கால்கம்பு மாட்டும்வரை செய்கின்ற வேலைகள் ஒரு புறமும் உடக்குகளை காட்சிகளுக்கேற்ப இயக்கும் பொறிகளைத் தயாரிப்பது ஒரு புறமும் காட்சிகள் நடக்கும் இடங்களைப் பொருத்தமாக வடிவமைப்பது இன்னொரு புறமுமாக ஒருங்கே மண்டபத்துக்குள்ளே வேலை பகிரப்படுகிறது..

**இயேசுவின் உடக்கு**

இயேசுவின் உடக்கை சங்கை செய்யும் வண்ணம் தயாரிப்பதால் அதனை சுரூபம் என்றே குறிப்பிடுகிறார்கள்.. ஜெத்த மேனிப் பூங்காவில் பாடுபடும் யேசுவின் உடக்கு யூதர் கையில் அகப்பட்டு அவரைத்தள்ளி வீழ்த்துவதோடு மாற்றப்பட்டு இன்னொரு காட்சியில் இயங்கக்கூடிய உடக்கை நுட்பமாக காட்சிப்படுத்துதல் வேண்டும். அன்னாஸ், கைப்பாஸ் ,பிலாத்து, ஏரோது போன்றோர்களிடத்தில் விசாரணைகளில் பயன்படுத்தும் யேசுவின் உடக்கு இயேசுவை இதோ மனிதனைப்பாருங்கள் என்று மக்களுக்கு பிலாத்து காட்டும் காட்சிக்கு மட்டும் 'எக்சோமா' கர்த்தர் எனப்படும் சுரூபம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சுரூபம் மிக்க அருட்சியான பௌத்திரமான ஒன்றாய் இருக்கும். இவ்வுடக்கு புனித. வெற்றிநாயகி ஆலயத்தின் தவக்கால வெள்ளிக்கிழமை ஆராதனைகளில் வழிபாட்டுக்கும் பயன்படுத்தப்படுகிறது..

**தெருப்பாஸ்**

இயேசுவை சிலுவை சுமத்தி சீரோன் ஊரானானாகிய சீமோன் உதவும் காட்சி ,மாதா சந்திக்கும் காட்சி, வெரோணிக்காள் முகம் துடைக்கும் காட்சி, எருசலேம் மகளிர் ஆறுதல் கூறும் காட்சி, இவைகளுடன் ஆண்டவர் இரண்டு முறை கீழே விழுகின்ற காட்சி என்பவற்றை பாஸ் மண்டபத்திறகு வெளியே தெருவில் காண்பிப்பதால் இதனை தெருப்பாஸ் என்றே கூறுகின்றனர். இந்தப் பாசுக்கென்று பயன்படுத்தும் பொறியை அச்சு என்று சொல்லுகின்றனர். யேசுவின் உடக்கினை ஒரு நிலையில் இருந்து எழுவதும் விழுவதுமாக அந்தப் பொறியை இயக்கவென மேஸ்திரிரி மாரும், அந்தப்பாரிய அச்சினை தோளில் வைத்து சமந்து செல்வதற்கு திடகாத்திரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவல்களுமாக இருபது பேர் இயங்குகின்ற சிறப்பான பாஸ் இதுவாகும். இப்பாஸ் நடைபெறும் போது பார்வையாளர் களாகிய மக்கள் ஆண்டவரின் உடக்கு நகரும் இடமெல்லாம் செல்லுவார்கள். ஆண்டவரை யூதர்கள் துன்புறுத்துவது போலக்காட்டும் போதெல்லாம் பக்தர்கள் மிகுந்த வியாகுலத்தோடே அதைப்பார்த்துக் கதறியழுவார்கள்.

அந்த ஆண்டவரின் உடக்கை சுமந்த அச்சு மண்டபத்துக்குள் மீண்டும் உள்ளிட்டு ஆண்டவரை மூன்றாம் முறையாக கீழே வீழ்த்துவதற்கு மேஸ்திரிமாரும் அச்சுத்தூக்குவோரும் இளவல்களும் எடுக்கும் பிரயத்தனம் மிகப் பெரிதாயிருக்கும். ஆண்டவரை மூன்றாம்முறை வீத்தியதுடன் அந்த தெருப்பாஸ் முடிவடையும்.

இனி ஏனைய பாடுகளுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட யேசுவின் உடக்கு பயன் படுத்தப்படும். இதில் குறிப்பிடத் தக்கது என்னவென்றால் காட்சிகளுக்குப் பொருத்தமாக இயங்கக்கூடிய உடக்கு களை மேஸ்திரிமார் மாற்றுகிற விடயம் பார்வையாளர்கள் அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு அதனைச் செயற்படுத்துவார்கள்.

அவர்கள் இப்படிப் வேலை செய்கிற இடத்தில் இந்த ஊரைச் சார்ந்திராத எவருக்கும் இடமில்லை. அந்த விடயத்தில் ஆணென்றுமில்லாமல் பெண்ணென்று மில்லாமல் எல்லாருமே ஒரு கருத்தைத்தான் சொல்லுகிறார்கள்...'' இது எங்களுடையது.. இதற்குள் வேறு புறத்தியார் யாரும் புழங்கிறதை நாங்கள் விரும்பயில்ல...''

அடேடே.. அப்படியா.. அப்படி என்னதான் நடக்கிறது என்று யாரும் வலிந்து கேட்பவர் எத்தகைய பதவி நிலையிலும் அல்லது செல்வாக்கிலும் மிகுந்தவராக இருந்திருப்பினும் கூட அப்படித்தான் எல்லாருக்கும் ஒரே சட்டம்தான் என்கிறார் எண்பது வயது கடந்து விட்டிருக்கிற தலைமை மேஸ்திரி மிராண்டா..

"இது எங்கட பழைய ஆக்கள் செய்து வழிவழியாக எங்கட தலைமுறைகளுக்கு கடத்தப்பட்டு வாற பொறுப்பு.. அவங்கள் எந்த நடைமுறையக்கடைப்பிடிச்சாங்களோ அதத்தான் நாங்களும் செய்யுறோம்..''
"இப்போதெல்லாம் டிஜிட்டல் காலமாச்சே.. இன்னும் நீங்கள் அந்தப்பழைய முறைகளிலிலேயே நிற்பது சரிதானா..'' என்ற ஒரு பல்கலைக்கழக மாணவியின் கேள்விக்கு இன்னொரு பொறுப்பான மேஸ்திரி பதிலளிக்கிறார் இப்படி..

"அது தங்கச்சி.. நீங்க சொல்லுற டிஜிட்டலோ என்ன இழவோ..அதெல்லாம் இந்தப் பாசுக்கு சரிப்பட்டு வராது..இது எங்கட ஆக்கள் செய்து வைச்சிருக்கிற ஒரு பொறிமுறை.. கஷ்டமானதுதான் ஒரு உடக்கை சாதாரணமா இயக்குறதுக்கு மூணுபேர் வேணும்..அதுக்காக அதை நாங்க டிஜிட்டலுக்கு மாத்த முடியுமா..எதென்டாலும் எல்லாருமா மனமொத்து இப்பிடிக் கஸ்டப்பட்டுச் செய்யும் போதுதான் எங்களுக்கு மனத்திருப்தி..''

உண்மைதான்.. பொதுவாக கிறீஸ்தவர்கள் தவக்காலத்தில் பல்வேறு இடங்களிலும் மனிதர்கள் நடித்துக்காண்பிக்கும் பாஸ் என்பதை விட இது வித்தியாசமானதுதான். முழுக்க முழுக்க உடக்கு என்ற ஏழு அடி உயரப் பொம்மைகளைக் கொண்டு பல்வேறு சித்திரிப்புக்கலைகளை உள்ளடக்கி நுட்பத்தோடு காட்டப்படுகின்ற காட்சிகள் என்றால் எப்படியிருக்கும்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையையும் கைகளையும் ஆட்டி ஆட்டி அந்தப் பொம்மைகள் ஒரு காவியத்தையே படைக்கின்றன..

இது என்ன விநோதம் என்று அதை அறிய முற்படுவோருக்கு கிடைக்கின்ற செய்திகள் நிச்சயமாக விசித்திரமானவைகளாகத் தோன்றும்..

இந்தக்காட்சிகளைக் காண்பிக்கவென பிரமாண்டமாக கட்டி எழுப்பப்பட்டிருக்கும் ஒரு நூதனமான மண்டபம்.. தரையிலும் இரண்டாம் மூன்றாம் மாடிகளிலும் பொருத்தமாக ஓடி நடமிடும் உடக்கு களைப் பார்க்கும்போது.. இவை எப்படித்தான் இப்படியெல்லாம் இரத்தமும் சதையுமாக அறிவோடு பார்க்கும் மனிதர்களுக்குள் இத்தனை அருட்சியையும் இரக்கத்தையும் துயரத்தையும் ஒருங்கு சேர ஏற்படுத்தி விடுகின்றனவோ என்று ஆச்சரியமாகத்தான் நோக்க வேண்டியிருக்கிறது..

ஆனால் வெளியில் இருந்த பார்ப்போரைப் பரவசத்தில் ஆழ்த்தும் உடக்குப்பாசுக்குப் பின்னால் நூற்றுக்கணக்கான மனிதர்கள் கடும் பிரயத்தனப்பட்டு வியர்வை ஒழுக ஒழுக இயக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது இங்கு பலருக்குத் தெரியாது.. ஆம்.. அது ஒரு சமூகச் செயற்பாட்டுக் கலை..

இலங்கையில் வெறெந்த ஊர்க்காரருக்கும் கைவரப் பெறாத இந்தக் கலைக்கென ஒரு பக்குவமும் பௌத்திரமும்.. ஏன் ஒரு பரிசுத்தமும் இருக்கின்றது என்றால் அதை நாம் நம்பித்தான் ஆக வேண்டும்..

இது எப்படி இவர்கள் கையில் கிடைத்தது..? உண்மையில் இக்கலையின் தோற்றுவாய் எங்கிருந்து யாரால் உண்டானது? என்ற கேள்விகளுக்கு நாம் விடைகாண வேண்டுமென்றால் வியாகுலப் பிரசங்கம் என்ற ஒரு துன்பியல் இலக்கியம் படைத்த கொன்சால் வேஸ் சுவாமிகளின் இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலம் பற்றி அறிய வேண்டும்.

ஒலி ஒளி அமைப்புக்கள் எதுவும் பெரிதாக ஆற்றுகை கலைகளுக்கு ஒத்தாசை வழங்காத காலத்தில் இப்படி ஒரு நுட்பக்கலை புழக்கத்திற்கு வந்திருக்கிறது என்றால் அது எப்படி..? இந்த உடக்குப் பாஸ் காண்பிக்கப்படுவதற்காகவே பேசாலையில் இப்படியொரு நுட்பமான பிரமாண்டக் கட்டித்தை அமைத்திருக் கிறார்கள் என்றால் இந்த ஊர் மக்கள் இந்தக்கலையை வளர்த் தெடுப்பதில் எந்தளவு முனைப்புக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நம்மால் அறிய முடிகிறதா..?

இந்தப்பிரமாண்ட மண்டபம் ஏதுமில்லாமல் பேசாலைக்கருகில் ஓலைத்தொடுவாய் என்ற சிற்றூரில் அமைந்த கர்த்தர் கோவிலின் அடியில் ஓலைக்கொட்டகை போட்டுத்தான் முன்பு பாஸ் காட்டியதாகவும் பின்பு அங்கு நடந்த தீ விபத்தில் கொட்டகை எரிந்து போனதோடு பாஸ் காட்டுவதற்கான நுட்பமான உடக்குகளும் எரிந்து போனதால் இங்கும் இக்கலை கைவிடப்படுகின்ற நிலையில் ஒரு வரலாற்று மாந்தரின் கைங்கரியத்தால் இக்கலை மீளுருவாக்கம் செய்யப் பட்டிருப்பதாகச் சொல்லும் சில வாய்மொழி வரலாற்றுக் குறிப்புக்களை எங்காவது எழுத்தாவணமாக இருக்காதா என நாம் தேட வேண்டியிருக்கிறது.

பேசாலையில் உடக்குப்பாஸ் தொன்மைக் கலை பெரு முதுசமாக இன்ற வாழு கின்றது என்பதற்கான வரலாறு ஒன்று இருக்கிறது.
ஆற்றல் மிகுந்த உடக்குப்பாஸ் கலை திடுதிப்பென்று பேசாலையிலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வேறிடங்களிலோ தோன்றியது எனக்கருத முடியாது. பாஸ் எனப்படுகின்ற ஆண்டவரின் திருப்பாடு களின் காட்சிகளின் தோற்றுவாய் அன்றைகால கிறீஸ்தவ மக்களின் பிழைதீர்க்கும் மந்திரம் பாடுதல் என்ற ஒரு கலை வடிவத்தை அடியொற்றியதாக இருக்கிறது எனச் சொல்வார் உண்டு.

1658 ல் போத்துக்கேயர் ஒல்லாந்தரினால் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டதின் பின் இங்குள்ள கத்தோலிக்க கிறீஸ்தவர்கள் தமது விசுவாச வழிபாடு களை பிரத்தியட்சமாக நிகழ்த்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்த போது இந்தியாவின் கோவா நகரில் இருந்து இங்குவிசுவாசக் காப்பாளர்களாக வருகை தந்த கத்தோலிக்க மிஷனெறிகள் சில விசுவாச நெறிப்படுத்தலுக்கான உத்திகளை மேற்கொண்டதாக அறிகிறோம்.

அந்தவகையில் இங்கு தவக்காலத் தியானங்கள் முக்கியப்படுகின்றன. திருச்சிலுவை ஆராதனை, திருச்சிலுவை முத்தி என்ற நிகழ்வுகள் பெரு நிகழ்வுகளாக பெரிய வெள்ளிக்கிழமை அனுஸ்டானத்தில் கைக்கொள்ளப்பட்டு இந்நிகழ்வை அடியொற்றி 'பாஸோ' எனப்படும் யேசுநாதரின் பாடுகளைக் காட்சிப்படுத்தும் அரங்க நிகழ்வு அறிமுகப்படுத்தப்பட்டது..

இக்கால கட்டத்தில்தான் சிலுவை இராகம் எனப்பட்ட செபங்கள் வேண்டுதல்கள் என்பன விசுவாசிகளின் பாவப்பரிகார மனோ நிலையை ஏற்படுத்தவல்லதாக புழக்கத்தில் இருந்ததாக செ.இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாண சரித்திரம் -1986 என்ற நூலில் குறிப்புக்காணப்படுகிறது.
மேற்படி இராகத்தினைக்கொண்டு உருவாக்கப்பட்டதாக நம்பப்படும் உடக்குப்பாஸ் 1607 ம் ஆண்டிலிருந்து இலங்கையில் ஒரு நிகழ்த்துக் கலையாக வழங்கப்பட்டு வந்தற்கான சான்று 1857ல் நிகழ்வுகள் தொடர்பாக அப்போஸ்தலிக்க ஆளுநர் ஆயர் பிராவி அவர்களால் விதிக்கப்பட்ட கட்டளை என்ற ஆவணப்பதிவில் உள்ளது. சடங்கு நிகழ்வெனப்பட்ட இக்காட்சிக்கு இலங்கையில் முதன்முதல்1707ம் ஆண்டின் ஆயர் அறிக்கையிலேயே 'பாஸோ' என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருப்பதாக விரிவுரையாளர் ஞானமுத்து பிலேந்தின் அவர்கள் தனது நூலில் குறிப்பிடுகின்றார். ஆண்டவரின் மரிப்பும் சிலவையிலிருந்த திருச்சுரூபத்தை இறக்குதல் மற்றும் ஆசந்தி என்ற முப்பெரு சடங்கோடே நிகழ்த்தப்பட்டதற்கான தடய ஆதாரங்கள் இக்காலத்தில் பெறப்பட்டுள்ளன.. யாழ்ப்பாணப் பாரம்பரியத்தை உடைத்தான பாஸோ வகைக் காட்சிகள் வடக்கிலும் தென்பகுதியிலும் நிகழ்த்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. சிற்சில இடங்களில் இன்னும் காணப்படும் சிலுவை மரிப்பிற்கும் ஆசந்திக்குமுரியதான சுரூபமும் கயிறுகள் போட்டு இழுக்கக் கூடிய மரக்கப்பி துளைகள் காணப்படும் சிலுவை மரமும் பழமையான ஆசந்தி தட்டிகளும் சிலுவையில் இருந்து ஆண்டவரை இறக்கும் துகிலும் பராமரிக்கப்பட்டு வருவதோடு இவை பற்றிச் சொல்லக்கூடிய மூத்தவர்களும் இருப்பது இக்கூற்றுக்கான ஆதாரங்களாகும்..

இலங்கையின் வடக்கிலேயே முதன் முதலாக காண்பிக்கப்பட்ட உடக்குப்பாஸ் யேசுவின் மரிப்பும், சிலுவையிலிருந்து யேசுவின் மரித்த உடலை இறக்குவதும் ,ஆசந்தி எடுப்பதுமான மூன்று நிகழ்வுகளைக் கொண்டதாக மட்டும் இளவாலை, ஊர்காவற் துறை, ஒட்டகப்புலம், தலைமன்னார், ஓலைத் தொடுவாய் பரப்பாங்கண்டல், நானாட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இடங்களில் நடாத்தப்பட்ட பதிவுகள் காணப்பட்ட போதிலும் பேசாலையில்தான் மிக விரிவாக லெம்பவம் எனும் இயேசுவின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை சித்தரிக்கும் காட்சிகள் மற்றும் புதுமைகள் என பதினாறு காட்சிகளும் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு உள்ளிட்ட பத்துக்காட்சிகளுமாக மொத்தம் இருபத்தாறு காட்சிகளையும் பகல் இரவாக காண்பிக்கும் ஆற்றலை பேசாலை உடக்குப் பாஸ் கொண்டிருந்தது. ஆனால் இக்காலத்தில் அவை மட்டுப்படுத்தப்பட்டு ஒரு சில லெம்பவங்களும் வியாகுலப்பிரசங்கத்தை அடியொற்றிய காட்சிகளுமே காண்பிக்கப் படுகின்றன.

**பாரம்பரிய உடக்குப்பாஸ் மண்டபம் கைவிடப்பட்டது.**

பாரம்பரிய உடக்குப் பாஸ் மண்டபம் தற்காலத்தில் பயன்படுத்த முடியாமை என்பது மிகவும் விசனத்துக்குரிய தொன்றாகும். மிக நுட்பமாகவும் பொருத்தமாகவும் முற்காலத்தில் கட்டப்பட்ட இவ்வரங்கினைப்போல இனி ஒரு போதும் யாராலும் அமைக்க முடியாதென்பது ஒரு புறமிருக்க இம்மண்டபம் சரியாக பராமரிக்கப் படாமல் இருப்பது ஒரு சமூகக் குற்றச் செயலாகும்.

நாட்டின் துயரமான இன யுத்தத்தின் போது பேசாலைக் கிராமத்தினரில் பெரும்பான்மையான மக்கள் இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து சென்றபோது இம்மண்டபம் இங்கிருந்த மக்களின் உறைவிடமாக இருந்ததென்பதுவும் அதன் பின்னர் யுத்த பாதிப்புக்களுக்குட்பட்டு கவனிப்பாரற்று கிடந்ததென்றும் சொல்லும் செய்திகளில் இம்மண்டபத்தின் அருமை தொலைக்கப் பட்டுவிட்டது.

பாஸ் மண்டபம் திருத்துவதற்கான நிதி பெருமளவாக இருப்பதுவும் மண்டபம் கைவிடப்பட்டதற்கு மற்றுமொரு காரணமாகும். ஒருவேளை மண்டபம் திருத்தப்பட்டாலும் அது அமைந்திருக்கும் முன்றல் பெருந்தொகையான பார்வையாளர்களை உள்ளிருத்தப் போதுமானதாக இல்லை என்பதாலும் மண்டபம் பற்றிய கரிசனை அற்றுப் போயிருக்கிறது.

ஆயின் இனி வருங்காலத்தில் பாரம்பரியக் கலாசார நிகழ்வுகளை தொடர்ந்து நடாத்தும் முயற்சியில் அரசாங்கம் புதிய இடத்தில் பொருத்தமான பாஸ் மண்டபத்தை அமைத்து பேசாலை மக்களுக்கு கையளித்தால் இப்பாரிய காண்பியக்கலை வாழ்விக்கப்படும்.

**கட்டுரைக்கு உதவியவர்கள்**

01. கட்டுரையாளரின் கள அனுபவம்

02. நேர்காணல்: திரு சி. எம். பெர்ணான்டோ மன்/ பற்றிமா m.m.v (முன்னாள் அதிபர்)

திரு. எஸ். மாக்மில்லன்.குரூஸ்- பாஸ் மண்டப களப்பணியாளர்

03. அரங்கத்திறப்புரை- வடமாகாண இலக்கியப் பெருவிழா 2014

திரு.எஸ்.கியோமர். குலாஸ்- பொறியியலாளர்- s.l.t.c

04. திருமதி.ஜெபராஜ் - தேசியக்கல்வி நிறுவகம்- மகரகம.

உசாத்துணை : 01.கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியங்கள்-fr.Ganamuthu pilanthiran

02.art tradition of puppet's play – pan. Leelarathna godage

04.life of fr.jacome consalvez – s.g. perera

05.ஈழத் தமிழர் கிராமிய நடனங்கள் -சபா. ஜெயராசா

06.பேசாலை உடக்காலான திருப்பாடுகளின் காட்சி- எஸ்.ஏ.மிராண்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவில்கின்றோம் நன்றி

"மன்னெழில்" மலர் தங்கள் கரங்களில் தவழ்கின்றது. இதன் வருகைக்காகப் பலரும் பலவழிகளில் அயராது உழைத்திருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டியது எனது கடமை. மன்னெழில் மலருக்குரிய ஆக்கங்கள் கிடைக்கப்பெற்று அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் மன்னார் மாவட்டத்தின் அரச அதிபராக பதவியேற்ற திரு. சீ. ஏ. மோகன்ராஸ் அவர்களிடம் இதுகுறித்து தெரிவித்தபோது மிகவும் மகிழ்ச்சியடைந்ததுடன் இந்நூலுக்கான அனுமதியினையும், ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார். அவருக்கு மலர்க்குழு தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. விசேடமாக மன்னார் மாவட்டத்தின் வரலாறு, அதன் பூர்வீகச் சிறப்புக்கள், செழுமை என்பன ஆவணப்படுத்தப்படல் வேண்டும் என்பதில் கவனம் செலுத்தியதுடன், இதற்குரிய ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கிய மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. சி. குணபாலன் அவர்களுக்கு மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவை தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இதேவேளை, "மன்னெழில்" மலர் முழுமையாகவே ஆய்வுக்கட்டுரைகளை தாங்கியதாக வெளிவர வேண்டும் என்ற மலர்க்குழுவின் விருப்பத்தை கவனத்தில் எடுத்து அதற்குரிய வகையில் தனது கட்டுரைகளை வழங்கிய மூத்த பேராசியர்கள், ஆய்வாளர்கள், கட்டுரையாளர்கள் அதேபோல், "மன்னெழில்" மலரின் அட்டைப்படம் மற்றும் மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவைக்குரிய இலச்சினை என்பன "மன்னார்" மாவட்டத்தின் சகல அம்சங்களையும் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும் என்ற மலர்க்குழுவின் விருப்பத்தினை ஏற்று செயலுருவில் சிறந்த அட்டைப்படம், இலச்சினை வரைந்து உதவிய மன்/ சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையின் ஆசிரியர் திரு. ஜெறோமி மார்க் அவர்களுக்கும், "மன்னெழில்" எந்தவிதமான எழுத்துப்பிழையுடனும் வெளிவரக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்த மலராசிரியர் சிவஸ்ரீ தர்மகுமாரக் குருக்கள் மற்றும் மலர்க்குழுவினர், மலரை சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய திரு. அன்ரன் சசிதரன் (சைபர் சிற்றி அச்சகம்) அவர்களுக்கும், இவை எல்லாவற்றிற்கும் மேலாக "மன்னெழில்" மலருக்குரிய ஆசியுரைகளை வழங்கிய சர்வ மதத்தலைவர்களுக்கும், வாழ்த்துரைகளை வழங்கிய அரச உயர் அதிகாரிகளுக்கும் நிதிப்பங்களிப்பை வழங்கிய வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

**சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர்**
**திரு. இ. நித்தியானந்தன் M.A - Cultural**
**மாவட்ட கலாசார உத்தியோகத்தர்,**
**(செயலாளர், மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை, மன்னார்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னெழில்கொள் மன்னார் மாவட்டச்செயலகக் கட்டிட முகப்புத்தோற்றம்

Cyber City Printers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org